விலை ரூபா 30 பக்கங்கள் 56

# உதயன்

சுடர் 31 கதிர் 87 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 09, ஞாயிற்றுக்கிழமை 21.02.2016

மகாராஜா பொதிகள் சேவை
புதிய சேவை
லண்டன்,பிரான்ஸ் நாடுகளுக்கு
1kg 20 நாள் பொதிகள் சேவை
கட்டணம் 150/-
GTV Enterprises (Pvt)Ltd.
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
024 - 4930200

# கோப்பாயில் நள்ளிரவில் கொள்ளையர் கைவரிசை

## அடுத்தடுத்து ஆறு வீடுகளுக்குள் புகுந்து அட்டகாசம்; பல லட்சம் பெறுமதியான நகை,பணம் கொள்ளை

யாழ்ப்பாணம், பெப்ரவரி 21
நள்ளிரவில் முகங்களை மூடி மறைத்தவாறு ஆறு வீடுகளுக்குள் புகுந்த கொள்ளையர்கள் வீடுகளின் கதவுகளை அடித்து உடைத்து உட்புகுந்து கத்திமுனையில் பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.
இந்தச்சம்பவம்கோப்பாய்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் பூதர் மடம் மற்றும் கரந்தாய்ப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.
கோப்பாய் பொலிஸ் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இந்து மதகுரு ஒருவரது வீட்டில் இடம்பெற்ற கொள்ளையிலேயே அதிக பெறுமதியான நகை மற்றும் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த கொள்ளைச் சம்பவங்களால் அந்தப் பிரதேசம் அச்சத்தில் மூழ்கியுள்ளது.
இது குறித்து மேலும் தெரிய வருவதா பக். 53

## பாணின் விலை; 4 ரூபாவினால் குறைக்குக

யாழ்ப்பாணம், பெப். 21
நுகர்வோர் வாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பேக்கரிகளிலும் ஒரு இறாத்தல்பாண் 4ரூபாவிலைக் குறைப்புச் செய்யப்பட்டு 50 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவேண்டும் என்று, பேக்கரி உரிமையாளர்களைக் கேட்டுக் கொள்வதாக யாழ். மாவட்ட பேக்கரி பக். 53

கிளிநொச்சி மாவட்டம் போசாக்கில் பின்னடைவு
விரிவு பக். 02

## மகிந்தவின் பரிவாரங்களால் புரியப்பட்ட மோசடிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

### தயாராகின்றது சட்டமா அதிபர் திணைக்களம்

கொழும்பு, பெப். 21
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் செய்துள்ளனர் எனக் கூறப்படும் மோசடிகள் தொடர்பான விசாரணைகளின் அடிப்படையில் அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சாத்தியங்களை சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருகின்றது எனத் தெரிய வருகின்றது.
இந்த மோசடிகள் தொடர்பான விசாரணைகள் பல மாதங்களுக்கு முன்பே முடிவடைந்து விட்ட போதிலும் சட்டமா அதிபர் திணைக்களம் மேலதிக நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.
முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ச, பக். 53

## அல் ஹுசேனுக்கு எதிர்ப்பு; விமலுக்கு அழைப்பாணை



கொழும்பு, பெப். 21
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்சையிட்அல்ஹுசேனின்இலங்கைப் பயணத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்திய நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச உள்ளிட்ட 7 பேருக்கு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.
பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச் சாட்டிலேயே இவர் பக். 53



## கச்சதீவுத் திருவிழா இன்று

கச்சைதீவு,பெப்.21
கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா இன்று நடைபெறுகின்றது.அதில் பங்கேற்பதற்காக அங்கு சுமார் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக். 53

முச்சந்தி முரளி



அப்ப உங்களுக்கும் இப்ப அவையளால ஆபத்தோ...

## 9ஆவது தேசிய ஜம்போறி நேற்று யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.21
இலங்கை சாரணிய சங்கத்தால் 'நட்புரிமையும் புரிந்துணர்வும்' என்ற கருப்பொருளில் வடக்கில் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒன்பதாவது தேசிய ஜம்போறி (தேசிய சாரணர் பயிற்சிப்பட்டறை) நேற்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாரணர் பதிவுகளுடன் ஆரம்பமானது.
அத்துடன் சாரணியத்தை உருவாக்கிய பெரியார் றொபட் ஸ்டீவன்சன் ஸ்மித் பேடன் பவல்லின் பிறந்த தினமான நாளை உத்தியோக பூர்வமாக ஜம்போறி நிகழ்வுகள், நாட்டின் ஜனாதிபதியும் பிரதம சாரணருமான மைத்திரிபால சிறிசேனவால் ஆரம்பித்து வைக்கப்படவுள் ளது. (மேலதிக விவரம் 7ஆம் பக்கத்தில்)

## வவுனியாச் சிறுமிக்கு நீதி வேண்டி புதனன்று வடக்கில் முழு அடைப்பு

### செவ்வாயன்று கவனவீர்ப்புப் போர்

யாழ்ப்பாணம், பெப். 21
வவுனியா உக்கிளாங்குளம் பகுதியில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சிறுமிக்கு நீதி வேண்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வவுனியாவில் கவனவீர்ப்புப்போராட்டமும், மறு நாள் புதன்கிழமை வடக்கு மாகாண ரீதியில் பூரண கடையடைப்பும் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் அவரது அலுவலகத்தில், வடக்கு மாகாண பக். 53

## அரசியல் கைதியான மகனை விடுவிக்குக

### சட்டமா அதிபருக்கு தாயார் கடிதம்

கொழும்பு, பெப்.21
எவ்வித குற்றச்சாட்டுக்களும் இன்றி அநுராதபுரம் சிறைச்சாலையில் நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதியான தனது மகனை பக். 53

## ராஜபக்சாக்களால் எனக்கு உயிராபத்து

### கூறுகிறார் சந்திரிகா



கொழும்பு, பெப். 21
தனக்கும், தனது குடும்பத்தினரின் உயிருக்கும் ராஜபக்சாக்களினால் ஆபத்து இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.
கம்பஹா மாவட்ட பக். 53

www.sdb.lk
நிலையான வைப்புகளுக்கு
உயர்ந்த வட்டி
ஐந்து வருட நிலையான வைப்பொன்றுக்கு
10.75% உச்ச வருட வட்டி (முதிர்ச்சியில்)
வ.தே.வ. 8.98%

| | 3மாதம் | 6மாதம் | 1வருடம் |
|---|---|---|---|
| முதிர்ச்சியில் (வ.வ.வி.) | 8.00% | 8.50% | 9.25% |
| வ.தே.வ. | 8.24% | 8.68% | 9.25% |

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரூ.1 மில்லியன் வரை 15% வருட வட்டியும், 55 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கு அதி உயர் வட்டியும் உரித்தாகும்.
ஏனைய நிலையான வைப்புகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி வீதம்
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சணச அபிவிருத்தி வங்கிக் கிளையை நாடுங்கள்
011 5 411 411
SDBL
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கிளிநொச்சி மாவட்டம் போசாக்கில் பின்னடைவு

## மாவட்ட அரச அதிபர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி,பெப்.21
இலங்கையில் கிளி நொச்சி மாவட்டமே போசாக்கில் பின்னடைவைச் சந்தித் துள்ளது. போதுமான ஊட்டப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற போதும், மக்கள் வறுமை காரணமாக அவற்றை விற்பனை செய்து வருகின்றனர். இதனால் மக்களுக்கு தேவையான போசாக்கு கிடைப்பதில்லை. – இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கிராமத்துக்குக் கிராமம் என்னும் ஒரு மில்லியன் ரூபா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கிளிநொச்சி திருவையாறு படித்த வாலி பர் திட்டக் கிராமத்தில் 5 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சிறுவர் விளையாட்டு முற்றத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

திருவையாறு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ச.பொன்னுத் துரை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது-

கிளிநொச்சி என்னும் பெயர் இன்று அனைத்து மட்டங்களிலும் பேசப்படுகின்ற ஒன்று. போருக்குப் பின்னர் இந்த மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர் பில் மேலெழுந்த வாரியான சில முன்னேற்றங்கள் நடைபெற்றிருக்கின்ற போதிலும், உள்ளக ரீதியான அபிவிருத்தி ஏற்படாமல் உள்ளமை சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

விசேடமாக 3ஆயிரம் கிலோ மீற்றருக்கும் மேற்பட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ளன. போர்ப் பாதிப்புற்றோருக்கான கொடுப்பனவுகள் கூட கடந்த காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவில்லை. தற்போது எமது செயலகத்தில் பாதிப்புற்றோருக்கான கோவைகள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு அவர்களுக்கான நஷ்ட ஈட்டை வழங்குவதற்கான தயார் நிலையை அடைந்திருக்கிறோம். நீங்கள் இழந்தவற்றோடு ஒப்பிடுகின்ற போது இழப்பீடுகள் போதுமானதாக இல்லை.

இந்த மாவட்டம் நெல் உற்பத்தி, பாலுற்பத்தி, கடலுணவுற்பத்தி, உபவுணவுப் பயிர்ச் செய்கை, மரக்கறிச் செய்கை என்பவற்றில் போதிய முன்னேற்றம் கண்டுள்ளது. ஆனால் இலங்கையின் போசணை ஊட்ட மாவட்டங்களில் நாம் இறுதி நிலையில் இருக்கின்றோம். இந்த நிலை ஏன் எமக்கு ஏற்பட்டது என ஆராய்கின்ற பொழுது, உற்பத்திப் பொருள்களை மாவட்ட மக்கள் நுகர்வதை விட ஏற்று மதியாளர்கள் அள்ளிச் செல்கின்ற நிலையே காணப்படுகின்றது.

வறுமை காரணமாக போசணை ஊட்டப் பொருள்களை விற்று விட்டு மக்கள் நலிவடைந்தவர்களாக இருக்கின்றார்கள். இந்த நிலையைக் கட்டுப்படுத்துவதற்கு மாவட்டத்திலுள்ள மக்களின் நுகர்வுக்கு எஞ்சியவற்றை விற்பனை செய்வதற்கு மாவட்ட ஏற்றுமதிகள் மீதான ஒழுங்கமைக்கப்பட்ட கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு நாம் முடிவு செய்துள்ளோம்.

களஞ்சியங்களை அமைக்கவும், போசனை ஊட்ட உற்பத்திகளை மக்கள் நுகரவும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். குறிப்பாக பாலுற்பத்திப் பொருள்கள் இந்த மாவட்டத்திலேயே விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.– என்றார்.

ற-ஐ-426)

## போதையில் சாரத்தியம் 3 மாத கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், பெப். 21
மது போதையிலும், சாரதி அனுமதிப் பத்திரம் இன்றியும் மோட்டார் சைக்கிள் செலுத்திய இளைஞருக்கு யாழ்.நீதிமன்று 3 மாத கடூழியச் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் யாழ்.பொலிஸ் நிலைய எல்லைக்குள் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் சென்றது மட்டுமன்றி மதுபோதையிலும் சென் றுள்ளார். அதன்படி இரண்டு விதிமுறைகளை அவர் மீறினார் என்று அவருக்கு எதிராகப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

யாழ்ப்பாணப் போக்குவரத்து பொலிஸாரால் குறித்த வழக்கு யாழ்.நீதிவான் மன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது அவருக்கு கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தவிர 11 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

பிறிதொரு வழக்கில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய முதியவர் ஒருவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்ட துடன் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. (ற-ஐ-4,103)

## கத்தி காட்டி கொள்ளையடித்து மறைந்திருந்திருந்தவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.21
அல்வாயில் ஒருவரைக் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தி அவரிடமிருந்த பணத்தை கொள்ளையடித்துச் சென்ற குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபர், பிறிதொரு இடத்தில் பதுங்கி இருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வடமராட்சி, அல்வாய் பகுதியில் வீதியில் பணத்துடன் சென்ற நபர் ஒருவரின் கழுத்தில் கத்தியைவைத்து அச்சுறுத்தியதுடன், கழுத்தில் கத்தியால் கீறிக் காயப்படுத்திவிட்டு 93 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது. காயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றதுடன் பருத்தித் துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்திருந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த ஒக்ரோபர் மாதம் இடம்பெற்றிருந்தது என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு அல்வாய் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் தேடப்பட்டு வந்தார் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அல்வாய் பகுதியில் மறைந்திருந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமாரிடம் அவர் முற்படுத்தப்பட்டார். அதன்போது அவரை 14 நாள்களுக்கு விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ற-ஐ-4,109)

## கருங்குளவி கடித்து அராலி பெண் சாவு

விறகு வெட்டச் சென்ற குடும்பப்பெண்கருங்குளவி கடித்ததால் மயங்கிய ஒரு மணித்தியாலத்துக்குள் உயிரிழந்தார்.

அராலியிலுள்ளவேப்பிட்டி காட்டில்நேற்றுமுன் தினம் மாலை 5 மணி யளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றதுசம்பவத்தில்அராலி தெற்கு வட்டுக் கோட்டையைச் சேர்ந்த சாந்தலிங்கம் பிறேமா (வயது -50) என்ற குடும்பப்பெண்ணே உயிரிழந்தார்.

குறித்த பெண் வீட்டுத் தேவைக்கு விறகு வெட்டுவதற்கு மற்றொரு பெண்ணுடன் சென்றுள்ளார். அதன்போது காட்டுக்குள் இருந்த கருங்குளவிகள் பறந்து அந்தப் பெண்ணைக்கடித்துள்ளனஎன்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருடன் சென்ற பெண் கூக்குரலிட்டு ஆள்களைக் கூப்பிட்டு அவரை மீட்டு ஓட்டோவில் ஏற்றும் போது குளவியால் கடியுண்ட பெண் மயங்கி விட்டார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் ஏற்கனவே அவர் உயிரிழந்துவிட்டமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

நீதிமன்றப் பணிப்புக்கு அமையதிடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (ற-ஐ-4)



பருத்தித்துறை பொலிஸ் நிலைய வருடாந்த பரிசோதனை நிகழ்வு நேற்றுக்காலை பருத்தித்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யுவான் தந்த நாராயண தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் மாசிங்க உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம். ஏ. ஜவ்பர் ஆகியோர் கலந்து கொண்டனர்.(ற-ஐ-109)

## பாடசாலை செல்லாத மாணவர்கள் மீளப் பாடசாலைகளில் இணைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.21
பாடசாலைகளுக்குச் செல்லாத மணவர்களைக் கண்டு பிடித்து அவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் மூன்று கிராமங்களைச் சேர்ந்த 39 மாணவர்கள் மீண்டும் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களைத் தேடிக் கண்டு பிடித்து அவர்களை மீண்டும் பாடசாலைக்கு அனுப்பும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்து வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள காக்கைதீவு, முள்ளி, உயரப்புலம் ஆனைக்கோட்டை 3ஆம் கட்டை ஆகிய நான்கு கிராமங்களில் 212 வீடுகளில் நடத்திய தேடுதலின்போது ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்லாத 32 மாணவர்களும் இடைவிலகிய 7 மாணவர்களும் இனங்காணப்பட்டு மீண்டும் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

கல்வியின் முக்கியத்துவம் பற்றி மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்திய உத்தியோகத்தர்கள் மூன்று தினங்கள் தொடர்ந்து பாடசாலைக்குச் செல்லாத மாணவர்கள் பற்றிய விவரங்களை சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு அறிவிக்குமாறு அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, கடந்தவாரம் இந்தப்பிரதேசத்தில் 172 வீடுகளில் நடத்திய தேடுதலின் போது பாடசாலைக்குச் செல்லாத 30 மாணவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு மீண்டும் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர். (ற-ஐ-115)

## மன்னாரில் திருடியவர் நல்லூரில் சிக்கினார்

யாழ்ப்பாணம், பெப். 21
மன்னாரில் ஓட்டோவைத் திருடி யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்து வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஓட்டோவும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் உடப்பு பகுதியில் உள்ள வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்த ஓட்டோ ஒன்று மூன்று மாதங்களுக்கு முன்னர் திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தற்போது குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நல்லூர் பகுதிக்கு சிவில் உடையில் சென்ற பொலிஸார், திருடப்பட்டிருந்த முச்சக்கர வண்டியை மீட்டதுடன் நாவற்குழி பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேக நபரை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,107)

## இன்று மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை நாவற்குழி, மறவன்புலோ, தனங்கிளப்பு,தச்சன்தோப்பு, கைதடி, நுணாவில், கோயிலாக்கண்டி, அறுகுவெளி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின்வழங்கல் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. (ற-ஐ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கு நீதி அமைச்சினால் செயலமர்வு

## யாழ். நூலகத்தில் நேற்று ஆரம்பம்




யாழ்ப்பாணம், பெப்.21

நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் அனுமதியுடன் நீதி அமைச்சின் ஏற்பாட்டில், யாழ்.மேல் நீதிமன்ற வலயத்திற்குட்பட்ட அனைத்து நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு நேற்று யாழ்ப்பாணம் பொது நூல் நிலைய கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது.

யூ.எஸ் எயிட் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் மூன்று நாள்கள் நடைபெறும் இந்தச் செயலமர்வுக்கு நீதி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சந்திரா சுரேஷ்வரன் தலைமை தாங்குகின்றார்.

அத்துடன், இந்தச் செயலமர்வுக்கான வளவாளர்களாக, யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், மாவட்ட நீதிபதிகள், அரச சட்டத்தரணி மற்றும் சிரேஷ்ட கணக்காளர்கள் கலந்து கொண்டு விரிவுரைகளை வழங்குகின்றனர்.

இதில் யாழ்.மேல் நீதிமன்ற வலயத்திற்குட்பட்ட மேல் நீதிமன்றம் , குடியியல் மேன் முறையீட்டு மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதிவான் நீதிமன்றங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த செயலமர்வுக்கு நீதி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சந்திரா சுரேஷ்வரன் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளனர். இந்தச் செயலமர்வின் இரண்டாம் நாள் அமர்வு இன்றாகும். (த-வ)

# எனது ஆட்சிக் காலத்தில் ஊடக அச்சுறுத்தலில்லை

## சொல்கிறார் மகிந்த ராஜபக்ச

யாழ்ப்பாணம், பெப். 21

எனது ஆட்சிக் காலத்தில் ஊடகங்களையோ, ஊடக வியலாளர்களையோ அச்சுறுத்தவில்லை. ஆனால் தற்போது ஊடகங்கள் நாட்டில் நடப்பதைச் சொன்னால், நாடாளுமன்றத்தில் ஊடக வியலாளர்களைப் பல வார்த்தைகளைப் பயன்படுத்தி அச்சுறுத்துகின்றனர் என்று, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கம்பஹா பூகொட பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பேசும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசு செய்யும் தவறுகளுக்கு ஊடகங்கள் காரணமல்ல. ஊடகங்கள் உண்மையைக் கூறும் போது, அதனை இவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நான் சர்வாதிகாரி, ஊடகங்களை இறுக்கி வைத்திருக்கின்றேன் என்று அன்று என்னைக் கூறினார்கள்.

எந்த ஊடகவியலாளருக்காவது நான் அச்சுறுத்தல் விடுத்தேனாஎன்று நான் ஊடகவியலாளர்களிடம் கேட்டேன். சிலர் காணாமற்போனதா கவும் சிலர் கொல்லப்பட்டதாகவும் கூறுகிறார்கள். அரசு அவர்களைக் கொலை செய்யவில்லை. அரசு அதற்குப் பொறுப்புக் கூறவேண்டியதில்லை. இவர்களின் அரசு இவற்றைக் கண்டுபிடிக்க வேண்டுமல்லவா.

நாட்டில் எழுந்து வரும் எதிர்ப்புக்களை ஊடகங்களில் வெளியிடும் போது, நாடாளுமன்றத்தில் ஊடக வியலாளர்களைப்பலவார்த்தைகளைப் பயன்படுத்தி அச்சுறுத்துகின்றனர்.

எனது ஆட்சிக் காலத்தில் நாட்டில் பணம் புழங்கியது. தற்போதைய அரசு அபிவிருத்திகளை நிறுத்தியுள்ளதால், நாட்டு மக்கள் மத்தியில் பணம் புழக்கத்தில் இல்லை. எமது ஆட்சிக் காலத்தில் முதலீடு செய்ய வந்தவர்கள் தற்போது ஓட்டமெடுக்கின்றனர். இது தான் இந்த நாட்டின் தற்போதைய நிலைமை. அரசின் மீது முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையில்லை - என்றார். (த-5)

## மாணவி தற்கொலை முயற்சி; சந்தேகத்தில் ஆசிரியர் கைது

கிளிநொச்சியில் பாடசாலை மாணவியின் தற்கொலை முயற்சிக்குக் காரணமானவர் என சந்தேகிக்கப்படும் ஆசிரியர் நேற்று கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சிப் பாடசாலைஒன்றில்கல்வி கற்கும் மாணவி ஒருவர் கடந்த வியாழக்கிழமை மாலையில் கிணற்றில் வீழ்ந்து தற்கொலை செய்ய முயன்ற நிலையில், காப்பாற்றப்பட்டு கிளிநொச்சிமாவட்டவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்வாறுதற்கொலை செய்யமுயன்றமாணவியின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் அவரின்தற்கொலை முயற்சிக்குக் காரணமாக இருந்தார் என்ற அடிப்படையிலேயே குறித்த ஆசிரியர் நேற்றைய தினம் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட ஆசிரியர் இன்று கிளிநொச்சி நீதிவான்முன்னிலையில் முற்படுத்தப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-101)

**காணி உடன் தேவை**

யாழ்.மாவட்டத்துக்குள் 12 ஏக்கர் தொடக்கம் 18 ஏக்கர் தோட்டக்காணி தேவை.
6-8 லட்சத்துக்குள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 365 6826, 077 365 6877

**60 ஆவது அகவை பூர்த்தியும் சேவை நலன் பாராட்டும்**



கடந்த 18 வருடங்களாக இலங்கை மின்சார சபையில் சேவையாற்றி (21.02.2016) இன்றுடன் ஓய்வு பெறும் சேவை நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**சின்னத்தம்பு குமாரலிங்கம்**

அவர்களை வாழ்த்தி அவரது ஓய்வு காலம் சிறப்புறவும் சமூக சமய சேவைகள் தொடரவும் இறையருள் வேண்டி மனமார உவந்து பாராட்டுகின்றோம்.

மின் அத்தியட்சகர், ஊழியர்கள்
மின் பாவனையாளர் சேவை நிலையம் யாழ் புறநகர் (கொக்குவில்)

**இலங்கையில் முதல் தடவையாகப் பெண்களுக்கான அழகுக்கலைக் கல்லூரி**

Olialakan Studioஉம் British College of Beauty Studiesஉம் இணைந்து நடத்தும் அழகுக்கலைப் பாடநெறிகள்.
ஆரம்பம் முதல் Advance வரை அழகுக் கலையில் பல பிரிவுகளாக வடிவமைத்துள்ளோம்.

எங்களின் சிறப்பம்சம்...
*பண உதவி செய்து தரப்படும்.
*பெறுமதி மிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
*அதிக புள்ளிகள் பெறும் மாணவர்களுக்கு Awards, பரிசில்கள் வழங்கப்படும்.
*வெளிநாடு செல்பவர்களுக்காகவே விஷேடமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறி.
*குறுகிய கால வகுப்புக்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.
*ஒருநாள் முதல் 6 மாத கால பாடநெறிகளும் பயிற்சி வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

குறிப்பு:- பொருத்தமான நேரத்தையும் நாள்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விவரங்களுக்கு:-

British College of Beauty studies
PalalyRoad, Thirunelvely Junction.
076 701 1645

**வேலையாள் தேவை**

யாழ்.கே.கே.எஸ் வீதியிலுள்ள பிரகாஸ் ரான்ஸ்போர்ட் நிறுவனத்திற்கு அலுவலக உத்தியோகத்தர் தேவை.
இருபாலாரும் திங்கட்கிழமை தொடர்பு கொள்ளவும். (69406) (14,18,20)
தொடர்பு: 077 538 9987

**கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி (German Language Acadamy)**

ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கான டொச் A1 பரீட்சைக்கு ஏற்ற வகையில் புதியபிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. பதிவுகளுக்கு முந்துங்கள்.
தொடர்பு: ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். 077 970 7322
(சி/2919) (11,18,20)

**பணிப்பெண் தேவை**

கொழும்பில் தொடர்மாடியில் வசிக்கும் ஒரு குடும்பத்துக்கு பணிப்பெண் தேவை.
சமையல் தெரிந்திருப்பது அவசியம் உணவு, தங்குமிட வசதியுடன் 15,000/- ரூபா சம்பளம் வழங்கப்படும். பாடசாலை தவணை விடுமுறையின் போது சம்பளத்துடன் கூடிய 10 நாள்கள் விடுமுறை வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0777 143 044

**வேலையாள்கள் தேவை**

கொழும்பில் பிரபல உணவு உற்பத்தி தொழிற்சாலைக்கு தகுதியுடைய ஆண், பெண் இருபாலாரும் தேவை.
★ மூன்று நேர உணவு வழங்கப்படும்.
★ தங்குமிட வசதி
★ கவர்ச்சிக்காரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு :076 690 8962

**SUPER BALL** சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 464
சீட்டிழுப்பு திகதி 2016.02.20
வெற்றி இலக்கங்கள்: 29 43 49 67 E
ரூ. 43,937,640/=

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**
வெற்றி வாரம்: 2741 திகதி: 2016-02-20
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 04 16 20 45 S
போனஸ் இல. 48
திங்கட்கிழமை ஜக்பொட் ரூ. 12,842,725/-
Web: www.dlb.lk

**SINGER FINANCE** இடமிருந்து மட்டுமே
பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிக்காக
அதிககடன் தொகை குறைந்த வட்டி வீதத்தில்




தொடர்புகளுக்கு
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
தனு 077 9 357 124
இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### வாகனம் விற்பனைக்கு
LJ தொடரிலக்கம் கொண்ட லொறி விற்பனைக்குண்டு.
(c 29340) (11,18,20)
076 603 6597

### காணி விற்பனைக்கு
சுன்னாகம் மயிலணியில்.
சிவன் கோயிலுக்கு முன்னால் இரண்டு பரப்புக் காணி, 10 அடி பாதையுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 071 2600

### தோட்டக்காணி விற்பனைக்கு
குப்பிளான் வடக்கில் 38 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.
(69397)
077 662 2053

### விற்பனைக்கு
அலுமாரி, மேசை, கண்ணாடி மேசை போன்ற வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குள்ளன.
077 879 2543
(69375) (11,17,18)

### வீடு விற்பனைக்கு
யாழ்- சுண்டுக்குளி பஸ்ரியன் சந்தியில் A9 வீதிக்கு அண்மித்ததாக சிறந்த சுற்றாடலில் வீடு விற்பனைக்கு உண்டு. 4 அறைகள், சமையல் அறை, வரவேற்பறை, குளியலறை, கராஜ் மற்றும் மேலதிக வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு.
076 657 5936

### வீடு, காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் தட்டாதெரு சந்திக்கு அருகில் நல்ல வீடு வளவுடன் விற்பனைக்கு
(c 29302) (14,19,20)
தொடர்பு: 077 905 0274

### விற்பனைக்கு
சில நாள்கள் பாவித்த சாம்சாங் மொபைல் (Samsung Grand Prime 4G)
A/Cக்களுக்கு உரிய வெளியிணைப்பு இயந்திரங்கள், உடன் விற்பனைக்கு.
(க/29326) (11,18,20)
077 007 8802

### விற்பனைக்கு
அசோக் லேலண்ட் லொறி (227- XXXX)
உழவு இயந்திரம்.(Tate) (ரக்டர்)
(NPRB-XXXX) பெட்டி, கலப்பை, டிஸ் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 060 2224

### TV கள் மலிவு விற்பனை
தொடர்பு: 077 044 0570
Sony Wega Flat Tv கள் 14"- 5500/= முதல் 21"- 10.000/= முதல் LG 21" Sleim 10.000/= சோனிரேட் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
இல.56, K.K.S வீதி, சுன்னாகம்.
(86578)(11,15)

### விற்பனைக்கு
மினிபஸ் - Journey (m) விற்பனைக்கு உண்டு.
077 963 4630

### காணி விற்பனை
கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதி உடையார் ஒழுங்கையில் 64 ஆம் இலக்கத்தில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 708 6628
(69386) (11,17,18)

### விற்பனைக்கு
மல்லாகம் T.N பந்தல் சேவையில்
பாவித்த நல்ல நிலையில் உள்ள தகரப்பந்தல், கதிரைகள், பூமணவறை, அலங்கார சீனறித் தட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு.
பகுதி பகுதியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
த.நடராஜா
காளிகோயிலடி, மல்லாகம்.
(69417) (11,18,20)

### வீடு வளவு விற்பனைக்கு
கொக்குவில் கிழக்கு, இறையிலுள்ள 'நமனாக்கன்' நிலப்பரப்பு 3/4 உம் வீடும் விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு:
077 821 8775, 077 226 9967, 021 492 2708
(69424) (11,18,20)

### காணி விற்பனைக்கு
A9 வீதியை முகப்பாகவும் (120 அடி), மிருசுவில் பாம் றோட்டை பக்க றோட்டாகவும் கொண்ட 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. A9 றோட்டை முகப்பாக (60 அடி) 5 பரப்பு பிரித்தும் கொடுக்கலாம். ஞாயிறு முழுநாளும் கிழமை நாளில் பிற்பகல் 7 மணிக்கு பின்னும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 607 9340

### காணி விற்பனை
திருநெல்வேலி, கலாசாலை வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(69406) (13,15,18)
தொடர்பு: 076 5589 752 (S.தர்மராஜா)
077 6557 086

### காணி விற்பனைக்கு
திருநெல்வேலி விவசாயப் பாடசாலைப் பகுதியில், பலாலி வீதிக்கருகில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(69443) (12,18,20)
077 217 4038

### வீட்டுடன் காணியும் வெற்றுக்காணியும் விற்பனைக்குண்டு
பொலிகண்டி றோட்டில் கடற்கரைக்கு முன்பாக பரப்பு 8குளி 14.60 உள்ள காணி விற்பனைக்கு உண்டு. ஹோட்டல் கட்டுவதற்கு உகந்த இடம். அத்துடன் 1½ பரப்புக்காணியில் மூன்று அறையுடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு. இது புங்கன்குளம் வீதி, நாகராசா ஒழுங்கையில் அமைந்துள்ளது. (69448) (14,18,20)
தொடர்பு: 077 742 0240

## வாடகைக்கு

### வாடகைக்கு
நல்லூர்ப் பகுதியில் தனியறை, இணைந்த குளியலறை, சமையலறை என்பன பணிபுரியும் பெண்களுக்கு வாடகைக்கு உண்டு. இருவர் வசிக்கலாம்.
(க/29346) (11,18,20)
077 007 8802

### வீடு வாடகைக்கு உண்டு
யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கு முன்பாக ஸ்ரேசன் வீதியில் பல வாகனத் தரிப்பிடங்கள் உட்பட சகல வசதிகளும் கொண்ட பெரிய மாடிவீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், காரியாலயங்களுக்கு உகந்தது.
தொடர்பு: 077 146 7050
(69414) (11,17,18)

### சலூன் வாடகைக்கு
அல்லைப்பிட்டி, 2ஆம் வட்டாரத்தில் சலூன் வாடகைக்குண்டு.
(69448) (14,19,20)
தொடர்பு: 072 171 9446

### வீடு வாடகைக்கு
05 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் (யாழ்.மாநகரசபை எல்லைக்குள்) சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (69447) (14,18,20)
077 695 3215/ 077 362 1136

### வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம் நல்லூரில் 06 படுக்கை அறைகள், 04 குளியல் அறைகள், 04 வரவேற்பறைகள் கொண்ட சகலவசதிகளும் உடைய புதிய மாடி வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு.
பகுதியாகவோ, முழுமையாகவோ வாடகைக்கு கொடுக்கப்படும். நிறுவனங்கள் விரும்பப்படுகின்றன.
தொடர்பு: 077 693 9598

## தேவை





### தேவை
தொடர்பு: 077 7793 284
கொழும்பு 06 இல் வசிக்கும் சைவ உணவு பழக்கமுள்ள 4பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு சமையல் வேலை செய்வதற்கு ஒருவர் தேவை தங்குமிட வசதி உண்டு. 45 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

### மணமகன் தேவை
யாழ்.இந்து வயது 23 உயரம் 5'2" கேட்டை நட்சத்திரம் மணமகளுக்கு நல்லொழுக்கமுள்ள மணமகன் தேவை. வெளிநாட்டவர் விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 415 2662

### மணமகள் தேவை
இந்து குடும்பம், வயது 30, சுவாதி நட்சத்திரம், வெளிநாட்டில் வசிக்கும் வாய் பேசமுடியாத மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 077 835 5485

### உடன் தேவை
சந்தைப்படுத்தல் பிரிவில் ஆர்வமுள்ள பெண்கள் உடன் தேவை. (கதைத்து விளம்பரங்கள் எடுக்கக் கூடிய பெண்கள்)
தொடர்பு: 076 701 1645

### மணமகள் தேவை
இந்து குடும்பம், 1985 டிசெம்பர், சொவ்ற் வெயார் எஞ்சினியராக கொழும்பில் கடமையாற்றும் மணமகனுக்கு படித்த பொருத்தமான அழகான மணமகள் தேவை.
தொடர்பு: 076 790 5342

### பணிப்பெண் தேவை
மன்னார் நகரப் பகுதியில் வீட்டில் தங்கி வேலை செய்யும் பணிப் பெண் தேவை.
வயதெல்லை : 20 - 40
077 278 5522
(69388) (11,18)

### வேலைக்கு ஆள் தேவை
யாழ்.நகரில் உள்ள பான்சிக் கடை ஒன்றுக்கு பெண் வேலையாள் தேவை.
வயது 18-45.
ராசிக் கிப்(F)ட் சென்ரர்
யாழ்ப்பாணம்.
077 790 5333
(69425) (11,18)

### பணிப்பெண் தேவை
யாழ்.நல்லூரில் (படுக்கையில்இல்லாத) வயோதிபப் பெண் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பார்ப்பதற்கு குடும்பப் பாரமற்ற பெண் தேவை. மாதம் - 15,000/=
தொடர்பு: 077 674 1213

### தேவை
நல்ல நிலையிலுள்ள ஸ்கூட்டி/ பிளசர் மோட்டார்சைக்கிள் விலைக்குத் தேவை.
077 8020821, 071 861 3403

### வீடு வாடகைக்குத் தேவை
யாழ் நகரப் பகுதி, அதற்கு கிட்டிய பகுதிக்குள் சிறிய குடும்பம் வசிக்க சகல வசதிகளோடு கூடிய தனித்த வீடு வாடகைக்குத் தேவை.
(69437) (12,18,20)
076 942 4798

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவகுடும்பம், 1984 இல் பிறந்த, மொ.கி.பா 5¼, செவ்வாய்க் குற்றமற்ற உயரம் 5' 4", அரச உத்தியோகத்திலுள்ள மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் தேவை. (69460) (14,18,20)
021 320 1178 / 077 854 3690

### தேவை
021 492 1731, 077 824 9675
மானிப்பாயில் 65 வயதான பெண்ணை பராமரிப்பதற்கு பெண்மணி தேவை. உடனே தொடர்பு கொள்ளவும்.
விவரங்கள் நேரில். (69277) (11,18)

### தேவை
அதிதீரன் மின்சார பொறியியல் இலக்கு. மின்னியல் பணியாளர், பயிலுநர், சிற்றூழியர் தேவை.
(69350) (11,18)
தொடர்பு: 077 717 9911, 021 321 0777

### வேலையாள்கள் தேவை
எமது நிறுவனத்துக்கு வேலை செய்யக்கூடிய ஆண், பெண் வேலையாள்கள் தேவை.வயது 18 -50. சம்பளம் 10.000 /= பெண்களுக்கு. 20.000/= ஆண்களுக்கு தங்குமிட வசதியும் உள்ளது.
கொழும்பு பெயின்ட்
நீர்வேலி, வில்லு மதவடி, கோப்பாய்.
077 789 0398 / 021 205 4848

## ஏனையவை



- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (கர்சனி)

### சேவை
தொடர்பு: 076 897 0707
கொழும்பிலுள்ள எங்களது முதியோர் இல்லத்தில் உங்களது அன்பிற்குரிய முதியோரை அன்புடனும் ஆதரவுடனும் அரவணைப்புடனும் வைத்தியர் தாதியர் சேவையுடன் பராமரிக்க தயாராகவுள்ளோம்.

### உதவிப் பணிப்பெண்
தொடர்பு: 077 761 8841
வெள்ளவத்தையில் இரு முதியோருள்ள குடும்பத்துக்கு உதவிப் பணிப்பெண் தேவை. இப்போதிருக்கும் சமையல் பெண்ணுக்கு உதவிக்கும் வீட்டுக்குள்ளும் வெளியிலும் வேலை. சம்பளம்: 20 000
(c 29540) (12,18,20)

### வீட்டுப்பணிப்பெண் தேவை
சிறிய வைத்தியர் குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை பார்ப்பதற்கு வீட்டுப்பணிப்பெண் ஒருவர் தேவை.
தொடர்புக்கு: 077 2626 944

### கற்பிக்கும் ஆற்றல் உடையவர் தேவை
ஆண்டு 3இல் கற்கும் மாணவனை பாடசாலைக்குக் கொண்டு செல்லல், பிரத்தியேக வகுப்புகளுக்கு அழைத்து சென்று பராமரித்தல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஆர்வமுடைய நற்பண்புள்ள ஆண் தேவை.கச்சேரி, நல்லூர் பகுதிகளில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (69437) (14,18,20)
தொடர்பு: 077 547 0701

### வேலைவாய்ப்பு
வவுனியாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் Global Advertising நிறுவனத்துக்கான வேலை வெற்றிடம்.
6 மாதகால பயிற்சி நடைபெறும். பயிற்சியின்போது 15,000 - 20,000 வரை சம்பளமாகப் பெறலாம்.
பின்பு 75,000 - 80,000 வரை பெறலாம்.
வயதெல்லை 18- 35. தங்குமிடம் இலவசம். (68210) (11,18)
தொடர்பு: 077 603 6660 - (Vavuniya)
076 735 6922- (Trincomalee)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### பருத்தித்துறை தம்பசிட்டி அருள்தரும்

# அன்னை ஸ்ரீ மஹாமாரி அம்பாள் தேவஸ்தானம்

## (பண்டாரி அம்மன் கோயில்)

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 21.02.2016

### அருள் ஆசிச் செய்தி



பண்டாரியம்மன் என பக்தர்களால் போற்றப்படும் ஸ்ரீ தம்பசிட்டி மகா மாரியம்மன் மஹோற்சவத்தில் 9ஆவது புண்ணிய தினமாகிய இன்றைய நாளில் தேர் ஏறி பவனிவந்து அருள்பாலிக்கின்றாள்.

ஆலயங்களில் தேர்த்திருவிழாவானது புராணங்கள் வியந்து போற்றும் சிவனின் அட்டவீரட்டங்களில் ஒன்றாகிய திரிபுர தகனத்தோடு தொடர்புடையது. தேர் ஒரு நடமாடும் ஆலயம். தேருக்கு தெய்வீகம் புதியதொரு பரிணாமத்தைத் தருகின்றது. இறைவனின் அருளைப் பெற அடியார்கள் ஆலயத்தை நாடிச் செல்வார்கள். ஆனால் அடியவர்களைத் தேடி இறைவன் வீதியுலா வருவதற்கு வழிவகுப்பது தேர் ஆகும். தேர் விழா மேற்படி ஆலயத்தில் நிகழ்வுறுகின்ற வேளையில் மஹோற்சவ குருவாகவும், ஆதீனகர்த்தாவாகவும் விளங்குகின்ற சிவஸ்ரீ சபாரத்தினக்குருக்கள் பாஸ்கரக்குருக்களின் குரு ஆசி அனைவருக்கும் கிடைக்கவும், தேர் விழாவை உபயமாக செய்விக்கின்ற உபயகாரருக்கும், அம்பாளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்து பிரார்த்திக்கின்ற அனைத்து பக்தர்களுக்கும் பண்டாரி அம்பாளின் பெரும் கருணையோடு கூடிய திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம். எல்லோரும் இன்புற்றிருக்க பிரார்த்திப்போம்.

**தேசமான்ய கலாநிதி**
**து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் J.P - நல்லை ஆதீன சிவாச்சாரியர்.**

### வரலாற்றுக் குறிப்புக்கள்



மூர்த்தி, தலம், சமுர்த்திர தீர்த்தம் போன்ற தெய்வீக சிறப்புக்களுடன் மிளிரும் இந்த ஆலயத்தில் ஸ்ரீ மஹா மாரி அம்பாள் பண்டாரி அம்பாள் என்று நாமமும் தாங்கி அருள்பாலிக்கின்றாள். இந்த ஆலயமானது முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட புராதனம் வாய்ந்தது

1806ஆம் ஆண்டளவில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஸ்ரீசக்கரமும் கூடவே பண்டாரி அம்மன் திருவுருவமும் பருத்தித்துறை தம்பசிட்டி தம்பாவத்தை என்னும் ஆதனத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபட்டு வந்ததாக வரலாற்றுக் குறிப்புக்கள் குறிப்பிடுகின்றன.

இந்த ஆலயம் பூசாரி குடியினர் என்று அழைக்கப்பட்ட சுப்பர் கணபதிப்பிள்ளை முருகேசர் செல்லையா ஐயர் பூசாரி அவர்களினால் பராமரிக்கப்பட்டுவந்துள்ளது. முன்னொரு காலத்தில் இந்த ஆலயத்தில் காத்தவராயத் தெய்வமும் வைக்கப்பட்டு கிராமத்தின் காவல் தெய்வமாக மிளிர பக்தி மார்க்க வழிபாட்டோடு இணைந்த வேள்வி சார்ந்த பொங்கல் படையல் மற்றும் காவடி, கரகம், நேர்த்தி வழிபாடுகள் பன்னெடுங் காலமாக நடைபெற்று வந்தது என்றும் வரலாறுகள் கூறுகின்றன.

1979ஆம் ஆண்டு முதல் இந்தியாவிலே இருந்து வருகை தந்த வேதாரணிய குருமார் பரம்பரையினர் விஷேட காலபூஜை கைங்கரியங்களை ஆதிமுதல் செய்து வந்தமையினால் இந்தியா வேதாரணிய குரு பரம்பரையில் உதித்த சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள் சபாரத்தின தேசிகர் அவர்களின் பொறுப்பில் செல்லையா ஐயர் பூசாரியாரினால் 1983 ஆம் ஆண்டு இந்த ஆலயம் ஒப்படைக்கப்பட்டது. அவரின் விடாமுயற்சியினாலும், அம்பாளின் திருவருளினாலும் 1987ஆம் ஆண்டு இந்த ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் இனிதே நிறைவு பெற்று 1994ஆம் ஆண்டு ஆனி மாதம் (15.07.1994) வெள்ளிக்கிழமை அத்த நட்சத்திரத்தில் முதலாவது கும்பாபிஷேகம் வேதாகம முறைப்படி செய்யப்பட்டது.

இக்காலத்தில் பிள்ளையார், அம்பாள், முருகன், நவக்கிரகம், வைரவர், சண்டேஸ்வரர் போன்ற பரிவார தெய்வங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த முதலாவது கும்பாபிஷேகம் அல்வாய் மாலசந்தி பிள்ளையார் பிரதம குரு காலஞ்சென்ற சிவஸ்ரீ தேவராஜக் குருக்கள் அவர்களினால் நவகுண்டபட்ச மஹா கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டது. அத்தோடு கொடிமரம் ஸ்தாபிக்கப்பட்டு மாசி மகத்தைத் தீர்த்தமாக கொண்டு 10 தினங்கள் மஹோற்சவம் இடம்பெற்று வருகின்றது. இவ் காலத்தில் மஹோற்சவம் மட்டுமல்லாது சித்திரை வருடப்பிறப்பை மையமாகக் கொண்டு பொங்கல், படையல், காவடி, கரகம், பாற்செம்பு நேர்த்திகள் இப்பொழுதும் பாரம்பரியமாக இடம்பெற்று வருகின்றன. இந்த ஆலயத்தின் விசேட தினங்களாக சித்திரை மாதம் பொங்கல் விழா, நவராத்திரி விழா, திருவெம்பாவை பூஜை, ஆடிப்பூரம், தை அமாவாசை அபிராமிப் பட்டர் விழா, தைப்பூசம், மஹோற்சவம் என்பன நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது.



இந்த ஆலயத்தில் 1999ஆம் ஆண்டு மஹாசண்டி ஹோம யாகமும் இரண்டு தடவைகள் செய்த பெருமை இந்த ஆலயத்துக்கு உண்டு. மீண்டும் 2005ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு மீண்டும் அடியவர்களின் அன்பளிப்புகளாலும் ஒத்துழைப்புக்களினாலும் 2010 ஆம் ஆண்டு 4ஆம் மாதம் 11 ஆம் திகதி சதய நட்சத்திரத்தில் 2ஆவது மகாகும்பாபிஷேகம் பண்டிதர் கலாநிதி து.கு. ஜெகதீஸ்வர குருக்கள் அவர்களின் தலைமையில் பல குருமார்கள் அனுசரணையுடன் இடம் பெற்றது.

தற்போது மஹோற்சவம் நித்திய பூஜைகளை சிவசிதம்பர சபாரட்ண தேசிகர் அவர்களின் புதல்வன் சிவஸ்ரீ சபா பாஸ்கரகுருக்கள் நிகழ்த்தி வருகிறார். அவர்கள் பிரதம குருவாகவும் ஆதீனகர்த்தாவாகவும் பணியாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது நடைபெறும் மஹோற்சவ காலத்தில் விழா சிறப்புற நவசக்தி அர்ச்சனை வழிபாடுகள், திருவிளக்கு பூஜைகள் கற்பூர ஆராத்தி வழிபாடுகள் இடம்பெறுவது சிறப்பம்சமாகும்.

மாசி மகத்துக்கு முதல்நாள் அன்னை ஸ்ரீமஹாமாரி அம்பாள் தேர் ஏறி பவனி வரும் கண்கொள்ளாக்காட்சிக் காண ஆயிரம் கண்வேண்டும். மாசிமக புண்ணிய தினத்தில் பருத்தித்துறை இம்பர்சிட்டி சமுத்திரத் தீர்த்த வாரிதியில் அன்னை தீர்த்தமாடி எழுந்தருளிய பின்பு நகர்வலமாக பிரதட்சணமாக வருவதும் இந்த ஆலயத்தின் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றது.

அன்னைக்கு இன்று இரதோற்சவம் முற்பகல் 10.00 மணிக்கு நிகழவுள்ளது.
அன்னையைத் தொழுவோம் அருள் பெறுவோம்.

**சிவஸ்ரீ சிதம்பர சபாரத்தின தேசிகர்**
**சிவஸ்ரீ சபா பாஸ்கரகுருக்கள்**
**(பிரதம மஹோற்சவக் குருக்கள்)**

(C/26179)(10.17.18.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் தேவை

கிளிநொச்சி, A9 வீதி, கரடிப்போக்கு AKR கட்டடத்தில் அமைந்துள்ள சொவ்ற் லொஜிக் காட்சி அறையின் பணிகளுக்காக ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும். பெண்களுக்கு கணினி அறிவு தேவை. ஆண்கள் வெளிக்கள வேலைகளுக்கும் தயாராய் இருத்தல் வேண்டும்.

தொடர்பு: 021 567 1110 (64260) (9,18)

## மகப்பேறு இனவிருத்தி நிலையம்

மகளிருக்கு குழந்தைப்பருவம் தொடக்கம் முதுமை வரையிலான பிரச்சினைகளையும் அடிக்கடி ஏற்படும் அடி வயிற்றுநோ கருச்சிதைவு மாதவிடாய் உட்பட சகல விதமான பிரச்சினைகளுக்கும். சிகிச்சை. மகப்பேறு இனவிருத்திக்கான சிகிச்சை IVF, ICSI யும் கொடை முட்டை (Donor Egg) விந்து நன்கொடை (Donor Sperm) போன்ற சிகிச்சை என்பவற்றில் ஐக்கிய இராட்சியத்தில் (UK) 40 வருட அனுபவம் கொண்ட வைத்திய நிபுணர் சதானந்தம் அவர்கள் திருநெல்வேலி நொதேன் சென்றல் வைத்தியசாலையில் தற்பேது சிகிச்சை அளித்து வருகின்றார். சென்ற மாதம் இவரின் சிகிச்சை மூலம் இரு தாய்மாருக்கு சோதனைக்குழாய் மூலம் குழந்தைகள் பிறந்தது யாவரும் அறிந்ததே.

தொடர்புகளுக்கு : திருமதி கௌரி
(c/29163) (12.18.20)
இல : 077 343 9988
021 221 9988, 021 221 9977 , 021 222 2263

BUILDING BEYOND LIMITS

Tokyo Cement Co.(Lanka) Plc prestigious public guoted company with a foreign collaboration and a reputation as one of Sri Lanka's premier cement manufactures, reguest applicants from qualified individuals for the following position for their Ready mixes Concrete Plant - Jaffna.

Sales Officer

03 Subjects in GCE A/L and Diploma in marketing with higher computer literacy and two years experience in similar field preferably in construction industry are cor qualifications. Prospective applicants should have good command of English apart from two native languages.

Age around 25 years.

The chosen candidate would be entitled to an attractive salary with other perquisites.

Applicants with names and addresses of 2 non -related referees should be sent by post or e-mail to reach the under mentioned within 7days.

(69451) (11,18,20)

**General Manager (Factory)**
**TOKYO CEMENT CO. (LANKA) PLC**
PO BOX 02, Cod Bay, China Bay, Trincomalee
E-mail: tokyofac@sltnet.lk.

## விநியோகஸ்தர்கள் தேவை

நறுமணம் கமழும் அதி உன்னத ரக (Export quality) ஊதுபத்திகளை (Incense sticks) விநியோகிக்க யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து விநியோகஸ்தர்கள் (Distributors) உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

தொடர்பு: 077 755 6244 (69385) (11,18)

## கணக்காளர் தேவை

வவுனியா அருள்மிகு ஸ்ரீஆதிவிநாயகர் தேவஸ்தானத்தில் கணக்காளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

தகைமைகள்

01. ஆலயத்தை அண்மித்த பகுதியில் இருத்தல் வேண்டும்.
02. இந்து ஆகம விதிகளுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
03. ஆலயம் தொடர்பான முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

ஊதியம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தலைவர்
ஸ்ரீ ஆதிவிநாயகர் தேவஸ்தானம்,
புகையிரத நிலைய வீதி,
வைரவப்புளியங்குளம், வவுனியா.

(68215) (14,18,20)

தொடர்பு:
024 222 5037,
077 764 9592

## Vacancy Announcement - Urgent

* Cash Collector

Qualifications : G.C.E (A/L)

Experiences : 2 Years Experience in Jaffna District

Pls apply to following address :-

A.M.T Marketting and Distributors (pvt)Ltd
28, New Sivan Road,
Thirunelvely, Jaffna.
Email: amt.trans.jaffna@gmail.com.
(69458) (11,18,20)

## விற்பனைக்கு

திருநெல்வேலியில் Farm Schoolக்கு அருகில் பலாலி வீதியிலிருந்து 200M தொலைவில் 2.1-3/4 பரப்பளவு கொண்ட அடுத்தடுத்துள்ள காணிகள் ஒன்றாகவோ தனித்தனியாகவோ விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773604403

வீட்டில் இருந்தவாறே இலகுவாக SMS மூலம் **English** கற்றுக்கொள்ள அரியதோர் வாய்ப்பு!

E: Put the past behind and look to the future
T: கடந்த காலத்தை மறந்து எதிர்காலத்தை நோக்கு

இவ்வாறான SMS பாடங்களை தினமும் பெற்றுக்கொள்ள:

REG(இடைவெளி)YES என்று Type செய்து
Dialog என்றால் 77000 க்கு
Etisalat என்றால் 4499 க்கு SMS அனுப்புங்கள்.

## ஜீவக வாத தைலம்
### Jeewaka Vata Thailaya

முதுகுவலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு, அரிப்பு, எரிவு,நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும், வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம், காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.

25 ml 150 ரூபா | 50 ml 280 ரூபா | 100 ml 450 ரூபா

**Manufactured & Marketed by Jeewaka Herbals**
No.17/3, Wedagedara Koskandawala Yakkala
Ayu Lic No. 6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact : 071 227 1526

ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வைத்தியகலாநிதி
### தம்பு துரைராசா (D.A.M)

வைத்திய கலாநிதி அமரர் திரு.சுந்தரம் வேலுமயிலும் அவர்களைக் குருவாகக் கொண்டு அவரது சுந்தரவேல் வைத்தியசாலையில் உதவி வைத்தியராகப் பணி புரிந்து, பின்னர் வல்வெட்டித்துறை 'மாதுஜன்' வைத்தியசாலையின் பிரதம வைத்தியராகப் பணிபுரிந்து கொண்டிருக்கும் வைத்திய கலாநிதி திரு.தம்பு துரைராசா (DAM) அவர்களது 50 வருட வைத்திய சேவையைப் பாராட்டிக் கௌரவித்து 13.02.2016 அன்று கொழும்பு மாகாண கலாசார மைய மண்டபத்தில் இந்திய சித்த வைத்திய சங்கம்,மாற்று மருத்துவ சங்கம் என்பன இணைந்து வைத்திய ரத்ன பண்டித் என்னும் உயர் விருதையும், இலங்கை அரசின் தேசிய சமாதான சங்கத்தினால் கீர்த்தி ஸ்ரீ தேசபந்து வைத்திய அபிமானி எனும் பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு இன்னும் பல விருதுகளைப் பெற்று நீண்ட ஆயுளோடு வாழ வாழ்த்துகின்றோம்.

மூன்றாம் தலைமுறை
வைத்திய கலாநிதி
ஈ.சுந்தரேஸ்வரன் (D.A.M)
சுந்தரவேல் வைத்தியசாலை, மல்லாகம்.

(69423) (11,17,18,20)

நான்காம் தலைமுறை
வைத்திய கலாநிதி
வே. கணேசவேல் (D.A.M)
சுந்தரவேல் வைத்தியசாலை, உரும்பிராய்.

## குயின்சி விநியோகஸ்தர்கள்




- மருத்துவ பீட மாணவர்களுக்கான மருத்துவ நூல்கள்
- ஆங்கில அகராதிகள், தேசிய பாடசாலை புத்தகங்கள்
- சிறுவர்களுக்கான நகைச்சுவைக் கதைகள்
- மாணவர்களுக்கான அறிவியல் நூல்கள் நீதி நூல்கள்
- மங்கையர்களுக்கான சமையலில் ருசி பார்க்க சமையல் குறிப்புப் புத்தகங்கள் அழகுக்குறிப்புப் புத்தகங்கள் மற்றும் கோலப் புத்தகங்கள்
- சமயத்தினை வளர்க்க ஆன்மீகப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான எழுதுகருவி உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள், க.பொ.த.சாதாரண மாணவர்கள், க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான கடந்தகால வினாத்தாள்கள் போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

10 % முதல் 50 % வரையான விலைக்கழிவு.

பரிசுக்கூப்பன்களும் பெற்றுக்கொள்ளலாம்

**குயின்சி விநியோகஸ்தர்கள்**
271, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 7513 H.P. 077 226 8486
(69419) (13,17,20)


## குழப்பம் விளைவித்த பிக்குகள் மறியலில்

கொழும்பு,பெப். 21

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரை கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து, கடந்த மாதம் ஹோமாகம நீதிமன்ற வளாகத்தில் குழப்பம் விளைவித்த நான்கு பிக்குகளையும் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹோமாகம நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

பியகம சுசிம தேரர், பிட்டிகல தர்மவினித தேரர், மதுவாகல தர்மசிறி தேரர் மற்றும் கிரம தேவிந்த தேரர் ஆகிய நான்கு தேரர்களே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த)

## பஸ் பள்ளத்தில் விழுந்து விபத்து; 40 பேர் காயம்

கொழும்பு, பெப். 21

தனியார் ஆடைத் தொழிற்சாலைக்குச் சொந்தமான பஸ்ஸொன்று, ஊழியர்களை ஏற்றிக் கொண்டு, தம்புலுவன- கஹவத்த வீதியில் சென்ற வேளை, இரத்தினபுரி, தம்புலுவன பகுதியில் வைத்து 15 அடி பள்ளத்தாக்கில் விழுந்து விபத்துக்குள்ளானது.

இவ்விபத்து, நேற்றுச் சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு இடம் பெற்றதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

பஸ்ஸின் சாரதி உட்பட பஸ்ஸில் பயணித்த ஆடைத் தொழிற்சாலையின் 40 ஊழியர்களும் இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துத் தொடர்பில் இரத்தினபுரி பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

தனியார் வகுப்புக்கள்

தரம் 6-11 வரையான மாணவர்களுக்கு கிளி, முல்லை, யாழ். மாவட்டங்களில் வீடு வந்து கற்பித்துக் கொடுக்கப்படும்.

077 026 1966

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9ஆவது தேசிய ஜம்போறி சாரணர் பதிவுடன் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 21

நாட்டின் தேசிய நல்லிணக்கத்தை உறுதி செய்யும் நோக்குடனும், நூற்றாண்டைக் காணும் யாழ். சாரணியத்தை கொண்டாடும் நோக்குடனும் "நட்புரிமையும் புரிந்துணர்வும்" என்ற கருப்பொருளில் இலங்கை சாரணிய சங்கத்தால் வடக்கில் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒன்பதாவது தேசிய ஜம்போறி (தேசிய சாரணர் பயிற்சிப்பட்டறை) நேற்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாரணர் பதிவுகளுடன் ஆரம்பமானது.



எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ள இந்த ஜம்போறி பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்வதற்காக, நேற்றுமுன்தினம் முதல் வந்திருந்த - வெளிமாவட்டங்களைச் சேர்ந்த சாரணர்கள் பலர் பதிவுகளை மேற்கொண்ட போதும், நேற்று வெளிநாடுகளில் இருந்து வந்திருந்த சாரணர்கள், யாழ். மாவட்டத்தை சேர்ந்த சாரணர்கள் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்தும் வருகை தந்த ஆண், பெண் சாரணர்கள் என 8 ஆயிரத்துக்கு அதிகமான சாரணர்கள் யாழ். மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள சாரணர் அலுவலகத்தில் தமக்கான பதிவுகளைமேற்கொண்டுள்ளனர்.





நண்பகல் வரை நடைபெற்ற பதிவுகளைத் தொடர்ந்து இவர்கள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு - பீதுறுதாலகால, நமுனுகுல, ரக்வன மற்றும் சமனகல என்ற குழுக்களாக பிரிக்கப்பட்டு பாசறைகள் அமைக்கும் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தமது பகுதிகளில் கூடிய சாரணியர்கள் தம்முடைய போட்டிகள், சாகச நிகழ்சிகளுக்குத் தேவையான கூடாரங்கள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளை அமைத்துக் கொண்டதுடன், குழுநிலைக் கலந்துரையாடல்களிலும் கலந்து கொண்டனர்.





இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நிகழ்வுகளில், காலை தொடக்க நிகழ்வுக்கான ஒத்திகைகளும், சாரணர்களின் நிகழ்வுகள், பயிற்சிகள், திறமை வெளிப்பாட்டுப் போட்டிகள், சாரணர் பாசறையின் மாலை நேரத் தொடக்க விழா நிகழ்வு மற்றும் இரவு நிகழ்வாக சாரணர் அறிமுகநிகழ்வும்நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளை முன்னிட்டு முற்றவெளி யாழ்மாநகர சபை மைதானம், யாழ்ப்பாணக் கோட்டையின் சுற்று வட்டாரப் பகுதி, மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, கடற்கரை வீதிப்பகுதி, யாழ் வீரசிங்கம் மண்டபப் பகுதி, புல்லுக் குளப்பகுதிகளில்சாரணர்கள் கூடாரம் அமைப்பதற்கான வேலைகளை முன்னேடுத்து வருகின்றனர்.

சாரணியர்களின் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பை நல்கும் வகையில் ஏ-9 பிரதான வீதி யாழ் நீதிமன்றம் முதலும், கே.கே.எஸ் வீதி யாழ் தபால் நிலையம் முதலும், புல்லுக்குள வீதி மணிக்கூட்டுக் கோபுர வீதியில் இருந்து புல்லுக்குளம், யாழ் பொது நூலகம் செல்லும் வீதிகளும், மத்திய கல்லூரிக்கும் நீதிமன்றத்திற்கும் இடைப்பட்ட சிறுவீதிகளும், கோட்டை வீதி, கடற்கரை வீதி என்பனவும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதுடன் போக்குவரத்துச் செயற்பாடுகளுக்காக குறித்த வீதிகள் தவிர்ந்த ஏனைய வீதிகள் திறந்து விடப்பட்டுள்ளன.



இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளை யாழ். மாநகர சபையினரும், யாழ். சுகாதாரப் பரிசோதகர் பணிமனையினரும், பொலிஸ் மற்றும் இராணுவமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

சாரணியத்தை உருவாக்கி "நாட்டுப்பற்றும், எப்போதும் பிறருக்கு உதவுவதுமே என் மூச்சு என்ற மந்திரத்தை உலகிற்குக் காட்டிய பெரியார் றொபட் ஸ்டீவன்சன் ஸ்மித் பேடன் பவலின் பிறந்ததினமான நாளை திங்கட்கிழமை, மாலை 4 மணிக்கு உத்தியோக பூர்வமாக ஜம்போறி நிகழ்வுகள், நாட்டின் ஜனாதிபதியும் பிரதம சாரணருமான மைத்திரிபால சிறிசேனவால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (ந-ரி5,ரி)










## சிறுவர் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.21

சிறுவர்களின் ஆளுமை விருத்தி, மேம்பாடு, திறன் விருத்தி, உள சமூக ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் பங்குபற்றல் என்பவற்றுக்கான வாய்ப்புக்கள், வளங்களை விரிவாக்குதலும், சிறுவர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்கும் நோக் கோடு செயற்படும் சி.சி.எச் நிறுவனம் சிறுவர்களுக்கான நிகழ்வுகளை நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.15, கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. விளையாட்டுக்கள், பாடல்கள், மூலம் கதை கூறல், காகிதத்தில் உருவம் அமைத்தல் போன்ற சிறுவர் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.(ந-ஜ-ரி)

# ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் விஜயகலா, அங்கஜன் முறுகல்

யாழ்ப்பாணம். பெப். 21

பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், கூட்டத்தை அரசியலாக்க வேண்டாம் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கூறியதை அடுத்து அவருக்கும் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. எனினும் மீண்டும் சமரசப் பேச்சால் கூட்டம் வழமைக்குத் திரும்பியது.

கரவெட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இணைத் தலைவர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராசா ஆகியோர்அதில் கலந்து கொண்டனர்.

இதன் போது வீடு கட்டு வதற்கான சிமெந்து பைக்கட் வழங்கப்பட்டமை தொடர்பில் அதிகாரி ஒருவரைக் கூட்டத்தில் பங்குபற்றிய பொதுமகன் ஒருவர் குற்றஞ் சாட்டினார்.

இதனால் சீற்றமடைந்த விஜதயகலா மகேஸ்வரன் அதிகாரிகளை தனிப்பட எவரும் குற்றஞ் சாட்ட வேண்டாம். தனிப்பட அதிகாரிகளைக் குற்றஞ் சாட்ட இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்படவில்லை. அதிகாரிகள் மக்களுக்காகப் பணிபுரிபவர்கள். அவர்கள் இன்று சுதந்திரமாகப் பணிபுரிகின்றனர் எனக் கோபத்துடன் தெரிவித்தார்.

அமைச்சர் இவ்வாறு கூறியதும் சபையில் இருந்த சில அதிகாரிகள் கரகோஷம் செய்தனர். ஆனாலும், அமைச்சர் கோபமாகப் பேசிக் கொண்டிருந்தார். அப்போது கூட்டத்தை அரசியலாக்க வேண்டாம் என அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அதனால் கோபமடைந்த அமைச்சர் நான் அரசியல் ஆக்கவில்லை எனத் தெரிவித்தார். இதனை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் ஐயோ நான் உங்களைச் சொல்லவில்லை.கை தட்டுபவர்களைச் சொன்னேன் என்று கூறினார். அதன்பின்னர் கூட்டம் வழமைக்குத் திரும்பியது. (ஜ-109)

## சிலை திறப்பும் மெய்வன்மைப் போட்டியும்

யாழ்ப்பாணம், பெப்.21

சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலையின் திறப்பு விழாவும், மெய்வன்மைப் போட்டியும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

பாடசாலைஅதிபர்எஸ்.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி ஆறு.திருமுருகன், வலி. கிழக்கு முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் க.தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(ந-ஜ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிவராத்திரி ஏற்பாடுகள் பூர்த்தி



மகா சிவராத்திரி விழா மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி நடைபெறும் என திருக் கேதீஸ்வர ஆலய திருப் பணிச் சபைச் செயலாளர் புலவர் திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் அரச அதிபர் தலைமையில் திருக்கேதீஸ்வர திருப்பணிச் சபை உறுப்பினர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் இடையே சிவராத்திரி விழாத்தொடர்பாக இடம் பெற்ற மாநாட்டிலே குறித்த விடயங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

கௌரி இணை திருக்கேதீஸ்வரநாதர் திருத்தலத்தில் பாலஸ்தாபனம் நடைபெற்று, ஆலயம் மறு சீரமைப்பதற்காகவும், மடங்களுக்கான அத்திபாரக் கல் நடப்பட்ட நிலையிலுள்ளதால் இந்த முறை மகாசிவராத்திரி விழா நடைபெறமாட்டாது என்றொரு கதை பரப்பப்பட்டிருந்தபோதும், வழமை போல இந்த வருடமும் மகா சிவராத்திரி விழா மிகச்சிறப்பாக நடைபெறும் என திருக்கேதீஸ்வரர் ஆலய திருப்பணிச் சபை தெரிவித்துள்ளது.

மக்கள் வழிபாட்டுக்கு வந்து செல்வதற்கு வசதியாக உள்ளக வீதிகளைத் திருத்துவதற்கும், முள்ளிப் பள்ளத்தில் இருந்து திருக் கேதீஸ்வர திருத்தலத்தை வந்தடையும் வீதியைத் திருத்தும் வேலைகளையும் வீதி அபிவிருத்தி திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

அத்துடன் போக்குவரத்துக்காக இலங்கை போக்குவரத்து சபை, தனியார் பஸ் சேவை என்பவை விசேட சேவைகளை மேற்கொள் வதற்காக ஒழுங்குபடுத் தப்பட்டுள்ளன. தனியார் போக்குவரத்துக்கும், இலங்கை போக்குவரத்துக்கும் தனித் தனியாக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ரயில் சேவை ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காலை 08.30 மணிக்கு கொழும்பில் இருந்து புறப்படும் ரயில் மாலை 05.30 மணிக்கு திருக்கேதீஸ்வரத்தை வந்தடையும். திருக் கேதீஸ்வரத்துக்கும், ரயில் நிலையத்துக்குமான போக்குவரத்துச் சேவைகளைத் தொடர் சேவையாக இலங்கைப் போக்குவரத்து சபை, தனியார் பஸ் சேவை என்பவை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது திருக்கேதீஸ்வரத்தில் வைத்தியசாலை ஒன்று இயங்குவதால் வைத்தியர்களும், தாதிய உத்தியோகத்தர்களும், சிற்றூழியர்களும் வைத்தியசாலையில் இரவு கடமையாற்ற பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பெருந் தொகையான மக்கள் விழாவுக்கு வருகை தருவார்கள் என்று எதிர்பார்ப்பதால் தற்காலிக கொட்டகைகள் அமைப்பதற்கும் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

(ற-ஐ-21)

# 250 மெற்றிக் தொன் நெல் முல்லையில் கொள்வனவு

## நெல் சந்தைப்படுத்தும் சபை நடவடிக்கை

முல்லைத்தீவு.பெப்.21

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளிடமிருந்து நெல் சந்தைப்படுத்தும் சபை 250 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்யவுள்ளது என்று என முள்ளியவளை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.சுகந்தன் தெரிவித்தார்.

மாவட்டத்துக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் நாளாந்தம் நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது என்றும், எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை குமுழமுனையில் அமைந்துள்ள நெல் களஞ்சியத்தில் முள்ளியவளை, குமுழமுனை, அளம்பில், கொக்கிளாய் ஆகிய கமநல நிலையங்களுக்கு உட்பட்ட விவசாயிகளிடமிருந்து குறித்த தொகை நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த கால போக நெற் செய்கையில் ஈடுபட்ட முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் தங்களுடைய நெல்லை உரிய விலையில் சந்தைப்படுத்த முடியாமலும், பட்ட கடனை அடைக்க முடியாமலும் திணறுகின்றோம் என்று தெரிவித்திருந்தனர். இந்த நிலையிலேயே நெல் சந்தைப்படுத்தும் சபை குறித்த பகுதி விவசாயிகளுடைய நெல்லைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு அமைய ஒவ்வொரு கமநல நிலையத்துக்கும் தலா 50 டோக்கன்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அத்துடன் அரை ஏக்கர் நெற் செய்கையில் ஈடுபட்டவர்களிடம் 500 கிலோகிராம் நெல்லும், ஒரு ஏக்கர் நெற் செய்கையில் ஈடுபட்டவர்களிடம் ஆயிரம் கிலோ கிராம் நெல்லும், ஒன்றரை ஏக்கர் நெற் செய்கையில் ஈடுபட்டவரிடம் ஆயிரத்து 500 கிலோ கிராம் நெல்லும், இரண்டு ஏக்கரும் அதற்கு மேற்பட்ட நிலப்பரப்பில் நெற் செய்கையில் ஈடுபட்டவர்களிட மிருந்து 2 ஆயிரம் கிலோ கிராம் நெல்லும் கொள்வனவு செய்வதென வரையறுக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி முதல் 5ஆம் திகதிவரை ஒட்டுசுட்டான் நெற் களஞ்சியத்திலும், எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 11ஆம் திகதிவரை புதுக்குடியிருப்பு நெற் களஞ்சியத்திலும், 14 ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை உடையார்கட்டு நெற்களஞ்சியத்திலும், அந்தந்த கமநல நிலையங்களுக்கு உட்பட்ட விவசாயிகளிடமிருந்து மேற்குறிப்பிட்டவிதத்தில் நெல் கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக் கப்படுள்ளது. அத்துடன் ஒரு கிலோ நெல் 38 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவை விவசாயிகள் வரவேற்றுள்ளனர். இதுகுறித்து அவர்கள் குறிப்பிடும்போது;

இன்று வரை தனியார் நெல் வியாபாரிகள் ஒரு கிலோ நெல்லை ஆகக் கூடிய விலையாக 17 ரூபா முதல் 19 ரூபா வரையான விலைக்கே கொள்வனவு செய்தனர். பெருமளவான விவசாயிகள் கடன் தொல்லை காரணமாக அறா விலைக்கு நெல்லை விற்று பெரும் நட்டம் அடைந்துள்ளனர்.

தற்போது நெற் சந்தைப்படுத்தும் சபையினரால் நெல் கொள்வனவு மேற்கொள்ளப்படவுள்ளமை ஏனைய விவசாயிகளுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

எதிர்வரும் காலங்களிலாவது நெற் சந்தைப்படுத்தும் சபையினர் ஒவ்வொரு நெல் அறுவடை பருவகாலத்துக்கும் ஏற்ற வகையில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை முன்கூட்டியே முன்னெடுக்க வேண்டும்- என்றனர்.

(ற-ஐ-21,102)



வவுனியாவில் அமைந்துள்ள இலங்கை விவசாயக் கல்லூரியின் இரண்டு விடுதிக் கட்டடங்களின் திறப்பு விழா நேற்று முன்தினம் கல்லூரி அதிபரும் பிரதி விவசாயப் பணிப்பாளரு மான திருமதி குமுதினி சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட, விரிவாக்கல் மற்றும் பயிற்சிப் பிரிவின் விவசாயப் பணிப்பாளர் ஆர்.எஸ்.விஜேசேகர இரண்டு விடுதிகளையும் திறந்து வைத்தார். கல்லூரியில் இரண்டாவது நாளாக நடைபெற்றுவரும் வெளிக்களக் கண்காட்சியையும் அவர் பார்வையிட்டார். (ற-ஐ-ரி5)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.21

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் "எமது சமூக நிலையும் சமூக விஞ்ஞானப் பார்வையும்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் தொடக்க உரையை க. சிவகரன், பிரதான உரைகளை சி.க. செந்திவேல், க. தணிகாசலம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

(ற-ஐ-ரி)

## பூநகரி களங்கண்டிகளில் கடல் உணவுகள் அபகரிப்பு

பூநகரி கடலேரியில் உள்ள களங்கண்டிகளில் காணப்படும் இறால் மற்றும் கடல் உணவுகளை இரவோடிரவாக இனந்தெரியாதோர் அபகரித்துச் செல்கின்றனர் என சாவகச்சேரி கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் வி.லிங்கன் தனேஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பூநகரி, வெட்டுக்காட்டுப்பகுதியில் தென்மராட்சி தெற்கைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் களங்கண்டி வலைகளைப் போட்டு இறால் நண்டு உட்பட கடல் உணவுகளை நீண்டகாலமாகப் பிடித்து வருகின்றனர்.

கடந்த 6 வருடங்களாக ஏனைய பிரதேசத்தைச் சேர்ந்த கடற் றொழிலாளர்கள் கரையில் தொழில் செய்ய அனுமதி இல்லாத போதும், இந்தப் பகுதிக்குள் வந்து கரையில் தொழில் செய்து எமது தொழிலுக்கு இடையூறாக இருக்கின்றனர்.

அண்மைக்காலமாக இது அதிகரித்துள்ளதாகவும் மற்றும் வெட்டுக்காட்டுப் பகுதியைத் தாண்டி படகுகளில் தொழில்களுக்குச் செல்வோர் நள்ளிரவு வேளையில் திரும்பும் வேளைகளில் களங்கண்டிகளில் காணப்படும் கடல் உணவுகளையும் அபகரித்துச் செல்கின்றனர்.

இந்தநிலையில் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கத்துக்கும் சமாசத்துக்கும் இது குறித்துப் பல தடவைகள் முறையிட்டும் பயன் கிடைக்காததால் தற்பொழுது சாவகச்சேரி பொலிஸாரிடம் முறையிட்டுள்ளோம்- என்றார்.

(ற-ஐ-ரி,9)

# காணிப் பிணக்குகளை தீர்ப்பதற்கு விரைவில் விசேட மத்தியஸ்த சபை

காணிப் பிணக்குகளைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கென கிளிநொச்சி மாவட்டத்தில் காணி விசேட மத்தியஸ்த சபை ஒன்று அமைக்கப் படவுள்ளது.

பொது மக்களிடையே நிலவும் காணி சம்பந்தமான பிணக்குகளை மத்தியஸ்த அடிப்படையில் சுமுகமாகத் தீர்ப்பதற்கென காணி விசேட மத்தியஸ்த சபைகளை, மாவட்ட ரீதியில் அமைப்பதற்கு நீதி அமைச்சின் கீழான மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, காணிப் பிணக்குகள் தீர்க்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து செய்துள்ள பரிந்துரைகளுக்கு ஏற்ப காணி விசேட மத்தியஸ்த சபைகளை ஸ்தாபிப்பதற்கு மத்தியசபைகள் ஆணைக்குழு ஆவன செய்துள்ளது.

அதனடிப்படையில் வடக்கு கிழக்கில் காணி விசேட மத்தியஸ்த சபைகளை மாவட்ட ரீதியில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மாவட்டத்திலும், கிளி நொச்சி மாவட்டத்திலும் முதற்கட்டமாக காணி விசேட மத்தியஸ்தசபைகளை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன என்று மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட பயிற்றுவிப்பாளர் எம்.எஸ்.ஆர். ஜோன்பிலிப் தெரிவித்தார்.

இந்தக் காணி மத்தியஸ்த சபைகளை அமைப்பதற்கு முன்னோடியாகக் கோரப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் தெரிவு செய்யப்பட்டோருக்கு காணி மத்தியஸ்தம் பற்றிய பயிற்சி செயலமர்வுகளை நடத்தவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை- கிளிநொச்சி மாவட்ட காணி விசேட மத்தியஸ்த சபையை அமைப்பதற்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கென 36 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு காணிப் பிணக்குகள் தொடர்பிலான மத்தியஸ்தம் பற்றிய பயிற்சி செயலமர்வு நடைபெறவுள்ளது.

இலங்கையின் பல பாகங்களிலும், மத்தியஸ்த சபைகள், ஆணைக்குழுவினால் பிரதேச செயலக ரீதியாக அமைக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. (ற-ஐ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு ஆண்டுகளில் யாழ். நகர் இரண்டாவது பெரு நகரமாகும்

## கலாநிதி குகதாசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.21
மிகக் குறுகிய காலத்தில் யாழ்.நகர் கண்டுள்ள வளமும் வளர்ச்சியும், உயர்வும், உயற்சியும் மிகவும் பிரமிக்கத்தக்கவை. யாழ். வர்த்தக சமூகத்தினரே இதற்கு முதுகெலும்பாகத் திகழ்கின்றனர். இன்னமும் ஆறு ஆண்டுகளில் யாழ்.நகர் மீண்டும் இலங் கையின் இரண்டாவது பெரிய நகர மாகி விடும் - இவ்வாறு தெரிவித்தார் கலாநிதி க.குகதாசன்.

வடமாகாண வர்த்தக சமூகத்தினர் மத்தியில்விழிப்புணர்வையும்பொறுப்புணர்வையும் ஊட்டி வளர்த்த "ஏ.அய்.ஏ" காப்புறுதி நிறுவனத்தின், இறுதி நிகழ்ச்சியாகிய "வாடிக்கையாளர் சேவையும், சேவைத் திறன்மேம்பாடும்"என்றகருத்தரங்கை கடந்த சனிக்கிழமை ஞானம் விடுதியில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

> "யாழ்ப்பாணப் பொருள்கள் தரம் வாய்ந்த பொருள்கள் என்ற யாழ்.பெருமை குறியீட்டுச் சின்னத்தை மீண்டும் கட்டியெழுப்ப யாழ்.வர்த்தக சமூகத்தினர் முன்வரல் வேண்டும்."

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட மிளகாய் சோஸ், தக்காளி சோஸ், மாம்பழ ஜாம் ஆகியவை இலங்கை முழுவதும் பாவிக்கப்பட்ட பொருள்களாக அமைந்து, யாழ்.நகருக்கே பெருமை ஈட்டிக்கொடுத்தன. யாழ்ப்பாணத்திலேயே சீதா சோடா, வல்வெட்டித்துறை சோடா, கமலா பிஸ்கட், கமலா ரொபி ஆகியவை தயாரிக்கப்பட்டன. மில்க்வைற் சோப் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாமல் பிற மாவட்டங்களிலும் பிரசித்தி பெற்றிருந்தது. இவ்வாறான பழம் பெருமை வாய்ந்த பொருள்களை மீண்டும் உற்பத்தி செய்து, யாழ்ப்பாணப் பொருள்கள் தரம் வாய்ந்த பொருள்கள் என்ற யாழ்.பெருமை குறியீட்டுச் சின்னத்தை மீண்டும் கட்டி யெழுப்ப யாழ்.வர்த்தக சமூகத்தினர் முன்வரல் வேண்டும்.

பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள், திடீர் உணவுப் பொருள்களையே மக் கள் விரும்புகின்றனர். இத்தகைய பொருள்களுக்கு நாடு முழுவதும் நல்ல வரவேற்பு இருக்கின்றது. இந்தத் துறையில் பிரவேசித்து யாழ்.நகரின் பரம்பரை வர்த்தக சின்னமாகிய தரம்மிக்க சுவை மிக்க யாழ் பொருள்கள் என்ற சிந்தனையைப் பிரபல்யமாக்குங்கள்- என்றார். (ற)

## பஸ் சாரதி, ஆசிரியர் உட்பட நான்கு பேருக்கு அபராதம்

### ஆபத்தான முறையில் வாகனம் செலுத்தியமைக்காக

யாழ்ப்பாணம், பெப்.21
ஆபத்தான முறையில் வாகனங்களைச் செலுத்திய பஸ் சாரதி சொகுசுக் கார் சாரதிகள் ஆசிரியர் உள்ளிட்டோருக்கு 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது யாழ்.நீதிமன்று.

குறித்த பஸ் சாரதி மட்டுமன்றி ஆபத்தான முறையில் வாகனம் செலுத்திச் சென்ற மேலும் 3 சாரதிகளுக்கும் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. யாழ்.பொலிஸார் குறித்த வழக்குகளை யாழ்.நீதிமன்றில் தாக்கல் செய்தனர். அந்த வழக்குகள் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

அதன்போது ஆபத்தான முறையில் வாகனங்களைச் செலுத்திச் சென்ற குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டவர்களான தனியார் பஸ் சாரதி, மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற அரச உத்தியோ கத்தரான ஆசிரியர், சொகுசுக் கார்கள் இரண்டின் சாரதிகள் என 4 பேரும் தம்மீதான குற்றத்தை ஒப் புக் கொண்டனர். அதன் பின்னர் அவர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் 60 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

விபத்துக்கள் அதிகரித்து சாவுகளும் அங்கவீனமடைவதும், உடைமை இழப்புக்களும் அதிகரித்துள்ள நிலையில் அது பற்றி விழிப்பூட்டப்படுகின்றபோதும் அவை கவனத்தில் கொள்ளப்படாது இருக்கின்றமையும் விபத்துக்கள். அதிகரிப்பதற்குக் காரணம் என்று கூறப்பட்டுள்ளது.

இதனால் பொலிஸாரும் வழக்குத் தாக்கல் செய்வதை இறுக்கமாக்கியுள்ளனர். அதனால் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் அதிகமானோர் நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அத்தகையவர்களுக்கு நீதிமன்றங்கள் அதிகளவில் அபராதம் விதிப்பதோடு கடூழியச் சிறைத்தண்டனைகளும் விதித்து வருகின்றன. முக்கியமாக அவர்களது சாரதி அனுமதிப்பத்திரங்கள் 6 மாதங்களுக்கு அல்லது ஒரு வருடத்துக்கு இடைநிறுத்தப்படுகின்றன. (ற-ஐ-4,103)

## பரத நாட்டிய அரங்கேற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.21
யாழ். ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மாணவி தர்ஷனாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளரும், யாழ். பல்கலைக்கழக நடனத்துறை வருகை விரிவுரையாளருமாகிய சாந்தினி சிவகணேசனும், சிறப்பு விருந்தினர்களாக சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி துஷ்யந்தி துஷிதரனும், உரும்பிராய் கலைக்கோயில் நாட்டியப்பள்ளி அதிபர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.(ற-ஐ-ரி)



கொழும்புத்துறை வசந்தபுரம் பகுதியில் கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தால் அமைக் கப்பட்ட 14 வீடுகளைப் பயனாளிகளுக்குக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. யாழ் ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை வீட்டுத்திட்ட பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்ததுடன், முதலாவது வீட்டையும் திறந்து வைத்தார். கரித்தாஸ் அமைப்பின் தேசிய பணிப்பாளர் அருட்திரு ஜோர்ஜ் சிகாமணி அடிகள், யாழ். கியூடெக்- கரித்தாஸ் இயக்குநர் அருட்திரு. யூஜின் பிரான்சிஸ் அடிகள், பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு. ஏ.ஜாவிஸ் அடிகள், யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ-135)

## பரு. ஆதார வைத்தியசாலையை தரமுயர்த்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.21
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை மாவட்ட வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவது தொடர்பில் பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பானகோரிக்கை பருத்தித்துறை வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரால் விடுக்கப்பட்டது. அத்துடன்குறித்தவைத்தியசாலையின் தேவைப்பாடுகள் தற்போது ஓரளவுக்கு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும், ஆனால் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர்சுட்டிக்காட்டினார்.

குறித்த வைத்தியசாலை பல்வேறு காலகட்டங்களில்அளப்பரியசேவையை மக்களுக்கு வழங்கி வந்தது. வெளிநோயாளர் பிரிவில் கடந்த வருடம் மட்டும் ஒரு லட்சத்து 34 ஆயிரம் பேர் பல்வேறு சிகிச்சைகளைப் பெற்றுள்ளனர்.

வைத்தியசாலையில் தற்போது28வைத்தியர்களும், 45 தாதிமாரும் பணி புரிந்து வருகின்றனர். ஆனாலும், நாளாந்த பராமரிப்புச் செலவுக்கு மாவட்ட பிராந் திய சுகாதாரசேவைஅலுவலகத்தை நாட வேண்டிய நிலையுள்ளது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. (ற-ஐ-109)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்.21
"செதுக்கப்படும் கட்டடங்கள்" என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை இல.199, கோவில் வீதியில் அமைந்துள்ள சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தில் முற்பகல் 10 மணியிலிருந்து 12 மணி மணி வரை நடைபெற வுள்ளது. (ற-ரி)

## வீதியில் கூடும் இளைஞர்களால் அராலி மேற்கு மக்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.21
வீதியோரத்தில் அரட்டையடிக்கும் இளைஞர்களால் பெரிதும் இடையூறுகள் ஏற்படுகின்றன என்று அராலி மேற்கு கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அராலி மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட முத்தமிழ் வீதி மற்றும் கடற்கரை வீதிகளில் கூடி நின்று அரட்டையடிக்கும் இளைஞர்களால், வீதியால் செல்லும் பெண் பிள்ளைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது.

காலை, மாலை, இரவு என்று நாள் முழுவதும் இவ்வாறு சந்திகளில் நிற்கும் இளைஞர்கள், வீதியால் பயணிப்போருடன் சேட்டைகளில் ஈடுபடுகின்றனர் என்று - குறித்த பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். வீதியால் பயணிக்கும் மாணவ, மாணவிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்றும் சுட்டிக் காட்டுகின்றனர்.

அந்தப் பகுதியில் பொலிஸார் ரோந்து நடவடிக்கை மேற்கொண்டு இளைஞர்கள் கூடுவதைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை களை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஐ-ரி5)

## கரவெட்டி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,பெப்.21
கரவெட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வீட்டுத் தேவைகள், இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் உட்பட பல்வேறு பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டதுடன் பல்வேறு திட்டங்களுக்கான அனுமதிகளும் வழங்கப்பட்டன.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடுகள் அற்ற 3 ஆயிரத்து 537 குடும்பங்களும், திருத்தம் செய்யப்பட வேண்டிய தேவையுடைய ஆயிரத்து 363 வீடுகளும், மின்சார வசதி தேவையான ஆயிரத்து 491 குடும்பங்களும் உள்ளன என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையை நகர சபையாக தரம் உயர்த்தல், உடுப்பிட்டி பிரதேசத்துக்கான தனியான பிரதேச வைத்தியசாலையை ஆரம்பித்தல், வடமராட்சி பகுதிக்கான தீயணைப்பு பிரிவை உருவாக்குதல், தொண்டமானாறு கடல் தடுப்பணையை அமைத்தல், மலக்கழிவுவேலைத்திட்டத்தை நடைமுறைத்தல், கழிவு முகாமைத்துவம், நெல்லியடி பழைய சந்தை மீள் நிர்மாணம் செய்தல், பரமானந்த சிறுவர் முதியோர் இல்லத்துக்குப் போதிய வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்தல் உட்பட பல்வேறுதிட்டங்கள்இங்குமுன்மொழியப்பட்டன.

அதேவேளை, வடமராட்சிக்கான நுழைவாயிலை அழகுபடுத்தல், சிறுவர் பூங்காவை அமைத்தல், பொது விளையாட்டு மைதானத்தை இமையாணனில் அமைத்தல், உள்ளிட்ட பல்வேறு திட்டங்களும் முன் மொழியப்பட்டதுடன், அனைத்துத் திட்டங்களும் தீர்மானமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. (ற-ஐ-108,109)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை வழங்க ஒஸ்ரியா இணக்கம்

## இருநாட்டுத் தலைவர்களுடனான பேச்சின்போது



வியன்னா, பெப். 21
இலங்கை மீது விதிக்கப்பட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் மீன் ஏற்றுமதி மீதான தடையை நீக்கவும், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீள வழங்கவும் சாத்தியமான நடவடிக்கை எடுக்கப்படும் என ஒஸ்ரியா ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.
ஒஸ்ரியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அந்த நாட்டு ஜனாதிபதி ஹெய்ன்ஸ் பிரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் குறித்த சந்திப்பின் போது நட்பு நாடுகள் என்ற ரீதியில் இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க ஒத்துழைக்கவும் இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.
ஜேர்மனிக்கான மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ பயணத்தை நிறைவு செய்த பின்னர் நேற்றுமுன்தினம் ஒஸ்ரியா சென்ற ஜனாதிபதிக்கு ஒஸ்ரிய ஜனாதிபதி அலுவலகத்தில் ஒஸ்ரிய ஜனாதிபதியினால் பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது.
அதனைத் தொடர்ந்து இரு நாடுகளிடையேயான நட்பு உறவை விரிவுபடுத்துவது குறித்து இரு நாட்டுத் தலைவர்களிடையேயும் பேச்சு இடம்பெற்றது. (தி)

## நெல் கொள்வனவு கிழக்கில் ஆரம்பம்

கொழும்பு,பெப்.21
இந்த முறை பெரும்போக நெல் விளைச்சலைக் கொள்வனவு செய்யும் செயற்பாடுகள் அம்பாறைப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டத்திலும் நெல் கொள்வனவுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமென நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் எம்.பீ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
இந்த முறை நாடுநெல் ஒரு கிலோ 38 ரூபா, சம்பா நெல் கிலோ 41 ரூபா, கீரிச் சம்பா கிலோ 50 ரூபா என்ற நிர்ணய விலைகளில் நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ஐ-22)

## ஒரு கோடி ரூபா பணத்துடன் கொள்ளையர் மடக்கிப் பிடிப்பு

கொழும்பு, பெப். 21
எரிபொருள் நிலையமொன்றிலிருந்து வங்கியில் வைப்பிலிடுவதற்காக எடுத்துச் செல்லப்பட்ட சுமார் ஒரு கோடி ரூபா பணம், வங்கிக்கு முன்னால் வைத்து கொள்ளையர்களால் கொள்ளையிடப்பட்ட போதும் அந்தப் பணம் தம்மால் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஹோமாகம, கலவிலவத்த பிரதேசத்தில் இடம்பெற்றது.
குறித்த பணத்தைக் கொள்ளையிட முயன்ற இருவரும், பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் இராணுவக் கப்டன் ஒருவரின் உதவியுடன் மடக்கிப் பிடிக்கப்பட்டு, பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (தி)

## பேஸ்புக் மூலம் அரசைக் கவிழ்க்க முயன்றவரைத் தேடி வலைவீச்சு

கொழும்பு, பெப். 21
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைக் கொலை செய்யவேண்டுமெனவும், அரசைக் கவிழ்க்க வேண்டுமெனவும் காணொலி ஒன்றின் மூலம் சமூக வலைத்தளமான பேஸ்புக்கில் கோரப்பட்டிருந்தது.
குறித்த சூழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய பேஸ்புக் கணக்கு உரிமையாளரைக் கைது செய்யுமாறு கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.
மலேசியாவிலிருந்து சுபால் லக்மன என்னும் பெயரிலான பேஸ்புக் கணக்கின் ஊடாக இவ்வாறு கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த நபர் கடந்த 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13ஆம் திகதி நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.
எனவே, இந்தச் சூழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் இலங்கைக்குள் பிரவேசிக்கும் போது கைதுசெய்யுமாறு குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு, நீதிவான் உத்தரவை பிறப்பித்துள்ளார்.
அரசைக் கவிழ்க்க முயற்சித்தமை, ஜனாதிபதி மற்றும் பிரதமரைக் கொலை செய்ய முயற்சித்தமை, அரச விரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் குறித்த நபருக்கு எதிரா கச் சுமத்தப்பட்டுள்ளன.
ஜனாதிபதியையும் பிரதமரையும் கொலை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகக் கடந்த 6ஆம் திகதி செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்று தொடர்பில், புலனாய்வுப் பிரிவின் கணினிப் பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளனர். இதற்கமைய, சந்தேகநபரைக் கைது செய்ய அனுமதிக்குமாறு நீதிமன்றில் புலனாய்வுப் பிரிவினர் கோரியிருந்தனர்.
இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிவான் சந்தேகநபர் நாடு திரும்பியவுடன் அவரைக் கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். (தி)

## கிழக்குக் கடற்படுக்கையில் கனிம எண்ணெய் ஆய்வுகள்

### ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளத் திட்டம்

கொழும்பு,பெப்.21
இலங்கையின் கிழக்குக் கடற்படுக்கையில் எண்ணெய் மற்றும் கனிம எண்ணெய், இயற்கை எரிவாயு சம்பந்தப்பட்ட ஆய்வுகள் எதிர்வரும் ஏப்ரல் அல்லது மே மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கனிம எண்ணெய் வளங்கள் அபிவிருத்தி அமைச்சுத் தெரிவித்துள்ளது.
இந்தச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அடுத்த வாரத்தில் பிரான்ஸின் ருட்டால் நிறுவனத்துடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதோடு, கனிம எண் ணெய் வளங்கள் அபிவிருத்திச் செயலகத்தின் அனுமதியும் அதற்குக் கிடைத்துள்ளது.
மேலும், அந்தப் பிரதேசத்தில் பூகோள விஞ்ஞானத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக ருட்டால் நிறுவனத்துக்கு அடிப்படைச் செலவினமாக 10 மில்லியன் டொலர்கள் வரையில் செலவாகுமெனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (த-ஐ-22)

## சிகா வைரஸை நுளம்பு மூலம் அழித்தொழிக்க ஐ.நா. திட்டம்

கொழும்பு,பெப்.21
'சிகா' வைரஸ் காய்ச்சலுக்கு எதிராக மரபணுக்களை மாற்றி உருவாக்கப்பட்டுள்ள புதிய நுளம்பு வகைகளைப் பயன்படுத்தி அவற்றை அழிக்க வேண்டியுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்புத் தெரிவித்துள்ளது.
இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் அதைச் சூழவுள்ள தீவுகளிலும் வேகமாகப் பரவிச் செல்லும் சிகா வைரஸ் காய்ச்சல் உலகளாவிய உயிர்க்கொல்லியாக மாறிவிடும் ஆபத்து இருப்பதாக உலக சுகாதார அமைப்பு அபாய அறிவிப்பு விடுத்துள்ளது.
இந்தச் சிகா வைரஸானது பிரேஸில் நாட்டில் வெகுவாகப் பரவியுள்ளது. அதைவிட 'சிகா' வைரஸ் பரவிச் செல்லும் ஏனைய இலத்தீன் அமெரிக்க நாடுகளாக கொலம்பியா, எல்சல்வடோர், கௌதமாலா, ஹொண்டுரஸ், மெக்ஸிக்கோ, பராகுவே மற்றும் வெனிசுவேலா என்பவை கணிக்கப்படுகின்றன.
இந்த நாடுகளிடையே பெருமளவிலான நாடுகள் வெளி நாட்டுச் சுற்றுலாக்களுக்கான ஈர்ப்பைக் கொண்டுள்ளதால், சிகா வைரஸ் காணப்படும் நிலையில், அந்த நாடுகளுக்குச் செல் வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடு கள் தமது பிரசைகளுக்குக் கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளன.
கர்ப்பிணித் தாய்மாருக்கு இந்த நோய் ஏற்படுமானால், பிறக்கும் குழந்தைகள் அங்கவீனர்களாகி விடுவார்களென வைத்தியர்கள் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது. (த-ஐ-22)

## தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்.பெப்.21
இலங்கை முழுவதும் பணியாற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் தமது தொழிற்சங்க நடவடிக்கையாக சட்டப்படி வேலை செய்தல் என்ற அடிப்படையில் துணைக்கற்பித்தலில் ஈடுபட்டுவரும் நிலையில், அதற்கு ஒத்துழைப்பு வழங்கித் தமது கோரிக்கை நிறைவேற ஆதரவழிக்குமாறு கோரியுள்ளனர்.
இது தொடர்பாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-
ஏனைய தொழிற்சங்கங்கள் வாகன அனுமதிப்பத்திரம், வேறு வரப்பிரசாதங்களுக்காக தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில், ஆசிரிய ஆலோசகர்களுக்கென தனியான சேவையோ, சம்பளத் திட்டமோ இல்லாத நிலையில் அதனைக்கோரி தொழிற்சங்க நடவடிக்கையில் நாம் ஈடுபட்டுள்ளோம். இந்த நிலையில் அதற்கு எதிரான தடைகள் ஏற்படுத்தப்படுவதை தங்களது கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.
எமது போராட்டம் அடிப்படை உரிமைகள், தொழிலின் ஸ்திரத்தன்மை என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான தொழிற்சங்க நடவடிக்கையாகும்.
மேன்முறையீட்டு நீதிமன்றத்தீர்ப்பு என்பவற்றுக்கு அமைவாக, தமது சேவையை உருவாக்கக் கோருவதற்கு இடையூறு மேற்கொள்வதானது, நீதிமன்றத் தீர்ப்புக்கு சவால் விடுவதாக அமையும் என்பதையும் தங்களது கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.
எனவே, தொழிற்சங்க நடவடிக்கைக்கு தங்களது பூரணமான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
கடந்த மாதம் 27 ஆம் திகதி இலங்கையின் ஒன்பது மாகாணக் கல்வித் திணைக்களங்களின் முன்பாகவும் பேரணி நடத்தி மகஜர் கையளிக்கப்பட்டது.
அதன்பின்னர் ஆசிரிய ஆலோசகர்கள் அனைவரும் சட்டப்படி வேலை செய்தல் எனும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் நிலையில், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் மட்டும் சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் ஆசிரிய ஆலோசகர்கள் அனைவரும் தமது கடமைப் பட்டியலுக்கு அமைய வேலை செய்வதை உறுதிப்படுத்துமாறு கோரிக் கடிதம் அனுப்பியுள்ளார்.
தொழிற்சங்க நடவடிக்கைகளைக் குழப்பும் முகமாக செயற்படும் நிலையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். (த-ஐ-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# குழந்தை இல்லை என்ற குறை இனி உங்களுக்கு தேவையில்லை....



நான் வருனி சுமனசேகர. இலங்கையில் பிறந்த நான் 20 வயது வரை கொழும்பு தெஹிவலையில் வசித்து வந்தேன். எனது மேற்படிப்புக்காக பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றேன். அங்கு "கிரிஸ்டி" என்பவரை காதலித்து 2006 ஆம் ஆண்டு திருமணம.ானேன். "கிரிஸ்டி" பிரான்ஸ் நாட்டவரான போதிலும் அவரது கொள்கைகளும் கருத்துக்களும் ஆசிய நாட்டவர்களுடன் ஒத்துப் போகக் கூடியதாக இருந்தது. குடும்பமாக இணைந்து குழந்தைகளுடன் குதூகலமாய் வாழ ஆசைப்பட்ட எமக்கு குழந்தை பாக்கியம் கிட்டவில்லை.

இதற்கு பிரான்சிலும் பின் இங்கிலாந்திலும் 6 வருடங்களாக நாம் மேற்கொண்ட சிகிச்சைகள் எவ்விதத்திலும் எமக்கு பயன்ளிக்க வில்லை. இக்காலப் பகுதியில் 13 தடவைகள் IUI சிகிச்சைக்கு உற்பட்டது மட்டுமன்றி 3 தடவைகள், பரிசோதனை குழாய் மூலம் குழந்தை ஒன்றைப் பெற்றெடுக்க எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிந்தன. அப்போது முதல் இரு தடவைகளிலும் கருமுட்டையின் வளர்ச்சி சீரான நிலையில் இருக்கவில்லை என்பதால் சிகிச்சை பாதியில் கைவிடப்பட்டது. 3 ஆவது தடவை 3 கருக்கள் தரித்த போதும் அவை யாவும் கருப்பையினுள் சிதைவடைந்தன. இறுதியாக வைத்தியர்களின் முடிவானது எனது கருமுட்டையின் வளர்ச்சியை முறையாக மேற்கொள்ள முடியாததினால் வேறு ஒரு பெண்ணின் பெண் கரு முட்டையை பெற்று பரிசோதனை குழாய் முறையை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும்.

**மேற்கத்திய மற்றும் கீழேதேச மூலிகைச் சாறுகளைக் கலந்து களப்பு முறை கொண்ட ஒரே தனித்துவமான சிகிச்சை முறைமையாக் கொண்டது Fertaid நிறுவனம்.**


இப்போது எமது பொருளாதார நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் மிகவும் பாதிப்புக்குள்ளானேன்.

வேறு ஒரு பெண்ணின் துனைகொண்டு அன்றி என் மூலமாகவே எமது

**'பிரான்சிலும் பின் இங்கிலாந்திலும் 6 வருடங்களாக நாம் மேற்கொண்ட சிகிச்சைகள் எவ்விதத்திலும் எமக்கு பயனளிக்க வில்லை.'**

குழந்தையை நாம் பெற்றெடுக்க வேண்டும் என்ற முடிவில் எவ்வித மாற்றத்துக்கும் என் கணவர் இணங்கவில்லை. இவ்வாறான இக்கட்டான நிலையில் தான் எமக்கு இலங்கையில் Fertaid (பர்ட்டேட்) பற்றி அறியக் கிடைத்தது.

உடனே இலங்கைக்கு வந்து Fertaid சிகிச்சை நிலையத்தின் வைத்தியர். குசும்சிறி டி சில்வா அவர்களைச் சந்தித்தோம். அவர் மிகவும் இரக்க சுபாவம் கொண்டவர். பணிவானவர், கனிவாக எம்முடன் கதைத்து எம்மை வரவேற்றார். எமது முன்னைய வைத்திய அறிக்கைகளை அவதானித்தார். பின் எமது நிலை குறித்து எமக்கு மிகவும் புரியும்படியாக எளிய நடையில்



எம்மை தெளிவூட்டினார். பலருக்கும் குழந்தைப் பாக்கியம் அற்றுப்போகக் காரணம் கருமுட்டை மரணித்தல், கிரமமான வளர்ச்சியின்மை, ஹோமோன் சமநிலை பாதிக்கப்படுதல், இவ்வாறான பாதிப்புக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவருக்கும் வித்தியாசப்படும், இவ்வாறான சிறு வித்தியாசமென்றாலும் பெரும் மாற்றத்தை மிக நுட்பமான முறையில் அவதானிக்கப்படல் வேண்டும். அவ்வாறு மிக நுண்ணியமான முறையில் அவதானிக்கும் திறன் மற்றும் அனுபவமும் இல்லையேல் பாதிக்கப்பட்டவர்களின் சரியான நிலை குறித்து சரியான முடிவு எடுக்க முடியாது போக வாய்ப்பு உண்டு. எனவே தான் பரவலாக கருமுட்டை வளர்ச்சியை சீர்செய்யாமல் IUI சிகிச்சை முறைகளை தேர்ந்தெடுப்பர். அதுபோன்றே கூடுதலான தருணங்களில் ஹோமோன்கள் அசமநிலையும் மிக நுண்ணியமாயிருக்கும்.

அப்போது மேற்கத்தைய (ஆங்கில) மருத்துவத்தின் மூலம் இவ்வாறான பிரச்சினைகளை சீர் செய்ய முடியாது. இந்நிலையில் மாற்று வைத்திய முறைமை தேவைப்படும். பர்ட்டேர்ட் சிகிச்சை நிலையத்தின் வெற்றியின் இரகசியம் இதுதான் என்றார். சிறிய நுண்ணியமான விடயங்களையும் நன்கு ஆராய்ந்து மேற்கத்திய மற்றும் கீழேதேச மூலிகைச் சாறுகளைக் கலந்து களப்பு முறை கொண்ட ஒரே தனித்துவமான சிகிச்சை முறைமையாக் கொண்டதும் செலவு குறைந்த சிக்கனமானதும் குறுகிய காலத்தில் தீர்வு கிடைக்க கூடியதுமான சிகிச்சை முறை என்பதில் Fertaid நிறுவனம் காணப்படுகின்றது. எமக்கு 3 மாதத்திற்குத் தேவையான மருந்துகளை எடுத்துக்கொண்டு நாம் பிரான்ஸ் சென்றுவிட்டோம்.. என்ன ஆச்சிரியம், இரண்டே மாத முடிவில் எனக்கு கர்ப்பம் தரித்தது. நான் அளப்பரிய மகிழ்ச்சியில் குதூகளித்தேன். நான் நினைக்கின்றேன் என்னைப்போல் குழந்தை பாக்கியம் அற்ற அனேகமானோர் இலங்கையில் உள்ளனர். இவர்களுக்கான ஓர் செய்தியாகவும் Fertaid நிறுவன வைத்தியர் Kusumsiri De Silva வுக்கு நன்றிக்கடனாகவும் இது அமையும்

**எமக்கு 3 மாதத்துக்குத் தேவையான மருந்துகளை எடுத்துக் கொண்டு நாம் பிரான்ஸ் சென்று விட்டோம். என்ன ஆச்சரியம், இரண்டே மாத முடிவில் எனக்கு கர்ப்பம் தரித்தது**

என்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். Fertaid நிறுவனமானது கண்டியிலும் கடவத்தையிலும் இயங்கி வருகின்றது. பல நவீன வசதிகளுடன் இயங்கும் இந்த நிறுவனத்தின் கண்டி நிலையமானது தூர பிரதேசங்களில் இருந்து சிகிச்சைக்காக வருவோரது வசதி கருதி தங்குமிட வசதிகளையும் கொண்டுள்ளது. என்பதனையும் நான் நான் அறிந்துள்ளளேன்.

விவரங்கள் அறிய் அழையுங்கள்
081-2224672, 077-3015122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் திருமதி
**மேரிராணி ஜெயராஜா**
**(மணி அக்கா)**

அன்னையின் மடியில்
25.04.1944

இறைவனின் அழைப்பில்
23.01.2016

கரு தந்து உயிர் தந்த தாயே!!
அன்புடன் அறிவு தந்து உயர வைத்தாய் தாயே
மெழுகுதிரியாய் இருந்து ஒளிதந்த தாயே
அதிகாலை எழுந்ததும் நின் முகமும் குரலும் தேடும்
கணப்பொழுதில் எம்மைவிட்டு
விண்ணுலகம் சென்றது தானேனோ அம்மா
உங்களைப் பிரிந்து தவிக்கின்றோம் அம்மா
பிள்ளைகள் தான் உலகம் என்று அன்பைப் பொழிந்தீர்கள் அம்மா
ஆறுதல் சொல்ல எமக்கு இவ்வுலகில் யார் அம்மா

கடந்த 23.01.2016 இறைபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு அமரர் திருமதி மேரிராணி ஜெயராஜா (மணி அக்கா) அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசியிலும் மின்னஞ்சல் மூலமும் ஆறுதல் அளித்து எம்மைத் தாங்கியோருக்கும் இறுதிக்கிரியையில் பங்கு கொண்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் எம்மோடு பல வழிகளிலும் இணைந்து உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத்தெரிவிக்கின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் நாளை (22.02.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் திருப்பலியில் பங்கு பற்றி அதனைத் தொடர்ந்து அவரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அருட்தந்தை R.C.X.நேசராஜா
S.X. குலநாயகம்
திருமதி.செ.சுபாஷினி (பபி), தர்மேந்திரா(தரு), தனேந்திரா (தனா), யுவனேந்திரா (வெற்றி).

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.
(69416)(11,18,20)

# மரண அறிவித்தல்

## சிவக்கொழுந்து திருநாவுக்கரசு ( S.T.அரசு)

(புகைப்பட முதுபெருங்கலைஞர், கலாபூசணம் நாடகவியலாளர், மாமனிதர்)



நல்லூர், முத்திரைச் சந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து திருநாவுக்கரசு 17.02.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - சுந்தரம்மா தம்பதியரின் அருமை மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், அரசகுமாரன் (அமெரிக்கா - பொறியியலாளர்), காலஞ்சென்ற கலைவாணி (கலாநிதி - யாழ். பல்கலைக்கழக நூலகவியலாளர் Phd ) மற்றும் கலைச்செல்வி (கலாபுவன்- முன்னாள் அனைத்துலக ஒலி பரப்பு கூட்டுத்தாபனம் தமிழ் IBC Tamil-லண்டன்), காலஞ்சென்ற இளங்கோ மற்றும் ஜீவரஜனி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேந்திரன் (லண்டன்),கலாநிதி சர்வேந்திரா (நோர்வே) ஆகியோரின் மாமனும், லவன் (லண்டன்) மாயோன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம், தட்சணாமூர்த்தி(சின்னத்தம்பி-மலையாலம்), ஆறுமுகம், செல்லத்துரை (சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்), சேதுநாதன் (சிறைச்சாலை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

28, செம்மணி வீதி,
முத்திரைச் சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொ.பே. 021 320 5753/ 076 834 2916


# இலக்கிய விழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், பெப்.21

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலா சாரப் பேரவை நடத்தும் கலை இலக்கிய விழாவும், செ.கதிர்காமநாதனின் படைப்புக்கள் நூல் வெளியீட்டு விழாவும் நாளை திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயத் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர் சண் முகராஜா சிவஸ்ரீ தலைமையில்நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசாவும் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாணசபைஉறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், வே.சிவயோகன், க.தர்மலிங்கம், ச.சுகிர்தன், சி.அகிலதாஸ் ஆகியோரும், கௌரவ விருந்தினர்ராக வடமாகாண கல்வி மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ற-ஐ-422)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாதேவி குணசிங்கம்



பிறப்பு 18.04.1944
இறப்பு 19.02.2016

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா குட்செட் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி குணசிங்கம் 19.02.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணசிங்கத்தின் (புகையிரத நிலைய ஊழியர்) அன்பு மனைவியும் தேவகி, தயாளன், குணாளன், இந்துமதி (ஜானகி), மலர்மதி, செந்தில்வேல், அபிராமி ஆகி யோரின் அன்புத் தாயாரும் ஆனந்தக்குமார், உமாமகேஸ்வரி, முருகானந்தம், விம லேந்திரன் (டேவிட்) ஆனந்தபவானி, பார்த்தீபன், ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.02.2016) ஞாயிற்றுக் கிழமை தோணிக்கல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 176, முதலாம் ஒழுங்கை,
குட்செட் வீதி, வவுனியா

தகவல்:
பிள்ளைகள், உறவினர்கள்

## அல்பட்ராசு (சம்மாட்டி ராசு)



தோற்றம்: 10.12.1953
மறைவு : 18.02.2016

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பட்ராசு (சம்மாட்டி ராசு) 18.02.2016 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் கனகு- நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், யோகபுஸ்பத்தின் (பிரான்ஸ்) கணவரும், புஸ்பா, துரைசிங்கம், விந்தன், துரை, பாலா, சறோ ஆகியோரின் சகோதரரும், சிறி (ஆஸ்தி ரேலியா), ராசாத்தி (ஜேர்மனி), டொனால்ட் (இந்தியா), கண்ணன் (இந்தியா), ஜெகன் (பிரான்ஸ்), ராகினி (ஆஸ்தி ரேலியா), மேரி (ஆஸ்திரேலியா), உஷா (லண்டன்) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(69446)(11,18,20)

தகவல்:மனைவி, பிள்ளைகள்.

யோகபுஸ்பம் (மனைவி- 0033 7514 53586)



பிறப்பு 02 . 06 . 1965
இறப்பு 19 . 02 . 2016

## கனகசபாபதி கஜமுகன்

(மின் பொறியியலாளர் சவுதி)

சுன்னாகம் தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி கஜமுகன் 19.02.2016 வெள்ளிக்கிழமை சவுதியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி (இளைப்பாறிய அதிபர்)-கனகேஸ்வரி தம்பதிகளின் புதல்வனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் தனுஷா, குகதீஷா, கஜேந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயமுகன்(சுவிஸ்), அம்பிகா மற்றும் காலஞ்சென்றவர்களான ஐங்கரன் , ஞானகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கதிரமலை வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(69454)(12.18.20)

தகவல்:
குடும்பத்தினர்


# இலங்கைப் பெண் ஆஸியில் கொலை

ஆஸ்திரேலிய மெல்பேர்ன் நகரில் இலங்கையைச் சேர்ந்த குடும்ப பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுச் சடலமாக கண்டெக்கப்பட்டுள்ளதுடன், கொலையாளி அவ்விடத்திலிருந்து தப்பியோடியுள்ளார்.

இவர் வீட்டில் தனிமையில் இருந்தபோது, கடந்த வியாழக்கிழமை இரவு 8.00 மணிக்கும் 9.25இற்கும் இடைப்பட்ட நேரத்தில்கொலை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 48 வயதான பிரசாத் சோமவன்சஎன்றபெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாகவும், கொலைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை என்றும் மெல்பேர்ன் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

குறித்த பெண்ணின் கணவர் போக்குவரத்துத் துறையில் பணிபுரிவதுடன் சம்பவ தினமான கடந்த வியாழக்கிழமை அவர் பிரிஸ்பேனில் இருந்துள்ளார்.

அவர் தனது மனைவியுடன் பலமுறைதொடர்புகொள்ள முயன்ற போதிலும் அது முடியாமற்போக தனது குடும்ப நண்பர் ஒருவரை அனுப்பி யுள்ளார். இதன் போது வீட்டுக்குச் சென்ற குடும்பநண்பர் குறித்தபெண் இறந்து கிடந்ததைக் கண்டதுடன், பொலிஸா ருக்குத்தெரியப்படுத்தியுள்ளார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுப் பிரேத பரிசோத னைக்கு அனுப்பியுள்ளனர். மேலும் வீட்டில் எந்தவொரு பொருளும் கொள்ளையடிக்கப் பட்டிருக்காத நிலையில், இந்தக் கொலை எதற்காக மேற்கொள்ளப்பட்டது என்று தீவிர விசாரணை நடைபெறுகின்றது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரத்தால் துள்ளுகின்றாராம் மைத்திரி

## கூறுகிறார் மகிந்த

கொழும்பு, பெப். 21

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகாரத்தை உணரத் தொடங்கியுள்ளதாகவும், அதன் உஷ்ணம் அவரிடமிருந்து வெளிவரத் தொடங்கியுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குறிப்பிடுகின்றார்.

பெரிய நிதி மோசடி, ஊழல் தொடர்பான ஜனாதிபதிஆணைக் குழு முன் னிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மீண்டும் பிரசன்னமாகி வாக்குமூலம் வழங்கினார். இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

மக்கள் புதிய கட்சியொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

நான் அதனைப் பார்த்துக்கொண்டு இருக்கின்றேன். நாட்டு மக்களுக்குப் புதிய கட்சி குறித்த உணர்வு ஏற்பட்டுள்ளது.

நான் சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தி கட்சியை விட்டுச் செல்லவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே கட்சியைப் பிளவுபடுத்தி கட்சியை விட்டு வெளியேறினார். கட்சியை உடைத்தது நானல்ல. மைத்திரிபால சிறிசேனவே என்றார். (த)


**தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது ஸ்தாபனத்துக்கு யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் கணித பாடத்தில் G.C.E (O/L) சித்தியடைந்த ஒருவர் தேவை

**077 232 3000**

**பரத நாட்டிய அரங்கேற்றம்**



யாழ் ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மாணவியும்.
நுண்கலைமாணி, பரதகலாவித்தகர்
திருமதி பாலினி கண்ணதாஸ் அவர்களின் மாணவியும்
யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவியும்
திரு . திருமதி அனுஷன் தம்பதியரின் புதல்வியுமான

**செல்வி தர்ஷனா அனுஷன்**

அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்.

காலம் : இன்று (21.02.2016) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 02.30 மணி
இடம் : இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபம், நீராவியடி.
தலைவர் : திரு.ச.லலீசன் (பிரதி அதிபர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)



**பிரதம விருந்தினர் :**
கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவனேசன் அவர்கள்
(ஓய்வு நிலை விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, வருகை விரிவுரையாளர், நடனத்துறை, யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் விபுலானந்தா அழகியற் கற்கைகள் நினைவகம், மட்டக்களப்பு )

**சிறப்பு விருந்தினர்கள் :**
திருமதி துஷ்யந்தி துஷிதரன்
(அதிபர் , யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)
திருமதி பத்மினிசெல்வேந்திரகுமார்
(அதிபர், கலைக்கோயில் நாட்டியப்பள்ளி, உரும்பிராய்)
“முழவியல் ஞாயிறு” திரு. மா. சிதம்பரநாதன்
(முன்னாள் விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

**அணிசெய் கலைஞர்கள்**
நட்டுவாங்கம், நடனஅமைப்பு: திருமதி பாலினி கண்ணதாஸ்
பாட்டு : திரு. தவநாதன் றொபேட்
மிருதங்கம் : நல்லை க.கண்ணதாஸ்
வயலின் : திரு. அ.ஜெயராமன்

கலையார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.
ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தினரும்
திரு. திருமதி அனுஷன் தம்பதியினரும்.

**மேட்டுக்காணி விற்பனைக்கு**

பளை, இயக்கச்சி, கோவில்வயல், வாடியடிச் சந்தியில் 40 ஏக்கர் விஸ்தீரணமுள்ள மேட்டுக் காணி விற்பனைக்கு உண்டு. தென்னைப் பயிர்ச் செய்கைக்கும், ஏனைய பயிர்ச் செய்கைக்கும் உகந்தது. நன்னீர் வளமுடைய நிலம்.

குறிப்பு: யுத்த காலத்தின் முன் தென்னைகள் நின்று பயனளித்த நிலமாகும்.

விலை - 01 ஏக்கர் ரூபா 2,25,000/=

தொடர்பு: 077 500 2162

**டோஹா கட்டார்**

Ramco Engineering - ராம்கோ இன்ஜினியரிங்

கட்டாரில் பிரசித்தி பெற்ற தளபாட தொழிற்சாலையில் பின்வரும் தொழில்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

| தொழில் | எண் | சம்பளம் | உணவு கொடுப்பனவு | மாதாந்த மொத்த சம்பளம் |
|---|---|---|---|---|
| தளபாட தச்சர் (Furniture Carpenter) | 15 | QRS. 1300 | 300 | QRS.1600/- Rs 62,400/- |
| தளபாட ஸ்ப்ரே பெயிண்டர் (Furniture Spray Painter) | 10 | QRS. 1300 | 300 | QRS.1600/- Rs 62,400/- |

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் 55,584/- (QRS.1= Rs. 39/=)

AL/Advt/2567/3/2016

**Worldwide Recruiting Agency**
No.73, 1/1, Negombo Road, Peliyagoda, Colombo
Tel : 011 2934526/7 Hot-Line : 0773 289828
(Opposite Nawaloka Timber - Next to Singer Showroom)
E-mail : cvswra@gmail.com Web : www.worldwidelk.com
LN: 2567

**சொலெக்ஸ்**
**நீர் பம்பிகள்**
**உயர்ந்த . நம்பிக்கையான**



ரூபா.8450/- முதல்...
0773 658869
விற்பனைப் பிரிவு - அவசர தொடர்புகளுக்கு

சொலெக்ஸ் வரையறுக்கப்பட்ட இஞ்சினியரிங் தனியார் கம்பனி
இல. 39, புதிய நகே வீதி, பேலியகொடை, இலங்கை.

**BLOOMING BUDS INTERNATIONAL E CAMPUS**
The Wisdom of Children
PV 94034

ENGLISH MEDIUM TEACHER TRAINING 12 MONTHS DIPLOMA PROGRAMME
பயிற்சியின் மூலம் 12 மாதங்கள் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளல்

**தகைமைகள்**

- க.பொ.த சாதாரண தரம் 6 பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த.உயர்தரம் கற்றிருந்தல் வேண்டும்.
- ஆங்கில பாடத்தில் குறைவானவர்களிற்கு 60 நாள்களிற்கு ஆங்கிலப் பயிற்சி. கொடுக்கப்படும்.
- பயிற்சி கிழமையில் 5 நாள்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களிற்குக் கொடுக்கப்படும். பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவீர்கள்.
- போயாதினம் உட்பட அரசாங்கவிடுமுறை தவிர ஏனைய நாள்கள் காலை 8.30 - 5.00 வரை வேலை நாள்களாகும். (Monday To Saturday) இவ் வசிப்பிட பாடநெறியாகும். இவ் வசிப்பிட கற்கைநெறியானது யாழ்ப்பாணம் (சுதுலை), தெமட்டகொடவில் மட்டுமே நடைபெறும்.

உங்கள் விண்ணப்பத்தினைப் பிறப்பு அத்தாட்சி பத்திரம் தராதரப்பத்திரக் குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் ( 9 X 4) அளவுள்ள தபாலுறையில் 45.00 மேல் மூலையில் 01.11 ஆம் வகுப்பு வரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும்.

**மேலதிகமாக**

- சிங்களக் கல்வி மற்றும் கணினி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி டிப்பேளாமா, சிங்கள டிப்ளோமா (பேசும் ஆங்கிலம் அடங்கியது) ஆங்கில இலக்கிய டிப்ளோமா, சுயதிறன் விருத்தி டிப்ளோமா என்பன இலவசமாக கற்பிக்கப்படும்.
- ஐந்து வருடங்களாக சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளுக்காக பயிலுநர் ஆசிரியர்களை பயிற்றுவித்த எமது நிறுவனம் நாடெங்கிலும் ஆங்கிலம் கற்றலிலும் கற்பித்தலிலும் பேசுவதிலும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் குறைபாடுகள் நிவர்த்திசெய்யும் முகமாக எல்லா மாகாணங்களிலும் எங்களது 45 புதிய நிறுவனங்களுக்கு 300 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள முன் வந்துள்ளோம்.
- பயிற்சியின் பின்னர் மாதாந்தக் கட்டணம் 34,000 ஐ ALLOWANCE (மேலதிக கொடுப்பனவு அல்லது படிகள்) கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்.

கற்கை நெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிக்கடன் ஏற்பாடு செய்து தரப்படும் (நிபந்தனைக்கு உட்பட்டது)

**No. 390/2/1, Baseline Road,**
**Dematagoda**
**Colombo - 9.**
**T.P. 0113 054641**
**071 - 5669641, 077- 152 9731**

**Thavadi Road,**
**Suthumalai South Manipay**
**Jaffna**
**021 225 6641, 071 566 9641**

பதிவுத்தபாலில் அனுப்பவேண்டிய முகவரி:
**Officer,**
**Blooming Buds International**
**Teacher Training School**
**390/2/1 Baseline Road,**
**Dematagoda,Colombo - 9**
**www.bloomingbudescampus.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ், காணி அதிகாரம் வழங்கப்படுவது அவசியம்

## வலியுறுத்துகிறார் டிலான் பெரேரா

கொழும்பு, பெப்.21

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதன் ஊடாகவே தமிழ் பேசும் மக்களின் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வைக்காண முடியும் என இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

புதிய அரசமைப்பின் ஊடாக இதனை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் தீர்வு விவகாரம் மற்றும் புதிய அரசியல் கட்சி போன்றன தொடர்பாக விவரிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இந்த விடயம் குறித்து அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

தேசிய அரசால் முன்னெடுக்கப்படவுள்ள புதிய அரசமைப்பு அல்லது அரசமைப்புத் திருத்தங்களினூடாக நாட்டின் தமிழ் பேசும் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணப்பட வேண்டும்.

அதாவது, தற்போதைய அரசமைப்பில் காணப்படுகின்ற 13 ஆவது திருத்த சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக உறுதியளிக்கப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன். இதற்குப் பின்னரும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்க முடியாது என நாம் கூறிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை.

பொலிஸ் அதிகாரம் என்றதும் ஏன் தென்னிலங்கை மக்கள் அச்சப்படுகின்றனர் என்பதே புரியவில்லை. காரணம் பொலிஸார் என்றதும் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு செல்பவர்கள் என கருதுகின்றனர். ஆனால் அது அப்படியல்ல. பொலிஸார் என்பவர்கள் சமூகப் பாதுகாப்பையும், மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதுடன் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் துறையினர் ஆவர்.

எனவே இவ்வாறான பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாணங் களுக்கு வழங்குவதற்கு புதிய அரசமைப்பினூடாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கு பின்னரும் இந்த விடயத்தில் தாமதங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்க கூடாது.

ஆனால், மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கும்போது பிரச்சினைகள் ஏற்படலாம். இதனை இனவாத சக்திகள் தடுக்க முற்படலாம். ஆனால் அவற்றை நாம் எதிர்கொண்டு சவால்களை முறியடித்து பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும் - என்றார். (கு)



## மரண அறிவித்தல்கள்

**குட்டிப்பிள்ளை அசோகராஜா**

(Retired Maintenance Manager Lanka Cement Ltd.K.K.S)



யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டிப்பிள்ளை அசோகராஜா 19.02.2016 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டிப்பிள்ளை - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், ரஞ்சினியின் அன்புக் கணவரும், ரகுராமின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற தவமணிதேவி, இராஜகோபால் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஜானகி, மகேஸ்வரன், பாலச்சந்திரன், மகாதேவன் மற்றும் செல்வராணி, பாலசுப்பிரமணியம், ராமச்சந்திரன், ஜெயம், தேவகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2016) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

643(1191).K.K.S வீதி,
நாச்சிமார் கோயிலடி,யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 222 5075

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சிவபுரத்தரசி கிரிதரன்
அவர்களின் அன்பு மாமியார்
திருமதி
**நாகேஸ்வரி பத்மநாதன்**
அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(69445) (14.17.18)

யாழ் இந்து ஆரம்ப பாடசாலைச் சமூகம்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி
**புவனேஸ்வரி குலசிங்கம்**
திதி :பூர்வபக்க சதுர்த்தசி
(21.02.2016)

தோற்றம் 01.01.1944 — மறைவு 04.03.2015



எங்கள் இனிய தெய்வமே
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறாது எம் துயரம்
எங்கள் உயிர் இருக்கும் வரை
எங்களுடன் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்
உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

குடும்பத்தினர்.
திக்கானை,
கரணவாய், கரவெட்டி.



**அரியநாயகம் நித்தியானந்தன்**

மலர்வு: 30.06.1947 உதிர்வு: 17.02.2016

யாழ்ப்பாணம் அராலியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட அரிய நாயகம் நித்தியாணந்தன் 17.02.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியநாயகம்-மகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், தியாகேஸ்வரியின் அன்புக் கணவரும், கீர்த்திகா (கனடா), சஞ்சுதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்வினின் (கனடா) அன்புப் பேரனும் நிர்மலா, தீவமலர், மகேஸ்வரலிங்கம் ஆகியோரின் சகோதரரும், சுஜித்தாவின் சித்தப்பாவும், சுதாகர், மயூறினி, மனோஜ், சங்கர், அர்ஜின் ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான ஆனந்த நடராசா, ஆனந்தலக்சுமி, தங்கரத்தினம், நடேசலிங்கம் மற்றும் குமரச்செழியன், ஏர்சலா, ஆகியோரின் மைத்துனரும், லூசியாவின் பெரியப்பாவும், ஹேமதிவ்வியம், கோபிஷன், லோகிசன், ஹேனுஷா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு. (69402) (13.18)

தகவல்:
குடும்பத்தினர்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
25 . 07 . 1955



இறைவன் அடியில்
21 . 02 . 2014

**அமரர் வீ.செல்வநாதன்**

(இலங்கை வங்கி முன்னாள் ஓய்வுநிலை உத்தியோகத்தர்)

ஈராண்டுகள் சென்றாலும் ஈரவிழி காயவில்லை
உங்கள் முகம் பார்க்காது உள்ளம் வாடுதப்பா
திரும்பும் இடம் எல்லாம் நின் செயலனைத்தும்
கண் முன்னே நிழலாய் தெறித்தே ஓடுகின்றன...
மறு ஜென்மம் என்னும் சொல்லை மனதார நம்புகின்றோம்
எம்மோடு வாழ்கிறீர் என்பது கனவாகிப் போனாலும்
எங்கள் மனதில் உங்கள் முகம் எந்நாளும்
மறையாது உயிர் வாழும் எங்கள் அப்பா..

[illegible] வீதி,
[illegible]
யாழ்ப்பாணம்.

(69416)(1.18.20)

குடும்பத்தினர்,
மனைவி,
மகன்மார்,மகள் (ஜானு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி மோசடி விசாரணைக் குழுவின் அறிக்கை அடுத்த மாதம் வெளிவரும்

கொழும்பு, பெப். 21
பெரிய நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுதான் இது வரையில் மேற்கொண்ட விசார ணைகள் தொடர்பான அறிக் கையை அடுத்த மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கவுள்ளது.
ஆட்சிமாற்றத்தின் பின்னர், கடந்த ஆட்சியின்போது இடம்பெற்ற பெரும் ஊழல், மோசடிகள் குறித்து விசாரணை நடத்துவதற்கான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆணைக் குழுவொன்றை அமைத்தார். இதன்படி முக்கிய பல அரசியல் பிரமுகர்களிடம் இந்தக் குழு விசாரணை நடத்தியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடமும் பலதடவைகள் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.
இந்நிலையில், ஆணைக்குழு அமைக்கப்பட்டு இம்மாதத்துடன் ஒருவருடம் பூர்த்தியாகவுள்ள நிலையில், இதுவரை அக்குழு மேற்கொண்ட விசாரணைகளின் அறிக்கையையும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள முறைப்பாடுகளின் விசாரணைகளின் அறிக்கை யையும் அடுத்த மாதம் ஜனாதிபதியிடம் அந்தக் குழு சமர்ப்பிக்கவுள்ளது.

> கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் இதுவரை 80 முறைப்பாடுகளின் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

பெரும் நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு, இதுவரை 400 மோசடிகள் தொடர்பில் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளது என்றும், அவற்றில் 40 முறைப்பாடுகள் பெரிய நிதி மோசடியுடன் தொடர்புடையவைஎன்றும்ஆணைக் குழுவின் செயலாளர் லெசில் த சில்வா தெரிவித்தார்.
கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் இதுவரை 80 முறைப்பாடுகளின் விசாரணைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. ஆணைக் குழு மூலம் மக்களுக்கோ அல்லது சாட்சியமளிப்பவர்களுக்கோ எவ்விதமான அழுத்தமும் கொடுத்து விசாரணைகளையோ சாட்சியங்களையோ நாங்கள் மேற்கொள்ளவும் இல்லை; பெற்றுக்கொள்ளவும் இல்லை. ஆணைக்குழு மூலம் எவருக்காவது அழைப்புவிடும் பட்சத்தில் குறிப்பிட்ட நபர்கள் இயன்றளவு குறித்த வேளையில் சமுகமளிக்க வேண்டும் என்று லெசில் த சில்வா மேலும் கூறினார். (த-சி)

## மாணவர்களிடம் தொழிற் தேர்ச்சியை உருவாக்குவது இன்றையகால தேவை

அம்பாறை,பெப்.21
தற்கால சமூகத்தில் கல்வித் தகைமையை விட, தொழிற் தேர்ச்சியே அவசிய தேவையாக உள்ளது. மாணவர்களிடம் தொழிற் தேர்ச்சியை வளர்ப்பதற்காகவே இலங்கையிலும், தொழில்நுட்பப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு பட்டிருப்பு வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளரும், சாரணிய ஆணையாளருமான நாகராசா தெரிவித்தார்.
மகிர்முனை சக்தி வித்தியாலயத்தில் அண்மையில் நடை பெற்ற சாரணர் சின்னம் சூட்டும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,
கணனி அறிவு இல்லாதவன் இன்று உலக அறிவு இல்லாதவனாகவே கணிக்கப்படுகின்றான். கல்விப் புலம், தொழில் ரீதியான கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஆயத்தமாவது இன்றியமையாதது.
மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகிச் செல்லும்போது, வெறுங்கையோடுதான் செல்ல வேண்டிவரும். தொழில் நுட்பத் தேர்ச்சியும் பெற்று ஒரு மாணவன் அவ்விதம் செல்லும்போது, அவன் உடன் சுய தொழில் ஒன்றைச் செய்யக் கூடிய ஆற்றலைப் பெற்றிருப் பான்.
எனவே கல்வியானது ஒரு மாணவன் சொந்தக்காலில் நிற்கக் கூடிய அம்சங்களைக் கொண்டதாக அமைய வேண்டும். அதற்குப் பாடசாலைகளில் பல்வேறு வழிகள் இருக்கின்றன. அதில் சிறந்த தொன்றாகச் சாரணியமும் காணப்படுகின்றது.
மாணவர்கள் முழு நேரமும் படித்துக் கொண்டிருப்பதால் அவர்களை வேலை உலகத்துக்குத் தயார்ப் படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது. ஆனால் வேலை உலகுக்கு மாணவர்களைக் கொண்டு செல்வதற்கு சாரணியம் சிறந்த வழி காட்டல்களை மேற் கொள்கின்றது. என்றார். (த-ஐ)

## பெண்ணின் வயிற்றிலிருந்து கொக்கெய்ன் மீட்பு

கொழும்பு, பெப். 21
வெனிசுவெல நாட்டுப் பெண்ணின் வயிற்றிலிருந்து, 18 மில்லியன் ரூபா பெறுமதியான கொக்கெய்ன் கொண்ட 87 பக்கெட்டுக்கள் எடுக் கப் பட்டதாகச் சுங்க ஊடகப் பேச் சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.
இந்தப் பெண் இலங்கைக்குள் கொக்கெய்ன் கடத்த முயன்றபோது, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் போதைப்பொருள் அதிகாரிகளினால் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டார்.
இவர் 1,200 கிராம் கொக்கெய்ன் கொண்ட 87 பக்கெட்டுக்களை விழுங்கியி ருந்தார். எமிரேட்ஸ் விமானமொன்றில் பிரேசிலிலிருந்து டுபாய் வழியாக வந்த இவர், தான் பக்கெட்டுக்களை விழுங்கியிருப்பதை ஏற்றுக்கொண்டார்.
இவர் நீர்கொழும்பு நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர், நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (து)

## சிறைக்குள் 53 கைபேசிகளை கடத்திய சிறைக்காவலர் கைது

கொழும்பு, பெப். 21
வெலிக்கடை சிறைச்சாலைக்குள் 53 கைபேசிகளைக் கடத்திச்சென்று கைதிகளுக்கு வழங்கியதாகச் சந்தேகிக்கப்படும் சிறைக்காவலர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
பாதாள உலக நபரான தெமட்டகொட சமிந்த என்பவரின் பெயரைப்பயன்படுத்தி இவர் பலரிடம் ஈஷி காஷ் முறையில் கப்பம் வசூலித்திருக்கிறார் எனவும், அந்தப் பணத்தில் 53 கைபேசிகளை வாங்கி வெலிக்கடை சிறைக்கைதிகளுக்கு விற்றிருக்கிறார் எனவும் பேலியகொடை பிராந்திய குற்ற விசாரணைப் பொலிஸார் நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதிவான் ஒகஸ்டா அத்தபத்துவின் முன்னிலையில் தெரிவித்தனர்.
குருநாகல் பிரதேசவாசியான இவர், குருநாகலிலுள்ள ஈஷி காஷ் நிலையமொன்றில் பணப்பரிமாற்றம் செய்வது அந் நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவில் (சி.சி.ரி.வி) பதிவாகியிருந்தது. அதனைத் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் இவர் கடந்த 16ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.
தற்சமயம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சமிந்த எனும் பாதாள உலக நபரின் வழிகாட்டலுடன் அவரது பெயரைப் பயன்படுத்தி குருநாகல், அநுராதபுரம், வெஹெர போன்ற பல பிரதேசங்களில் ளவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்து ஈஷி காஷ் முறையில் இலட்சக்கணக்கில் பணம் கறந்துள்ளார் எனவும், அந்தப் பணத்தின் மூலம் சமிந்தவுக்கு மாத்திரம் 30 கைபேசிகளையும் இரண்டு லட்சம் ரூபா பணத்தையும் கொடுத்துள்ளார் எனப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.
சந்தேகநபரிடமிருந்து இரண்டு கைபேசிகளும், இரண்டு சிம் கார்டுகளும் 20 ஆயிரத்து 300 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.
பொலிஸாரின் இந்த விளக்கத்தையடுத்து சந்தேகநபரை இம்மாதம் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த)

## நாடு திரும்பியதும் பொன்சேகாவை சந்திக்கின்றார் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, பெப். 21
ஜேர்மன் பயணத்தை முடித்துக்கொண்டு ஒஸ்ரியா சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடு திரும்பிய பின்னர் ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுடன் பேச்சு நடத்துவார் என அறியமுடிகின்றது.
இதற்குரிய ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந்தச் சந்திப்பின் பின்னர் பொன்சேகாவுக்கு அமைச்சுப் பதவி வழங்கப் படவுள்ளது. படையினர் நலன் சார்ந்த அமைச்சுப் பதவியொன்றே அவருக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

> படையினர் நலன் சார்ந்த அமைச்சுப் பதவியொன்றே அவருக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயகக் கட்சி அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசில் பங்காளிக் கட்சியாக இணைந்துகொண்டது. இதன் பலனாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பி. பதவி பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டது. பொன்சேகாவுக்கு எம்.பி. பதவி வழங்கப்பட்டதற்கு ஜனாதிபதியும் முக்கிய பங்களிப்பு வழங்கியுள்ளார்.
இந்நிலையிலேயே, ஜனாதிபதியைச் சந்தித்து நன்றி தெரிவிப்பதற்காக சந்திப்புக்கு நேரம் வழங்குமாறு பொன்சேகா தரப்பு கோரிக்கை விடுத்திருந்தது. இதன்படி ஒஸ்ரியா விலிருந்து ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் இந்தச் சந்திப்பு இடம்பெறுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (த-சி)

## நுவரெலியாவில் அதிக குளிர்

நுவரெலியா மாவட்டத்தில் தற்போது குளிரான கால நிலையாக நிலவுகின்றது. இதனால் அதிகாலையில் கடுமையான குளிர் காணப்படுவதோடு அதிகமான பிரதேசங்களில் பனிமூட்டங்களும் காணப்படுகின்றன. கடுமையான குளிரால் நோயாளர்கள் உட்பட பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
பாதைகளில் பனிமூட்டங்கள் காணப்படுவதால் வாகனச் சாரதிகள் வாகனங்கள் செலுத்துவதில் பல சிரமங்களை எதிர் நோக்குவதாகத் தெரிய வருகின்றது
இதன் காரணமாக வாக னங்களில் முன்விளக்கை ஒளிரவிட்டுச் செல்லுமாறு அந்தப் பகுதிகளில் உள்ள போக்குவரத்துப் பொலிஸார் வாகனச் சாரதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (து)

# சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் இயந்திரங்கள் ஆபத்தில்

## தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.21
சப்புகஸ்கந்தை எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள கொதிகலன்கள் தொகுதியின் பராமரிப்புச் செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்படாத காரணத்தால் எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையத்தின் இயந்திர சாதனங்கள் ஆபத்தான நிலையில் இருப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் தொழிற் சங்கங்கள் தெரிவிக்கின்றன.
அங்குள்ள மூன்று கொதிகலன்களில் ஒன்று செயலிழந்துள்ளதுடன், அவசர வேளையொன்றின்போது பயன்படுத்திக் கொள்ளும் மற்றுமொரு டீசல் மின் பிறப்பாக்கியும், இயந்திரக் கோளாறு காரணமாக மறுசீரமைக்கப்பட்டு வருவவதாகவும் தொழிற் சங்கங்கள் சுட்டிக் காட்டுகின்றன.
அவசர வேளையில் பயன்படுத்திக் கொள்வதற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் மின்பிறப்பாக்கியொன்று இல்லாதிருப்பதால், எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலைய இயந்திர சாதனங்களின் செயற்பாடுகள் தற்போது மிக ஆபத்தான விதத்திலேயே நடைபெற்று வருவதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற் சங்கங்கள் மேலும் தெரிவிக் கின்றன.
இது தொடர்பாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவரான ரீ.ஜீ.ஜயசிங்க தெரிவிக்கையில்,
பொதுவாகவே இத்தகைய திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்படுவது வழமையானது எனவும், தொழிற் சங்கங்கள் சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை எனவும் தெரிவித்துள்ளார்.
மேலும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் புதிய கொதிகலனொன்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குக் கிடைக்கவுள்ளதாகவும், தற்போது மின்பிறப்பாக்கியொன்று கொரிய நாட்டு இயந்திர வல்லுநர்களால் மறுசீரமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த-ஐ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோசிதவின் சிறைக் கூடத்துக்கு அருகில் கைத்தொலைபேசி ஜாமர்

கொழும்பு, பெப். 21

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோசித ராஜபக்சவின் சிறைக்கூடத்துக்கு அருகில் கையடக்கத் தொலைபேசிகளுக்கு சிக்னல் கிடைப்பதைத் தடுக்கப் பயன்படும் தொலைபேசி ஜாமர் கருவிகள் பொருத்தப்படவுள்ளன.

யோசித சிறைச்சாலைக்குள் கைத்தொலைப்பேசி பயன்படுத்துவதாக சந்தேகங்கள் எழுந்துள்ள நிலையில், இந்தக் கருவி பொறுத்தப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம், தொலைத்தொடர்பு மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு அமைச்சுடன் பேச்சு நடத்தி வந்தது.

இந்நிலையில், யோசிதவின் சிறைக் கூடத்துக்கு அருகில் இருந்து கையடக்கத் தொலைபேசியொன்று கண்டெடுக்கப்பட்டமையானது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

இதையடுத்து தற்போது இந்தக் கருவியைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சி.எஸ்.என். தொலைக்காட்சி நிறுவனத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் யோசித ராஜபக்ச உள்ளிட்ட ஐவர், கடந்த ஜனவரி 30 ஆம் திகதிமுதல்கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## உணவு விசமாகியமையால் 35 பேர் வைத்தியசாலையில்

காத்தான்குடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசமொன்றில் உணவு விசமானதால் சுமார் 35 பேர் பாதிக்கப்பட்டு காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் புதிய காத்தான்குடி பிரதேசத்திலுள்ள உணவு தயாரிப்பு நிலையமொன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை புரியாணி கொள்வனவு செய்து உட்கொண்டுள்ளனர்.

இந்த உணவை உட்கொண்டதைத் தொடர்ந்து அவர்களுக்கு வாந்தி, மயக்கம், காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுள் பெண்கள், குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர்.

இந்நிலையில் மேற்படி சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (த)

# புத்தளம் ரயில் விபத்தில் நான்கு பேர் படுகாயம்



கொழும்பு, பெப். 21

புத்தளம் மாவட்டத்தின் மதுரங்குளி–கரிக்கட்டைப் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற ரயில் விபத்தில் நால்வர் காயமடைந்துள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து புத்தளம் நோக்கிச்சென்ற ரயிலுடன் கரிக்கட்டைப் பகுதிலுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட கொள்கலன் லொறியொன்றுமோதுண்டதைஅடுத்தே மேற்படி விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் கொள்கலன் லொறியின் சாரதியும், ரயில் சாரதியும், ரயில்வே உத வியாளர்கள் இருவரும் படுகாயமடைந்த நிலையில், புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக முந்தல் பொலிஸார் கூறினர்.

விபத்தை அடுத்து ரயிலின் இரண்டு பெட்டிகள் தண்டவாளத்தை விட்டு விலகி யுள்ளதால், ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டு அப்பகுதி ஊடான ரயில் சேவை சிலாபம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசார ணைகளை முந்தல் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (த)

## காணாமற்போன மீனவர்களில் ஒருவரின் சடலம் மீட்பு

திருமலை, பெப். 21

திருகோணமலை, கும்புறுப்பிட்டி கடற்கரையில் ஆணொருவரின் சடலம், நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு மீட்கப்பட்டுள்ளதாக குச்சவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 16ஆம் திகதி, இரண்டு மீனவர்கள் மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்றதாகவும், அவ்விருவரும் 17ஆம் திகதிவரை வீட்டுக்குத் திரும்பவில்லை எனவும் துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டிருந்தது.

–இவ்வாறு காணாமற்போன இருவரில் ஒருவரின் சடலமே, நேற்று மீட்கப்பட்டதாகவும் சடலமாக மீட்கப்பட்டவர், திருகோணமலை - அபயபுரப் பகுதியைச் சேர்ந்த ரோகன நிசாந்த முனவீர (வயது –44) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம், தற்பொழுது கும்புறுப்பிட்டி கடற்கரையிலிருந்து சட்ட வைத்தியப் பரிசோதனைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப் படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை குச்சவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

## நால்வருக்கு விரைவில் அமைச்சுப் பதவி

கொழும்பு, பெப். 21


ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவருக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவருக்கும் அமைச்சுப் பதவிகள் விரைவில் வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய திலக் மாரப்பன காணியமைச்சராக நியமிக்கப்படுவார் எனவும், முன்னாள் இராணுவ தளபதி சரத்பொன்சேகா போர் வீரர்கள் நலன்புரியமைச்சராக நியமிக்கப்படுவார் எனவும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், பதுளை மற்றும் காலியைச் சேர்ந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவருக்கும் அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (த)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# முருங்கன், முசலி ஓட்டோ சங்கத்தினர் பிரச்சினைகளுக்கு எட்டப்பட்டது தீர்வு

மன்னார்,பெப்.21

கடந்த சில நாள்களாக முருங்கன் ஓட்டோ சங்கத்தினருக்கும், முசலி பிரதேச ஓட்டோச் சங்கத்தினருக்கும் இடையில் ஏற்பட்டு வந்த முறுகல் நிலை சுமுகமான முறையில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

நானாட்டான் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் விசேட ஒன்று கூடல் இடம் பெற்றது. இதன்போதே குறித்த இரு சங்கத்துக்கும் இடையில் சுமுகமான முறையில் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டன.

முருங்கன் ஓட்டோச் சங்கத்தினருக்கும் முசலி பிரதேச ஓட்டோச் சங்கத்தினருக்கும் இடையில் ஏற்பட்டு வந்த முறுகல் நிலை முற்றியதை அடுத்து கடந்த வாரம் குறித்த பிரச்சினை பொலிஸ் நிலையம் வரை சென்றிருந்தது.

இந்த நிலையில் குறித்த இரண்டு சங்கத்தினரின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் வகையில் விசேட சந்திப்பு இடம் பெற்றது.

குறித்த சந்திப்பில் வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், நானாட்டான் பிரதேச செயலாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், நானாட்டான் பிரதேச சபை மற்றும் முசலி பிரதேச சபை ஆகியவற்றின் செயலாளர்கள், முருங்கன் மற்றும் சிலாவத்துறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட இரண்டு ஓட்டோச் சங்கங்களின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இரண்டு பிரதேச செயலாளர்களுக்கும் சில நடை முறைகள் குறித்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

அந்த வகையில் சம்பந்தப்பட்ட இரண்டு பகுதியினருக்கும் பதிவு செய்யப்பட்ட ஓட்டோத் தரிப்பிடம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட ஓட்டோ தரிப்பிடம் வழங்கப்பட்ட இடத்தில் இருந்து 500 மீற்றர் தூரத்துக்குள் வேறு தரிப்பிடம் வழங்கக்கூடாது.

அத்தோடு ஒரு தரிப்பிடத்தில் இருந்து இன்னோர் தரிப்பிடத்துக்கு அருகிலே பயணிகளை இறக்குபவர்கள் அந்தத் தரிப்பிடத்தில் தரித்து நின்று பயணிகளை ஏற்றக்கூடாது.

அதேவேளை, இரண்டு தரப்பினரும் சட்ட திட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்என்றும்-அவ்வாறு மீறுபவர்களுக்கு கடுமையான சட்ட நடவடிக்கை நீதிமன்றின் ஊடாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ற-ஐ-56)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சிறுமிகள் மீதான வன்புணர்வு திட்டமிட்ட ஊக்குவிப்பா...?

**வ**வுனியாவில், தமது வீட்டில், தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட 14 வயதான சிறுமி, வன்புணர்வுக்கு உட்படுத்தப் பட்ட பின்னரே கொல்லப்பட்டுள்ளார். உடற் கூற்றுப் பரிசோதனையில் அது உறுதிப் படுத்தப்பட்டிருக்கிறது.

இதுபோன்ற சம்பவங்களால் பாதிக் கப்படும் நிலை சற்று ஓய்ந்திருந்த போதிலும், அவை தொடரியாக உயருமா என்ற அச்சமும் ஏக்கமும்வடக்கின்ஒவ்வொருவீட்டினரிடமும், பெற்றோரிடமும் அவர்களின் மனதைக் கருக்கி வாட்டுகிறது.

மாணவியைக் கொன்ற கொலை யாளியை உடனடியாகக் கண்டறிந்து, சம் பந்தப்பட்டோருக்கு சாவுத் தண்டனை வழங்குங்கள். பொலிஸாரே விரைந்து செயற் படுங்கள் என்று மக்கள் மத்தியில் இருந்து பேரதிர்வுடன் கோரிக்கைகள் திரண்டு, உருண்டு எழுகின்றன.

வடக்கில்,சில மாதங்களாக ஓய்ந்திருந்த, வன்புணர்வு, அதன்பின்னரான படுகொலை என்ற படுபாதக நிலை மீண்டும் இப்போது தலைதூக்கத் தொடங்கிவிட்டது. முன்னர் நடைபெற்ற இந்தக் காட்டு மிராண்டித் தன மான செயற்பாடு, மீண்டும் மீண்டும் வளர்ந்து பரவாமல் தடுப்பதற்கு உகந்த நடவடிக்கை களை அரசும் நீதித்துறையும் விரைந்து, வேகவேகமாகச் மேற்கொள்ளுமென எதிர் பார்த்த மக்களுக்கு ஏமாற்றமே தொடர்கிறது. இதற்கான விசேட நீதிமன்றம் (நீதிமன்றங்கள்) அமைப்பதற்கு வகை செய்யப்படும் என்று அரசதரப்புகள் அறிவித்திருந்தபோதிலும், அவற்றில் ஒன்றேனும் இன்னும் முளை விட்டதாகவும் இல்லை...!

இத்தகைய அராஜக, படுபாதகச் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாகி, மாணவி கள் நிலையை மேன்மேலும் சீரழிக்க உந்து தலைக் கொடுக்கும் படுபாவிகள் எண்ணிக் கையை இது உயர்த்துமோ என்று-

பெண் பிள்ளைகளைப் பெற்றெடுத்த எமது தாய்க்குலத்தை கண்ணீர் வடிக்க வகை செய்யுமோ என்ற, ஏக்கம் பரவிப் படர்கிறது. அரசு தமது பாதுகாவலன் என்று கருதும் தமிழ் மாதர் குலம், அதன்பால் நம்பிக்கை வைக்க முடியாத நிலை, மிகப் பெரும் ஏமாற்றத்தையும் மனஅழற்சியையும் அவர்களுக்கு உண்டாக் குகிறது.

மொத்தத்தில் மனித நேயம் இந்த நாட்டில் அழித்து எழுதப்படப் போகிறதா என்ற ஏக்கம் எமது பிராந்தியத்தின் மகளிரைப் பீடித்து விட்டது என்பதை -

அரசும், அதன் உயர்மட்டங்களும் ஊன்றி உணர்வதற்கு பின்னிற்பதான போக்கு, அதன் இயலாமையா, அன்றித் திரைமறைவில் திட்டமிட்ட ஊக்குவிப்பா என்று சந்தேகிக்கும் நிலைக்கு தள்ளிச் செல்கிறது!

இது தொடர்பில், வருமுன் காக்கும் செயற் பாடுகளை முகிழ்விக்க அரசு கரிசனையுடன் விரைந்து செயற்படுவது (இனி) எப்போது..?

# இந்தியாவை இனியும் நம்பலாமா?

சேரலாதன்



**இ**லங்கையில் வாழுகின்ற தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்வு காணப் படாது நீண்டு கொண்டே செல்வதற்கு இந்தியாவே காரணமெனக் கூறுவதை எவருமே தவறெனக் கூறிவிட முடியாது. ஏனென்றால், இலங்கை மீதான இந்தியாவின் தலையீடு இலங்கையில் அவ்வப்போது இருந்துள்ளமை ஒன்றுமே புதிய தொரு விடயமல்ல.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த இந்திய வெளி விவகார அமைச்சர் திருமதி சுஷ்மா சுவராஜ், இலங்கையில் நீண்ட காலமாகத் தொடருகின்ற இனப் பிரச்சினைக்கு அனைவரும் ஏற்றுக்கொள்ளும் விதத்திலான அரசியல் தீர்வை ஏற்படுத்து வதற்கு இந்தியா துணை நிற்கும் எனவும், அதற்கான இந்தியாவின் முழுமையான ஈடுபாடு தொடர்ந்து இருக்கும் என தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னரிடம் கூறியதாகச் செய்திகள் வெளிவந்திருந்தன.

இந்தியத் தரப்பினரின் இவ் வாறான உறுதிமொழிகளைக் கேட்டுக்கேட்டுத் தமிழ் மக்கள் சலிப்படைந்து விட்டனர். இந்தியா நினைத்திருந்தால் இலங்கை யின் இனப்பிரச்சினைக்கு எப் போதோ தீர்வைக் கண்டிருக்க முடியும். ஆனால் இந்த விடயத் தில் இந்தியா அசமந்தமாக இருப் பது தெளிவாகத் தெரிகின்றது.

1987 ஆம் ஆண்டு இந்திய- இலங்கை அரசுகள் இணைந்து கைச்சாத்திட்ட ஒப்பந்தம் தொடர் பாக 30 ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையிலும், அதிருப்தி யானதொரு நிலையே தமிழர்கள் மத்தியில் காணப்படுகின்றது. எத்தகையதொரு சட்டவலுவும் இல்லாத இந்த ஒப்பந்தத்தை இலங்கை மதித்து நடப்பதாகவும் தெரியவில்லை. இந்த ஒப்பந்தத் தின் பிரகாரம் இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் பிர காரம் பழைய நிலையிலேயே பிரிந்து இயங்க நேர்ந்துள்ளது. மேலும், ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசமைப்பில் மேற்கொள்ளப் பட்ட 13 ஆவது திருத்தமும் முழு அளவில் நடைமுறைப்படுத்தப் படவில்லை. அதைப் பற்றியே பேசிப்பேசிக் காலத்தை வீணாக் குகின்ற செயற்பாடுகள் தான் தற் போதும் இடம்பெற்று வருகின் றன. அரசமைப்பில் மேற்கொள் ளப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மகாண சபைகள் அதிகாரம் எவையு மின்றி பெயரளவுக்கு மட்டுமே இயங்கி வருகின்றன. ஆனால் இந்தியா இவை தொடர்பாகக் கவ னத்தில் கொண்டதாகத் தெரிய வில்லை.

ஆனால் அமைதிப் படை என்ற பெயரில் தனது படைகளை இங்கு அனுப்பி வைத்தது இந்தியா. ஆனால் அமைதியை நிலை நாட்டுவதற்கு வந்ததாகத் தெரி விக்கப்பட்ட இந்தியப் படை, புலி களுடன் கடுமையான மோதலில் ஈடுபட்டு, வரலாறு காணாத அழி வைச் சந்தித்தது. அத்துடன் தமிழ் மக்களும் இந்தியப் படை யின ரால் பெரும் துன்பங்களை எதிர் கொண்டனர். இறுதியில் அவமா னத்தைச் சுமந்து கொண்டு இந்தி யப் படை தாயகம் திரும்பியது. பின்னர் ராஜிவ்காந்தியின் கொலையுடன் புலிகளுக்குத் தொடர்பு இருப்பதாகத் தெரிவித்த இந்திய அரசு, இலங்கைத் தமி ழர்களின் நலன்களைக் கவனத் தில் கொள்வதிலிருந்து விலகி யிருந்தது. இந்தியாவின் கவனம் முழுவதும் புலிகளை ஒழிப் பதில்தான் முழுவதுமாகக் காணப்பட்டது. இறுதிப் போரின் போது இலங்கைக்குத் தேவை யான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்கியது. அத்துடன் போரை எந்த வகையிலும் நிறுத்தி விடக்கூடாது என்பதில் இந்தியா கண்டிப்புடன் செயற்பட்டது. போரை ஊக்கப்படுத்தும் வகை யில் இந்திய அதிகாரிகள் அவ் வப்போது இலங்கைக்கு வந்து சென்றதையும் அவதானிக்க முடிந்தது. போரின்போது இலங்கை அரசு சர்வதேச விதிமுறைகளை யெல்லாம் உதா சீனம் செய்து தனது எண்ணம் போன்று நடந்து கொண்டது. இதனால் ஒன்றுமே அறியாத பல ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டனர். ஆனால் இந்தியாவோ இதை யெல்லாம் ஒருபொருட்டாகக் கொள்ள வில்லை. அதன் வாயிலிருந்து ஓர் அனுதாப வார்த்தைகூட வெளி வரவில்லை. மாறாகப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் சாவு தொடர்பான செய்திக்காகவே அந்த நாடு காத்திருந்தது. அந்தச் செய்தியும் வெளிவந்தது. இதைக் கேட்டு இந்தியா பெருமகிழ்ச்சி கொண்டது. ஆனால் தமிழர் பிரதேசம் சுடு காடாக மாறிக் காணப்பட்டது. எங்கும் மரண ஓலமே நிறைந் திருந்தது. இந்தியா இது தொடர்பாக சிறிதுகூட மனம் வருந்திய தாகவோ அல்லது அனுதாபப்பட்டதாகவோ தகவல் எதுவும் இல்லை.

போர் முடிவுற்று தற்போது ஏழு வருடங்கள் நிறைவுபெறவிருக் கின்றது. பிர தமர் நரேந்திரமோடி உள்ளிட்ட இந்தியாவின் அதி காரம்மிக்க தலைவர்கள் பலர் இங்கு வந்து சென்றிருக்கின்ற னர். பல்வேறு வாக்குறுதிகளை யும் தமிழர்களுக்கு வழங்கிச் சென்றிருக்கின்றனர். ஆனால் இதுவரை தமிழர்களின் துயரங் கள் முழுமையாக மறைந்து விட வில்லை. இடம்பெயர்ந்த ஆயி ரக்கணக்கானவர்கள் இன்ன மும் அகதி வாழ்வுதான் வாழ் கின்றனர். காணாமல்போனவர்க ளைத் தேடி அவர்களின் உறவி னர்கள் அலைந்து களைத்துப் போன நிலையில் காணப்படுகின் றனர். இனப்பிரச்சினைக்கான தீர்வு கண்ணுக்கெட்டாத தூரத்தில் கூட காணப்படவில்லை. ஆனால் இந்தியாவோ இலங்கையுடன் நெருக்கமான உறவைப் பேணவே விரும்புகின்றது.

தமிழர்களின் உரிமைப் போராட் டங்களுக்கு இந்தியா ஒரு போதுமே துணை நின்றதில்லை. மாறாக அவற்றை நசுக்கி விடு வதிலேயே குறியாக நின்றது. புலிகளும் இவ்வாறுதான் ஒடுக் கப்பட்டார்கள். இலங்கைத் தமி ழர்கள் தமது தாய் நாடாக இந்தி யாவை கருதிக் கொண்டிருக்க, இந்தியாவோ மாற்றான் தாய் மனப்பாங்குடனேயே செயற் பட்டு வருகின்றது.

இந்த நிலையில் தமிழர்கள் இந்தியாவை இனியும் நம்பு வதால் பயனொன்றும் கிடைக்கப் போவதில்லை.

> **இறுதிப் போரின் போது இலங் கைக்குத்தேவை யான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்கியது. அத்துடன் போரை எந்த வகையிலும் நிறுத்தி விடக்கூடாது என்பதில் இந்தியா கண்டிப்புடன் செயற் பட்டது. போரை ஊக் கப்படுத்தும் வகையில் இந்திய அதிகாரிகள் அவ்வப்போது இலங் கைக்கு வந்து சென்ற தையும் அவதானிக்க முடிந்தது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவுக்கு சங்கடத்தை ஏற்படுத்தப்போகும் பணம் வழங்கிய விவகாரம்



எம்.ஐ.முபாறக்

போர் வெற்றி மூலம் கட்டி எழுப்பப்பட்ட ஒரு பலமான அரசை ஒரு குறுகிய காலத்துக்குள் வீழ்த்துவது இலகுவான காரியமல்ல. பௌத்த மக்களின் மனங்களில் ஒரு சரித்திர நாயகனாக இடம்பிடித்து, பல தசாப்தங்களுக்குத் தானே - தன் குடும்பமே இந்த நாட்டை ஆட்சி செய்யக் கூடியவாறு மகிந்தவால் போடப்பட்ட அடித்தளத்தை மிக விரைவில் உடைத் தெறி வதும் முடியுமான காரியமல்ல. ஆனால், நினைத்துப் பார்க்கமுடியாத வகையில் இவை எல்லாம் இலகுவான காரியங்களாக மாறின. நாட்டின் பொருளாதார வீழ்ச்சி, வாழ்க்கைச் செலவின அதிகரிப்பு, சிறுபான்மை இனங் களுக்கு எதிரான இனவாதம், குடும்ப ஆட்சி மற்றும் சர்வாதிகாரப் போக்கு போன்றவை மகிந்தவின் இந்த வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தன என்று கூறலாம்.

ஆனால், அந்தக் காரணங்கள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி ஆட்சியை வீழ்த் தும் கருவியாக அவற்றைப் பயன்படுத்தியமை இராஜதந்திரம் என்ற ஒன்றுதான். ஆட்சி மாற்றத்துக்கான உண்மையான காரணம் அதுதான். இராஜதந் திரத்துக்கும் சண்டித்தனத்துக்கும் இடையிலான போட்டிதான் கடந்த ஜனாதி பதித் தேர்தல். அந்தத் தேர்தலில் சண்டித்தனம் தோற்று இராஜதந்திரம் வென்றது. தனது ஆட்சியைப் பலப்படுத்துவதற்காக மகிந்த உருவாக்கிய சாதக நிலைமை களாக அனைத்தையும் இந்த இராஜதந்திரம் மகிந்தவுக்கு எதிரான பாதக நிலைமைகளாக மாற்றியது. இராஜ தந்திரத்துடன் போட்டி போட முடியாத - அந்த இராஜதந்திரம் அறவே இல்லாத மகிந்த குறு கிய காலத்துக்குள் ஆட்சி அதிகாரத்தை இழந்தார்.

**ஆட்சியைப் பிடிக்க முயலும் மகிந்த**

இருந்த போதிலும், இழந்த ஆட்சி அதிகாரத்தை மீளப் பெறு வதற்காக மகிந்த மீண்டும் களத் தில் குதித்துள்ளார். தனது தோல் விக்கான காரணத்தை ஆராயாமல் - அதில் இருந்து படிப்பினை களைக் கற்றுக்கொள்ளாமல் அதே பழைய ஆயு தங்களைக்கொண்டே ஆட்சியைக் கைப்பற்றப் போராடுகின்றார். அந்தப் பழைய சண்டித்தனமும், அந்தப் பழைய இனவாதமும் இன்னமும் அவருடன் தொங்கிக்கொண்டிருப் பதைக் காணலாம். ஆனால், மகிந்தவை வீழ்த்திய அவரது எதிரிகளோ மிகவும் நிதானமானவர்கள்; சிறந்த இராஜதந்திரிகள்.

இப்படிப்பட்ட எதிரிகளின் பலம், பின்னணி போன்றவற்றை அறிந்தும் கூட, மகிந்த முட்டாள்தனமாக மோதி வருகின்றார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தி - புதுக் கட்சி ஒன்றை உருவாக்கி அதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு அவர் முயற்சி செய்கிறார்; பகல் கனவு காண்கிறார்.

ஆனால், சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தும் அவரது முயற்சி அவரது அரசியல் பயணத்துக்கு முற்றுப் புள்ளியாக - சாவு மணியாக அமைந்துவிடப் போகின்றது என்பதை அவர் இன்னமும் உணராமல் இருப்பதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை.

சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டாலும், அந்தப் பிளவால் அந்தக் கட்சிக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாதவாறு - அந்தப் பிளவு மகிந்தவுக்கே ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவாறு - அவரது அரசியல் பயணத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடியவாறு மகிந்தவின் எதிரிகளால் இப்போது பல திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

**புலிகளுக்குப் பணம் வழங்கிய மகிந்த**

அத்திட்டங்களுள் ஒன்றுதான் 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றி பெறுவதற்காக மகிந்த புலிகளுக்குப் பணம் வழங்கினார் என்ற குற்றச்சாட்டு. இதைத்தான் இப்போது மகிந்தவின் எதிரிகள் மகிந்தவுக்கு எதிரான துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளனர்.

அந்தத் தேர்தலில் மகிந்த வெற்றி பெற்ற மறு நாளே இந்தக் குற்றச்சாட்டுக்கள் கிளம்பிவிட்டன. ஆனால், 2007 ஆம் ஆண்டு மங்கள சமரவீர மற்றும் சிறி பதி சூரியாராச்சி ஆகியோர் மகிந்த அரசில் இருந்து விலக்கப்பட்டதைத் தொடர்ந்துதான், இந்தக் குற்றச்சாட்டு வலுவடையத் தொடங்கியது. இது பற்றிய பல உண்மைகளை சிறிபதி வெளிப்படுத்தத் தொடங்கினார்.

அந்தத் தேர்தலில் மகிந்தவை வெல்ல வைக்கும் வகையில், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுப்பதற்காகப் புலிகளுக்குப் பணம் வழங்கப்பட்டது என்றும், அது தொடர்பில் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்காக வன்னிக்குச் சென்ற முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச தலைமையிலான குழுவில் தானும் இருந்ததாகவும் சிறிபதி கூறினார்.

புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சின்போது முன்னாள் வெளிவிவகார அமைச் சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை மற்றும் கருணா அம்மானை புலிகளிடம் மீள ஒப்படைத்தல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. இந்த விடயங்களில் புலிகள் கொண்டிருந்த நிலைப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தான் பேச்சு நடந்த அறையில் இருந்து வெளியேறிவிட்டதாக சிறிபதி கூறி இருந்தார்.

அந்தப் பேச்சில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் தேர்தலுக்கு முன்பும் தேர்தலுக்குப் பின்பும் புலிகளுக்குப் பணம் வழங்கப்பட்டது என்று அவர் கூறினார். கிளிநொச்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 'ராடா' என்ற நிறுவனத்தின் ஊடாக இலவசமாக வீடுகளை அமைத்துக் கொடுக்கும் போர்வையில் இந்தப் பணம் புலிகளுக்குக் கட்டங்கட்டமாக வழங்கப்பட்டது என்று கூறிய சிறிபதி, இதற்குத் தரகு வேலை பார்த்தவர் புலிகளின் முக்கியஸ்தர் எமில்காந்தன் என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை அமைக்குமாறு கோரி சிறிபதி 2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி பிரேரணை ஒன்றையும் நாடாளுமன்றில் சமர்ப்பித்தார். குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கும் அது தொடர்பில் வாக்குமூலமளித்தார்.

**குற்றச்சாட்டை மறுதலித்த தமிழ்ச்செல்வன்**

இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு ஒரு மாதத்தில் அதாவது 2007ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த சு.ப.தமிழ்செல்வன் இந்தக் குற்றச்சாட்டை மறுத்தார். [illegible] பத்திரிகைக்கு அவர் வழங்கிய பிரத்தியேக செவ்வியின்போதே அவர் இந்த மறுப்பை வெளியிட்டார்.

புலிகள் மகிந்தவிடம் இருந்து பணம் பெற்றனர் என்ற குற்றச்சாட்டை அவர் மறுத்தபோதிலும், பஸில் ராஜபக்ச தலைமையிலான குழுவினர் புலிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதை மறுக்கவில்லை.

புலிகளின் நிர்வாகப் பிரிவின் கீழ்மட்ட உறுப்பினர்களுடன் அந்தக் குழு பேச்சு நடத்திவிட்டுச் சென்றது என்றும், ஆனால் பணம் எதுவும் பெறப்படவில்லை என் றும் தமிழ்ச்செல்வன் அந்தப் பேட்டியில் மேலும் கூறியிருந்தார். அதும ாத்திர மன்றி, புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு இரு பிரதான கட்சிகளும் முயற்சிகளை மேற்கொண்டன என்றும் தெரிவித்திருந்தார். அவரது இந்த மறுப்பு மகிந்தவுக்கு அப்போது மிகவும் உதவியாக இருந்தது. புலிகளுக்கு எதிரான மகிந்தவின் போர் மகிந்தவுக்கு வெற்றியைக் குவித்துக்கொண்டி ருந்த சமயத்தில்தான் இந்த மறுப்பு வெளியாகியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், சிறிபதி அவரது குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில், ரோஹன கமகே என்ற கடற்படை அதிகாரி ஒருவரை முதற் சாட்சியாக அவரது குற்றச்சாட்டில் உள்ளடக்கி இருந்தார்.

அப்போதைய பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்சவால் இந்த ரோஹன கமகே சிறிபதிக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார் என்றும், 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வவுனியாவைக் கண்காணிக்கும் பொறுப்பை ரோஹன கமகேவிடம் கோத்தபாய ஒப்படைத்திருந்தார் என்றும் சிறிபதி தெரிவித்திருந்தார்.

புலிகளுக்குப் பணம் வழங்கப்பட்டிருப்பதால் வவுனியா வடக்கில் மக்களை வாக்களிக்க விடாமல் தடுக்கும் பணியைப் புலிகள் செவ்வனே செய்வார்கள் என ரோஹன கமகே அவரிடம் கூறியதாக சிறிபதி மேலும் கூறினார்.

ஆனால், இது சம்பந்தமாக சிறிபதி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கிய வாக்குமூலம் தொடர்பிலோ அல்லது நாடாளுமன்றில் சமர்ப்பித்த பிரேரணை தொடர்பிலோ, எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்த சிறிபதியும் தற்போது உயிருடன் இல்லை; அந்தக் குற்றச் சாட்டை மறுத்த புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனும் உயிருடன் இல்லை.

இறுதியில், மகிந்த அரசு போரை வென்றதால் அந்தக் குற்றச்சாட்டு அப்படியே அமிழ்ந்து போனது. ஆனால், அதை இப்போது தூசு தட்டி மேலே எடுக்க வேண்டிய தேவை இந்த அரசுக்கு ஏற்பட்டுள்ளது. மகிந்தவின் ஆட்டத்தை நிறுத்துவதற்கு - அரசில் இருந்து அவரை முற்றாக ஓரங்கட்டுவதற்கு - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிளவைத் தடுப்பதற்கு - பிளவுபட்டாலும் மக் களின் செல்வாக்கை இழக்காதிருப்பதற்கு அரசு இந்த விவகாரத்தைத்தான் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது என்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**எமில்காந்தனுக்கு உள்ள தொடர்பு**

இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர் என்றும், இதற்குத் தரகு வேலை பார்த்தவர் என்றும் கூறப்படுபவர் புலிகளின் முக்கியத்தரான எமில்காந்தன் ஆவார். முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கொலைசெய்ய முற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப் பட்டிருக்கும் வழக்கில் முன்னிலையாவதற்கு அவர் விரைவில் இலங்கைக்கு வரவுள்ளார். இவரது வருகையின் பின்னணியில் பெரும் இராஜதந்திரம் பொதிந்தி ருக்கின்றது. அவரது வருகை மகிந்தவின் அரசியல் பயணத்தைக் கேள்விக் குறியாக்கப் போகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மஹிந்த புலிகளுக்குப் பணம் வழங்கினார் என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எமில்காந்தன் பல உண்மைகளை அம்பலப்படுத்துவார் என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


இது மகிந்தவின் அரசியல் பயணத்துக்கு எந்தளவு தடையை ஏற்படுத்தப் போகின்றது; அரசின் இராஜதந்திரமும், மகிந்தவும் சண்டித்தனமும் மோதி, அதில் எது வெல்லப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் வேல் ஆனந்தனின் நூல் வெளியீட்டு விழா

லக்ஸ்மன்

எமது பிரதேசத்தில் நடனக் கலை
மேம்பாடடைய வேண்டும்
என்பதற்காக அர்ப்பணிப்புடன்
ஈடுபட்டவர் கலைஞர் வேல்
ஆனந்தன். வசதிகள் குறைந்த கிராம
மாக இருந்தாலும் நெடுந்தீவு எமது
இனத்துக்குப் பெருமை சேர்த்த மனிதர்
களைத் தந்துள்ளது. எமது ஊரின்
அடையாளங்களை நாம் மறந்து
விட்டவர்களாகியுள்ளோம். மரபு ரீதியான
அடை யாளங்களை மறந்து விட்டோம்.
இசை, நடனம் ஆகியவற்றின் அடை
யாளத்தை மறந்துவிட்டோம். நாகர்கள்
வாழ்ந்தார்கள் என்கிறார்கள். அந்த
அடையாளங்களை நாம் தேடிக்கொண்
டிருக்கிறோம். நடனக் கலையின் அடை
யாளம் அவர்களே. அந்த அடையாளத்
தைத் தூக்கி நிறுத்துவோம் என்ற
பொருள் நிறைந்த வடக்கு மாகாணக்
கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவின்
பிரதம விருந்தினர் உரையுடன் கலைஞர்
வேல் ஆனந்தனின் 'ஆடல் உலகில்
எனது சுவடுகள்' நூல் வெளியீட்டு விழா
களைகட்டியது.





கலைஞர் வேல் ஆனந்தனின் "ஆடல்
உலகில் எனது சுவடுகள்" நூல் வெளியீட்டு
விழா கடந்த 13 ஆம் திகதி சனிக் கிழமை
திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது
மண்டபத்தில் குரு கோபிநாத் நினை
வரங்கில் இடம்பெற்றது. அமைச்சர் த.குரு
குலராஜா இந்த நிகழ்வுக்குத் தலைமை
தாங்கினார். தலைவருடன் வேல் ஆனந்
தனின் சகோதரி திருமதி த.பொன்றோஸ்
மற்றும் விருந்தினர்கள் விளக்கேற்றி
னார்கள்.







இலங்கையில் சிறந்த கலைஞரான
சித்திரசேனபோன்று, எங்களின் கலை
களுக்கான அடையாளமாக வேல்
ஆனந்தன் உள்ளார். தனது கலை மீது
அவர் கொண்டிருந்த நம்பிக்கை அவ
ரைச் சிறந்த கலைஞராக்கியது. நெடுந்
தீவு மக்களை யோசிக்கும்போது அந்த
மக்களின் சிறப்பியல்புகள் எமது சமூகத்
துக்கு சிறந்த மாற்றங்களைத் தோற்று
விக்கக் காரணமாகி இருப்பது தெரி
கின்றது. ஒரு கலைஞன் தனது அனுப
வங்களையும், கலையைக் கற்பதற்கும்,
அதனை மக்கள் முன்கொண்டு செல்
வதில் ஏற்பட்ட கஷ்டங்களையும் ஏனை
யோருடன் பகிர்ந்து கொள்வது அவசியம்.
இந்த நூலினூடாக ஒரு கலைஞன்
தனது வாழ்நாளை மக்களுடன் பகிர்ந்து
கொள்வது நல்ல அம்சமாகும் என
நூலை வெளியிட்டுப் பேசிய நாடாளு
மன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் குறிப்
பிட்டார். நூலின் முதற்பிரதியை நெடுந்
தீவு கோட்டக்கல்வி அதிகாரி திருமதி
சாரதா கிருஷ்ணதாஸ் பெற்றுக்
கொண்டார்.

ஆய்வுரை நிகழ்த்திய பேராசிரியர் சிவ
லிங்கராஜா, தனது கல்வியுடன், நடனக்
கலையைப் பயில்வதற்கு காரணமாக
இருந்து ஒத்துழைப்பு வழங்கிய பல
ருக்கும் தனது நன்றியைத் தெரிவிக்
கவும்- அரசியல்வாதிகளால் வழங்கப்பட்ட
ஆதரவு எதிர்ப்பு மற்றும் எமது மண்ணில்
இந்தக் கலையின் எதிர்கால வளர்ச்சியில்
கொண்ட ஆர்வம், அதற்காக முன்னெ
டுத்த செயற்பாடுகள், உலகின் பல்வேறு
பகுதிகளுக்கும் சென்று நடனக் கலை
யின் சிறப்பை எடுத்துக்காட்டிய துணிச்
சல்போன்று பல்வேறு சம்பவங்கள் இந்த
நூலின் மூலம் கூறப்பட்டுள்ளது. உண்
மைகள் அனைத்தையும் சொல்ல
முடியாது. ஆனால், சொல்வதெல்லாம்
உண்மையாக இருக்க வேண்டும். அதை
இந்த நாளில் காண்கின்றோம். இந்த
வகையில் பல முக்கியமான பாரம்பரியங்
களை இதில் காணலாம் என்றார். கதகளி
அல்லது ஆட்டக் கதா என்ற இந்த ஆற்
றுகை வடிவம் கேரளத்தின் மரபுவழியானது.
பரதம், கதகளி என்பவை பற்றி குருகோபி
நாத்தின் நெறிப்படுத்தலில் சிறப்புத் தேர்ச்சி
கொண்டுள்ள கலைஞர் வேல் ஆனந்தன்
ஆடற்கலைக்காகவே தன்னை அர்ப்பணித்
தவர். நாட்டிய நாடகம் என்ற நிகழ்வுகளுக்கு
அப்பால், கீழைத்தேய நடன நாடகம் என்ற
எண்ணக்கருவை உள்வாங்குவோருக்
காவது எனது வழிகாட்டல் பயன்பட வேண்
டும் என்பதற்காகவே இந்த 'ஆடலுலகில்
எனது சுவடுகள்' என்ற இந்த நூல் என்கிறார்
வேல் ஆனந்தன். நிகழ்வில் வடக்கு
மாகாண ஆளுநரின் செய
லாளர் இ.இளங்கோவன்,
மாகாணப் பண்பாட்டலு
வல்கள் பணிப்பாளர் திருமதி
வனஜா செல்வரட்ணம், செல்
வன் இரேனியஸ் மரியாம்
பிள்ளை, திருமறைக் கலாமன்ற
பிரதி இயக்குநர் ஜோன்சன்
ராஜ்குமார் உட்படப் பலர் உரை
யாற்றினர். வேல் ஆனந் தன்
ஏற்புரையை வழங்கினார்.
உரும்பிராய்கலைக்கோயில்மாண
வர்களின் ஆடலரங்கும் இடம்
பெற்றது. கலைஞர் வேல் ஆனந்
தன் பொன்னாடை போர்த்திக்
கௌரவிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சூரியகாந்தி

# தமிழ் எங்கள் உடலுக்கும் நேர்!

## கொசுவு சட்டைகளில் தமிழின் தழுவல்

செ.உமாசுதன்

மெல்லத் தமிழ் இனிச் சாகும் என மேடைகளில் கூவித் திரியும் கூட்டத்துக்கு நடுவே வீறு கொண்டு தமிழ் வளர்ப்போம் என்று களம் புகுந்திருக்கிறார்கள் ஐந்து இளைஞர்கள். கொடும் போருக்குப் பின்னரான காலத்தில் உருக் குலைந்து நிலைகுலைந்து ஆங்கில மோகத்திற்குள் மீண்டும் சிக்கித் தவித்து வரும் தமிழர் களைத் தமிழ் கொண்டு தலை நிமிர்த்தியிருக்கிறார்கள். தமிழ் எங்கள் உயிருக்கும் மேல் மட்டுமல்ல தமிழ் எங்கள் உடலுக்கும் நேர் என்று அழகாக உணர்த்தியிருக்கிறார்கள்.

"ஆங்கிலத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று தெரியாமலேயே " அதன் அர்த்தம் புரியாமலேயே "கொசுவு சட்டைகளை (ரி–ஷேட்) மாட்டிக்கொண்டு எமது இளைஞர்கள் திரியும்போது, தமிழ் எங்கள் உணர்வோடும் உயிரோடும் கலந்தது, அது உடலோடும் ஒட்டியிருப்பதுதானே நியாயம்? அதனால்தான் இந்த வடிவமைப்பை சந்தைப் படுத்த திட்டமிட்டோம்'' என்கிறார் பாலச்சந்திரன் கீர்த்தனன். ஐவரில் ஒருவர்.

> தமிழின் அழகு தனித்துவ மானது. அதன் உப சரிப்பு, உச்சரிப்பு பெரும்பேறு. தமிழ் மொழி யானது எழுதிக் கொள்வதற் கும் படித்து சுவைப் பதற்கும் எளிமை யானது. உயிரெழுத் தாய், மெய் யெழுத் தாய், கூட்டெழுத்தாய் ஆகி அனைத்துமாகி [illegible]

தமிழின் அழகு தனித்துவமானது. அதன் உப சரிப்பு, உச்சரிப்பு பெரும்பேறு. தமிழ் மொழி யானது எழுதிக் கொள்வதற்கும் படித்து சுவைப் பதற்கும் எளிமையானது. உயிரெழுத்தாய், மெய் யெழுத்தாய், கூட்டெழுத்தாய் ஆகி அனைத்துமாகி சேர்ந்த 247 எழுத்துக்களே. இவைகளைப் படித்து அறிவார்ந்து புரிந்து கொள்ளப் பெரியவர்களுக்குச் சில வாரங்களும், சிறியவர்களுக்குச் ஒரு சில மாதங்களும் போதுமானதே. பின் எடுத்த நூல்களையெல்லாம் படிக்கலாம். தமிழுக்கு இனம் மூன்று. அவை வல்லினம், மெல்லினம், இடையினம். எமது மொழிக்குப் பெயர் உரைத்திட எம் முன்னோர். தமிழ்ச் சான் றோர் அக் காலத்திலேயே இனத்திற்கு ஓர் எழுத் தென தெரிந்து மூன்று இனங்களையும் சமத்துவ மாய் அரவணைத்து த–வல்லினம், மி–மெல்லினம், ழ்–இடையினம் என நாமம் சூட்டி அழைத்திருப்பது. நாம் அழைத்து வருவது எண்ணி எண்ணி மகிழ்ந்திருப்பதற்குரியது. மகிழ்வதற்குரியது.

தமிழுக்கு 'முத்தமிழ்' என்றொரு பெயரும் உண்டு. அவை இயல், இசை, நாடகம் என்றாகி இயற்றமிழ் எண்ணத்தை வளர்க்க இசைத்தமிழ் உள்ளத்தை உருக்க நாடகத்தமிழ் நடந்து காட்டி மக்களை நல் வழிப்படுத்தும். எண்ணமும், துணிவுமின்றி எச்செயலும் நடைபெறாது. இது உளநூற் புலவர்களின் கருத்து. இதை நமது முன்னோர்கள், சான்றோர்கள் அன்றே அறிந்து கொண்டு பெயரிட்டிருப்பது அவர்களின் அறிவாற்றலை, அறிவின் ஊற்றினை நன் முறையில் விளக்குகிறது. தற்கால தமிழ் இலக்கியத்தின் முன்னோடியான பாரதி இவ்வாறு தமிழைப் புகழ்ந்துரைக்கிறார். யாமறிந்த மொழிகளிலே தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்றார்.

பாரதிதாசனோ, தமிழுக்கும் அமுதென்று பேர்- அந்தத் தமிழ் இன்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர் என்றுரைத்து நெகிழ்ந்து போகிறார்.

இப்போது இந்த இளைஞர்கள் அது தமிழர்களின் உடலுக்கும் நேர் என்று நிரூபித்திருக்கிறார்கள். அவர்களது முயற்சி பெரு வெற்றியடைந்திருக்கிறது.

யாழ்ப்பாண வர்த்தகக் கண்காட்சியில் வெளிநாட்டவர்களிடம் தமிழின் "வடக்கின்" தனித்துவ அடையாளமாக இந்த கொசுவு சட்டைகள் இடம்பிடித்திருக்கின்றன. தமிழ் இளைஞர்களும்கூட பேராார்வத்தோடு அள்ளிச் சென்றிருக்கிறார்கள்.

"மூன்று நாள்களில் நூற்றுக்கணக்கான சட்டைகள்" எங்கள் இருப்பு கரைந்து போகிற வரைக்கும் " விற்பனையாகியது மகிழ்ச்சியளிக்கிறது. பல நூறு சட்டைகளுக்கான முன் பதிவுகள்கூடக் கிடைத்திருக்கின்றன. இளைஞர்கள் காட்டிய இந்த ஈர்ப்பு இந்த விடயத்தில் இன்னும் புதிது புதிதாக முன்னேறுவதற்கான உந்து சக்தியைத் தந்திருக்கிறது" என்கிறார் கீர்த்தனன்.

உலகில் மற்ற மொழிகளெல்லாம் வாயினால் பேசுகின்றபோது செவிக்குக் கருத்தை உணர்த்துகின்றன. ஆனால் தமிழ் மொழி இதயத்தால் பேசப்பெற்று இதயத்துக்கு உணர்வைத்தரும். உணரவைக்கும் மொழியாகும். உடலோடு ஒட்டியிருக்கும்போது, "உள்ளே இருப்பவன் தமிழன்" என்று அது உரைக்கும்போது அது இன்னும் இதயத்துக்கு நெருக்கமாகிறது.

கீர்த்தனன் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். 24 வயது. தமிழ் மொழி மீது தீராத பற்றுக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழகத்திலே வெளிவாரி மாணவனாக பொது நிர்வாக. மாணி பட்டத்துக்காகப் படித்துக்கொண்டிருக்கிறார். இன்னும் நான்கு நண்பர்களையும் இணைத்துக்கொண்டு தமிழையே மூலதனமாக்கி முன்னேற முடியும் என்று நிரூபித்துக்கொண்டிருக்கிறார். தமிழோடு சம்பந்தப்பட்ட விடயங்களையும் அற்புதங்களையும் கலை, கலாசாரங்களையும் முன்னிலைப்படுத்தியிருக்கிறார். வார்த்தைகளின் சூட்சுமங்களை எழுத்து அட்டைகளாக்கி கொசுவுச் சட்டைகளாய் உருவம் பெறச் செய்து இளைஞர்கள் மத்தியில் உலவவிட்டிருக்கின்றார்.

இந்தியாவின் திருப்பூர் பனியன் உற்பத்திக்கு முக்கியமான இடம். அங்கிருக்கின்ற மூன்று நிறுவனங்களின் உதவியை பெற்று கொசுவு சட்டைகளை வடிவமைத்து விற்பனைக்குக் கொண்டு வந்திருக்கிறார். இப்போதைக்கு முகப் புத்தகங்கள் ஊடாகவும் இணையத் தளம் ஊடாகவும்தான் இவர்களது விற்பனை இடம்பெற்று வருகிறது. இன்னமும் கடை எதனையும் இதற்காகத் தனித்து அமைக்கவில்லை.

திருவள்ளுவர், பாரதியார், தந்தை பெரியார், சுபாஷ் சந்திரபோஸ், நம்மாழ்வார் (இயற்கை விவசாயி) போன்றவர்களின் படங்களுடனும் கொசுவிகள் கிடைக்கின்றன. இதேபோன்று கலை கலாசார படிமங்களான கரகாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், சேவல் சண்டை, வீர விளையாட்டுக்கள், கேளிக்கை தொடர்பானவை, சிறியவர்களுக்கான வடிவமைப்புக்களும் முன்னிலை பெற்றிருக்கின்றன. "உள்ளே இருப்பவன் தமிழன்", "அறஞ் செய்", "சில வேடிக்கை மனிதரைப் போல் வீழ்வேன் என நினைத்தாயோ" போன்ற தமிழ் தெறிக்கும் வசனங்களுடனும் கொசுவிகள் கிடைக்கின்றன.

தமிழ் இளைஞர்கள் மத்தியிலே கொசுவுச் சட்டைகளின் மீது இருந்த அதீத ஈடுபாடும் இந்த ரக வடிவமைப்புக்களுக்கான கேள்வியினை அதிகரித்திருக்கிறது. இளைஞர்கள் இன்னும் தமிழ் உணர்வற்றுப் போகவில்லை என்பதற்கு இது ஒரு சிறு உதாரணம் என்கிறார் தமிழ்த் தேசியப்பற்றாளர் ஒருவர்.

தனித்து பருத்திப் பஞ்சிலே தயாரிக்கப்படுகின்ற கொசுவுச் சட்டைகள் வழக்கமான வடிவமைப்பான வட்டக் கழுத்துடையதாகவும், கொலர் உடையதாகவும் அமைந்திருக்கின்றன. வட்டக் கழுத்துடைய கொசுவுச் சட்டை யினை ரூபா 890 இற்கும் கொலர் உடைய கொசுவுச் சட்டை ரூபா 990 இற்கும் வாங்கலாம்.

கொரியர்கள் இந்த வகை வடிவமைப்பை விரும்பி வாங்கிச் செல்கின்றனர். தெற்காசி யர்களான நேபாளிகளும் கொசு வுச் சட்டைகளில் உள்ள தமிழ் எழுத்துக்களை உச்சரித்து காட்டுகின்றனர். விரும்பி வாங்கிச் செல்கின்றனர். திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, கண்டி என இவர்களின் விநி யோகம் விரிந்து பரந்து கிடக் கிறது. தமிழ் மொழியின் சிறத் தலை எல்லா இடமும் கொண்டு செல்கின்றது. "தமிழ்ப் பாரம்பரியத்தின் அடையாளம் என்று கூறித்தான் வெளிநாட்டவர்களுக்கு விற்கிறோம். அவர்களும் அதில் எழுதப்பட்டுள்ளவற்றைக் கேட்டுத் தெரிந்து, புரிந்துகொண்டு வாங்கிச் செல்கிறார்கள்" என்கிறார் கீர்த்தனன்.

நண்பர்களின் பூரண ஒத்துழைப்போடு கூட்டாக நட்பு ரீதியிலே இணைந்து இந்த முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்ற இந்த இளைஞரின் தமிழ் மொழி மீதான பற்றுதலின் வெளிப்பாடும் வரப்பிரசாதம்.அந்த பற்றுதல் தருகின்றது வாழ்க்கைப் பாதையில் ஆகாரம். இனிய வாழ்வாதாரம்.

வாருங்கள் தோழர்களே!

மெல்லத் தமிழ் இனி வளரும் என்று பாரதியாய், மீசைக்காரராய் மொழிச் சிறப்போடு உரைத்திடுவோம்; உயர்ந் திடுவோம். பல வேடிக்கை மனிதரைப் போல் வீழ்வேனென்று நினைத்தாயோ என்றுரைத்திடுவோம்.

தமிழ் இளைஞர்களும்கூட பேராார் வத்தோடு அள்ளிச் சென்றிருக்கிறார்கள். "மூன்று நாள்களில் நூற்றுக்கணக்கான சட்டைகள்" எங்கள் இருப்பு கரைந்து போகிற வரைக்கும் " விற்பனையாகியது மகிழ்ச்சியளிக்கிறது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இருந்திருக்க வேண்டியவர்கள் இல்லாதிருத்தலின் விளைவு

■ எஸ். தர்சன்



“இருப்பவர்கள் இருந்திருந்தால் இது நடந்திருக்குமா?” இது புங்குடுதீவில் கூட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட மாணவி வித்தியாவுக்காக வடக்கில் கிளர்ந்தெழுந்த மாணவர்களால் கடந்த வருடம் தெவிக்கப்பட்டது. விடுதலை புலிகள் என்கிற நிர்வாகக் கட்டமைப் பின் மீதான இளைய சமுதாயத்தின் அதியுச்ச நம்பிக்கையாக அந்தக் கூற்று வெளிப்பட்டு நின்றது.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் அமைதியாக்கப்பட்ட பின்னர் பெண்கள், சிறுவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் பாலியல் கொடுமைகள் வடக்கில் உச்சமடைந்துள்ளன. ஆய்வாளர்களும் அதிகாரிகளும் இதற்குப் பல்வேறு காரணங்களை எடுத்துக்கூறினாலும் மாண்வர்கள் கூறியதைப் போல “இருப்பவர்கள் இருந்திருந்தால் இதெல்லாம் நடத்திருக்காது”தான்.

வித்தியாவினுடைய கொலை தொடர்பான விசாரணைகளே இதுவரை முடிவுக்கு வராத நிலையில், வவுனியாவில் மற்றொரு மாணவி சிதைக்கப்பட்டிருக்கிறாள். வன்புணர்வின் பின்னர்தான் அவள் கொலை செய்யப்பட்டிருக்கிறாள் என்று அவளது உடற்கூற்று மருத்துவ அறிக்கை கூறியிருப்பது தமிழர்களிடம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த செவ்வாய் கிழமை காலை குறித்த மாணவிக்கும் அவரது தாயாருக்கும், இடையில் எற்பட்ட முறுகல் நிலையால் மாணவி பாடசாலைக்கு செல்லாது வீட்டில் தனியாக இருந்துள்ளார். ஆசிரியையாக இருக்கும் சிறுமியின் தாய் நண்பகல் வீட்டிற்கு வந்து பார்த்த போது சிறுமி தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தார். இதை அடுத்து கூச்சலிட்ட தாயார் செய்வதறியாது தவித்து அயலவரின் உதவியுடன் சிறுமியைத் தூக்குக் கயிற்றில் இருந்து இறக்கியபோது உயிர் மிச்சம் இன்றிப் பிரிந்துபோயிருந்தது.

வழமை போன்று சிறுமி தற்கொலை செய்து கொண்டார் என்று நம்பப்பட, அதுவே செய்தியாகப் பரவ ஆரம்பித்தது. ஆனால் சிறுமியின் இறப்புத் தொடர்பில் விசாரணை நடத்திய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சிறுமியின் உடலில் காயங்கள், நகக் கீறல்களைக் கண்டார். சந்தேகங்கொண்டு விரிவான உடற்கூற்றுப் பரிசோதனைக்குப் பரிந்துரைத்தார்.

கடந்த வியாக்கிழமை சிறுமியின் உடற்கூற்று சோதனை அறிக்கை வெளியானபோது வன்புணர்வின் பின்னர் சிறுமி கொல்லப்பட்டாள் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

தகவல் வெளியானதும் வவுனியா மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழர் தாயகமும் அதிர்ந்தது. புங்குடுதீவு வித்தியாவின் கொலைச்சம்பவம் இடம்பெற்று ஒரு வருடம்கூட பூர்தியாகாத நிலையில் மீண்டும் ஒரு பாடசாலைச் சிறுமியின் கொலை அனைவரையும் உலுக்கி எடுத்துள்ளது. சட்டத்தின்பால் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை தகரத் தொர்டங்கியுள்ளது.

கொடூரர்களின் பிடியில் பெண்கள், மாணவிகள் அனுபவிக்கும் பாலியல் இம்சைகள் மேலும் மேலும் அதிகரிப்பதாகவே உள்ளதே தவிர குறைவதற்கான நடவடிக்கைகளைக் காணவில்லை என்று அவர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

ஒரு வருட காலத்தில் புங்குடுதீவு மாணவி வித்தியா, கனகராயன் குளம் மாணவி சரண்யா, கிளிநொச்சி எள்ளுக்காட்டு சிறுமி ஜெரூசா, தற்போது வவுனியா மாணவி போன்றவர்கள் வடக்கில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளார்கள். ஆனால் இந்தக் கொலைகளில் ஒன்றிலாவது விசாரணை முடிந்து குற்றவாளி தண்டிக்கப்படவில்லை. சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்; பொலிஸ் விசாரணை தொடர்கிறது என்பதற்கு மேல் எதுவும் நகரவில்லை.

வித்தியா கொலையின் பின்னர் இத்தகைய சம்பவங்கள் தொடர்பிலான தமிழ்ச் சமூகத்தின் ஒட்டுமொத்தக் கோபம் வெடித்துக் கிளம்பியது. கண்டனங்கள், ஆர்ப்பாட்டங்கள், கடையடைப்புகள், முழு அடைப்பு என்று போராட்டங்கள் உச்சம் பெற்றன. கட்டுமீறிச் சென்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்தின் மீது கல்லெறி நடக்கும் வரைக்கும் இவை தொடர்ந்தன. ஆனால் இவற்றால் கிடைத்த பயன் என்ன? வவுனியா மாணவியின் கொலை எழுப்பி நிற்கும் கேள்வி இதுதான்.



தனிமையில் இருக்கும் சிறுமி, பெற்றோருடைய அரவணைப்பு இல்லாமல் இருக்கும் சிறுவர்கள், தனி வழிபோகும் சிறுவர்களே குற்றவாளிகளின் இலக்குகளாக இருக்கிறார்கள் என்பது நடைபெறும் சம்பவங்களைத் தொகுத்துப் பார்க்கையில் புரிகிறது.

அப்படியானால் பெண்கள் தனித்திருப்பதும் தனித்து நடப்பதும் இங்கு பாதுகாப்பானதில்லை என்று ஆகிவிட்டதா? அரபு நாடுகளைப்போன்று பெண்கள் வெளியே செல்வதென்றால் குடும்பத்து ஆண்களின் துணையில்லாமல் போர்கமுடியாது என்கிற எழுதப்படாத சட்டம் இத்தகைய சம்ப வங்களால் ஏற்பட்டுவிடப்போகிறதோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது.

சட்டத்தின் காவலர்களும் நீதியின் காவலர்களும் தங்கள் நடவடிக்கைகளை விரைவுபடுத்தாத வரைக்கும் குற்றவாளிகளுக்கு அச்சம் ஏற்படப்போவதில்லை. குற்றங்களும் குறையப் போவதில்லை. இன்னும் இன்னும் சிறுமிகள் சிதைக்கப்பட்டுக் கொண்டே இருக்கப்போகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோதுமை விளைந்த தீவு; இப்போது கேட்பாரற்றுக் கிடக்கிறது!

■ லக்ஸ்மன்

ஆங்கிலேயர் காலம் வரை நெடுந்தீவின் வளங்கள் நன்றாகவே இருந்துள்ளன. அதாவது எட்வேட் நோளன் காலம் வரை. அந்தக் காலங்களில் நல்ல தண்ணீர் பிரதேசமாகவும் மண் வளம் கொண்ட பூமியாகவும் தீவு இருந்ததால் மக்கள் நிறைந்த உழைப்பாளிகளாகவே வாழ்ந்துள்ளனர்.

நெல் மட்டுமன்றி சாமை, மொண்டி, தினை, குரக்கன், வரகு என்று உபதானியச் செய்கைகளும் சிறப்பாகவே இடம்பெற்றிருந்தன. இந்த உபதானியங்கள் இல்லாத வீடுகளே அருமை என்று கொள்ளும் அளவுக்கு அவை உற்பத்தி செய்யப்பட்டன. உழவுக்கு மக்கள் முன்னுரிமை வழங்கியிருந்தனர். இலங்கையில் முதன்முதலில் கோதுமை விளைந்த ஒரு நிலமாக இருந்தது நெடுந்தீவே என்பது வரலாற்றுத் தெளிவு.

சாமையைச் சாமி என்றும் கொள்வதுண்டு. இது விஷக்கடிக்கு சிறந்தது என்பதால் அந்த நாளில் விஷம் கடித்தவர்களுக்குச் சாமிக் கஞ்சி கொடுப்பதும் வழமையாக இருந்துள்ளது.

நெல் உற்பத்தி இருந்தபோதும் குரக்கன், வரகு போன்றவற்றையே பெரும்பாலான மக்கள் உணவாகப் பயன்படுத்தி வந்தனர். பண்டைய மக்கள் பணக்கார வியாதிகளில் சிக்கிக் கொள்ளாதிருந்ததற்கு இந்த உபதானியங்களின் பயன்பாடே காரணமாகும். "சாமி, வரகென்று சத்தான உணவுக்கு மூலிவகையென்று முத்தான இலைகளுண்டு. வா என்று கேட்டு வருவானோ எமன் எம்முன்?" என்று தமது நோய் அணுகாத திடகாத்திரம் கொண்ட மார்பில் தட்டிக்கொள்ளும் முதியவர்களைக் காணப்பெருமையாக இருக்கும் என்று முன்னோர்கள் சொல்வதுண்டு.

இடைக்காலங்களில் இந்த உபதானியச் செய்கையில் மக்கள் பெரியளவில் அக்கறை காண்பிக்காதது மிகப்பெரிய தவறாகும். அந்தத் தவறுகளே இன்று உள்ள த்லைமுறையினர் சாமை, மொண்டி, தினை போன்றவற்றை அறிந்திருக்காமைக்குக் காரணமாகும். 1954இல் மக்கள் குடியேற்றத் திட்டங்களுக்குச் செல்வதில் அக்கறை காண்பித்ததில் விவசாயத்தில் ஈடுபட்டுவந்த ஏராளம் குடும்பங்கள் வன்னிப் பகுதிகளுக்குச் சென்று விட்டன.

பின்னாளில் ஏற்பட்ட இயற்கையின் மாறுதல்களால் நன்நீர் பிரதேசமாக விளங்கிய நெடுந்தீவு தனது வளங்களை முழுமையாக இழந்துள்ளது. நெடுந்தீவின் நிர்வாகியாகவும் சிறந்த மண்வள ஆய்வாளனுமான எட்வேட் நோளனின் அதியுச்ச ரசிப்புத் தன்மையே நெடுந்தீவின் இயற்கை வனப்புக்கள் சீர்குலையக் காரணமாகும்.


நெடுந்தீவில்பருத்திச்செய்கைமிகவும்அமோகமாகஇடம்பெற்றிருந்தது? நெடுந்தீவில் இருந்து பருத்திப் பஞ்சுகள் ஊர்காவற்றுறைக்குக் கொண்டுவரப்பட்டு, அங்கிருந்து பொதி செய்யப்பட்டு இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. ஊர்காவற்றுறையில் பருத்தியடைப்பு என்று ஓர் இடம் உள்ளது. அதற்கு இந்தப் பெயர் ஏற்பட நெடுந்தீவில் இருந்து கொண்டுவரப்பட்ட பருத்திப் பஞ்சுகள் இந்த இடத்தில் வைத்துப் பொதி செய்யப்பட்டதே காரணம் என முன்னவர்கள் கூறுவர். 1942ஆம் ஆண்டு வரை ஆங்காங்கே சில பருத்திச் செடிகள் காணப்பட்டாலும், இப்போது அவையும் முற்றாக அழிந்து விட்டன. பருத்திச் செடியின் அழிவுக்குக் குதிரை வளர்ப்பே காரணம் எனவும் கூறப்படுகின்றது.

இன்றைய இளந்தலைமுறையினருக்கு இந்தத் தீவகம் இருந்த உன்னத நிலை குறித்துப் போதிய அளவு தெரிந்ததாக இல்லை. சாமை, மொண்டி, தினை போன்றவற்றை அவர்கள் கேள்விப் பட்டிருக்கலாமே தவிர நேரில் பார்த்ததுகூட இல்லை. அந்த உணவுப் பொருள்களும் அவற்றின் பயன்பாடுகளும் இளந்தலைமுறைக்கு எட்டாதனவாகி விட்டன. எதிர்காலத்திலுங்கூட இந்த உபதானியங்களை உற்பத்தி செய்யும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைக்குமா என்பது கேள்விக்குரியதே.

நெடுந்தீவில் ஒரு காலத்தில் நெல் மற்றும் உபதானியங்கள் செழித்துக் காணப்பட்டதற்கான அடையாளங்களாக சில வயல் நிலங்களே-இன்றுள்ளன. பெரும்பாலான பகுதிகளில் மண்வளம் மங்கிவிட்டது. எனினும்கூட இரண்டொருவர் நெல் உற்பத்தியில் ஆர்வம் காட்டுவதும் உண்டு.

வரகு உற்பத்தியும்கூட இப்போது அருகிக் கொண்டது.

நிலம் உவர் தன்மை கொண்டதாக மாறியுள்ளதால், இந்த நிலத்தில் உற்பத்தி செய்வதால் பயன்பெறக்கூடிய பயிரினங்கள் குறித்த ஆய்வுகள் தேவை. வளம் கொழித்த பூமி வறண்ட பிரதேசமாக நோளன் வெட்டிய கால்வாய்களும் 1814 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற கடும்புயலுமே காரணம். குதிரைகள் மட்டுமன்றி வறட்சியும் தான் நோளனின் அடையாளமாகி விட்டன.



# "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

■ வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா

கடவுளும் சமயமும் இல்லாவிட்டால் மனிதரின் வாழ்க்கை பயனற்றதாகும். வாழ்க்கையில் எந்தவித உயர்ந்த நோக்கமும் இல்லாமற்போகும். இதயத்தில் சமயப்பற்று இல்லாமல் மூளையை மட்டும் விருத்தி செய்து கொள்வது அநாகரிகமான மூடிமறைத்த மிருகத்தனம். மனிதனை மனிதனாக மதித்தல், பிறரிடத்தில்அன்புசெலுத்துதல்,ஏற்றத்தாழ்வின்றி எல்லோரும் என்ற மனப்பக்குவம் அடைதல் என்பதே மனித நேயம்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே"
–திருமூலர்

"தொன்மையவாம் எனும் எவையும் நன்றாக
இன்று தோன்றிய குரல் எனும் எவையும்
தீதாகா"
– உமாபதி சிவாச்சாரியார்

எனவே பழைமையுடன் புதியன புகுத்தி எம்மை வழி நடத்தும் சைவநெறி மேன்மை கொள்கிறது. எம்மிடையே சைவநீதி விளங்க, பெற்றோர், ஆலயம், குருக்கள், அடியார், இசைவல்லுநர் உரியன செய்து வருவது சிறப்பு.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"
'மாதா, பிதா, குரு, தெய்வம்"
"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"
"ஆலயம் இல்லாவூரில் குடியிருக்க வேண்டாம்"

பெற்றோர் வழிகாட்டலில் ஆலய வழிபாடு ஆரம்பம். ஆலயங்கள் தனிப்பட்ட, பொதுப்பட நிர்வாகங்களுடன் இயங்கி வருகின்றன. பூசக குருக்கள் தனிப்பட்ட ரீதியாகவும், பொதுப்பட கலந்தும் கடமையாற்றி வருவது தெளிவு. ஆலய பராமரிப்புகளும், திருப்பணிகளும் சிக்கல் நிறைந்தவை. நிதி பற்றாக்குறைகளையே பிரச்சினை. ஏதோ விதமாகச் சமாளித்து உரியன செய்து வருவது சிறப்பு. அடியார் சகலரும் இயன்ற தொண்டுகளை ஆற்றி சைவப்பாரம்பரியம் செம்மை பெற முன்னிற்பது சிறப்பு. அடுத்து இசைவல்லுநர் சேவையும் மிகவும் அவசியம்.

"வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத்துறை விளங்க"
"தரணி மேற் சைவமுடன் அருமறையின்
துறை விளங்க"
"சைவ முதல் வைதீகமும் தழைத்தோங்க"

ஆசை நீக்கி, அன்பு சேர்த்தி இறை வணக்கம் செய்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும் 19

# வாக்குரிமை என்ற மக்கள்ஆயுதம்

ரம்யன்

இன்றைய உலகில் மக்களின் குறிப்பாக இளம் சமுதாயத்தினரின் அறிவு வளர்ச்சிக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் செய்திப் பத்திரிகைகள் மாபெரும் பங்குபணி ஆற்றிவருகின்றன என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது. மனிதர்கள் பேச்சு மற்றும் உண்மையைத் தெரிந்துகொள்ளும் உரிமையையும் நிலைநாட்டிக் கொள்ள அளவில்லாத பாடுபட்டு வந்தார்கள் என்பதை எல்லாம் வெளிப்படுத்துவதாகப் பத்திரிகைத் துறையின் வரலாறு எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது.

பொருள்களின் உற்பத்தி, அவைகளின் பயன்பாடு, மற்றும் விலைகள் போன்ற விவரங்களை பத்திரிகைகள் வெளியிடுவதால் பொருளாதார மேம்பாட்டுக்கும் அவை பெரும் பணி ஆற்றுகின்றன. உலகில் ஆங்காங்கே என்னென்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை மட்டுமல்ல சந்தைகளில் என்னென்ன பொருள்கள் என்னென்ன விலைகளில் விற்கப்படுகின்றன என்பதையும் பத்திரிகைகளே மக்களுக்கு வழங்குகின்றன.

பத்திரிகைகளில் ஒரு விளம்பரம் வெளிவருகிறது என்றால் அதனால் யாருக்கு இலாபம் என்று சிலர் கேட்கிறார்கள். மூன்று விதமான தரப்பினர் இதனால் பயனடைகிறார்கள். முதலில் ஒரு விளம்பரதாரர் தாம் விற்க விருக்கும் பொருள் பற்றிய விவரங்களை விளம்பரம் செய்வதன் மூலம் அந்தப் பொருள் தம்மிடம் கிடைக்கும் என்பதைப் பொதுமக்களுக்கு மிக இலகுவாக வெளிப்படுத்திக் கொள்கின்றார். பத்திரிகை செல்லும் மூலை முடுக்கெல்லாம் அந்தப் பொருள் பற்றிய விவரம் பரப்புரை ஆகின்றது. இது அவர் அடையும் பயன்பாடு. இரண்டாவதாகப் பொருள் நுகர்வோரைக் குறிப்பிட வேண்டும். அதாவது ஒரு பொருளைத் தாம் எங்கே வாங்கலாம்? அதன் தராதரம் என்ன? என்பதை எல்லாம் ஒருவர் கடைகடையாக ஏறி இறங்கித் தெரிந்து கொள்வதைவிட பத்திரிகையில் தமக்கு வேண்டிய விவரங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். மூன்றாவதாக விளம்பரத்தை வெளியிடும் பத்திரிகை நிறுவனம் விளம்பரங்களை வெளி யிடுவதன் மூலம் அந்த நிறுவனம் எதிர்நோக்கும் பல் வேறு செலவினங்களுக்கான வருமானம் கிடைக்கின்றது.




ஆகவே பத்திரிகைகளின் பணி செய்திகளை வெளியிடுவதில் மட்டும் தங்கியிருக்கவில்லை. பொதுமக்கள் தரப்பில் நின்று அவர்களின் குரலாக அது ஓங்கி ஒலிப் பதைக் காணலாம்.

நாட்டில் பொறுப்புள்ள பதவிகளில் இருப்பவர்கள் ஊழல்களிலும் பொதுமக்கள் சொத்துக்களைச் சூறையாடுவதிலும் ஈடுபடுவதைக் கண்டு மக்கள் ஒன்றும் செய்யமுடியாமல் தவிக்கும் போது அவர்கள் சார்பில் பத்திரி கைகளே குரல் எழுப்புகின்றன. இல்லை என்றால் எத்தனையோ அக்கிரமமான சம்பவங்கள் ஆட்சியாளர்களால் மூடிமறைக்கப்பட்டு விடக்கூடும்.

இலங்கையில் முன்பு பதவியில் இருந்த ஆட்சியாளர்கள் ஊடகங்களின் குரல் வளைகளை நெரித்து மௌனமாக்கியிருந்தார்கள். பல ஊடகங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டார்கள், கொலை செய்யப்பட்டார்கள். அடாவடித் தனங்களை ஏன் என்றும் எவராலும் கேட்கமுடியாமல் இருந்தது. கேள்வி கேட்பவர்கள் வெள்ளைவான்களால் கடத்தப்பட்டார்கள். அரசு சார்ந்த ஊடகங்கள் அரசின் ஊதுகுழல்களாகச் செயற்பட்டன. அரசுசாராத ஊடகங்கள் பல விடயங்களைக் கண்டும் காணாமல் மௌனமாய் இருக்க வேண்டிய நிலை இருந்தது. எதிர்த்தவர்கள் பலர் அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டார்கள். இன்னும் சிலர் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். ஜனநாயக முறையில் ஆட்சி நடப்பதாகக் கூறப்படும் எந்த நாட்டிலும் இவ்வாறான ஒரு நிலைமை இருக்க முடியாது.

உண்மையில் பார்த்தால் கடந்த காலத்தில் ஆட்சியாளரும் அவரோடு இணைந்து செயற் பட்ட அமைச்சர்களும் மட்டுமல்லாது நாடாளுமன்ற உறுப்பினர்களும்கூட மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் களாகவே இருந்தார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஆட்சி புரிந்ததன் பின்னர் மீண்டும் மக்களை எதிர்கொண்டு அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றாக வேண்டும் என்பதை அவர்கள் அறிந்தே இருந்தார்கள். இருந்தபோதிலும் ஜனநாயக விழுமியங்கள் அனைத்தையுமே உதாசீனம் செய்துவிட்டு எதேச்சதிகாரமாக நடந்துகொள்வதற்கு அவர்களுக்கு எவ்வாறு துணிச்சல் ஏற்பட்டது என்பதற்கு மூன்று முக்கிய காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

> பத்திரிகைகளில் ஒரு விளம்பரம் வெளி வருகிறது என்றால் அதனால் யாருக்கு இலாபம் என்று சிலர் கேட்கிறார்கள். மூன்று விதமான தரப்பினர் இதனால் பயனடைகிறார்கள். முதலில் ஒரு விளம்பரதாரர் தாம் விற்க விருக்கும் பொருள் பற்றிய விவரங் களை விளம்பரம் செய்வதன் மூலம் அந்தப் பொருள் தம் மிடம் கிடைக்கும் என்பதைப் பொதுமக்களுக்கு மிக இலகுவாக வெளிப்படுத்திக் கொள் கின்றார்.

முதலாவது, இலங்கை அரசமைப்பின் மூலம் ஜனாதிபதி என்பவருக்கு நிறைவேற்று அதிகாரங்கள் அனைத்துமே வழங்கப்பட்டிருந்தன. அதனால் நாட்டில் காணப்பட்ட ஜனநாயக நிறுவனங்கள் அனைத்திலுமே ஜனாதிபதியானவர் தலையிடக்கூடியதாக இருந்தது. அரசின் சகல துறைகளிலும் குறிப்பாக நீதித்துறை மற்றும் பொலிஸ், இராணுவம் போன்ற பிரிவுகளில் தனது ஆள்களையும், ஆதரவாளர்களையும் நியமித்துக் கொள்ளமுடிந்தது. இந்தவித நிறைவேற்று அதிகாரங்களுக்கு மேலும் வலுவூட்டிக் கொள்ளும் வகையில் 18ஆவது அரசமைப்புத் திருத்தமும் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது.

பதவியில் இருக்கும் ஜனாதிபதியானவர் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் தேர்தலில் போட்டியிட்டு பதவியில் வீற்றிருக்க வசதி செய்துகொள்ளப்பட்டிருந்தது.

இரண்டாவது விடயம் என்னவென்றால், தனிநாடு ஒன்றை அமைப்பதற்காக ஆயுதம் ஏந்திப் போரிட்டு, இலங்கை அரசுக்குப் பெரிய சவாலாக விளங்கியவர்களும் தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்குச் சிம்மசொப்பனமாகக் காட்சி அளித்தவர்களுமான தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டியதன் மூலம் சிங்கள மக்களின் மத்தியில் மாபெரும் வீரராகத் தன்னை உயர்த்திக் கொண்டதன் மூலம் மகிந்த ராஜபக்ச இனிவரும் காலங்களில் தொடர்ந்து பதவியில் இருப்பார் - அந்த வகையில் சிங்கள அடிமட்ட மக்கள் தம்மைக் கைவிடமாட்டார்கள் என்ற எண்ணம் மேலோங்கி இருந்தது. தேர்தலுக்கு முன்னரான காலகட்டத்தில் தம்மை எதிர்த்துப் போட் டியிடப்போகிறவர் யார் என்ற வகையில் ஏளனமாகக் கேள்வி எழுப்பும் நிலைக்கு அவர் போயிருந்தார். அவருக்கு ஏற்பட்டிருந்த நம்பிக்கையின் உச்சத்தை ஜனாதிபதித் தேர்தலை இரண்டு வருடங்கள் முன்கூட்டியே நடத்தத் துணிந்தமை சுட்டிக்காட்டுகின்றது.

மூன்றாவது காரணம், ஊடகத்துறையின் மீது கடந்த கால ஆட்சித் தலைவர்கள் அளவுக்குமீறிக் கை வைத்தமையாகும். அரசின் அடாவடிப் போக்குகளைத் தட்டிக்கேட்க முயன்ற பல பத்திரிகையாளர்களும் பத்திரிகை நிறுவனங்களும் நசுக்கப்பட்டன.

இவ்வாறு ஊடகங்கள் நசுக்கி ஓரம் கட்டப்பட்டதால் மக்களுக்கு எதிரான அரசின் போக்கு - மற்றும் ஜனநாயகத்துக்கு மாறான செயற்பாடுகள் மூடிமறைக்கப்பட்டன. அரசு சார்பு ஊடகங்களின் கட்டுக்கதைகளையும் உண்மைக்கு மாறான சோடனைக் கதைகளையும் மக்கள் நம்பும்படி செய்யப்பட்டனர். அவ்வாறு மூடி மறைக்கப்பட்ட ஊழல்கள், மோசடிகள், நிர்வாகச் சீர்கேடுகள், இன்னோரன்ன விடயங்கள் இப்போது தினமும் ஊடகங்களில் வந்தபடி இருக்கின்றன. கொலைகள், கொள்ளைகளில் ஈடுபட்டுத் தப்பிக் கொண்டவர்களின் விவரங்கள் தினமும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஒரு விடயத்தை நாம் கவனிக்கக் கூடியதாய் இருக்கின்றது. மக்கள் கரங்களில் வாக்குரிமை என்ற ஆயுதம் இருக்கும்வரை - என்னதான் அதிகாரமிக்க சர்வாதிகாரியாக ஆட்சியாளர் ஒருவர் மாறினாலும் மக்கள் அவருக்குப் பாடம் புகட்டி விடுவார்கள். ஜனநாயகத்தின் மிகப்பெரிய ஒரு பண்பு இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகப்படுத்துகிறோம் - 09

# காதல் கடித மன்னன்



கலாபூசணம் பகிடிப்பரமர்

பெயரைப் பார்த்ததும் இவரைப் பெரியதோர் காதல் மன்னனாகத்தான் நினைத் திருப்பீர்கள்! அதை ஓரளவு ஏற்கக் கூடியதாக இருந்தாலும், முற்றுமுழு தாக ஏற்கவும் முடியாது. ஏனெனில் இவர் காதல் கடிதங்களை எழுதுவது தன்னுடைய காதலிகளுக்கு அல்ல; உங்களுக்காகவே!

அதாவது உங்களில் ஒருவர் ஒரு பெண்ணைக் காதலிக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். உங்களுக்கு தமிழில் அழகாக வர்ணனைகளுடன் காதல் கடிதத்தை எழுதி உங்களின் காதலைத் தெரிவிக்க இயலவில்லை. இருந்தாலும் அவளுக்கு ஒரு கடிதம் அல்ல ஒரு நூறு கடிதங்களை எழுத உங்கள் ஆசையையும் முந்திக் கொண்டு எண்ணங்கள் புட்டுக் கொண்டு வருகின்றன. அந்தவேளை, உங்களுக்குக் கைகொடுப்பது இந்தக் கடித மன்னனின் வேலை. காதல் புரியும் மன்னர்களுக்குக் கைக்கூலி வாங்கிக் காதல் கடிதங்கள் எழுதுவதென்றால் இவருக்குக் கைவந்த கலை; இதனால் உங்களைப் பார்க்கிலும் அவர் பெரிய காதல் கடித மன்னனாகத் திகழ்கிறார். எவ்விதம்? நீங்கள் ஒரு பெண்ணைத் தானே காதலிக்கிறீர்கள்? ஆனால் நீங்கள் காதலிக்கும் அத்தனை பெண்களையும் காதல் கடிதம் எழுதுவதால் தொழிலடிப்படையில் அவரல்லவா காதல் செய்கிறார். உங்களுக்குக் காதல் கடிதம் எழுதுகையில் உங்கள் நிலையில் மானசீகமாய் இருந்தே காதல் கடிதத்தை எழுதவும் முடியும்.

அதாவது எழுத்தாளர்களைப் போன்று. எழுத்தாளர்கள் பிச்சைக்காரனையோ அல்லது தோட்டிப் பாரத்திரத்தையோ படைக்கும் போதில் அவன் அப்பிச்சைக்காரனாகவோ அன்றித் தோட்டியாகவோ மாறி விடுகிறானாம். அதனை எழுத்தாளர்களே பகிரங்கமாய் ஒப்புக்கொண்டுள்ளனர். அந்த நிலையில் காதல் கடித மன்னனும் உங்களது காதலிகளுக்கும் காதலனாகவே விளங்குகிறார் என்பதை ஒப்புக் கொண்டே ஆகவேண்டி இருக்கிறதல்லவா? இவரும் கூட ஓர் எழுத்தாளரே. இந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்னால் இவர் இலக்கிய உலகுக்கும் அளப்பரிய சேவைகள் செய்துள்ளார். அப்படிப் பட்டவர் ஏன் இப்படி மாறினார் எனக் கேட்கிறீர்களா? இலக்கியம் படைப்பவர்களுக்கு ஈழத்தைப் பொறுத்தவரை ஒழுங்காக வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கான வருமானம் வருவதில்லை. ஆகவே தமது இலக்கியப் பணியையும் சேர்த்து இந்தப் புனிதத்துறையில் திருப்பிக்கொண்டார் என்று காதல் கடித மன்னன் தெரிவித்திருந்தார்.

இவரால் எழுதி வழங்கப்படுகின்ற காதல் கடிதங்கள் காதலருலகில் மிகப் பிரசித்தி வாய்ந்தவை. அழகான எழுத்துக்களில் வண்ணத் தமிழெடுத்து கடிதம் வரைந்து கொடுத்தார் என்றால் அடுத்த நாளே காதலனின் வீட்டுவாசலில் வந்து நிற்பாள் காதலி. இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமாகக் காதல் கடிதங்களை எழுதிக்கொடுத்து இரண்டாயிரத்துக்கும் அதிக இதயங்களை ஒன்றிணைத்து ஓராயிரத்துக்கும் அதிகமான திருமணங்களை ஒப்பேற்றி சொர்க்கத்துச் சாதனையையே நிலை நாட்டி இருக்கும் பெருமை இவரைச் சார்ந்தது.

ஆனால் இவருக்குத் தீராத கவலை ஒன்றுண்டு. என்னவென்றால் தொழிலுக்காக எழுதிக்கொடுக்கும் கடிதங்களைப் படித்து அதனால் மயங்கும் பெண்கள் அந்தந்தக் கடிதங்களை நேரில் வழங்குபவர்களைப் பற்றிப் படர்கின்றனர். தானே எழுதித் தன்னால் கொடுக்கும் கடிதங்களைப் படிக்கும் பெண்களோ அவற்றை வேப்பங்காயென எடுத்து வெட்டிக் காயாக வீசி எறிகிறார்களாம்.

இது ஏனென்பதுதான் அவருக்கு இன்னமும் புரியாத புதிராக இருக்கிறது. என்ன செய்வது! காதல் கடித மன்னனின் கைராசிஅப்படி அமைந்து விட்டது! இந்த நிலைமை அவருக்கு தாங்கொணாக் கவலையை மட்டுமன்றி அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும், சிரிப்பையும் வாழ்க்கையில் வெறுப்பையும் கொடுத்து சிலவேளைகளில் நவரச மனிதனாக ஆக்கிவிடுவதுமுண்டு.

ஒரு சமயம் இவர் காதலித்த பெண்ணுக்குப் பன்னிரெண்டு பக்கங்களில் காதல் கடிதம் வரைந்தார். எனினும் அவளிடம் அந்தக் கடிதத்தை நேரில் கொடுக்கும் அளவுக்கு இவருக்குத் துணிவு வரவில்லை. ஆதலால் அந்தப் பெண்ணுக்கு நன்கு பழக்கமான ஒரு பையனை அந்த வேலைக்கு அமர்த்திக் கொண்டார். அவனும் கடிதங்களைக் கொணர்ந்து கொடுப்பான். இவரும் கடிதங்களைப் பக்கம் பக்கமாக எழுதி அவனிடம் கொடுத்துக்கொண்டே இருந்தார். முடிவில் ஒருநாள் வினோதமாகக் கற்பனை செய்தது உண்மையாகவே நடந்தேறி விட்டது.

அதாவது கடிதங்களை வரைந்து அவனிடம் கொடுப்பதாலும், அவனே காதலியால் வழங்கப்படுகின்ற காதல் கடிதங்களைக் கொணர்ந்து தருவதாலும் தனக்குக் காதலியாக அவனே இருக்கிறான் என்றும் எப்பொழுதோ கற்பனையில் தோன்றியது நிஜமாகவே நடைபெற்றும் வந்துள்ளது.

ஆமாம்! காதல் கடித மன்னன் வரைந்த தீந்தமிழ் காதல் கடிதங்கள் அவரது காதலியைப் போய்ச் சேரவில்லை. அந்தக் கடிதங்களை அந்தச் சிறுவனே வாசித்து விட்டு தானே காதல் கடித மன்னனது காதலியாக மாறி அவருக்கு வரிக்கு வரி கடிதங்களை வரைந்து கொடுத்தும் வந்திருந்தான்.

எட்டாத முந்திரிகைக் கனி என்க. அமைந்து போயுள்ள நிலையைச் சிந்தித்ததால் ஆச்சரியமும் சிரிப்பும், அதிர்ச்சியும் கவலையும் அவருக்குத் தோன்றி வீதிகளில் அவரை நவரச நாடகங்கள் போடவைத் துள்ளதும் விந்தையே. அதுபோலவே அவருக்கும் மறைந்து இருந்து கொண்டு பெண்ணைப் போலவே காதல் கடிதங்கள் எழுதுவதற்கும் ஒரு சிறுவன் இருந்துள்ளான் என்றால் அவருக்கு மட்டுமன்றி எங்களையும் வந்து தலைச்சுற்று ஆட்கொள்ளப் பார்க்கிறதல்லவா? அவர்பாடு அப்படிப் போகிறது. உங்களுக்கு பேச்சாளர் பேரம்பலம் என்பவரைத் தெரியாதா? அடுத்த வாரம் அவரைச் சந்தித்த விபரங்களைப் பாருங்கள்.




## ஒன்றும் சொல்லிக்கொள்ளும்படி இல்லை

கடும் பெட்ரோல் தட்டுப்பாடு உள்ளிட்ட பெரும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்திக்கும் 2020இல் கதை நடக்கிறது. நிழலுலகில் ஓஹோவென்று ராஜ்ஜியம் நடத்தும் பெரிய தாதாக்களும் இதனால் தொழில் மந்த நிலையைச் சந்திக்கிறார்கள். தெய்வா (ஆர்.அமரேந்திரன்) என்ற போதைப்பொருள் கடத்தல் மன்னன், தன் வசம் கடைசிக் கையிருப்பாகப் பல கோடி மதிப்புக்கொண்ட கோகெய்ன் போதைப் பொருளை வைத்திருக்கிறான். அதை விற்க வியாபாரமும் பேசி முடிக்கிறான்.

போதைப் பொருளை ஒரு காரில் நூதனமான முறையில் ஒளித்துவைக்கவும் அதை ஹைதராபாத்தில் நடக்கும் பழம் பெரும் கார்களின் பேரணிக்கு வரும் சீனனிடம் கொடுத்து விட்டுப் பணத்தைப் பெற்றுவரவும் திட்டமிடுகி றான். இதற்காக நாஞ்சில் சிவாஜி (ஜில்-சித்தார்த்), ஜங்கு லிங்கம் (ஜங் - அவினாஷ் ரகுதேவன்), ஜாகுவார் ஜகன் (ஜக் - சனந்த் ரெட்டி) என மூன்று புதிய இளைஞர்களைத் தேர்ந்தெடுக்கிறான். ஜில், ஜங், ஜக்கின் பயணம் வெற்றிகரமாக முடிந்ததா என்பதுதான் கதை. போதைப்பொருளை ஒளித்துவைக்கும் ஐடியாவில் தெறிக்க ஆரம்பிக்கிறது அறிமுக இயக்குநர் தீரஜ் வைத்தியின் வேதியல் மூளை. சூதாட்ட விடுதியில் தாதாவாக இருக்கும் அப்பா நாசருடன் கூட்டணி அமைத்து, ஆர்.ஜே. பாலாஜியை ஒன்று மில்லாமலாக்கும் சித்தார்த்தின் அறிமுகம், எதிர்பார்ப்பைக் கூட்டுகிறது. திரைப்படப்பிடிப்பில் சிக்கி, கார் நொறுங்குவது வரையிலான முதல் பாதித் திரைக்கதையில் சிக்கலோ விக்கலோ இல்லை. ஏகப்பட்ட திருப்பங்களும் பின்னணிக் கதைகளும் கொண்ட இரண்டாம் பாதியில்தான் படம் மொத்த மாகத் தடுமாறுகிறது.

தீரஜ் வைத்தியின் அணுகுமுறை கிட்டத்தட்ட எல்லாக் கதாபாத்திரங்களையும் கேலிச்சித்திரங்களாக மாற்றுகிறது. பேசிப் பேசியே கவரும் சித்தார்த் (பல சமயங்களில் சித்தார்த் பேசுவதை புரிந்துகொள்ள தனிக் குறிப்புகள் தேவைப்படலாம்), சனத், அவினாஷ் ரகுதேவனும் படத்துக்கு பலம். அதேநேரம், தெய்வா, அவனுடைய காரியதரிசி, அந்தச் சாரதி, மருந்தாளர், ரோலக்ஸ் ராவுத்தர் என்று மற்ற பல கதாபாத்திரங்களும் தனித்துத் தெரிகிறார்கள். இத்தனை பேருக்குமே திரைக்கதையில் போதிய இடமிருக்கிறது! ஒரே ஒரு காட்சியில் வந்து போகும் நாசர், ஆர்.ஜே.பாலாஜி ஆகியோரது பாத்திரங்களும் நினைவில் தங்குகின்றன.

ஆபிரிக்க திரைப் படத்தைப் பற்றிய காட்சியும், கதா பிரசங்கப் பாணியில் ஒருவர் பேசுவதும் திரையரங்கில் ஆரவாரத்தை ஏற்படுத்துகிறது. கதைக் களம் 2020இல் அமைந்ததற்கான பெரிய காரணம் எதையும் காண முடியவில்லை.


வழக்கமான சித்தார்த் துணிச்சல்படி, நாயகனைச் சுற்றியே பெரும்பாலான காட்சிகள் நகராமல்... கதையின் போக்கில் நாயகன் இணைந்துகொள்ளும் படம்தான் இதுவும். கதைக்குத் தேவையில்லையெனில் நாயகியைக்கூடத் தியாகம் செய்யும் துணிச்சல் இயக்குநருக்கும் இருக்கிறது. ஆனால் படம் முழுவதும் பெண்கள், பாலியல் தொடர்பான வசனங்களுக்குக் குறைவு இல்லை.

ஒளிப்பதிவாளர் ஸ்ரேயா கிருஷ்ணா, கலை இயக்குநர் சிவசங்கர் ஆகிய இருவரும் கொண்டாட்டமான பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். விசால் சந்திரசேகரின் இசையில் பாடல்களும் பின்னணி இசையும் புது வண்ணம். கோடிக் கணக்கான மதிப்புள்ள சரக்கை வைத்திருக்கும் காரை, யார் வேண்டுமானாலும் வந்து எடுத்துக்கொண்டு போகும் விதத்திலா நிறுத்திவிட்டுப் போவார்கள்? இதுபோன்ற கேள்விகள் ஒருபுறம் இருக்க, ஒரு கட்டத்துக்கு மேல் சம்பவங்கள் திரும்பத் திரும்ப வருவதுபோன்ற தோற்றம் ஏற்படுமளவு திரைக்கதை ஒரு வட்டத்துக்குள் சிக்கிக்கொள்கிறது.

ஒவ்வொரு பாத்திரத்தின் அடையாளத்தையும் அட்டகாசமாகச் செதுக்கியும், பிற்பாதியை விறுவிறுப்பாக நகர்த்துவதில் தோற்ற இயக்குநர் தடுமாறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணுரிமை



வரலாற்றில் வீதிகளிலிருந்து, நடைமுறை வாழ்வு வரைக்கும் பெண் சந்திக்கும் பிரச்சினைகள் அனைத்தின் தோற்றுவாயாக இருப்பது குடும்பம் என்னும் அமைப்புதான்.

பெண்கள் அதிகாலை தூக்கம் துறந்து பல தலைமுறைகளாகிவிட்டது. கிராமமென்றால் அதிகாலையில் எழுந்து வாசல் தெளித்து, வீட்டு முற்றம் பெருக்கி, கோலம் போட்டு, பாத்திரம் விளக்கி, மாட்டுக் கொட்டகை கூட்டி, சாணம் அள்ளி எருக்குப்பையில் போட்டு, குடிக்க நல்ல தண்ணீரும், புழங்க உப்புத்தண்ணீரும் எடுத்து வைத்து, பிள்ளை மற்றும் க்ணவனுக்கு தேநீர் போட்டுக் கொடுத்து... அவள் நிமிரும்போது காலை சாப்பாட்டு நேரம் வந்து நிற்கும். அப்போதும் குடும்பத்தினரின் பசியாற்றிய பின்னரே தனது வயிற்றைப் பற்றி சிந்திக்கிறாள்.

நகரமென்றால் மேற்சொன்ன வேலைகளில் பெரும்பாலானவையோடு, பிள்ளைகளைப் பாடசாலைக்கும் கணவனை அலுவலகத்துக்கும் அனுப்பி வைக்க வேண்டிய கூடுதல் பொறுப்பும் சேர்ந்துகொள்கிறது. அவர்களுக்குண்டான காலை, மதிய உணவைத் தயார் செய்துகொடுத்து விட்டு நிமிரும்போது அடுத்தடுத்து செய்ய வேண்டிய வேலைகள் ஏதோ ஒன்று குடும்பத்தில் காத்திருக்கிறது. தன்னைப் பற்றி சிந்திக்க விடாமல், எப்போதும் குடும்பத்தின் நலன் நோக்கியே சிந்திக்கும் இயந்திரமாகப் பெண்ணை மாற்றி வைத்திருக்கிறோம்.

வீட்டில் குடும்பத்தோடு அமர்ந்து உணவு உண்ணுகிறோம். எல்லோருக்கும் பரிமாறி விட்டு தானும் அமர்ந்து சாப்பிடுகிறாள் அம்மா. சாப்பிட்ட பிறகு தகப்பனும், மகனும் சாப்பிட்ட தட்டை அப்படியே வைத்துவிட்டுச் சென்று விடுகின்றனர். அம்மாவும், மகளும் அனைத்து எச்சில் தட்டுகளையும் எடுத்து உள்ளே வைக்கின்றனர்.

இவை அனைத்தையும் நாம் இயல்பென ஏற்றுக்கொள்கிறோம். பெண்ணையும் அப்படியே நம்ப வைத்திருக்கிறோம். இயல்பை மீறும் பெண்களை திமிர் பிடித்தவளென்கிறோம். நிலவி வரும் நியதிகளை மீறி ஒரு பெண், இயல்பான தன்னுணர்வோடு ஒரு முடிவை எடுக்கும்போது, அது குறித்து அவளைக் குற்றவுணர்வடையச் செய்யும் விதமாகவே சுற்றத்தின் நடவடிக்கைகள் உள்ளன.

இன்னென்ன வேலைகள் பெண்ணுக்கானவை. அதை செவ்வனே செய்து முடிக்கவில்லையெனில் நான் குற்றம் செய்தவளாகிறேன்.. என்று பெண்ணையே உணரவைப் பதில்தான் சூது ஒளிந்திருக்கிறது.

இந்தக் கட்டுப்பாடுகளை அடுத்தடுத்த தலைமுறைக்கு கற்றுத்தரவும் பெண்களையே பழக்கி வைத்திருக்கிறோம். வீட்டுக்குவரும் விருந்தாளிகளிடம் ஆண் பிள்ளைகள் எப்படி நடந்துகொள்ள வேண்டும், பெண் பிள்ளைகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நீதி போதனை வகுப்புகள் எடுக்கப்படுகின்றன. பத்து, பன்னிரண்டு வயதில் ஆண் பிள்ளை கள் கவலைகளற்றுவிளையாடும்போது, பெண் பிள்ளைகள், சின்னச் சின்ன வீட்டு வேலைகளுக்குப் பழக்கப்படுகின்றனர்.

உடையணிவது, உண்ணுவது, எப்படி உட்காருவது, என்ன விதமாக அழு வது என்று அனைத்துக்கும் பெண்ணுக்கென்று தனியான முன் தீர்மானங்களை வைத்திருக்கிறது குடும்பம்.

அவள் எப்போது குழந்தைப் பெற்றுக் கொள்வது என்பதை தீர்மானிப்பதும் குடும்பம் தான். நஞ்சை, புஞ்சை என்பவை எப்படி அசையா சொத்துக்களோ, அது போல பெண் என்பவள் குடும்பத்தின் அசையும் சொத்து.. அவ்வளவே. ஆனாலும், அன்பு, பாசம், கருணை, கடமை, பொறுப்பு என்றகயிறுகளால்பெண்ணை, குடும்பத்தோடு பலமாக இறுக்கி வைத்திருக்கிறோம்.

இது காதலின் காலமென்று சிலாகிக்கிறோம். இருந்தாலும் சமூகத்தில் பெற்றோர் பார்த்து வைக்கும் ஏற்பாட்டு திருமணங்களே இன்றளவும் அதிகம் நடக்கின்றன. அத்தகைய ஏற்பாட்டுத் திருமணங்களில், தனக்கு வரப்போகும் மனைவி எப்படிப்பட்ட புறஅக அழ குள்ளவளாக இருக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பது ஆண்தான். இதை, பெண்ணின் தரப்பில் அவளது பெற்றோரே தீர்மானிக்கின்றனர்.

மண வீடுகளில் பெண்களைப் பார்க்கும்போதெல்லாம் நிறைய கேள்விகள் எனக்குள் துடிக்கும். அந்தப்பெண் இதுவரை, தான் வளர்ந்த வீட்டை, பழகிய உறவை, சொந்தங்களை, நண் ர்களை, ஓடித்திரிந்த மண்ணை, மாற்றிக்கொள்ள வேண்டும். குல தெய்வத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். இனி அவளுக்கான அடையாளம் அவளது பெற்றோர் இல்லை.. கணவன்தான்.

ஒரு நாள் இடம்மாறி படுத்தால் தூக்கம் வருவதில்லை. எனில் காலமெல்லாம் தனது அனைத்து அடையாளங்கள்ளயும் மாற் றிக்கொண்டு வாழப் போகும் அந்தப்பெண்ணின் மனநிலை என்ன...?

அனைத்து உரிமைகளும் மறுக்கப்படும் குடும்பத்துக்குள்ளிருந்துதான் பெண்ணுரிமை குரல்கள் உரத்து ஒலிக்க வேண்டும். இதன் பொருள் குடும்பம் என்னும் அமைப்பை உடைப்பது அல்ல. தவிரவும், கூடி வாழ்தலின் மிச்சமாக மனித சமூகத்தில் எஞ்சி நிற்கும் ஒரு சில அடையாளங்களில் குடும்பமும் ஒன்று. அது மறு சீரமைக்கப்பட வேண்டும். குடும்ப உறுப் பினர்கள் அனைவருக்கும் சம உரிமையுள்ள குடும்பமே நமக்குத் தேவையானது.

மேற்சொன்னவையெல்லாம் குடும்பத்துக்குள் நடப்பது. சமூக வீதிகளில் மட்டும் பெண்கள் உரிமைகளோடு இருக்கிறார்களா என்ன..? உரிமைகளை விடுங்கள்.. குறைந்தபட்ச சுதந்திரமாவது இருக் கிறதா..?

குடும்பம், அலுவலகம் என அனைத்து இடங்களிலும் தனது உரிமைகளை உரத்தக் குரலில் கேட்கும் பெண்களை அடக்கிப் போடுவதற்கு ஆண்கள் எடுக்கும் ஆயுதம் ஒழுக்கம்.

ஒழுக்கம், பெண்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக் கிறதா என்ன..? ஆண்களுக்கு உறுப்புகளே இல்லையா..? சமயத்தில் ஏன் ஒழுக்கமாக இருக்க வேண்டும் என்ற எரிச்சலான கேள்வியும் வருகிறது. "சமூகம் என்பது மனித இனத்தின் கூட்டுத் தொகுப்பு. கூட்டு வாழ்க்கைக்கென்று ஒரு வாழ்வியல் நெறி இருக்கிறது.." என்ற பதில் வருமாயின் அந்த நெறி ஆண்களைக் கட்டுப்படுத்தாதா..? குடும்பம், சமூகம், மதம் என்று பெண்ணை அடக்குவதில் மட்டும் எல்லோரும் ஒரே விதமாகத்தான் உள்ளனர். இதை மாற்றுவதற்கான குறைந்தபட்ச எண்ணத்தை மனதுக்குள் உருவாக்கி, அதை தனது குடும்பத்திற்குள் மட்டுமாவது செயல்படுத்திப் பார்க்காத வரைக்கும் நாம் அனைவரும் குற்றவாளிகள்தான். தீங்கிழைப்பது மட்டுமல்ல.. அதை வேடிக்கை பார்ப்பதும் குற்றம் தானே..!

■ இணையவள்

## பெண் விடுதலை



எலிகளுக்கு விடுதலை
பூனைகளால் கிடைக்காது
பெண்களுக்கு விடுதலை
ஆண்களால் கிடைக்காது
மண் புழுவாய்ப்
நெளிந்தது போதும்
பெண் புலியாய்ப்
புறப்படு நாளும்
புழுவைக்கூட சீண்டினால்
சீற்றம் வரும்
பெண்ணே! உனக்கு
சீற்றம் எப்போது வரும்
குட்டக் குட்ட
குனிந்தது போதும்
புராணப் புளுகை
நம்பியது போதும்
புதுமைக் கருத்தை
ஏற்றிட வேண்டும்
ஆண்கள் என்பதால்
ஆணவம் கொள்வதும் ஏன்?
பெண்கள் என்பதால்
அடிமைப்படுத்துவதும் ஏன்?
அடிமை விலங்கைத்
தகர்த்திடல் வேண்டும்
அற்புதச் சிறகை
விரித்திடல் வேண்டும்
ஆணுக்குள்ள சுதந்திரம்
பெண்ணுக்கும் வேண்டும்
அர்த்தமற்ற சுதந்திரம்
எவருக்கு வேண்டும்
புதியதோர் உலகம்
செய்திடல் வேண்டும்
புதுமைப் பெண்கள்
அதனை ஆள வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுக்கு தக்காளி



தக்காளி விழுதையும், பாதாம் விழுதையும் கலந்து முகத்தில் தடவி வந்தால் முகச் சுருக்கம் மறையும்.

தக்காளிச் சாறுடன் சிறிது ரவை கலந்து முகத்தில் தேய்த்துக் கழுவினால் சூரிய ஒளியின் தாக்கத்தால் நிறமிழந்த சருமம் மீண்டும் பிரகாசமாக மின்னும்.

வெள்ளரித் தண்டு, தக்காளிச் சாறு இரண்டையும் அரைத்து கண்களைச் சுற்றி பூசி வந்தால் கருவளையங்கள் மறையும்.

தக்காளிச் சாறைத் தயிருடன் கலந்து முகத்தில் பூசி வர சருமம் மிருதுவாக மாறும். வெறும் தக்காளிச் சாறை முகத்தில் பூசி வந்தாலே போதும். முகத்துக்கு நல்ல மினுமினுப்பு கிடைக்கும். தக்காளிச் சாறுடன் மஞ்சள் பூசி ஊறவிட்டு முகத்தைக் கழுவலாம். அதிக் தூசி நிறைந்த இடங்களில் அலைந்து திரிந்துவிட்டு வந்தால் இது நல்ல பயனைக் கொடுக்கும்.

# கரும்புள்ளிகள் மறைய



முகத்தில் ஆங்காங்கே கரும்புள்ளிகள் தோன்றி முகத்தை அசிங்க மாக்குகிறதா? எளிதான வழிகளில் அவற்றை நீக்கி விடலாம். 1 தேக்கரண்டி கடலை எண்ணெயுடன் 1 தேக்கரண்டி எலுமிச்சை சாறைக் கலந்து வைத்துக் கொள்ளவும். இதனை முகத்தில் பூசி ஊற விட்டு கழுவி வந்தால் விரைவில் கரும்புள்ளிகள் மறையத் துவங்கும். ஏதோ ஒரு நாள் செய்து விட்டுவிடாமல், கரும்புள்ளிகள் மறையும் வரை தொடர்ந்து பூசுவது நல்லது.

# கார கொழுக்கட்டை



**தேவையான பொருள்கள் :**

அரிசி மாவு -ஒரு சுண்டு
உளுத்தம்பருப்பு -200 கிராம்
காய்ந்த மிளகாய் -10 அல்லது 12
பெருங்காயம் - சுண்டைக்காய் தேவையாள அளவு
உப்பு -தேவையான அளவு
கறிவேப்பிலை
கடுகு - 1 கரண்டி
சமையல் எண்ணெய் - 50 கிராம்

**செய்முறை :**

1. இனிப்புக் கொழுக்கட்டைக்குச் செய்வது போன்றே மாவு தயார் செய்து கொள்ள வேண்டும்.
2. உளுத்தம்பருப்பு காய்ந்த மிளகாய் 10, உப்பு, கொஞ்சம் பெருங்காயம். உளுந்தை அரை மணி நேரம் தண்ணீரில் ஊறவிட வேண்டும்.
3. ஊறிய உளுத்தம் பருப்புடன், காய்ந்த மிளகாய், உப்பு சேர்த்து சற்றே கரகரப்பாக அரைக்க வேண்டும்.
4. அரைத்த விழுதைக் குக்கரில் வைத்து வெயிட் போட்டு 5 நிமிடம் வேக வைத்துவிட வேண்டும்.
5. வெந்த மா ஆறியவுடன் உதிர்த்துக்கொண்டு சட்டியில் சற்று தாராளமாக எண்ணெய் விட்டு கறிவேப்பிலை தாளித்து அரைத்து வைத்த விழுதைப் போட்டுக் கிளற வேண்டும்.
6. இப்போது காரக் கொழுக்கட்டைக்கு பூரணம் தயார். இந்த பூரணம் ஆறியவுடன் ருசிக்காக ஒரு மூடி எலுமிச்சம்பழம் பிழியலாம்.
7. இனிப்புக் கொழுக்கட்டை போலவே அரிசி மாவை எடுத்து கிண்ணம் செய்து காரப் பூரணத்தை வைத்து மூடி குக்கரில் இட்லி தட்டில் வேக வைக்க வேண்டும்.

# நகங்களைப் பராமரியுங்கள்



உடல் ஆரோக்கியத்தைக் காட்டும் கண்ணாடியாக நகங்கள் உள்ளன. ஒருவருக்கு உள்ள நோய்களை, அவரது நகங்களைக் கொண்டு கண்டறியலாம்.

நகத்துக்கு நகப்பூச்சுகளை பூசுவதன் மூலம் அழகை மட்டும் கொடுப்பதாக எண்ண வேண்டாம். நகத்துக்குப் பாதுகாப்பையும் அளிக்க நகப்பூச்சுகள் உதவுகின்றன.

நகங்கள் அழகாக இல்லாதவர்கள் செயற்கை நகங்களை அணிய வேண்டாம். அவை விரல்களில் பாதிப்பை ஏற்படுத்தி விடக் கூடும்.

ஏதேனும் கடினமான இரசாயனங்களில் பணியாற்ற வேண்டி வந்தால் நிச்சயமாக கையுறை அணியுங்கள்.

அவ்வப்போது நகங்களைச் சரியான அளவில் வெட்டி, தேவையானால் நகப்பூச்சு பூசி வையுங்கள். கால் நகங்களுக்கும் உரிய பராமரிப்பைச் செய்யுங்கள்.

# கண்களைக் கவரும் உதடுகள்




முகத்துக்கு மேக்கப் போட நேரமில்லை என் றாலும் உதடுகளுக்கு மேக்கப் போட யாரும் மறப்பதில்லை. பார்ப்பவர் கண்களைக் கவரும் உதடுகளைப் பெற...

லிப் லைனர்: இது பென்சிலைப் போன்ற தோற்றம் உடையது. உதடுகளின் வடிவத்தை லிப் லைனரைக் கொண்டு வரைந்து, அதன் பிறகு அதற்குள் லிப்ஸ்டிக்கால் நிறத்தை நிறப்புவது நல்லது. லிப்ஸ்டிக் உதட்டைவிட்டு வெளியே பரவுவதை இது தடுக்கும். லிப்ஸ்டிக்கின் நிறத்துக்குக் ஏற்றதாக லிப் லைனரின் நிறம் இருக்க வேண்டும். இல்லையென்றால் உதட்டின் அழகு கெட்டு விடும். அதற்காக ஒவ்வொரு லிப்ஸ்டிக் வாங்கும் போதும் அதற்கேற்ற லிப் லைனர் வாங்க வேண்டும் என்று அவசியமில்லை. லிப்ஸ்டிக் என்ன நிறத்தைச் சார்ந்த நிறமாக இருந்தாலும் பொதுவானது, தேவைப்பட்டால் லிப் லைனரைக் கூட லிப்ஸ்க்காக பயன்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியைச் சார்ந்த சிலர் தமது வரவினை எதிர்க்கக்கூடும் என்று தெரிவித்த அவர், புதிய அரசியல் முன்னணி ஒன்றினை ஆரம்பிப்பது தொடர்பில் தமக்கும் கோத்தபாய ராஜபக்சவுக்கும் இடையில் முரண்பாடு எதுவும் கிடையாதெனவும் மறுத்திருக்கிறார்.



# முனைப்புப் பெறும் புதிய கட்சி முஸ்தீபுகள்!

ஸ்டோ ஸ்வாமி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது அரசியல் நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்கள் தொடர்பாடலுக்கான அலுவலகத்தினை திறந்து வைத்ததிலிருந்து புதிய கட்சி தொடர்பான நிலைப்பாடு மேலும் வலுப்பெறத் தொடங்கியுள்ளது. கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை பத்தரமுல்லையில் உள்ள ஜயந்திபுர, நெலும் மாவத்தையில் இடம்பெற்ற அலுவலக திறப்பு விழாவில் முன்னாள் நீதியரசர் சரத் என். சில்வா, எல்லே குணவன்ச தேரர் உள்ளிட்ட பலருடன் மைத்திரிபாலவுடன் முரண்பாடுடைய சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர். நிகழ்வில் புதிய அரசியல் கட்சியின் சின்னமாக கருதப்படும் செந்தாமரையும் குருநாகல் மாவட்ட சாலிந்த திஸாநாயக்கவினால் மகிந்த ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த சில நாள்களாகவே தென்னிலங்கை அச்சு ஊடகங்களின் கேலிச்சித்திர கலைஞர்கள் மகிந்த ராஜபக்சவும் தேசிய சுதந்திர முன்னணியின் விமல் வீரவன்ச மற்றும் பிவித்துரு ஹெல உறுமயவின் உதய கம்மன்பில ஆகியோர் புதிய கட்சி ஒன்றினை நிறுவுவதற்காக அமளிதுமளிப்படுவதனை சித்திரிக்கும் வகையிலான கேலிச்சித்திரங்களை பதிவேற்றி வருகின்றன.

**நீர்கொழும்பில் நிகழ்ந்த சந்திப்பு!**

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை நீர்கொழும்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களைச் சந்தித்த மகிந்த ராஜபக்ச, தனது அரசியல் இருப்பிற்கு சுதந்திர கட்சியின் அடிமட்ட ஆதரவாளர்களிடம் இருக்கும் ஆதரவினை நாடி பிடித்து பார்த்திருக்கிறார்.

குறித்த சந்திப்பில் கலந்து கொண்ட முன்னாள் மேல்மாகாண முதலமைச்சரும் ஐ.ம.சு.மு வின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்கா, சிறிலங்கா சுதந்திரகட்சியின் 1,437 உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களில் 1,401 உறுப்பினர்கள் மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்டதுடன் ஏகமனதாக 3 தீர்மானங்களையும் நிறைவேற்றினர் எனவும் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசு ஒன்றினை அமைத்தல், அதற்கு சு.கவின் மூத்த உறுப்பினர் ஒருவரை பிரதமராக நியமித்தல் மற்றும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கு ஆதரவாகப் பணியாற்றும் சு.க. உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகளை மீளப்பெறுவது என்பனவே அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாகும்.

சு.கவின் தலைமைத்துவத்தினை தன் வசம் வைத்திருக்கும் மைத்திரிபால சிறிசேன, அதனை மகிந்த ராஜபக்சவிடம் கையளிக்க வேண்டும் என்று சு.கவின் அடிமட்ட ஆதரவாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர் என்றும் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

**அமைச்சர் விதானாராச்சி விடுத்த மறுத்தான்!**

மீன்பிடித்துறை மற்றும் நீர் வளங்கள் இராஜாங்க அமைச்சர் திலிப் விதானாராச்சி கடந்த செவ்வாய்க்கிழமை தங்காலையில் இடம்பெற்ற வைபவமொன்றில் கருத்துரைக்கையில், நீர்கொழும்பு கூட்டத்தினைப் பற்றியும் விமர்சித்திருந்தார். வெறும் 500 பேர் மட்டுமே அந்தக் கூட்டத்தில் பங்குகொண்டிருந்தனர் எனவும் பங்குகொண்ட அத்தனைபேருமே திருடர்கள், அதுவும்தேங்காய்த்திருடர்கள், கொள்ளையர்கள் எனவும் தெரிவித்திருந்தார்.

**புதிய கட்சி தவிர்க்க முடியாதது-பசில்!**

கடந்த திங்கட்கிழமை ஹிரு தொலைக்காட்சியின் நிகழ்ச்சி ஒன்றில் பங்குகொண்ட முன்னாள் பொருளாதார அமைச்சரும் சு.கவின் முன்னாள் தேசிய அமைப்பாளருமான பசில் ராஜபக்ச, மாற்றுக்கட்சி ஒன்றிற்கான தேவை இருப்பதனால் அதனை முன்னெடுப்பதிலே தாம் ஆர்வமாக இருக்கிறார் எனவும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அது முறியடிக்கப்படாதெனவும் தெரிவித்திருக்கிறார். ஒன்றிணைந்த எதிர்க்கட்சியைச் சார்ந்த சிலர் தமது வரவினை எதிர்க்கக்கூடும் என்று தெரிவித்த அவர், புதிய அரசியல் முன்னணி ஒன்றினை ஆரம்பிப்பது தொடர்பில் தமக்கும் கோத்தபாய ராஜபக்சவிற்கும் இடையில் முரண்பாடு எதுவும் கிடையாதெனவும் மறுத்திருக்கிறார்.

**பதிலடிக்கு தயாராகும் ஜனாதிபதி!**

கடந்த 12ஆம் திகதி சு.கவின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பங்குகொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மகிந்த ஆரம்பிக்கப்போகும் புதியகட்சி பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், புதிய கட்சிக்குத் தாம் தகுந்த பதிலடி வழங்கத் தயாராக இருக்கிறார் எனத் தெரிவித்திருக்கிறார். "அவர்கள் புதிய கட்சி ஆரம்பித்தால் ஆரம்பிக்கட்டும். நான் எனது வேலையைக் காட்டுகிறேன். அவர்கள் பாற்சோறு சமைத்தால் அதற்குக் காரமான கட்ட சம்பல் தயாரித்து வழங்குவேன்" என்றிருக்கிறார் ஜனாதிபதி.

மகிந்த தோற்றுவிக்கும் கட்சி, சு.கவினை பிளவுபடுத்தும் அதேவேளை ஐ.தே.கவை வலுப்படுத்தும் சாத்தியமும் இல்லாமல் இல்லை. சு.கவின் உள் முரண்பாடுகள் தொடர்பில் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் நிலவரத்தினை ஐ.தே.கவிடம் தோற்றுவிக்கும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் களத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மகிந்தவின், நாடாளுமன்றத்திற்கான மீள் அரசியல் நுழைவும் அதனைத் தொடர்ந்த அதிர்வுகளும் இன்னமும் அடங்கவில்லை என்பதைவிட இனியும் நீடிக்கும் என்பது என்னவோ உண்மைதான்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இந்த வாரம் 21.02.2016 முதல் 27.02.2016 வரை உங்களுக்கு எப்படி?

## மேடம்

சூரியன், கேது, குரு, புதன் அதிக நன்மை தருவர். வளர்ச்சிப் பாதைக் கான புதிய சூழல் உருவாகும். பணிகளை ஆர்வத்துடன் செயற்படுத்துவீர்கள். குடும்பச் செல வுக்கான பணவரவு அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்கள் உங்கள் அறிவுரையை ஏற்று படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேறுவர். கடனில் ஒரு பகுதியைச் செலுத் துவீர்கள். மனைவியின் மனதில் குழப்பம் விலகி நம்பிக்கை வளரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் கணவரின் பணவரவு அறிந்து நடக்க வேண்டும். மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் கவனம் வேண்டும். விநாயகர் வழிபாடு, வினை தீர்க்கும்.

## இடபம்

சூரியன், சந்திரன், செவ்வாய், சுக்கிரன் அதிக அளவில் நற்பலன் தருவர். ஒதுக்கி வைத்த பணிகளை நிறைவேற்றுவீர்கள். உடன் பிறந்தவர்கள் கேட்ட உதவியை வழங்குவீர்கள். தாயின் அன்பு ஆசி கிடைக்கும். வாகனப் பராமரிப்புச் செலவு உயரும். புத்திரர்களின் உடல்நிலையில் முன்னேற் றம் ஏற்படும். உங்கள் கருத்தை மனைவி அன்புடன் ஏற்றுக் கொள்வார். புதிய முயற்சியால், தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் அளவு பணவரவு பெருகும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து நற்பெயர் பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேறி நற்பெயர் பெறுவர்.சாஸ்தா வழிபாடு, சகல நன்மையும் தரும்.

## மிதுனம்

ராகு, சனீஸ்வரர், புதன் சுக்கிரனால் தாராள நன்மை கிடைக்கும். உழைப்புக்கான பயன் முழு அளவில் வந்து சேரும். நிம்மதி நிறைந்த வாழ்வு உருவாகும். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்கள் விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற் படும். மனைவியின் பாசம் நெகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் இடையூறுகள் வந்தாலும் சரி செய்து விடுவீர்கள். நிலுவைப் பணம் கிடைக்கும். பணியா ளர்கள் சிறப்பாக பணிபுரிந்து வெகுமதி பெறுவர். பெண் கள் குடும்ப நலன் பாதுகாத்திடுவர். மாணவர்கள் ஞானம் நிறைந்த கருத்துக்களை நண்பர்களிடம் பகிர்ந்து கொள்வர். ஆஞ்சநேயர் வழிபாடு, வெற்றி தரும்.

## கடகம்

குரு, சந்திரன் மட்டுமே ஓர ளவு நற்பலன் தருவர். நற் பண்பு நிறைந்தவர்களின் உதவி கிடைக்கும். மனம், செயலில் உற் சாகம் அதிகரிக்கும். வளர்ச்சியை நோக்கி நடை போடு வீரர்கள். உடன்பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். பயணத்தில் அதிக பாதுகாப்பு வேண்டும். புத்திரர்கள் நல்வழியில் செயற்பட இதமாக வழி நடத்தவும். வழக்கு விவகாரங்களில் பணவிரயம் தவிர்க்கலாம். தொழில், வியாபாரம் செழிக்க, மாற்று உபாயம் பின்பற்ற வேண்டும். பணியாளர்கள் நிர்வா கத்தின் சட்டதிட்டத்தைப் பின்பற்றி நற்பெயர் பெறுவர். பெண்கள் ஆன்மிக சுற்றுலா சென்று வர வாய்ப்பு வரும். மாணவர்கள் வாகனங்களில் செல்லும் போது கவனம். சனீஸ்வரர் வழிபாடு சங்கடம் தீர்க்கும்.

## சிங்கம்

புதன், செவ்வாய், சந்திரனால் ஓரளவு நன்மை உண்டு. முக் கிய பணிகளை, இந்த வாரம் ஒத்தி வைக்கலாம். இதனால் நஷ்டமும், கெட்ட பெயரும் வராமல் தவிர்க்கலாம். தாய்வழி உறவினர் கள், கருத்து வேறுபாடு கொள்வர். புத்திரர்களின் போக்கு மனவருத்தம் தரலாம். உடல்நலத்துக்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். மனைவி வழி உறவினர்கள், பண உதவி கேட்டு அணுகுவர். பய ணங்களால் அதிக இலாபம் இருக்காது. தொழில், வியா பாரத்தில் அளவான இலாபம் இருக்கும். பணி யாளர்கள் பணியில் மிக கவனமாக செயற்படவும். பெண் களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் எளிய பயிற்சியால் படிப்பில் நல்ல தேர்ச்சி பெறலாம். வைரவர் வழிபாடு, சிரமத்தைப் போக்கும்.

## கன்னி

சுக்கிரன், சனீஸ்வரர், சூரி யனால் வியத்தகு நற்பயன் கிடைக்கும். பலநாள் திட்டமிட்ட பணி களை முழு முயற்சியுடன் நிறைவேற்று வீர்கள். உறவினர்கள் பாசத்துடன் இருப்பர். புத்தி ரர்கள் மற்றும் மனைவி விரும்பிய பொருளை தாராள செலவில் வாங்கித் தருவீர்கள். உடல்நலம் சுமாராக இருக்கும். மனைவியால் பணவரவுக்கு இடமுண்டு. குடும்பத்தில் ஒற்றுமை மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரத்தில் பெருக்கத்தால், வளர்ச்சி அடையலாம். பணியாளர்கள் குறித்த காலத்தில், பணி இலக்கை நிறைவேற்றி பாராட்டு, வெகு மதி பெறுவர். பெண்கள் மகிழ்ச்சிகர வாழ்வு நடத்துவர். மாணவர்கள் படிப் புடன் பொது அறிவிலும் மேம்படுவர். மகாலட்சுமி வழிபாடு, பணவரவை உயர்த்தும்.

## துலாம்

குரு, சுக்கிரன், புதன், ராகு தாராள நற்பலன் தருவர். செயல்கள் சிறப் பாக அமைந்து புகழ் தரும். குடும்ப உறுப்பினர்கள் அன்பு கொள்வர். அறிமுகம் இல்லாதவர்க்கு வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர்களின் வெகுநாள் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவியின் கருத்து குடும்ப நலனுக்கு உதவும். மாற்றுத்திட்டத்தைப் பயன்படுத்தி தொழில், வியாபாரத்தில் செழிப் படைவீர்கள். பணியாளர்களுக்கு சலுகை, விரும்பிய இடத்துக்கு மாற்றம் கிடைக்கும். பெண்கள் சிறப்பான செயல்களால், குடும்பத்தில் பாராட்டு பெறுவர். மாணவர்கள் ஞாபகத் திறனை வளர்த்து, அதிக மதிப்பெண் பெறுவர்.முருகன் வழிபாடு, நம்பிக்கை தரும்.

## விருச்சிகம்

சுக்கிரன், சந்திரன் ஆதாயம் தரு வர். தகுதி, திறமையை முழுமை யாக வெளிப்படுத்தி பணி செய்வீர்கள். மற்றவர்களின் கருத்தை விமர்சிக்க வேண்டாம். அரசு சார்ந்த உதவி பெறுவதில் தாமதம் ஏற்படலாம். புத்திரர்கள் படிப்பு, செயற்றிறனில் மேம்படுவர். சொத்து பராமரிப்பில் அதிக கவனம் வேண்டும். உறவினர்களின் உதவி மனதுக்கு உற்சாகம் தரும். உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். மனைவி, உங்கள் எண்ணங்களை செயல்படுத்துவார். பயணங் களால் அதிக இலாபம் இராது. தொழில், வியாபா ரத்தில் வளர்ச்சி கூடும். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள் வர். மாணவர்கள், நண்பர்களின் உதவியால் படிப்பில் முன் னேறுவர். பெருமாள் வழிபாடு செல்வ வளம் தரும்.

## தனுசு

பெரும்பான்மையான கிரகங்கள் அனு கூலமான இடங்களில் உள்ளன. உங்கள் எண்ணங்களில், புதுமையான கருத்து உருவாகும். பொது இடங்களில் சூழல் உணர்ந்து செயற்படுவீர் கள். உடன்பிறந்தவர்களின் மங்கல நிகழ்ச்சிக்கான பேச்சு திருப்திகரமாகும். புதிய வீடு, வாகனம் வாய்ப்பு வரும். புத்திரர்கள் நற்செயலால் பெற்றோருக்கு பெருமை தேடித்தருவர். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுவீர்கள். தொழில், வியாபா ரத்தில் அபிவிருத்திப் பணி சிறப்பாக நிறைவேறும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டத்தை பின் பற்றி, அதிக நன்மை பெறுவர். . மாணவர்கள் நன் றாக படித்து, பரிசு வாங்குவர். அம்பிகை வழிபாடு, மகிழ்ச்சி தரும்.

## மகரம்

சுக்கிரன், சந்திரன், சனீஸ்வரர் நற் பலன் தருவர். கடந்த காலத்தில், நீங்கள் செய்த நற்செயலுக்கான நன்மை தேடிவரும். தம்பி, தங்கைகள் வாழ்வில் முன்னேற கேட்ட உதவியை செய்வீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்களின் அறிவுத்திறன் வளர, உங்களின் அனுபவங்களை எளிய நடையில் சொல்வீர்கள். சிரமமான சூழ் நிலையை மதி நுட்பத்துடன் சரி செய்ய வேண்டும். நேரத்துக்கு உணவு உண்பதால், உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். பணியாளர் கள் நிர்வாகத்தின் சட்ட திட்டத்தைப் பின்பற்ற வேண்டும். பெண்களுக்கு குடும் பச் செலவுக் கான, பணவசதி தாராள அளவில் இருக் கும். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பர்கள் உதவு வர். தட்சிணாமூர்த்தி வழிபாடு, மங்கல வாழ்வு தரும்.

## கும்பம்

குரு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். பணிகள் தங்கு தடையின்றி நிறைவேறும். வாழ்வில் முன்னேற உதவியவர்களுக்கு பதில் உதவி செய்வீர்கள். ஆடம்பரச் செலவைத் தவிர்க்கவும். பயணங்கள் இனிய அனுபவம் தரும். புத்திரர்கள் பிடிவாத குணத்துடன் செயற்படுவதால், மன வருத்தம் வரலாம். பூர்வ சொத்து பராமரிப்பில், உரிய கவனம் வேண்டும். வாழ்க்கைத் துணைவர் உங்க ளுக்குப் பல வகையிலும் ஒத்துழைப்பார். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறுகளைத் தாமதமின்றி சரி செய்வதால் வளர்ச்சி சீராகும். சலுகை கிடைக்கும். பெண்கள் குடும்பத்தின் நலன் [illegible] வழிபாடு தைரியம் வளர்க்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனம்

ராகு, புதன், சுக்கிரன் ஆதாய பலன் களை அள்ளி வழங்குவர். குடும்ப நிகழ்வுகள் மனதுக்கு இதம் தரும். பழகு பவர்களின் மனமறிந்து பேசி நற்பெயர் பெறுவீர்கள். பயணங்களால் இலாபம் உண்டு. புத்திரர்களின் உடல்நலத்துக்காகச் சிறு செலவு வரலாம். எதிர்ப் புகள் விலகி வாழ்வில் முன்னேற்றம் பெற, புதிய வாய்ப்பு வரும். மனைவியின் நம்பிக்கை நிறைந்த பேச்சு, உங்களுக்கு தெம்பைத் தரும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து இலாபம் கூடும். பணியாளர்கள் தொழில்நுட்பங்களை அறிந்து, எதிர் கால வளர்ச்சிக்கு வித்திடுவர். பெண்கள் வீட்டு அலங்கார பொருள் வாங்குவர். மாணவர்கள் முயற்சியுடன் படித்து முன்னேற்றம் காண்பர். சிவன் வழிபாடு, சகல நன்மையும் தரும்.

# ஆரணி கண்ட கனவு

ஆரணி பத்து வயது நிரம்பிய சிறுமி. ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறாள். படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரி. அவளுடைய அப்பாவும் அம்மாவும் சிறு வயது முதல் அவளுக்குக் கதைப் புத்தகங்களையும், சிறுவர் சஞ்சிகைகளையும் கொடுத்து வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்ததால் அவள் தனது ஓய்வு நேரத்தை வாசிப்பதிலேயே கழித்தாள்.

ஆரணியின் அம்மா ஓர் ஆசிரியையாக இருந்தமையால் புத்தகங்களைப் பெற்றுக்கொள்வதில் கஷ்டமிருக்கவில்லை. அவளுக்காக வீட்டில் ஒரு நூல் நிலையமே இருந்தது. அவளுடைய அப்பா அவளுக்கு நல்ல அறிவியல் புத்தகங்களை அன்பளிப்பாகக் கொடுப்பார். விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்கள், விஞ்ஞானிகளின் வாழ்க்கைச் சரித்திரங்கள் என்பவற்றை ஆரணி மிகவும் விரும்பி வாசிப்பாள். அதனால் ஆரணி பாடசாலை மட்ட கட்டுரைப் போட்டிகள், சிறு கதைப் போட்டிகளில் முதற் பரிசுப் பெற்றாள். அவள் பரிசு பெறும் ஒவ்வொரு தடவையும் அவளைவிட அவள் அப்பா, அம்மாதான் அதிகம் சந்தோசமடைவர்.

ஒருநாள் பாடசாலை விடுமுறையன்று அவளது அப்பாவும், அம்மாவும் வீட்டில் இல்லை. ஆரணி மதிய உணவு உண்டபின் கையில் ஒரு கதைப்புத்தகத்தை எடுத்துக் கொண்டு சாய்வு நாற்காலியில் சரிந்து வாசிக்கத் தொடங்கினாள். கதை மிகவும் சுவையானது. அதற்குள்ளேயே மூழ்கி இருந்த நேரத்தில் திடீரென்று தொலைபேசி மணி அலறியது. பக்கத்திலிருந்த தொலைபேசியைக் கையிலெடுத்து "ஹலோ யார் பேசுவது"? என்று கேட்டாள். மறுமுனையில், "நான் யாரென்று உனக்குத் தெரியாது; ஆனால் உன்னை எனக்கு நன்றாகத் தெரியும். உடனடியாக நான் சொல்வதை நீ அவதானிக்க வேண்டும். நீ எழுந்து உனது வீட்டுக்கு முன் பக்கம் வா. அங்கே உனக்காக ஓர் அதிசயம் காத்திருக்கிறது" என்று ஒரு மர்மக் குரல் பேசியது .

"அம்மா வீட்டில் இல்லை நான் அம்மாவிடம் சொல்லாமல் வரமாட்டேன்" என்று கூறினாள் ஆரணி. "இல்லை, இல்லை. நீ ஒருவரிடமும் சொல்ல வேண்டாம். அப்படிச் சொன்னால் உனக்குக் கிடைக்கப்போகும் அதிர்ஷ்டம் கிடைக்காது. ஆகையால் உடனடியாகப் புறப்படு" என்றது அந்த மர்மக் குரல் கடுந்தொனியில். அந்தக் குரலைக் கேட்டு நடுங்கிய ஆரணி உடனடியாக எழுந்து வீட்டுக்கு வெளியே வந்து விட்டாள்.

வீட்டின் வெளிப்புறத்தில் ஒருவரையும் காணவில்லை. ஆரணி சுற்றும் முற்றும் பார்த்தாள். அப்போது ஆகாயத்தில்"ஸ் ஸ் ஸ் ஸ்" என்றொரு சத்தம் கேட்டது. உடனே ஆரணி அண்ணார்ந்து பார்த்தாள். அங்கே



ஒரு சிறிய நட்சத்திரம் ஆகாயத்திலிருந்து இறங்குவது போல ஒளி வீசியது. அந்தப் பொருள் வெகு வேகமா கக் கீழே இறங்கிக் கொண்டிருந்தது. கீழே வரவர அதன் உருவம் பெரியதாகியது. அது ஒரு சிறிய பறக்கும் தட்டு. அது கிட்டத்தட்ட ஒரு சிறிய காரின் பருமனளவு இருந்தது. "படார்" என் றொரு சத்தம் கேட்டது. அந்தப் பறக்கும் தட்டின் கதவு திறக்கப்பட்டது. ஒரு நொடிப்பொழுதில் அதனுள் இருந்து ஒரு விசித்திரமான உருவ அமைப்புள்ள மனிதன் ஒருவன் இறங்கினான்.

அப்போது அந்த உருவம் ஆரணியைப் பார்த்து உள்ளே ஏறும்படி சைகை காட்டியது. அவளும் மந்திரத்தால் கட்டுண்டவள் போல உள்ளே ஏறினாள். உடனே அக் கதவு படீரென்ற சத்தத்துடன் மூடிக் கொண்டது. சுமார் இரண்டு மணித்தியாலப் பயணத்தின் பின் ஒரு சுரங்கப் பாதையினுள் பறக்கும் தட்டு நுழைந் தது. அந்தப்பாதை மிகவும் ஒடுக்கமாக உள்ளதால் ஆரணிக்கு சுவாசிப்பது மிகவும் கடினமாக இருந்தது. அதனால் மயக்கம் வருவது போல் இருந்தது. அதன் பின் என்ன நடந்ததென்று ஆரணிக்குத் தெரியவில்லை.

ஆரணி கண் விழித்துப் பார்த்தபோது அழகிய மாளிகையினுள் பஞ்சு மெத்தையில் படுத்திருந்தாள். அவளது உடம்பு மிகவும் இலேசாக இருந்தது. அவளது கட்டிலைச் சுற்றி அவளது வயதை ஒத்த சிறுமிகள் ஐந்துபேர் நின்று கொண்டிருந்தனர். ஒரு சிறுமிமட்டும் அவளுக்குக் கிட்டவந்து அவளைப்பார்த்து சிரித்துக் கொண்டு கைகுலுக்கினாள். அது அவளுடன் படிக்கும் சுகன்யா அல்லவா? உடனே அவளைப்பார்த்து ஆரணி சுகன்யா நீ எப்படி இங்கு வந்தாய்? எப்பொழுது வந்தாய்? என்று மகிழ்ச்சியுடன் வினாவினாள் "ஆரணி" நீ வர சற்று முன்பு தான் இங்கு வந்தேன். நீயும் இங்கு வந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இது ஒரு அதிசய உலகமாம். நாம் இருவரும் இங்குள்ள அதிசயங்களைப் பார்த்து மகிழ்வோம் என்று கூறி ஆரணியின் கைகளைப்பற்றிக் கூட்டிச் சென்றாள்.

முதலில் ஓர் அழகிய மண்டபத்துக்குள் நுழைந்தனர் .அங்கே விதம் விதமான அறு சுவை உணவுகள் பரிமாறப்பட்டிருந்தன. ஆரணிக்கும் சுகன்யாவுக்கும் நல்ல பசியாக இருந்தமையால் அவற்றை வயிறுபுடைக்கச் சாப்பிட்டனர்.

பின்னர் தங்கள் படுக்கைகளில் படுத்துக் கொண்டனர். இரவில் ஆரணி படுக்கைக்குச் செல்லும் போது தனது ரெடிபியர் குட்டியை அணைத்தவாறு அம்மாவிடம் கதைகேட்டுக்கொண்டு படுப்பது வழக்கம். அதனால் அங்கேயும் ரெடிக்குட்டியைத் தனது கைகளால் தேடிப்பார்த்தாள் அதைக் காணவில்லை. உடனே அம்மா! அம்மா! எனது ரெடிக்குட்டி எங்கே அம்மா! என்று பெரிய சத்தமாகக் கேட்டாள்? அப்போது அங்கே ஓடிவந்த அம்மா ஆரணியைத் தொட்டு உலுப்பி ஏன் இப்படிக் கத்துகிறாய் கனவு கண்டுவிட்டாயா என்று கேட்டாள். திடுக்குற்று நித்திரை விட்டு எழுந்து கண்ணை விழித்துப் பார்த்த ஆரணி சுற்றுமுற்றும் பார்த்து நான் வீட்டிலேயா இருக்கிறேன் நான் எப்படி வீட்டுக்கு வந்தேன். சுகன்யா எங்கே? என்று கேட்டாள் அப்போது அங்கே வேலையால் வந்த அப்பா ஆரணி நல்ல கனவு கண்டு விட்டாள் போலிருக்கிறது என்று கூறிச் சிரித்தார்.

சி.அபிராம், *யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி*

## வரலாற்றில் இன்றைய தினம்

1848 - கார்ல் மார்க்ஸ் மற்றும் பிரட்ரிக் எங்கல்ஸ் ஆகியோரால் 'த' கம்யூனிஸ்ட் மனிபெஸ்ரோ (கம்யூனிஸ்ட் கொள்கை) பிரசுரிக்கப்பட்டது.

1885 - புதிதாகப் பூர்த்தியாக்கப்பட்ட வோஷிங்டன் நினைவுத் தூபி அர்ப்பணிக்கப்பட்டது.

1921 - ஜோர்ஜியா ஜனநாயக மக்கள் குடியரசின் அரசமைப்பு சட்ட சபையில் பின்பற்றத் தொடங்கப்பட்டது.

1921- வெற்றிகரமான சதிப் புரட்சி மூலம் தெஹ்ரானின் கட்டுப்பாடு றெஷா ஷாவிடம் வந்தது.

1945 - இரண்டாம் உலக மகாயுத்தம் ஜப்பானிய கமிகாஷ் விமாணங்கள் யு.எஸ்.எஸ் பிஸ்மார்க் பாதுகாப்பு கடற்கலனை மூழ்கடித்து, யு.எஸ்.எஸ். சரோரோகா கப்பலையும் சேதப்படுத்தின.

1947 - உடன் புகைப்படம் வழங்கும் "பொலறைட் லான்ட் கமெரா" நியூயோர்க் நகரில் எட்வின் லான்டால் இயக்கிக் காண்பிக்கப்பட்டது.

1952 - வின்சன் சேர்ச்சிலின் தலைமையிலான பிரிட்டிஷ் அரசு 'மக்களை சுதந்திரமாக விட' அடையாள அட்டை முறையை இல்லாமற் செய்தது.

1952 - கிழக்கு பாகிஸ்தானின் டாக்கா பல்கலைக்கழகத்தில் வங்காளி மொழி இயக்கத்தினரால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

1972 - ஆள்களற்ற சோவியத் விண்கலம் லூனா 20சந்திரனில் தரையிறங்கியது.

1973 - லிபியன் அரபு விமானம் 114 ஜெற் விமானத்தை சினாய் பாலைவனத்துக்கு மேலாக இஸ்ரேல் போர் விமானம் சுட்டு வீழ்த்தியதில் 108பேர் சாவடைந்தனர்.

2013 - இந்திய ஹைதரபாத் தொடர் குண்டு வெடிப்பில் 17பேர் வரை சாவு. 119 பேர் காயம்.

## சின்னச் சின்னப் பாவை



சின்னச் சின்னப் பாவை
சீருடைய பாவை
அன்னை தந்த பாவை
அன்பு கொண்ட பாவை

என்னைப் போலக் காலும்
என்னைப் போலக் கையும்
இனிய கண்ணும் வாயும்
இயைந் திருக்கும் பாவை

சட்டையிட்டுப் பார்ப்பேன்
தொப்பி யிட்டுப் பார்ப்பேன்
பொட்டு மிட்டுப் பார்ப்பேன்
பூவணிந்து பார்ப்பேன்

என் மடியில் இருக்கும்
என் னருகிற் படுக்கும்
என் னுடனே பகலும்
இரவு மொன்றாய் இருக்கும்



சு.நிலானி,
தரம் 4,
ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தி.



அமிர்தலிங்கம் அனுசன்,
சென் பெனடிற் வித்தியாலயம்

## விடுகதைகள்

01. மூன்று கொண்டை வைத்திருப்பாள் ஆனால் பெண் அல்ல - அது யார்?
- அடுப்பு

02. ஊரையே சுற்றுவான் ஆனால் வீட்டிற்குள் வரமாட்டான் - அவன் யார்?
- செருப்பு

03. பத்துத் திங்கள் இருட்டறையில் இருந்தவன், வெளியே வந்து அழுகிறான் - அவன் யார்?
- பிறக்கும் குழந்தை

04 தேவைப்படும்போது பையை நிரப்பலாம், ஆனால் தேவைக்கு மேலே பையை நிரப்ப முடியாது - அது என்ன?
-வயிறு

05. இரவிலே தெரியும் தீபம், பகலில் பார்க்க முடியாது - அது என்ன?
- நிலவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.வி. வெங்கடேஸ்வரன்



# பிரபஞ்சம் பேசிவிட்டது!

விஞ்ஞானி ஐன்ஸ்டைன் தனது கோட்பாட்டில் ஒரு தூர நோக்கோடு முன்வைத்த கருத்துக்களில் இருந்த ஈர்ப்புக் கவர்ச்சி அலைகள் (gravitational waves) யதார்த்தத்தில் இருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பிரபஞ்சத்தின் கீச்சுக்குரல் என்று விஞ்ஞானிகளால் வர்ணிக்கப்படும் இந்தக் கண்டுபிடிப்பு, அறிவியல் உலகின் புதிய கதவைத் திறந்திருக்கிறது.

**விண்வெளியில் விளையாட்டு**
விண்வெளியில் சூரியனைப் போலப் பல மடங்கு நிறை (Mass) கொண்ட நட்சத்திரங்கள் தங்களின் வாழ்நாளின் இறுதியில் கருந்துளைகள் (black wholes) ஆக மாறும். அவை ஒன்றையொன்று சுற்றுகிற சூழல்களும் ஏற்படும். அப்போது கால - அண்டவெளியில் (Spacedtime) அதிர்வுகள் ஏற்பட்டு அவை ஈர்ப்புக் கவர்ச்சி அலைகளாக வெளியாகும் என்பது ஐன்ஸ்டைனின் கோட்பாடு. அவரது கணிப்பை உண்மையாக்கும் வகையில் பாய்ந்து வரும் அலைகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துச் சாதித்துள்ளனர்.
கடவுள் துகள் என்று வர்ணிக்கப்பட்ட ஹிக்ஸ் போஸான் அணுத் துகள்களின் கண்டுபிடிப்பு இந்த நூற்றாண்டின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு என்று பேசப்பட்டது. அதைவிட முக்கியமானது தற்போதைய கண்டுபிடிப்பு என்கின்றனர் விஞ்ஞானிகள்.

**கயிற்றுக் கட்டிலின் பள்ளங்கள்**
கால - அண்டவெளியை ஒரு கயிற்றுக் கட்டிலாகக் கற்பனை செய்வோம். கயிற்றுக் கட்டிலின் நடுவே மிகவும் குண்டான ஒருவர் அமர்ந்தால் என்ன ஆகும்? அந்தக் கட்டிலின் நடுவே பள்ளம் ஏற்படும் இல்லையா? அந்தக் கட்டிலின் ஓரத்தில் கோலிக் குண்டை வைத்தால் அது உருண்டு பள்ளம் நோக்கிச் செல்லும் அல்லவா? அதுபோலத்தான் சூரியன் போன்ற அதிக நிறை உடைய பொருள்கள் கால - அண்டவெளியில் பள்ளத்தை உருவாக்கும். அவற்றைவிட எடை குறைவான பொருள்கள் அந்தப் பள்ளத்தில் சறுக்கி விழும். அவ்வாறு விழுவதைத்தான் நாம் ஈர்ப்புப் புலம் (gravitational field) எனக் கருதுகிறோம் என்றார் ஐன்ஸ்டைன்.
ஐன்ஸ்டைன் கோட்பாட்டின்படி இந்தப் பிரபஞ்சம் நான்கு பரிமாணம் உள்ள கால - அண்டவெளி அமைப்பு. மிகுந்த நிறையுள்ள பொருட்கள், இந்தக் கால - அண்டவெளி அமைப்பில், அவற்றின் நிறைக்கு ஏற்றவாறு பள்ளங்களை ஏற்படுத்துகின்றன. அதுவே ஈர்ப்புப் புலம் ஆக நமக்குத் தோன்றுகிறது. இதுவே கால - அண்டவெளி வளைவாக்கக் கோட்பாடு (Spacedtime curvature).

**அதிர்வும் அலைகளும்**
இரண்டு பேர் கயிற்றுக் கட்டிலின் மீது ஏறிக் குதித்து விளையாடினால் என்ன ஆகும்? கட்டிலில் கயிறு மேலும் கீழும் ஆடி ஆடி கயிற்றின் மீது அதிர்வு அலைகள் பரவும் அல்லவா? அதுபோலத்தான் கருந்துளைகள் போன்ற மிக மிக நிறையுடைய இரண்டு பொருள்கள், ஜோடி சேர்ந்து வேக வேகமாக ஒன்றை ஒன்று சுற்றினால் கால - அண்டவெளிப் பரப்பில் அலைகள் உருவாகும். அவையே ஈர்ப்புக் கவர்ச்சி அலைகள்.

**பிரபஞ்சத்தின் மொழி**
காற்று அசைவதால் ஏற்படும் ஒலியைப் போன்றது பிரபஞ்சத்தில் ஏற்படும் இந்த இயக்கம். இதனை "பிரபஞ்சத்தின் ஒலியைக் கேட்கும் திறன் இல்லாதவர்களாக இருந்தோம், முதல் தடவையாக அதைக் கேட்கிறோம்" என்று வர்ணிக்கிறார் லிகோ (LIGO - Advanced Laser Interfero meter GravitationaldWave Observatory) ஆய்வுக் குழுவின் உறுப்பினரான டேவிட் ப்ளையர்.
அணுவில் பத்து லட்சத்தில் ஒரு பங்குதான் இந்தக் கவர்ச்சி அலை. இந்த அலைகளைக் கண்டுபிடிப்பது எளிதல்ல. ஒலியின் அலைகள் செல்லும்போது காற்றின் அடர்த்தி கூடிக்குறையும். அதுபோல ஈர்ப்புக் கவர்ச்சி அலைகள் பரவிச் செல்லும்போது அந்தத் திசையில் அண்டவெளி சுருங்கி விரியும்.
இதனை ஆய்வு செய்யவே, குறிப்பிட்ட தொலைவுக்கு நீளமான ஒரு ஆய்வுக் கருவியைத் தயார் செய்தார்கள். அதற்குள்ளே அலைகள் கடந்து செல்வதைக் கூர்ந்து நோக்கினார்கள். ஏதாவது சிறு மாற்றம் வருகிறதா என்று காத்துக் கிடந்தார்கள். கருவிக்குள்ளே அலைகள் கடந்து செல்லும்போது அதன் அலைநீளத்துக்கு ஏற்ப மாற்றி மாற்றிச் சுருங்கி விரியும். இவ்வாறு துடிப்பதை அளந்தால்தான் ஈர்ப்புக் கவர்ச்சி அலைகள் பாய்ந்து செல்வதைக் கணிக்க முடியும்.
அந்த ஆய்வுக் கருவி ஆங்கில எழுத்து (எல்) வடிவத்தில் செய்யப்பட்டது. அதன் ஒவ்வொரு பக்கமும் நான்கு கிலோ மீற்றர் நீளமுடைய வெற்றிடக் குழாய்கள்தான். அதன் நடுவே கண்ணாடி வைக்கப்பட்டது. இரண்டு பக்கமும் ஒளி செல்லும்போது ஒளியை உணரக்கூடிய கருவிகளும் பொருத்தப்பட்டன. ஆய்வுக் கருவியின் இரண்டு முனையிலிருந்தும் ஒளியைச்செலுத்தி அதனை நடுவே உள்ள கண்ணாடியில் பிரதிபலித்துத் திருப்பி அடுத்த பக்கத்துக்கு அனுப்பி ஆய்வு செய்தார்கள்.
ஒளி அலைகளின் நீளத்தை அளக்க இண்டர் பிரோமீட்டர் எனும் கருவியையும் உருவாக்கினார்கள். ஒளி இரண்டு முனைகளிலும் எப்போது வந்து சேர்கிறது என்று அளந்துகொண்டே இருப்பார்கள். அவ்வாறு வந்து சேர்கிற இரண்டு ஒளி அலைகளின் ஏற்ற இறக்கங்களுக்கு இடையே கால இடைவெளி மாறினால், அந்த ஆய்வுக் கருவியின் குழாய் நீளம் சுருங்கி விரிந்துள்ளது என்று அர்த்தம். அதை நோக்கியே விஞ்ஞானிகளின் கவனம் வருடக்கணக்கில் குவிந்திருந்தது.
ஆய்வுக் கருவியின் குழாயில் ஈர்ப்புக் கவர்ச்சி அலைகள் ஏற்படுத்தும் சுருக்கம் என்பது மிக மிக நுணுக்கமானது. பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தொலைவை அணு அணுவாக அளவிடுவதைப் போல இந்தச் சுருக்கத்தை அளக்க வேண்டும்.

**கூடலின் மொழி**
விண்வெளியில் ஏதோ ஓர் இடத்தில் சூரியனைப் போன்று 29 மற்றும் 36 மடங்குகள் அதிகமான நிறை கொண்ட இரண்டு ராட்சக் கருந்துளைகள் அல்லது விண்மீன்கள், ஒன்றை ஒன்று சுற்றிக்கொண்டே மோதிப் பிணைந்துள்ளன. அந்த நிகழ்வால் ஏற்பட்ட ஈர்ப்புப் புலத்திலிருந்து கிளம்பிய அலைகளைத்தான் தற்போது இந்த ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
மோதிய அந்த இரண்டும் பிணைந்துவிட்டன. அதன்பின் அதன் நிறை சூரியனைப் போன்று 62 மடங்குகளாக மாறிவிட்டது. மிச்சமிருந்த நிறை ஆற்றலாகவும் பொருளாகவும் விண்வெளியில் தூக்கி வீசியடிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வால் உருவான ஈர்ப்புக் கவர்ச்சி அலைகள்தான் பிரபஞ்சத்தின் கீச்சுக்குரல் போல வெளிப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**அண்டவெளி - காலம்**
ஐன்ஸ்டைன் தனது பொதுச் சார்பியல் கோட்பாட்டை 1916இல் வெளியிட்டார். பெரும் நிறை உடைய பொருள்கள் ஒன்றை ஒன்று சுற்றி வந்தாலோ அல்லது வெடித்துச் சிதறும்போதோ ஈர்ப்புக் கவர்ச்சி அலைகள் வெளியாகும் என்கிறது அந்தக் கோட்பாடு.
ஐன்ஸ்டைன் நூறு வருடங்களுக்கு முன்னால் கணிதச் சமன்பாடுகளாய்க் கணித்த ஈர்ப்புக் கவர்ச்சி அலைகளை விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாகத் தேடி வந்தனர். ஐன்ஸ்டைனுக்கு முன்னதாக வாழ்ந்த விஞ்ஞானிகள் ஈர்ப்புப் புலத்தை மின்சாரம் போன்ற ஒரு வகை விசையாகத்தான் கருதினார்கள். அண்டவெளியும் காலமும் தனித்து இல்லை. இரண்டும் இணைந்துள்ள ஒன்று. ஈர்ப்புப் புலம் என்பது உள்ளபடியே கால - அண்டவெளியில் ஏற்படும் வளைவாக்கம் (curvature) என்று ஐன்ஸ்டைன் தனது கருத்துக்களால் நிறுவினார். ஈர்ப்புக் கவர்ச்சி அலைகள் கண்டுபிடிப்புடன் அவரது இந்தக் கருதுகோளுக்கு, தற்போது வலுச்சேர்ந்திருக்கிறது.
இந்த ஆய்வுப் பணி 15 நாடுகளைச் சேர்ந்த 83 நிறுவனங்களில் பணியாற்றும் 1,006 விஞ்ஞானிகளால் கூட்டாக 1997 முதல் நடத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள சென்னை கணிதவியல் நிறுவனம் அதில் ஒன்று.
உலகில் இதற்கான ஆய்வுகூடங்கள் அமெரிக்காவில் இரண்டும் ஜெர்மனியிலும் இத்தாலியிலும் தலா ஒன்றுமாக உள்ளன. அமெரிக்காவின் ஆய்வுக் கூடங்கள் மிக நவீனமானவை. அங்குதான் இந்தக் கண்டுபிடிப்பு நிகழ்ந்துள்ளது. இரண்டு மையங்களில் உள்ள கருவிகளிலும் ஒரேவிதமான ஆய்வு முடிவுகள் வந்துள்ளன. எனவே, ஈர்ப்புக் கவர்ச்சி அலைகளைக் கண்டுபிடித்து விட்டோம் என்று விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.
பிரபஞ்சம் பேசிவிட்டது. அந்த மொழியின் இலக்கணம் என்ன என்பதையும் அடுத்தகட்டமாக நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

(நன்றி: த ஹிந்து)

# தமிழர்களின் உணர்வுகளைக் காயப்படுத்திய



சேரலாதன்

# தி.மு.க, காங்கிரஸ் கூட்டு

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கவும் காங்கிரஸ் கட்சியும் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவது உறுதியாகிவிட்டது. இதன் மூலமாக ஈழத் தமிழர்களின் உணர்வுகளை தி.மு.க. தலைவர் கருணாநிதி மீண்டுமொரு தடவை காயப்படுத்தி விட்டார்.

கடந்த 2009 ஆம் ஆண்டை ஈழத் தமிழர்கள் ஒரு போதுமே மறந்துவிட மாட்டார்கள். தமிழர்களை மீட்டெடுப்பதற்கான மனிதாபிமானப்போர் என்ற மகிந்தவின் போலித்தனமான பரப்புரையுடன் அந்த வருடம் இடம்பெற்ற இறுதிப் போர் ஈழத் தமிழர்களின் இருப்பையே ஆட்டம் காணச்செய்து விட்டது. போரின்போதும், போரின் பின்னரும் தமிழர்கள் ஈவு, இரக்கமின்றிச் சின்னாபின்னப் படுத்தப்பட்டனர். தமிழ் இனத்தை முற்றாகவே அழித்து ஒழித்துவிட வேண்டுமென்ற கொடிய எண்ணத்துடன் வன்செயல்கள் தாராளமாகவே கட்டவிழ்த்து விடப்பட்டன. கேட்பதற்கு எவருமே இல்லாத நிலையில் அப்போதைய ஆட்சியாளர்களும், அவர்களது ஏவலாளர்களும் தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட்டனர். இதற்கெல்லாம் இந்திய ஆட்சியாளர்களின் ஆசீர்வாதமும், ஒத்துழைப்பும் தாராளமாகவே கிடைத்து வந்தன.

**சோனியாகாந்தியின் அதிகாரம்**

மன்மோகன் சிங் பெயரளவில் மட்டுமே பிரதமர் பொறுப்பில் அமர்ந்திருந்த போதிலும் சோனியா காந்தியே அரச நிர்வாகத்தைத் தனது முழுக்கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தார். மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி என்ற வகையில் காங்கிரஸ் கட்சி அவரது தலைமையின் கீழ் செயற்பட்டு வந்தது. அவர் ஒரு இத்தாலியப் பெண்ணாக இருந்த போதிலும் நேரு குடும்பத்தில் ஒருவராகவே கணிக்கப்பட்டார். சகல தகுதிகளும் இருந்தும் இந்தியாவில் பிறக்கவில்லை என்ற ஒரே காரணத்தினால் அவரால் நாட்டின் பிரதமர் பதவியில் அமரமுடியவில்லை. ஆனால் அதிகாரம் முழுவதையும் அவரே தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தார்.

இலங்கையில் இறுதிப்போர் இடம்பெற்றபோது இந்தியாவின் மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு பதவி வகித்தது. இந்த அரசில் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. முக்கிய பங்கு வகித்தது. அந்தக் கட்சியைச் சேர்ந்த சிலர் மத்திய அமைச்சர்களாகவும் பதவி வகித்தனர். இதைவிட சோனியாவும், கருணாநிதியும் சிறந்த முறையில் உறவுகளைப் பேணிக்கொண்டனர். இதேவேளை தமிழ்நாட்டில் தி.மு.க ஆட்சி இடம்பெற்றிருந்தது. காங்கிரஸ் கட்சியின் ஆதரவும் அரசுக்கு இருந்தது. அவ்வப்போது அமைச்சுப் பதவிகள் தொடர்பான சர்ச்சைகள் இருந்தபோதிலும் காங்கிரஸ் மேலிடத்தின் பணிப்புக்கு அமைவாக பிளவு ஏற்படவில்லை.

**இலங்கையில் இறுதிப்போர்**

இலங்கையில் இறுதிப்போர் இடம்பெற்றபோது பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். ஏராளமானவர்கள் தமது அங்கங்களை இழந்தனர். பலர் மோசமான காயங்களுக்கு உள்ளாகினர். தமிழ்ப் பெண்கள் இலங்கைப் படையினரால் பல்வேறு வகையிலும் சீரழிக்கப்பட்டனர். வெள்ளைக்கொடி ஏந்தியவாறு சரணடையச் சென்றவர்களும், உறவினர்களால் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களும் காணாமற்போனவர்களின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இவர்களின் கதியை அறிந்துகொள்ள முடியாத நிலையில் உறவினர்கள் கலங்கி நிற்கின்றனர். தற்போது இவர்கள் இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

> “இலங்கையில் இறுதிப்போர் இடம் பெற்றபோது இந்தியாவின் மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான கூட் டணி அரசு பதவி வகித்தது. இந்த அரசில் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. முக்கிய பங்கு வகித்தது. அந்தக் கட்சியைச் சேர்ந்த சிலர் மத்திய அமைச்சர் களாகவும் பதவி வகித்தனர். இதைவிட சோனியாவும். கருணாநிதியும் சிறந்த முறையில் உறவுகளைப் பேணிக்கொண்டனர்.

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கெல்லாம் இந்தியாவும் துணைபோனதுதான் வேதனையான விடயம். அதைத் தட்டிக் கேட்பதற்கு தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்த தி.மு.கவுக்கு துணிவு இருக்கவில்லை. தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த கருணாநிதி உணவு தவிர்ப்புப் போராட்டம், அது இதுவென ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டாரே தவிர போரை நிறுத்துவதற்கோ, தமிழர்களைக் காப்பாற்றுவதற்கோ எதையுமே செய்யவில்லை. மாறாக இந்திய மத்திய அரசின் நடவடிக்கைகளுக்குத் தமது ஆதரவையே வெளிப்படுத்தி வந்தார்.

தற்போது தி.மு.க. ஆட்சியில் இல்லை. எதிர்க்கட்சி என்ற அந்தஸ்துக்கூட அந்தக் கட்சிக்கு இல்லை. இந்த நிலையில் உட்கட்சிப் பூசல்கள் வேறு அந்தக் கட்சியை ஆட்டிப் படைக்கின்றன. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட தி.மு.கவால் ஒரு நாடாளுமன்ற ஆசனத்தைக்கூடப் பெறமுடியவில்லை. காங்கிரஸின் நிலையும் இதுதான். மக்களின் ஆதரவைப் பெரிதும் இழந்து நிற்கும் இந்த இரண்டு கட்சிகளும் தற்போது கூட்டணி அமைத்துள்ளமை அரசியலில் வேடிக்கையானதொன்றாகவே பார்க்கப்படுகின்றது.

**இந்தியாவால் தமிழர்களுக்கு நன்மையில்லை**

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் இந்தியாவின் மத்தியிலோ அல்லது தமிழ் நாட்டிலோ எவர் ஆட்சிக்கு வந்தாலும் பயனொன்றும் கிடைக்கப்போவதில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க. இணைவதால் பாதகமான விளைவுகளே கிடைக்கப் போகின்றது. ஜெயலலிதா தமது பங்குக்கு அவ்வப்போது இலங்கைத் தமிழர்களுக்குச் சார்பான சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டபோதிலும் அவற்றினாலும் பயன் எதுவும் ஏற்படவில்லை.

தற்போது செல்லாக் காசாகிப்போன தமிழ்நாடு காங்கிரசுடன் தி.மு.க.கூட்டணி அமைப்பதால் அதற்குப் பயன் எதுவும் கிடைத்துவிடப் போவதில்லை. அதேபோன்றுதான் இலங்கைத் தமிழர்களுக்கும் நன்மை கிடைக்கப் போவதில்லை என்பதோடு எதிர்மாறான பயன்களே கிடைக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மிஷனரிக் கல்வியில் சைவத் தமிழ் தவிர்க்கப்பட்டது

■ பேராசிரியர்
க.சிவலிங்கராஜா

19ஆம் நூற்றாண்டுத் தமிழ்க்கல்விப் பயிற்றலில் கடைப்பிடிக்கப்பட்ட பாடத்திட்ட ஒழுங்கு முறைகள் பெரும்பாலும் மரபுவழிக்கும், நிறுவன ரீதிக்கும் ஒரே தன்மையுடையவையாகவே காணப்படுகின்றன. மத விடயத்தில் மாத்திரம் சிற்சில வேறுபாடுகள் காணப்பட்டன. 19ஆம் நூற்றாண்டில் நிறுவன ரீதியான பாடசாலைகள் இரண்டு வகையாகக் காணப்பட்டன. ஆங்கிலமும் தமிழும் போதிக்கப்பட்ட பாடசாலைகள் ஒருவகை. தனியே ஒரு தமிழ்க் கல்வி மாத்திரம் போதிக்கப்பட்ட பாடசாலை இன்னொருவகை. இந்த இரு வகைப் பாடசாலைகளுக்கும் ஒரு பொதுவான தமிழ்ப் பாடத்திட்டம் அமைந்திருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலமொழி மூலம் போதிக்கப்பட்ட பாடசாலைகளில் தமிழ் இலக்கிய இலக்கணம் ஒரு பாடமாக மாத்திரம் இருந்தது. பெரும்பாலும் கிறிஸ்தவப் பாடசாலைகளாக இருந்தமையால் இந்துசமயம் சாராத நீதி இலக்கிய நூல்களே இவர்களின் பாடத்திட்டமாக இருந்தது. 19ஆம் நூற்றாண்டுக் கிறிஸ்தவப் பாடசாலைகளின் பாடத்திட்டம் பற்றி அறியப் பின்வரும் கூற்று உதவுகின்றது.

"கிறிஸ்தவ மிஷனரிமார் ஏனைய மதத்தவரின் கருத்துக்களைக் கூறும் பகுதிகளைத் தம் பாடசாலைகளில் அனுமதிக்காமல் தடுக்கவே பாடசாலைகளில் தமிழ் இலக்கியங்களில் இந்து பாடநூல்களைத் தெரிந்து வழங்கினார்கள். அவர் தம் தெரிவு முறை மதத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. மத அடிப்படையைக் கொண்டிருந்த தமிழ் இலக்கியத்திலே அவர் தம் வேலை அரிதாக முடிந்தது. எனவே, தமிழ் இலக்கியத்தின் பெரும் பகுதி - உயிர்ப்பகுதி மினரிமாரின் கல்வியிலே தவிர்க்கப்பட்டு அறம், நீதி உணர்த்தும் பகுதிகளே பாடமாக அமைந்தன." நீதி நூற்றிரட்டு, தமிழ்ச் செய்யுள் கலம்பகம் முதலான தொகுப்புக்களுக்கான சூழல் எவ்வாறு எழுந்தது என்பது தெளிவாகின்றது.

19ஆம் நூற்றாண்டுக் கிறிஸ்தவக் கல்விச் சூழலில் பாடத்திட்டமாக அமைந்த தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலும் சைவசமயச் செய்யுள்கள் இடம்பெறவில்லை என்பது உண்மையே. எனினும் சிற்சில விதிவிலக்குகளும் காணப்பட்டன. உதாரணமாக வட்டுக்கோட்டைச் செமினறியிலே கந்தபுராணம் முதலிய சைவ இலக்கியங்களும் போதிக்கப்பட்டுள்ளமையைக் குறிப்பிடலாம்.

நிறுவனமயப்பட்ட பாடசாலைகளிலே ஆரம்ப வகுப்புக்களுக்கு நீதி நூல்களே பெரும்பாலும் போதிக்கப்பட்டுள்ளன. அந்தக் காலகட்டத்திலே ஆறுமுகநாவலர் உள்ளிட்ட தமிழ் அறிஞர்கள் பலர் நீதிநூல்களை அச்சிட்டும், உரையெழுதியும் வெளியிட்டமைக்கு முக்கிய காரணம், அவை அந்தக் காலப் பாடத்திட்டத்தில் இடம் பெற்றமையே என்று கூறலாம்.

19ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணக் குடாநாட்டில் வழக்கத்திலிருந்த பாடத்திட்டம் பற்றி 1841ஆம் ஆண்டு உதயதாரகைப் பத்திரிகையிலே ஒரு செய்தி வெளியாகியிருந்தது. அந்தச் செய்தியின் ஒரு பகுதி பின்வருமாறு: இப்பொழுது படிப்பிக்கும் தமிழ்க் கல்விகளான அரிவரி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருவள்ளுவர் குறள், நல்வழி, வாக்குண்டாம், நன்னெறி, நீதிவெண்பா, நாலடியார், சதுரகராதி, வாழ்த்துமாலை, தென்னூல் விளக்கப் புகழ்ச்சி மாலை, திருவள்ளுவமாலை, கணக்கு, அந்தாதி, நைடதம், சோதிடம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், நிகண்டு, அரும்பொருள் விளக்கம், இராவணசித்தர் சூத்திரம், காவியம், நன்னூல், வைத்திய சாஸ்திரம், ஆகமம் முதலியவைகளே.

மேற்காட்டிய பகுதி, வகுப்பு எல்லைகளைக் கடந்து நடைமுறைப்படுத்தப்பட்ட பாடத்திட்டத்தை ஓரளவுக்கு முழுமையாகத் தருகின்றது என்று கருதலாம்.

19ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கல்வி மரபிலே நடைமுறைப்படுத்தப்பட்ட பாடத்திட்டத்தை முழுமையாக அறிந்துகொள்ள ஆறுமுகநாவலரின் பாலபாடங்கள் பெருமளவுக்கு உதவுகின்றன.

மாணவரின் அறிவு நிலையை மனங்கொண்டு தயாரிக்கப்பட்ட முதல் தமிழ்ப் பாடநூல் நாவலரின் பாலபாடமே என்று கூறலாம். பாலபாடத்தின் அமைப்பு ஒருவகைப் படிமுறையைக் கொண்டதாகவே இருக்கின்றது. முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் பாலபாடங்களையே நாவலர் எழுதினார் என்பர். இந்த நான்கு பாலபாடங்களிலும் கல்விப் போதனை முறையைப் பெருமளவுக்கு மனங்கொண்டு மாணவனின் உடல், உள வளர்ச்சி அடிப்படையிலேயே வகுக்கப்பட்டுள்ளன. மொழியறிவைப் படிப்படியாக வளர்த்துச் செல்வதற்கு வசதியாகவும், இலக்கியங்களை (செய்யுள்) இலகுவாகத் தொடங்கிப் படிப்படி யாகக் கற்கவும் தக்கவகையில் அமைக்கப்பட்டுள்ளன.

பாலபாடங்களிலே தமிழ் உரைநடைப் பகுதிகளையும் நாவலர் புகுத்தியுள்ளார். காலத்தோடு ஒட்டி நாவலர் தமிழ்க் கல்வி வளரவேண்டும் என்பதில் கொண்டிருந்த அதீத ஈடுபாட்டையே உரைநடைப்பகுதி, வசனமெழுதும் பகுதி என்பன காட்டி நிற்கின்றன. மரபுவழிக் கல்வியில் காணாத உரைநடைப் பாரம்பரியத்தை 19ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கல்வியில் மிஷனரிமாரைப் பின்பற்றி சேர்த்த பெருமை நாவலரையே சாரும்.

இரண்டாம் பாலபாடத்திலே கதை என்னும் ஒரு பகுதியையும் அவர் சேர்த்திருப்பது அவதானிக்கக்கூடியது. சிறிய கதைகளை உரைநடையில் வாசிக்கவும், எழுதவும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பாலபாடத்திலே இடம்பெறும் கதைகள் பெரும்பாலும் கிராமங்களில் வழங்கப்பட்ட நாட்டார் கதைகளே. ஆனால், நாட்டார் கதைகளைச் செந்நெறிப் பாங்கான செந்தமிழ் நடையிலே நாவலர் தமது பாலபாடங்களில் எழுதினார்.

## தமிழ் மரபுவழிக் கல்வியில் பாடத் திட்டம் - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுத் திட்டமும் தமிழர்களும்

ம.கணபதிப்பிள்ளை

அரசியலுக்குச் சாணக்கியம் இன்றியமையாதது: சாணக்கியம் என்றால் இராஜதந்திரம், மூலோபாயம் என்று பெயர் பெறும்.

"படை குடி கூழ் நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" - என்ற இறைமாட்சியில் வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். நட்பு என்ற அரச அங்கத்தில் சாணக்கியம் இடம்பெறுகிறது.

கூட்டமைப்புக் கூறுகிறது பிளவுபடா இலங்கைக்குள் அதியுச்ச அதிகாரப் பகிர்வு என்பதாகும். இரு தேசம் ஒரு நாடு என்பது கூட்டமைப்பு எதிர்ப்பாளர்களின் தேசியமாகும்.

இந்த இரு பிரிவினரிடத்திலும் சாணக்கியம் விளையாடுகிறது. சில வேளைகளில் எமது முதலமைச்சர் ஊமையாகிப் போவதற்கும் அதுவே காரணமாகும். மோதகத்துக்கும் கொழுக்கட்டைக்கும் உள்ளீடு ஒன்றுதான். ஆனால் அவற்றின் வடிவமே வேறுவேறாய் இருக்கின்றதென்று நாம் பொருள் கொள்வோம்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன்கண் விடல்"

நீண்ட காலம் இழுத்தடிக்கப்பட்ட வடமாகாணத் தேர்தலில் அந்தத் தலைமைத்துவப் பதவியை எட்டப் பலர் அதில் கண் வைத்திருந்தனர். மேலே குறிப்பிடப்பட்ட குறட்பாவுக்கமைய இதுவரை அரசியல் பக்கம் சாராது ஆன்மிகத்துறையில் கால் பதித்து நடந்துவந்த க. விக்னேஸ்வரனே அந்தப் பதவிக்கு உகந்தவர், ஏற்றவர் என்று தேர்ந்து எடுத்து அந்தக் கதிரையை அலங்கரிக்க வைத்தவர் சம்பந்தன் ஐயாவே. இஃது அவரது சாணக்கியத்தின் அடையாளம் .

கொழும்பு நகரை வாழ்விடமாகக் கொண்ட க.வி.விக்னேஸ்வரனை யாழ். மண்ணுக்கு அழைத்து உலகறிய வைத்த பெருமை கூட்டமைப்புக்கே உள்ளது.

கூட்டமைப்பு என்ற வீட்டுக்குள் உள்வாங்கப்பட்ட அவர் கொள்கை கோட்பாடுகளில் அவர்களுக்கிடையில் முரண்பட்டிருக்கலாம். அதில் தவறில்லை. தமது கருத்தைச் சிந்தனையின் ஊற்றை அவர்களுக்குத் தெளிவுபடுத்தி ஒருமைப்பாடு கண்டிருக்கலாம். அப்படிச் செய்யாது அடுத்த வீட்டை எட்டிப்பார்த்து அவர்களுடனும் மற்றும் பலரைத் துணைக்கழைத்தும் பேரவையின் பெயரால் தமது எண்ணத்தை பகிரங்கப்படுத்தியுள்ளார். பதவிக்கு வந்தபோது அவர் அடிக்கடி கூறியது "தாம் ஓர் அரசியல்வாதியல்ல நிர்வாகியே" என்பதாகும். நிர்வாகி என்று சொல்லும்போது அவருக்கு மேலே ஒரு மேலவர் இருக்கிறார்; அந்த மேலவரின் பணிப்புக்கமையவே" செயற்படுவேன் என்ற கருத்தை அவரது கருத்து உறுதிப்படுத்துகிறது. அந்த நிர்வாகி அந்த மேலவரை எள்ளளவும் பொருட்படுத்தாமல் செயற்படுவது தக்கவர்க்கு ஏற்றதொன்றா?

அண்ணல் காந்தி அவர் ஒரு மகாத்மா. அவர் ஓர் அரசியல்வாதியல்லர். அவர் ஒரு தொண்டன். சீமைக்குச் சென்று பரிஸ்டர் பட்டம் பெற்றவர். வழக்குப் பேசி உழைப்பதைப் புறம் தள்ளிவிட்டுப் பிடித்தமான ஓர் இடத்தில் ஆச்சிரமம் அமைத்து நெசவுத் தொழிலை மேற்கொண்டார். கோடானு கோடி இந்திய மக்களின் துயர் துடைக்கும் எண்ணத்தில் அவர் எடுத்த முயற்சியது.

ஆங்கிலேயர் ஆட்சியில் இந்திய மக்களின் துன்பதுயரங்களைக் கேட்டறிந்து அப்போது இந்திய ஆள்புலப் பொறுப்பாளியாயிருந்த வைச்சிராய்க்குத் திருமுகங்களை எழுதினார். அந்தத் திருமுகங்களில் காணப்பட்ட உண்மைத் தன்மையை உள்வாங்கிய வைச்சிராய் அவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்த முற்பட்டார். அண்ணல் காந்தியின் தூய்மையான சேவையின் பயனை மக்கள் அனுபவித்தனர். எண் திசையும் அவரின் புகழ் பரவியது.

இதைக் கண்ணுற்ற சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்து வந்த காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் அண்ணலின் ஆச்சிரமம் நோக்கிப் பயணித்தனர். உள்ளங்கள் கலந்தன. அண்ணலும் அவர்களுடன் இணைந்தார். அவரைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக்க முற்பட்டனர். அதற்கு அண்ணல் இசையவில்லை. கட்சியை நெறிப்படுத்தினார். அகிம்சை நெறி பிறந்தது. ஒருநோக்கு ஓர் இலக்கு இந்திய விடுதலையே!!

அவர்கள் பின்னே மாநில மக்கள் எல்லோரும் அணியணியாக ஒன்றுதிரண்டு "வந்தே மாதரம்! வந்தே மாதரம்!!" என்று ஓங்கிக் குரல் கொடுத்தனர். அந்தக் குரல் ஒலி கதிரவனே மறையாத ஆங்கிலப் பேரரசை ஆட்டம் கொள்ள வைத்தது. நிலை குலைந்த ஆங்கில அரசு ஆட்சிப் பொறுப்பை இந்திய மக்களிடம் ஒப்படைத்தது 1947ஆம் ஆண்டு.

ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இந்தியத் தலைவர்கள் சட்டமேதை அம்பேத்கரைக் கொண்டு தமக்கென ஒரு அரசமைப்பைத் தயாரித்தனர். தூய்மையான உள்ளத்தோடு சட்டவாக்கம் தயாரிக்கப்பட்டது. மொழி வாரி மாநிலங்களாக ஆட்சி அதிகாரம் பரவலாக்கப்பட்டது. இன்று அது ஒப்பீட்டளவில் உலக வல்லரசுகளோடு ஒன்றாகத் தலை நிமிர்ந்து நிற்கின்றது.


அங்கே ஒரு சிறப்பு ஜனநாயகத்தின் உண்மைத் தன்மை மதிக்கப்படுகிறது. பேணப்படுகிறது என்பதே! சிறுபான்மை இனத்தவர்களும் பிரதமராகலாம்; ஆட்சித் தலைவராய் வரலாம் என்பதை நடைமுறையில் காட்டி நிற்கின்றதே அந்தப் பாரதபூமி!

எங்கள் நாட்டு அரசியல் எப்படி இருக்கிறது? அது சாக்கடையாக இருக்கிறது. மூவின மக்களும் ஒற்றுமையாய் போராடியல்ல வாதாடிப் பெற்ற சுதந்திரம் குரங்கின் கைப் பூமாலைபோல அதை எங்கே எப்படி அணிவதென்று தெரியாமல் இருக்கின்றது. ஆறு கடக்கும்போது அண்ணனும் தம்பியும்; ஆறு கடந்ததும் நீயாரோ! நான் யாரோ! என்ற நிலையிலேயே இருக்கின்றது. குற்றம் இழைத்த படை வீரர்களைக் காப்பதுதான் அரச நீதியாக இருக்கின்றது.

> எம்மத்தியிலே அரசியல் தெரிந்தவர்கள், பல்வேறு நாடுகளின் அரசியல் வரைவுகளைக் கற்றவர்கள்; தெளிந்தவர்கள் ஆட்சியின் நுட்பங்களை உணர்ந்தவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் இது எங்கள் பிரச்சினை, தமிழினப் பிரச்சினை இதில் தங்களின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்றுணர வேண்டும்.

அரசிடமும் படையினரிடமும் தவறில்லை என்றால் சர்வதேசத்தின் விசாரணைக்குத் துணிந்து முகம் கொடுப்பதற்குத் தயங்குவதேன்? அரசின் கூற்றில் தடுமாற்றம் காணப்படுகிறது. அது எதிரணியினருக்குச் சாதகமாக அமைகிறது.

அரசின் ஒத்துழைப்போடு அளிக்கப்பட்ட வாக்குறுதியின்படியும் நிறைவேற்றப்பட்ட ஜெனிவா தீர்மானம் உள்ளபடி நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் மனித நீதி ஆணையம் உறுதியாக இருக்கின்றது. விளைவு நாட்டில் குழப்பமும் குமுறலும் கொந்தளிப்பும் தலைகாட்டத் தொடங்கி விட்டன. அரசின் உறுதிப்பாட்டில்தான் நல்லாட்சியின் வெற்றி தங்கியிருக்கின்றது என்பது வெளிப்படை. அரசில் இடம்பிடித்த இன விரோத செயற்பாட்டாளர்களின் வாயை அரசு அடக்கும் என்றால் அது நல்லாட்சியின் விடிவுக்கு விடிவெள்ளியாக அமைந்துவிடும். இந்த நிலையிலே தமிழர்களின் தீர்வு எதுவாக அமைய வேண்டும் என்பது கேள்வியாகிறது.



எம்மத்தியிலே அரசியல் தெரிந்தவர்கள், பல்வேறு நாடுகளின் அரசியல் வரைவுகளைக் கற்றவர்கள்; தெளிந்தவர்கள் ஆட்சியின் நுட்பங்களை உணர்ந்தவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் இது எங்கள் பிரச்சினை, தமிழினப் பிரச்சினை இதில் தங்களின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்றுணர வேண்டும். தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைமையோடு பேசவேண்டும். கலந்துரையாட வேண்டும். அதற்குத் தமிழர் தலைமையும் ஒத்துழைப்புத் தர வேண்டும். தமிழர்கள் ஒருமனதாக எடுத்த முடிவு இதுதான் என்று ஒரு முடிவை அரசின் முன்பாக வைக்க வேண்டும்.

இந்தத் தீர்வுத் திட்டத்தையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். இதைவிட்டு எதிரணியாய் நின்று ஒருவர்கொருவர் வசைபாடுவதையும் வீம்பு பேசுவதையும் அதனால் தமிழர் மனம் குழம்பு வதையும் தமிழர்கள் வெறுக்கிறார்கள் என்பதும் வெளிப்படையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஜி.ராம்ஜி

# கூகுள் மருத்துவம்!




எனது நண்பரின் மனைவி கர்ப்பமாக இருக்கிறார். திருமணமாகி இரண்டு வருடங்களின் பின்னர்தான் அவர்களுக்குக் குழந்தை கிடைத்திருக்கிறது. அவர்கள் நல்லூரில் வாழ்கிறார்கள். கடந்த ஒரு வருடமாக அவர்கள் பெண் நோயியல் நிபுணரையும் குழந்தைப்பேறு வல்லுநரையும் சந்தித்திருக்கிறார்கள். மருத்துவர்களால் இன்னதென அடையாளம் காணப்படாத பிரச்சினையால் அவர்களின் குழந்தைப்பேறு இரண்டு வருடங்களால் தள்ளிப்போய்க்கொண் டிருந்தது. இப்போதும் இன்ன காரணம் எனத் தெரியாமலேயே அவரது மனைவி கர்ப்பமாகி இருக்கிறார். சில மருத்துவ சோதனைகளின் பின்னர் சிகிச்சையை ஆரம்பிப்பதற்குக் காத்திருந்த தருணத்தில் அவர் திடீரெனக் கர்ப்பமாகிவிட்டார்.

நண்பர் இது பற்றி என்னிடம் பேசிக் கொண்டிருக்கும்போதெல்லாம் கூடவே கூகுளைப் பற்றியும் பேச ஆரம்பித்துவிடுவார். வல்லுநர்களை நாடுவதற்கு முன்பாகவும் அவர்களுடன் கலந்துரையாடுவதற்கு முன்பாகவும் தனக்கிருக்கக் கூடிய பிரச்சினைகள் என்று கருதுபவை குறித்து அவரது மனைவி கூகிள் தேடுபொறியில் தேடி அறிந்து கொண்டு விடும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார். ‘‘அவளின் விளக்கங்களைக் கேட்டு தலையிடிக்குது” என்று அது பற்றி நண்பர் சலித்துக் கொள்வார். குழந்தைப்பேறு வல்லுநரிடம் போனால், “அந்தாள் கதைக்கிறதைவிட இவள் கதைக்கிறதுதான்கூட. கூகுள்ள பார்த்ததை இவள் சொல்லச் சொல்ல அது சரியா பிழையா? என்று சொல்லுறது அல்லது அதுக்கு ஏதும் மேலதிக விளக்கம் இருந்தாச் சொல்லுறதுதான் மருத்துவருக்கு வேலை என்றாக்கிப்போட்டாள்” என்றும் அவர் மேலும் சலித்துக்கொள்வார்.

“அது நல்லதுதானே!” என்று சிரித்துக்கொண்டே நான் அவரைச் சமாதானப்படுத்துவதுண்டு.

முன்பெல்லாம் ஒரு மருத்துவர் சொல்வது சரிதானா என்பதை உறுதி செய்துகொள்ள இரண்டாவதாக இன்னொரு மருத்துவரிடம் கருத்துக் (செகண்ட் ஒப்பீனியன்) கேட்பார்கள். பின்னர், மருத்துவர்கள் சொல்வதுசரிதானாஎன்பதைஇணையத்தளங்களில் சரிபார்த்துக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

இன்றைய காலகட்டத்தில் முதலில் இணையத்தில் தனக்கு என்ன நோயாக இருக்கும் என்பதைத் தெரிந்துகொண்டு, அது சரிதானா என்று உறுதி செய்துகொள்ள மருத்துவரை இரண்டாவதாக அணுகுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சில தளங்கள் மெய்நிகர் மருத்துவ ஆலோசனை மையங்களையே (Virtual Clinics) நடத்துகின்றன. போகிற போக்கைப் பார்த்தால், இன்னும் சில வருடங்களில் ‘ஒன்லைனி’லேயே குடலிறக்க (அப்பெண்டிஸ்) அறுவைச் சிகிச்சை செய்து கொண்டேன் என்றுகூடச் சிலர் பெருமைப் பட்டுக்கொள்ளக்கூடும்.

இணையத்தில் மருத்துவத் தகவல்களைத் தேடுவது பற்றிப் பல மருத்துவ இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. நோயாளிகளில் சுமார் 50% வரையானோர் மருத்துவத் தகவல்களை இணையத்தில் தேடுகின்றனர் எனப் பெரும்பான்மையான ஆய்வுகள் கூறுகின்றன. பெரும்பாலும் தங்களது நோயைப் பற்றியும், சிகிச்சை முறைகளைப் பற்றியும் மருந்துகளின் பக்க விளைவுகளைப் பற்றியும் தெரிந்துகொள்வதாகவே இந்தத் தேடுதல்கள் இருக்கின்றன. அவர்களில் பெரும்பாலோனோர் தாங்கள் இணையத்தில் விவரங்கள் தேடியதைப் பற்றித் தங்களது மருத்துவர்களிடம் கூறத் தயங்குகிறார்கள் என்றும் அந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தச் செயல்பாட்டில் நன்மை தரக்கூடிய அம்சங்களும் சில தேவையற்ற பாதகமான அம்சங்களும் உள்ளன.

## அதிகரிக்கும் வெளிப்படைத்தன்மை

மருத்துவ அறிவு என்பது ஒரு காலத்தில் மருத்துவர்களுக்கு மட்டுமே சொந்தமாக இருந்தது. ஆகவே, நோயாளிகளைப் பரிசோதித்தல், தேவையான பரிசோதனைகளைச் செய்தல், என்ன வகையான சிகிச்சை அளிக்க வேண்டும், அதன் சாதக பாதக அம்சங்கள் என்னனென்ன என்பதையெல்லாம் முடிவுசெய்வதில் நோயாளிகளுக்குப் பங்கு இல்லாமல் மருத்துவர்களே முடிவுசெய்வதாக இருந்தது. கிட்டத்தட்ட கடவுளிடம் சரணாகதி அடைந்த பக்தனைப் போல் இருந்தது. கடவுள் தவறு செய்ய மாட்டார். நமக்கு நல்லதுதான் செய்வார் என்ற நம்பிக்கையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இயங்கும் நிலை அது.

மக்களின் இந்த நம்பிக்கையைப் பயன்படுத்தித் தவறிழைப்பவர்களும் உள்ளனர். தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நோயைப் பற்றியோ சிகிச்சை முறைகளைப் பற்றியோ எதுவும் தெரியாமல் இருப்பவர்களின் அறியாமையே இதற்குக் காரணம். தங்களது நோய்களைப் பற்றிய விவரங்களை அறிந்தால் அதற்கான பல்வேறு வகையான சிகிச்சை முறைகள், அதன் சாதக பாதக அம்சங்களை ஆராய்ந்து முடிவெடுக்கும் பொறுப்பு நோயாளிகளுக்கும் கிடைக்கிறது. இது மருத்துவர்களைக் கிட்டத்தட்டக் கடவுளாகக் கருதும் நிலையிலிருந்து நல்ல ஆலோசகர்களாக மட்டும் காணும் மாற்றத்துக்கு வழிவகுக்கிறது. மருத்துவர், நோயாளி உறவில் வெளிப்படைத்தன்மை அதிகரிக்கும். எந்த அறிவும் குறிப்பிட்ட சாராரிடம் மட்டும் இல்லாமல் பரவலாக்கப்படுவதே நன்மை பயக்கும். தகவல் தொடர்பு அறிவியல் பெருக்கத்தில் துறைசார் அறிவு பரவலாக்கப்படுவதே ஜனநாயகச் செயற்பாடாகும்.

## விழிப்புணர்வை அதிகரிக்கும்

மருத்துவத் தகவல்கள் பரவலாக்கப்படுவதால் இன்னொரு நன்மையும் உண்டு. இன்றைய காலகட்டத்தில் நோயாளிகளுக்கு ஏற்படும் அசம்பாவிதங்களுக்கு எதிர்வினையாக மருத்துவர்களுக்கு எதிராகவும் மருத்துவமனைகளுக்கு எதிராகவும் அவதூறு பரப்புவதும் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதும் பெரிதும் நிகழ்கின்றன. வணிக மயமாக்கப்பட்ட மருத்துவத் துறையில் இருப்பவர்களின் செயல்பாடுகள் இதற்குக் காரணமாக இருந்தாலும், நோயின் தன்மை பற்றிய புரிதல் இல்லாமையே பல சமயங்களில் மருத்துவர்கள் மீதான தாக்குதல்களுக்கும் குற்றச்சாட்டுக்களுக்கும் காரணமாக அமைகின்றன. நோயின் தீவிரம், நோயாளியின் நிலை, ஏன் இந்தப் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன, இந்த சிகிச்சை ஏன் வழங்கப்படுகின்றது என்பனவற்றையெல்லாம் மக்களுக்குப் புரியுமாறு மருத்துவர்களால் விளக்க முடியாமல் போவதென்பது அடிக்கடி நிகழும் நிகழ்வே. இது துரதிர்ஷ்டவசமானது என்றபோதும், இந்த நிலையில் மருத்துவத் தகவல்களை இணையதளங்கள் மூலம் தெரிந்துகொள்வது இந்த இடைவெளியைக் குறைத்து மருத்துவர்கள் மீதான நம்பிக்கையை அதிகரிக்கவே செய்யும். மருத்துவத் துறையினருக்கும் தங்களது துறை சார்ந்த அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும்.

மேலும், வாழ்க்கை முறை மாற்றம், உணவுமுறை, உடற்பயிற்சி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், சீரான இடைவெளிகளில் செய்ய வேண்டிய நோய் அறியும் பரிசோதனைகள், தடுப்பூசிகள் எனப் பல விதமான தகவல்களும் இணையத்தில் குவிந்துள்ளன. இது மக்களிடம் விழிப்புணர்வை அதிகரிக்கப் பயன்படவே செய்யும்.

## நம்பகத்தன்மையற்ற தகவல் குவியல்

ஆனால், இதில் பாதக அம்சங்களும் உள்ளன. இணையத்தில் கொட்டிக்கிடக்கும் தகவல்களில் எது சரியானது என்பதைக் கண்டுபிடிப்பது அந்தந்தத் துறை வல்லுநர்களுக்கே சிரமமாக இருக்கும்போது, அந்தத் துறைக்கு அன்னியமானவர்களுடைய நிலையைச் சொல்லத் தேவையில்லை.

நம்பகத்தன்மையற்ற தகவல்கள், அடிப்படையற்ற பொய்கள், வெறுப்பை அடிப்படையாகக் கொண்ட தகவல்கள் என்று இணையம் நிரம்பி வழிகின்றது. யாரோ ஒருவருக்கு அபூர்வமாக ஏற்பட்ட ஓர் அசம்பாவிதமோ, பக்க விளைவோ பிரதானப்படுத்தப்பட்டு தகுந்த சிகிச்சையைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் முடிவெடுப்பதைப் பாதிக்க வைக்கின்றன. பெரும்பாலும் நம்பகமான அதிகாரபூர்வமான இணையத்தளங்களில் வரும் தகவல்களை மட்டும் நம்புவதே சிறந்தது. தனிநபர்கள் வலைப்பக்கங்களில், குழுக்களில் பகிரும் தகவல்களின் அடிப்படையில் முடிவெடுப்பது நல்லதல்ல.

தீர்க்க முடியாத நோய்களைத் தீர்க்கிறோம் என்று பல்கிப் பெருகும் போலிகளும் இணையத்தில் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ளன. இவர்களிடமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தனக்கு என்ன நோயாக இருக்கும்? இதற்கு என்ன சிகிச்சை சிறந்தது என்ற ஆலோசனைகளை இணையதளங்களில் பெறுவது சரியல்ல. மனித உடல் மருத்துவத் துறையினருக்கே முழுதும் விளங்காத வகையில் சிக்கலானது. ஒருவருக்கு ஏற்புடையதாக விளங்கும் ஒரு விடயம் இன்னொருவருக்கு எதிர்மாறான விளைவை ஏற்படுத்தக்கூடும். ஆகவே, நடைமுறை அனுபவம் இருப்பவர்களை அணுகுவதே சிறந்த வழியாகும். மருத்துவத் துறையினர் தரும் தகவல்களைச் சரிபார்க்கவும், குறிப்பிட்ட நோய், பரிசோதனை, சிகிச்சை போன்றவற்றைப் பற்றிய அறிவை மேம்படுத்தவும், தேவைப்படும்போது மருத்துவர்களுடன் விவாதிக்கவும் மட்டும் இணையம் தரும் தகவல்களைப் பயன்படுத்தவேண்டும். அதுதான் புத்திசாலித்தனம். மருத்துவ மாணவர்கள் தமது படிப்பில் சில ஆண்டுகள் கடந்ததும் நோய்களைப் பற்றிப் படிக்கவும் நோயாளிகளைப் பார்க்கவும் தொடங்குவார்கள். அப்போது அவர்களில் சிலருக்குத் தங்களுக்கும் பலவிதமான நோய்கள் இருப்பதாக எண்ணம் உண்டாகி அச்சப்படுவார்கள். இதை மூன்றாம் ஆண்டு சின்ட்ரோம் என்று அழைப்பார்கள். அதுபோல் பல அரிய நோய்களைப் பற்றி இணையத்தில் படித்துவிட்டு, அவை தனக்கும் இருக்கின்றனவோ என அச்சம் கொள்பவர்களும் உண்டு. இந்த நோய்க்கு சைபர்கோண்ட்ரியா (Cyberchondria) என்று பெயர். ஆயிரம் இணையத்தளங்கள் இருந்தாலும், ஒரு மருத்துவர் நேரம் ஒதுக்கிப் பொறுமையுடன் விளக்குவதற்கு எதுவும் ஈடாகாது. இணைய அறிவியல் வளர்ச்சியை மருத்துவர் நோயாளிகள் உறவைச் சீர்ப்படுத்தும் வகையில் பயன்படுத்துவதே ஆரோக்கியமாகும்.

*(கட்டுரையாளர் ஒரு மனநல மருத்துவர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்ந்த கல்வி ஞானம் எய்தி வாழ்வம் இந்த நாட்டிலே

கே.எஸ்.சிவஞானராஜா

தேர்ந்த கல்வி ஞானம் எய்தி வாழ்வம் இந்த நாட்டிலே என்பது பாரதியின் தீர்க்க தரிசனமான பாடல் வரியாகும். விடுதலை என்ற தேசிய கீதம் முழங்க, இந்தியாவோடு உலகத்துக்கும் சொல்லப்பட்ட செய்தியாகும். தேர்ந்தெடுக் கப்பட்ட கல்வியும் அதன் பயனாக வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் ஞானமும் யாம் பெற்று, இந்த நாட்டிலே சுதந்திரமாக வாழ வேண்டு மென்பதே விடுதலையின் செய்தியாகும்.

'ஏழையென்றும் அடிமையென்றும்
எவனும் இல்லை ஜாதியில்,
இழிவு கொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே
வாழி கல்வி, செல்வம் எய்தி
மனமகிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர்
சமானமாக வாழ்வமே'

இந்தியாவிலும், இலங்கையிலும், ஆபிரிக்காவிலும் மனிதம் வெல்லப்பட வேண்டும். இந்த எண்ணம் மேலோங்க வேண்டுமாயின், அவரவர் சமயத்தில் பூரண நம்பிக்கை வைத்தேயாக வேண்டும். அதன் மூலமே ஞானம் பீறிட வேண்டும். ஞானம் வந்துவிடுமாக இருந்தால், எளிமையும் சேர்ந்து பிறந்தே விடும். எளிமையும் வந்துவிடுமாக இருந்தால் இறைவனும் தானே வந்து குந்திவிடுவான். அதுதானே எமக்குத் தேவை. நாம் என்ன செய்கிறோமென்றால், அத்தனை பேராசைகளையும் வீட்டுக்குள் படுக்கை யறை வரையும் சேமித்து விடுகிறோம். பிறகென்ன அவ்வளவுதான். இலகுவாகப் பெறக்கூடிய ஞானமனைத்தையும் தொலைத்து விடுகின்றோம். தேர்ந்த கல்வி பெறுவதற்கு நாம்செய்ய வேண்டிய பயிற்சிகளை ஏனோ மறந்து விடுகின்றோம். தயவுசெய்து ஒவ்வொரு வீட்டிலேயும் இவற்றைச் செய்து பாருங்கள், முதலில் பிள்ளைகளுக்காக.

### பார்த்து எழுதுங்கள்

அது எதுவாகவும் இருக்கட்டும் சுலபமாக, எனது அப்பா, எனது அம்மா எனது ஆசிரியர், எனது பிள்ளைகள், எனது கிராமம், எனது பாடசாலை, எனக்குப்பிடித்த உணவு, எனக்குப் பிடித்த கவிதை, எனக்குப் பிடித்த காட்சி, நான் விரும்பும் பெரியார், நான் விரும்பும் தொழில் என்று, நீங்களும் பிள்ளைகளாக மாறுங்கள்.

### 'மனனம் பண்ணுங்கள்'

நீதி நூல்களாக சரி, திருக்குறளாக இருந்தாலும் சரி, பக்திப் பாடலாக இருந்தாலும் சரி அப்பா, அம்மா வாய்விட்டுப் பாடமாக்கவேண்டும். சாமியறைப் பிரார்த்தனை, பஜனை போதுமானதாகும். நாம் செய்கிறோமா? நாம் செய்யாமல் பிள்ளைகள் செய்யவேண்டுமென்று எப்படி எதிர்பார்க்கலாம்? சாமியறைப் பழக்கத்தையும் பாராயணத்தையும், பஜனையையும் விட்டு விட்டோமே.

### உரத்து வாசிக்கவும்

உங்களுக்குப் பிடித்த ஓர் ஊடகத்தை எடுத்து, அப்பாவோ, அம்மாவோ உரத்து வாசிக்கவும். உங்களுக்கு மிகவும் சங்கட மாக இருக்கிறதல்லவா? நாம் செய்தால்தான் பிள்ளைகளும் செய்வார்கள். தாம் கட்டளையிடுவோராக இருந்து கொண்டு வாசிப்பர். பாடுவர், ஆடுவர், பேசுவர், கும்பிடுவர், எழுதுவர், வணங்குவர் என்று பணிக்கப்படுவது, ஆற்றுப்படுத்தக்கூடிய ஆசிரியருக்கு ஊடாகச் செல்லப்பட வேண்டியதொன்றாகும்.(ஆசிரியர் பாட மாணவர் பாடுவர்)

### சமயம்

நாம் அதுவாக மாறாவிட்டால், சமயத்தின் தாற்பரியத்தை உணர்த்த முடியாது. நீளக்காற்சட்டை போட்டுக்கொண்டு, தைப்பொங்கல் பொங்கினால் என்ன என்று ஒரு சமூகம் கேட்குமாயின் அது யாழ்ப்பாணமாக இருக்க முடியாது.

கனடா, லண்டன், ஜேர்மனியில் வேட்டி கட்டிக் கொண்டு பொங்குவதை எவருமே மறுக்கவோ, மறைக்கவோ முடியவில்லை. நல்லூர் கோயிலுக்குள்ளே மேலங்கியோடு போனால் என்ன என்று எவராயினும் கேட்பதாக இருந்தால் அவர்களை சைவ சமயம் நிராகரித்து ஒதுக்கித் தள்ளிவிடும்.

மேலும், நோகாமல் கொள்ளாமல் வேட்டி கட்டுவர், விழுந்து கும்பிடுவர், அட்டாங்க நமஸ்காரம் செய்வர், பஞ்சாங்க நமஸ்காரம் செய்வர், யார் செய்வர்? ஆசிரியர் செய்து காட்ட மாணவர் செய்வர் என்று சொல்லப்பட வேண்டும். வழிகாட்டுபவரை அழுத்தி, மாணவர்கள் வடிவமைக்க வேண்டும்.

நவராத்திரி பூசைக்கு வரும்போது வேட்டி கட்டி வருமாறு பணிப்புரை விடுத்துவிட்டு, ஆசிரியர் நீளக் காற்சட்டையும், சேர்ட்டும், பெலிற்றும், சப்பாத்தும், தொலைபேசியுமாகக் காட்சி தந்தால் சமயம் எப்படி வளரும்? புத்தகத்தோடே சமயம் சமாதியாகிவிடும். சமயம் என்பது சாதனை. சாதனை என்பது திரும்பத் திரும்பச் செய்யப்படுவது. சமயம் மாணவர்களுக்கு வேதனையாக அமைந்து விடக்கூடாது. அது ஏனைய மதங்களால் வரவேற்கப்படுமளவுக்கு எம்மை நாம் தயார் செய்ய வேண்டும். நாமோ மூலை முடுக்கெல்லாம் போவதற்கும் சாதனை செய்வதற்கும் நம்மை நாம் தயார் செய்திருக்கிறோமா? இல்லை. சமயம் அடித்தளத்திலிருந்து கட்டியெழுப்பப்பட வேண்டும். தேர்ந்த கல்வியும், ஞானமும் அங்கிருந்து பிரவாகிப்பதற்கு நிபுணத்துவம் பெறவேண்டும். பெற்றிருக்கிறோமா?

'ஒன்றே குலம்', 'யாவரும் கேளிர்' ஆகிய இரு வேதங்களும் சமயத்தின் மூலமாகவே வேரூன்ற வேண்டும். இங்கே இடைவெளிகள் காணப்படுகின் றன. ஆத்மஜோதி முத்தையா இதில் வென்று விட் டார். சகல கோயில்களுக்கும் சென்று சமன் செய்தார்.

சமத்துவம் இறப்பின்போது வருவது அல்ல. நாம் வாழும் போதே வரவேண்டியது. சுடலை ஞானம் வரும்போதுதான் ஆண்டி அரசன் எல்லோருமே ஒன்றாகத் தெரிகிறது. வாக்குரிமை தந்து வாக்களிக்கும் போதுதான் ஜாம்பவானுக்கும், ஒதுக்கப்பட்டவனுக்கும் அரசனுக்கும் ஒரு வாக்குத்தான் என்று உணர்கின்றான். எவருமே இரண்டு வாக்குப் போடமுடியாது. சுடலையில் அரசனும், ஆண்டியும், கோடி மாடி தாடி வைத்திருந்தாலும் நெருப்பு, தன்னுடைய வேலையைக் கச்சிதமாக்கி பிணத்தைப் பாகுபாடில்லாமல் எரித்து முடிக்கிறது.

இறப்பு வரும் போதுதான் மனிதம் துளிர்க்கிறது. தலையிடியும் காய்ச்சலும் தனக்குத் தனக்கு வந்தால்தான் வலி எப்படி என்று புரியும். இல்லறத்தில் இருப்பவனுக் குத்தான் துறவறத்தைப் பற்றிச் சிந்திக்க முடிகிறது. துறவறத்துக்கு நேரே சென்றவர்க்கு இல்லறத்தின் மகிழ்ச்சி தெரிகிறது. கோடிவைத்திருப்பவன்மாடிகட்ட முடிவெடுக்கின்றான். தேடி வைக்காதவனோ ஆடு கட்டுமிடத்தில் வாழ்கின்றான்.

வீடு இல்லாதவன் சந்தோசமாகச் சிரித்து வாழுகின்றான். மாடியிலுள்ளவனோ சிரிக்கவே பஞ்சிப்படுகிறான். இந்த நிலை எப்போது மாறுகிறதோ, மாற்றப்படுகிறதோ அப்போதுதான் பாரதியார் எண்ணிய தேர்ந்த ஞானம் பீறிடும்.

'மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம், மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை, இனியும் உண்டோ?'

'தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினைஅழித்திடுவோம்' என்று இரங்கிய பாரதி,

'எல்லா உயிர்களிலும் நான் இருக்கின்றேன்' என்ற கண்ணபிரானின் தெளிந்த ஞானத்தை உணர்த்தி விடுகின்றார்.

'எல்லாரும் ஒரு நிறை, எல்லாரும் ஒரு விலை, எல்லாரும் இந்த நாட்டு மன்னர், எல்லாரும் ஒரு குலம், எல்லாரும் ஓர் இனம்' என்று ஆணித்தரமாக முழங்கியவர்–பாரதியே.

'மாடிவீட்டு ஜன்னல் எல்லாம் சட்டை
என் வீட்டில் சட்டை எல்லாம் ஜன்னல்'
'மாடி வீட்டில் பானை முட்டச் சோறு
என் வீட்டில் அறையெல்லாம் சேறு!'
'மாடி வீட்டில் அறையெல்லாம் கதவு
என் வீட்டில் கதவொன்றே அறைகள்'

இது புதுக்கவிதை

'திடங்கொண்டவர் மெலிந்தோரை இங்கு
தின்று பிழைத்திடலாமோ?'
'சிறியாரை மேம்படச் செய்தால்–பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்'

இங்கு தெய்வம் வாழ்த்தும் அளவுக்கு யாம் முன்னேறவில்லை என்பது உண்மையானது.

### மலையகம்

துன்பங்கள் எல்லாம் குவிந்ததனாலன்றோ மலைகள் தோன்றினாவோ என்னவோ, மண்சரிவுகள் நின்றபாடில்லை. மீரிய பெத்தையில் இன்னுமே காரியமெதுவும் நடக்கவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் லயங்கள் திருத்தப்படவில்லை. அவர்களது குருதியின் நிறம்தான் தேயிலைச் சாயங்களோ! தேயிலை, இறப்பருக்கு மலையக மக்களின் வியர்வையே உரமாகின்றது. அதனாலேதான் வியர்வையே எமக்குச் சுவைக்கிறது. அவர்களது கலை, கலாசாரப் பண்பாடு அடேயப்பா அபாரம். அற்புதம். பலே.

### சாகித்திய விழா

மத்திய மாகாண 2015, சாகித்திய விழா அண்மையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஹற்றனில் நடைபெற்ற தமிழ் சாகித்திய விழாவில் சொல்லப்பட்ட வாக்கியம் மந்திரமாக எழுதப்பட்டிருந்தது. அதுதான்,

'தேர்ந்த கல்வி ஞானம்
எய்தி வாழ்வம் இந்த நாட்டிலே' என்ற அற்புதமான, அர்த்த புஷ்டி யான, ஆழமான, சகோதரத்துவமான, சமாதானமான பாரதியின் பாடல் வரிகளாகும்.

அழகியல் அம்சங்களோடு மிளிர்ந்த சாகித்திய விழா ஹற்றனில் நடைபெற்றபோது, யாழ்ப்பாணத்தில் இருப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. தரமான நிகழ்வுகள், தரமான கௌரவிப்பு, தாற்பரியமான உயர் சிந்தனை, யாழ்ப்பாணப் பெருமகனின் பேரிலான ஓர் அரங்கு, நன்றி மறவாத மலையகம் என்றும் வாழவேண்டும்.

ஆத்மஜோதி முத்தையா அரங்கும், அவரது நாமமும் மலையகத்தின் தேர்ந்த கல்வி ஞானம் நீடு வாழ்வதற்குச் சிறந்த ஓர் எடுத்துக் காட்டாகும். மெல்லத் தமிழ் இனி அங்கு வெல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளே கைவிட்டால்....!

மிருசுவில் தமிழ் தாசன்

"உண்டகளை தொண்டனுக்கு முண்டு" மதிய உணவுக்குப் பின்பு ஒரு குட்டித்தூக்கத்துக்காக ஏங்கித் தவித்த கண்களை மெல்லக் கைகளினால் தடவி ஆசுவாசப்படுத்திக் கொண்டார் சிவ பெருமான். இருந்தாலும் தன்னையறியாத தூக்கக் கலக்கத்தில் இரண்டொரு தடவைகள் தூங்கி வழிந்து உமையம்மையின் மடி மீது சாய்ந்து எழுந்து கொண்டதையும் மறக்கவில்லை, இனியும் முடியாது. சற்றுத் தூங்கியெழுவோம் என்று எண்ணிக்கொண்டிருக்கையில் புள்ளி மயில் மீது மிக அவசரமாக வந்திறங்கினார் முருகப்பெருமான். முருகனின் திடீர் வருகையானது அம்மைக்கும் அப்பனுக்கும் சிறு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"அம்மை அப்பனே வணக்கம்! நானிப்போது பூலோகத்திலிருந்து வருகின்றேன்."

"அப்படியா முருகா! நல்லது. பூவுலகத்தில் என்ன விசேஷம்! கோயில்களில் கிரமமாகப் பூசைகள் நரடைபெறுகின்றனவா! மக்கள் சேமமாக வாழ்கின்றார்களா!"சிவனாரின் வார்த்தைகள் சம்பிரதாயபூர்வமாக அமைந்திருந்தன. "ஆமாம்! பேச்சில் மட்டும் குறைச்சல் இல்லை. மக்களின் நலன்களில் அக்கறையே இல்லை தங்களுக்கு."

"முருகா! என்ன வார்த்தை பேசுகின்றாய்! யாருடன் பேசுகின்றாய் என்ற ஞாபகத்துடன்தான் பேசுகின்றாயா! தந்தையுடன் – மைந்தன் பேசுவது இப்படித்தானா?" அன்னை பார்வதி இவ்வாறு சற்றுக் கடுந்தொனியில் பேசிவிட முருகனின் கோபாவேசம் எப்படியோ தணிந்து கொண்டது.

"முருகா! உனக்கென்ன பிரச்சினை! ஏன்முகத்தை உம்மென்று ஒருமாதிரி வைத்திருக்கின்றாய்! விடயத்தை விவரமாகச் சொல்!"

ஈஸ்வரனார் சற்றுக் கலவரமடைந்தார்.

"தந்தையே! நான் பூவுலகிலுள்ள இலங்கையென்னும் அழகிய தீவிலிருந்து நேரடியாக வருகின்றேன். அங்கே மக்கள் படும் அவலங்களைத் தங்களுக்கு எடுத்துரைக்கலா மென்று ஓடோடி வந்திருக்கிறேன்."

"அப்படியா! சிறிலங்கா! ஆசியாவின் முத்து. மிக அழகான தேசம். அது சரி அங்கேயுள்ள மக்கள் என்ன அவலப்படுகின்றார்களா! ஒரு காலத்தில் அவர்கள் அல்லற்பட்டது என்னவோ உண்மைதான். ஆனால், இப்போது அங்கே நல்லாட்சி நடக்கின்றதே! இனியுமென்ன அவலம்! இனியுமேன் அச்சம்!"

"அப்பனே! நான் கூறுவதையும் கொஞ்சம் தயவு செய்து கேளுங்கள். எங்கும் நிறைந்தவன், எல்லாம் வல்லவன், எல்லாம் தெரிந்தவன்தான், தாங்களென்று எண்ணிக் கொண்டிருக்கும் உங்களுக்குத் உங்களின் அருளாட்சியில் நடந்து கொண்டிருக்கும் சில குறைபாடுகளைக் கண்டுபிடிக்க முடியவில்லையே"

"வேலா! வேண்டாத கற்பனைகளை விட்டு விடு. வீணாகச் சினம் கொள்ளாதே! விடயத்திற்கு வா."

அடிக்கடி அன்னை பரமேஸ்வரியும் இவர்களின் இந்தச் சச்சரவுக்குள் மூக்கை நுழைத்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. இல்லையெனில் தந்தைக்கும் மைந்தனுக்குமிடையில் விபரீதங்கள் ஏதாவது நிகழ்ந்து விடுமோ என்னும் அச்ச உணர்வு தான் அவரும் கதைக்கும் நிலைமைக்குக் காரணமாயிருந்தது.

முருகனுக்கு ஏனோ தெரியாது சதா மூக்கு நிறையக் கோபம். முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க ஏராளமாக உணர்ச்சி வசப்பட்டிருந்தார். முன்பும் இப்படித்தான். ஒரு மாங்கனிக்காகத் தந்தையுடன் தகராறுபட்டுக் கொண்டார். சிவனேயென்று தன் பாட்டுக்குப் போய்க் கொண்டிருந்த பிரம்மதேவனை வம்புக்கழைத்துப் பிரணவத்தின் பொருள் கேட்டு அவனைக் குட்டிக் கேவலப்படுத்தினார். அத்துடன் நிற்காது தந்தை சிவனாரைத் துரத்திப் பிடித்து ஓம் என்னும் பிரணவப் பொருளின் கருத்தை விளக்கி அவருக்கு ஞானோபதேசம் செய்து, அவரை மட்டம் தட்டினார். இப்படி முருகனின் லீலைகளை அன்னை பரமேஸ்வரியும் ஆணித்தரமாக நினைவில் வைத்திருந்தார்.

"சுவாமி! அங்கே பாருங்கள்! எங்கள் மூத்தவன் விநாயகனுமிங்கே வந்து கொண்டிருக்கின்றான். இவர்கள் இருவரும் ஏதோ திட்டம் தீட்டித்தான் ஒரே சமயத்தில் இங்கே வந்திருக்கின்றார்கள். எனக்கென்னவோ பயமாக இருக்கின்றது நாதா!" உமையம்மை அளவுக்கதிகமாகப் பயந்திருந்தார். அதிலும் நியாயமில்லாமலில்லை என்பதை ஈசனுமறியாமலில்லை. முருகன் இளையவன், சிறுபிள்ளை. எத்துணை வேகமாகச் சினம் கொள்வானோ! அத்துணை வேகமாக அவனைச் சமாதானப்படுத்திவிடலாம். ஆனால் மூத்தவன் விநாயகனுக்குக் கண்டபடி கோபம் உண்டாவதில்லை. ஆனால் வந்தால் வந்ததுதான். அவனுடைய கோபமும் நியாயமாவே இருக்கும். அவனைச் சமாதானப்படுத்துவதற்குள் அம்மைக்கும் அப்பனுக்கும் போதும் போதுமென்றாகிவிடும். முருகன்தான் ஏதாவது சிறுபிள்ளைத்தனமாக வந்து சீண்டிக் கொண்டிருக்கின்றான் என்று வைத்துக் கொண்டாலும் பிள்ளையாரின் வருகையானது மிக மிக முக்கியமானதொன்றாகவே அமையப்போகின்றது. என்னவோ! ஏதோ! ஈஸ்வரனின் புலித்தோலாடை அவரையுமறியாது ஈரமாகி விடும் போன்றதொரு அபாய நிலைமையை உணர்ந்து கொண்ட பெருமானார் மெல்ல நல்ல பிள்ளையாக வந்தமர்ந்து கொண்டார்.

"அன்னையே! தந்தையே தங்களனைவரையும் வணங்குகின்றேன்."

"நல்லது விநாயகா! என்ன! சொல்லாமற் கொள்ளாமல் அண்ணனும் தம்பியும் ஒரே சமயத்தில் ஒருமித்து வருகை தந்திருக்கின்றீர்கள். என்ன விசேசம்?"

"தந்தையே! அதைப்பற்றி தம்பி முருகன் விவரமாகக் கூறியிருப்பானே! பூவுலகிலுள்ள இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் நாளும் பொழுதும் ஏராளமான சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். அவர்களின் துன்பங்களைத் தங்களுக்கெடுத்தியம்பவே நாங்கள் தங்களிடம் வந்திருக்கின்றோம்."

"கணபதியே! முன்னைய காலங்களில் தமிழ் மக்கள் ஏராளமான துன்பங்களை அனுபவித்திருக்கின்றார்கள் என்பதை ஒப்புக் கொள்கின்றேன். ஆனால் சமீபத்தில் புதிய ஆட்சி ஒரு நல்லாட்சியாக அமைந்தது மட்டுமல்ல வடக்குக் – கிழக்குத் தமிழ் மக்களுக்குப் போதிய சேவைகளையும் சலுகைகளையும் செய்து வருகின்றது. அப்படியிருக்கும்போது தமிழர்களுக்கு என்னதான் பிரச்சினைகள்! எனக்கு ஒன்றுமே புரியவில்லை."

"உண்மையைச் சொல்லப்போனால் தங்களுக்கு ஒன்றுமே புரிவதில்லை. அடிக்கடி அன்னையுடன் சச்சரவுபட்டுக் கொள்வதும், வேண்டாத காரியங்களில் ஈடுபடுவதும், நஞ்சருந்துவதும்தான் தங்களின் வேலைகள் என்றாகிவிட்டன. இந்த நிலைமையில் மக்களின் துன்ப துயரங்களைத் தீர்ப்பதற்குத் தங்களுக்குகெங்கே நேரம்!"

இத்தனை நேரமும் அமைதியாகவிருந்த முருகன் ஒரே பாய்ச்சலில் சீறியெழுந்தார்.

"முருகா! வடிவேலா! கொஞ்சம் அமைதியாய்ப்பேசு. உன் அண்ணன் விநாயகனைப்பார்! எத்துணை அடக்கமாகவும் அன்பாகவும் பேசுகின்றான். நீ மட்டும் இப்படித் துள்ளி விழுந்து பேசலாமா!" "அன்னையே! பூவுலகில் அதுவும் இலங்கைத் திவில் பார்க்குமிடமெல்லாம் கோயில்கள். அதிலும் வடக்குக் –கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழர்கள் கூடுதலாக என்னையும் அண்ணனையும் வைத்தே கோயில்களில் வழிபடுகின்றார்கள். எங்களையே தமிழ்க் கடவுள்களாக எண்ணுகிறார்கள். எனவே அவர்களின் குறைகளைத் தீர்ப்பது எங்களிருவரின் பெரிய கடமைகளாகின்றன. எனவேதான் நாங்களிருவரும் தங்களிடம் உதவி நாடிவந்திருக்கின்றோம் தந்தையே! "



இப்போது முன்னையது போலன்றி முருகனுடைய குரலில் ஒருவித பணிவு இழையோடியிருந்தது.

"ஆம்! தந்தையே! தம்பி கூறுவது முற்றிலும் சரி! தாங்கள் கூறுவது போல் இலங்கையில் நல்லாட்சி நிலவுவதும் தமிழர்களுக்குச் சில சலுகைகள் வழங்கப்பட்டிருப்பதெல்லாம் உண்மையானவை தான். ஆனால், தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஏராளமான பிச்சல் பிடுங்கல்கள் பிரச்சினைகளே நிறைந்திருக்கின்றன."

"சரியாகச் சொன்னாய் விக்னேஸ்வரா! தமிழர்கள் எப்போதுமே இப்படித்தான். அவர்கள் என்றைக்குமே ஒற்றுமைப்பட்டது கிடையாது. சிறுபான்மையினமாக வாழும் அவர்கள் தங்களுக்குள்ளே தாங்கள் தகராறுபட்டுக் கொண்டிருப்பதினால் அவர்களால் உறுதியாக உரிமைகளைப் பெறவோ தனித்துவத்துடன் வாழவோ முடிவதில்லை."

"ஆமாம் தந்தையே! தாங்கள் கூறுவதை நானும் ஒப்புக்கொள்கின்றேன். குறைந்த எண்ணிக்கையில் வாழும் அவர்களுக்குள் ஆளாளுக்கொரு கொள்கைகள் ஏராளமான கட்சிகள் பலவிதமான அமைப்புக்கள் உண்டு. அதனால் சிதறுண்டு போயிருக்கின்றனர். இதன் காரணமாக ஓர் உறுதியான போராட்டத்தையோ நல்ல தீர்மானங்களையோ எடுக்க முடியாது அல்லாடுகின்றனர்."விநாயகப் பெருமானின் இந்தக் கூற்றை சிவனார் மட்டுமல்லாது அங்கிருந்த பார்வதியாரும் ஏக மனதாக ஒப்புக் கொண்டார்.

"ஆமாம் நாதா! நானும் அவர்களைப் பற்றி அறிந்தவைகளைச் சொல்கின்றேன். இயல்பிலேயே ஏனைய இனங்களைவிடத் தமிழர்களே கல்வியிலும் – வீரத்திலும் –செல்வத்திலும் சிறப்பாக இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனினும் அவர்களிடம் காணப்படும் பொறாமை, போட்டி மனப்பான்மைகள், குரோத உணர்வு கள் போன்றவைகள் அவர்களுக்கே எதிரிகளாகி விடுகின்றன. அவர்கள் தலை தூக்க முடியாது இன்னமும் பெரும்பான்மையினத்துக்கு அடிபணிந்து வாழ்வதற்கு இதுவும் ஒரு காரணம்."

"அடேயப்பா! உமா! நான் உன்னை ஏதோ என்று நினைத்திருந்தேன். உனக்கு இத்தனை விடயங்கள் தெரிந்திருக்கின்றதா!" செல்லமாகவும் மகிழ்ச்சியாகவும் உமையம்மையைக் கட்டியணைத்தார் பரமேஸ்வரன்.

"போதும் விடுங்கள்...சீ... பக்கத்தில் வயது வந்த இரண்டு ஆண்பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு கட்டியணைத்து ஆட்டம் போடுகின்றராம்! ஆட்டம்!" செல்லமாகக் கடிந்து கொண்ட அன்னை உமாவை எப்படியோ கவனித்துக்கொண்ட விநாயகரும் முருகனும் வெட்கத்தினால் செய்வதறியாது பார்வையை மறுபக்கம் பதித்தார்கள்.

"பிள்ளைகளே இதை நன்றாகக் கேளுங்கள்! இலங்கையில் நடந்தேறிய கொடிய போரில் ஏராளமான அப்பாவிகள் கொல்லப்பட்டார்கள். போரில் ஈடுபட்ட தமிழர் தரப்பினர் அழித்தொழிக்கப்

(39 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லாட்சியில் கிடைத்த விடுதலை

அதிரன்

ராஜபக்ச அரசின் காலத்தில் அவரால் பழிவாங்கப்பட்டு பதவியிறக்கப்பட்ட முக்கிய பிரமுகர்களில் ஒருவரான முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவருக்கு எதிரான வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். சொத்து விவரங்களைச் சரியான முறையில் வெளிக்காட்டவில்லை எனக்கூறி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் குறித்த வழக்கு அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று முன் தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை குறித்த வழக்கில் இருந்து விடுதலையளித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

விசாரணை நடவடிக்கையின் போது ஷிராணி பண்டாரநாயக்க தரப்பினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்ததன் பின்னர் குறித்த குற்றப் பத்திரிகையை வாபஸ்பெறுவதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நீதிமன்றில் தெரிவித்தது.

அத்துடன் நீதிமன்ற கட்டுப்பாட்டில் இருந்த அவருடைய கடவுச்சீட்டையும் விடுவிப்பதற்கு நீதிபதி உத்தரவிட்டார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க 2010,2011 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் தனதுசொத்துகளின் விவரங்ளை முறைப்படி பிரகடனப்படுத்தவில்லைஎனக்கூறி இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு அவருக்கெதிராக 3 வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தது. வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டபோது அவர் பிரதம நீதியரசர் பதவியில் இருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் சொத்துக்கள் மற்றும் உடைமைகள் குறித்த விவரங்களை முழுமையாகச் சமர்ப்பிக்க தவறியதாக முன்னாள் தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கா மீது குற்றஞ் சுமத்தப்பட்டு வழக்குத் தாக்கல் செய்ய்யப்பட்டது.

ஆனால், ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் மனு ஒன்றை சமர்ப்பித்த ஷிராணி பண்டாரநாயக்காவின் சட்டத்தரணிகள், இந்தக் குற்றச்சாட்டுக்கள் பழிவாங்கும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டதாக அதில் கூறியிருந்தனர். அடிப்படையற்ற இந்த குற்றச்சாட்டுக்களில் இருந்து அவரை விடுவிக்குமாறும் அவர்கள் கோரியிருந்தனர்.

இதன் அடிப்படையில் நேற்று அவர் குறித்த வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, அவர் மீதான குற்றச்சாட்டுக்களை முன்னெடுக்க விரும்பவில்லை என்று ஆணைக்குழு நீதிமன்றத்தில் அறிவித்ததால், அவரை குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுதலை செய்வதாக நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, இவர் குறித்த வழக்கில் இருந்து விடுதலையாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மைத்திரிபால தலைமையிலான நல்லாட்சி அரசு பதவியேற்ற பின்னர் முன்னைய அரசான மகிந்த அரசினால் குற்றவாளிகளாக்கப்பட்ட பலர் நிரபராதிகளாக வெளியேறியுள்ளனர். அதில் முக்கியமானவர்கள் முன்னாள் ராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க ஆகிய இருவரும் ஆவர்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் சகல குற்றச்சாட்டுக்களிலுமிருந்து விடுவிக்கப்பட்டதுடன் அவரிடம் இருந்து பறிக்கப்பட்ட இராணுவப் பட்டங்கள் இதர வசதி வாய்ப்புக்கள் அனைத்தும் மீள வழங்கப்பட்டன. அத்துடன் தற்போதைய அரசில் தேசியப் பட்டியல் மூலம் அவர் நாடாளுமன்ற உறுப்பினரானவும் நியமிக்கப்பட்டிருக்கிறார். வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால நாடு திரும்பிய பின்னர் சரத் பொன்சேகாக்கு முக்கிய அமைச்சுப் பதவி ஒன்று வழங்கப்படலாம் என்றும் அரசியல் வட்டாரங்களில் ஊகங்கள் எழுந்திருக்கின்றன.

இந்த நிலையிலேயே ஷிராணி பண்டாரநாயக்காவும் மகிந்த அரசினால் சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டிருக்கிறார். மகிந்த அரசினால் பிரதம நீதியரசர் பதவியிலிருந்து இறக்கப்பட்டிருந்த ஷிராணி நல்லாட்சி அரசினால் மீண்டும் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டு பின்னர் ஓய்வுபெற்றிருந்தார். இவ்வாறான நிலையில் அவர் மீதான அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் தற்போது விலக்கப்பட்டிருக்கின்றன. மைத்திரிபால தலைமையிலான அரசில் முக்கிய பொறுப்பொன்று ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கான ஏற்பாடுகளில் ஜனாதிபதியும் பிரதமரும் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. மகிந்த அரசினால் குற்றவாளிகளாக்கப்பட்டு பழிவாங்கப்பட்ட பலர் இப்போது நிரபராதிகள் என விடுதலை ஆகி வரும் வேளையில் மகிந்த குடும்பத்திலிருந்து பலர் குற்றவாளிகளாக்கப்படும் நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. மகிந்தவின் மகனும் கடற்படை அதிகாரியுமான யோசித ராஜபக்சவின் கைதுடன் இந்தப் படலம் ஆரம்பமாகியிருக்கிறது. மகிந்தவின் மற்றொரு மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய நாமல் ராஜபக்ச, மனைவி சிரந்தி ராஜபக்ச, மகிந்தவின் சகோதரரும் முன்னாள் பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய ராஜபக்ச ஆகியோரையும் கைது செய்வதற்கான ஏற்பாடுகளில் மைத்திரி அரசு ஈடுபட்டுள்ளதாக ஏற்கனவே செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. இதனால் பெரும் மன நெருக்கடிக்கும் கிலேசத்துக்கும் உள்ளாகியிருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த.

தனது ஆட்சிக்காலத்தில் பலரைக் குற்றவாளிகளாக்கி பதவியிறக்கிய அவருக்கு தனது குடும்பத்துக்கும் அந்த நிலை ஏற்படும் வேளையில்தான் அந்த வேதனையும் தாக்கமும் நன்கு புரிகிறது போலும்.

எது எவ்வாறாயினும் மகிந்த குடும்பத்தின் மீதான மைத்திரி அரசின் கிடுக்கிப்பிடி இனிவரும் காலங்களில் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

## கடவுளே கைவிட்டால்............!

பட்ட பின்னர் அரசியல் ரீதியாக ஓர் உறுதியான நிலையை அடைய வேண்டும் என மக்கள் விரும்பி னர். அதன் பிரதிபயனாக தமிழ்த் தலைவர்களாக ஒன்றிணைந்த ஒரு கட்சியை உறுதிப்படுத்தி அதன் மூலம் உலகநாடுகள், புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் வாயிலாக ஈழத் தமிழரின் இருப்பை உலகுக்குக் காட்டினர். இவ்வாறு தமிழர்கள் ஒருவாறு வளர்ச்சிப் போக்கைக் காணத் தொடங்கினர்."

"இனி நான் கூறுகின்றேன் தந்தையே! இந்த வளர்ச்சியை விரும்பாத சில துரோகிகள் இந்தக் கட்சி என்னும் பெருவிருட்சத்தைத் தறித்துத் துண்டாடி விடத் திட்டமிட்டனர். இதன் மூலம் சூழ்ச்சிக்கராரர், வஞ்சகர்கள் போன்றோரின் வலையில் சிக்கிக் கொண்ட தமிழ்த் தலைவர்களின் கட்டமைப்பு நாளும் பொழுதும் ஆட்டம் காணத் தொடங்கியது. போட்டி பொறாமை, உட்பூசல்கள் என்பன சாதனை படைக்க விருந்த தலைவர்களை வீழ்த்திச் சோதனைக்கு ஆளாக்கி கொண்டிருக்கின்றன. தமிழர்களின் ஒற்று மையீனமே அவர்களின் இனத்துக்கு எதிரியாகிக் கொள்ளப் போகின்றது." முருகன் வார்த்தையை முடிக்க முன்பு அன்னை பராசக்தி தனக்குத் தெரிந்தவைகளைக் கூறத் தொடங்கினார். "இது இலங் கைத் தமிழர் வரலாற்றில் காலம் காலமாக நடந்து வரும் கசப்பான நிகழ்வு." "சரி இப்போது உங்க ளுக்கு என்ன செய்ய வேண்டும்.விக்னேஸ்வரா நீ சொல்லு"

"தந்தையே! முதலில் இந்தப் பெயரை விடுத்து என்னை வழமை போல விநாயகா என்றே அழை யுங்கள். இந்தப் பெயரில் என்னை அழைப்பது ஏனோ எனக்கு ஒரு மாதிரியாக இருக்கின்றது."

"சரி,முருகா! நீ என்ன வரம் கேட்கப் போகின்றாய், நீ சொல்லு?"

"ஆமாம் பிள்ளைகளே! சும்மா வளவளவென்று இனியும் பேசிக்கொண்டிருக்காது வந்த விடயத்தை முடித்துக் கொண்டு உங்கள் அப்பரைக் கொஞ்சம் உறங்கவிடுங்கள். பாவம்! உணவருந்திய நேரம் முதல் தூக்கக் கலக்கத்தில் கொட்டாவி கொட்டாவியாக விடுத்துக் கொண்டிருக்கின்றார்." பராசக்தி சற்றுக் கேலி கலந்த குரலில் உண்மையையே சொல்லியிருந்தார்.

"ஐயனே ஈசனே! வடக்கிலும்-கிழக்கிலும் வாழும் தமிழ் மக்கள் எப்படியோ எல்லாம் வாழலாம் என நம்பிக் கொண்டிருந்தனர். அவர்களின் தலைமைகளெல்லாம் தலைக்கொருவராய் தனக்குத் தனக்கென ஒருவிதமான தலைக்கனத்துடன் தறிகெட்டுத் திரிந்து கொண்டிருப்பதினால் அவர்களின் கற்பனைகள் ஆசைகளெல்லாமே நிராசையாகி விட்டதெனப் புலம்பியழுகின்றனர் தமிழ் மக்கள். அவர்கள் எல்லோரும் தமது தமிழ்த் தலைமைகளின் பச்சோந்திப் போக்குக்களினால் மிகவும் நொந்து போயிருக்கின்றார்கள் [illegible] கடவுள்தான் காப்பற்ற வேண்டுமென உறுதிபடக் கூறுகின்றார்கள். அதுதான் தங்களிடம் வந்தோம். அவர்களைக் காப்பாற்றுவதற்காக." "நாதா! தங்களுக்கு நினைவிருக்கின்றதா! இந்த வார்த்தையைச் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே ஒரு மிகப்புகழ் பெற்ற தமிழ்த் தலைவரும் அகிம்சை வாதியுமான ஒருவர் சொல்லிவிட்டு இறந்துபோனார். அதே வார்த்தையை இப்போதைய தமிழர்களும் கூறுகின்றார்கள் எனின் உண்மையில் இலங்கைத் தமிழரின் தலைவிதியை என்னவென்று சொல்வது?" "ஆமாம் தேவி! இந்தத் தமிழர்கள் முதலில் ஒரே தலைமைத்துவத்துக்குள் ஒன்றுபடட்டும். அன்றே இவர்களின் இந்தச் சாபக்கோடு ஒழிந்துவிடும். அதுவரைக்கும் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று என்னை இரந்து வேண்டினாலும்கூட, தலைமைகள் திருந்தும்வரை - தலைவர்களின் மனங்கள் மாறும்வரை தலை கீழாக நின்றாலும் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. அவர்களின் தலை விதியின் படியே நடக்கும்." "ஐயனே! இதுதானா உங்கள் முடிவு!" விநாயகரும் முருகனும் ஒருமித்த குரலில் வினயமாகவும் விசனமாகவும் கேட்டபடி அவரவர் வாகனங்களிலேறிப் புறப்பட்டுக்கொண்டிருந்தனர். சிவபெருமானும் உமையம்மையும் தங்களின் இயலாமையின் வெளிப்பாடாகப் பெருமூச்சுக்களை மட்டுமே பிரசவித்து விட்டு மௌனமாகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



ஆசியாக்கிண்ணம், ரி-20 உலகக்கிண்ணம் என்று 20 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டங்களுக்கு நகர்ந்து வந்துள்ளது கிரிக்கெட் உலகம். பங்களாதேஷில் எதிர்வரும் புதன்கிழமை ஆசியாக்கிண்ணத் தொடரும் இந்தியாவில் அடுத்த மாதம் ரி-20 உலகக்கிண்ணத் தொடரும் நடைபெறவுள்ள நிலையில் ஒவ்வொரு நாட்டினதும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைகளும் தமது அணிகளை அறிவித்துள்ளன. இந்திய அணியைப்பொறுத்தவரைபலமான அணியொன்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் விளையாடும் பதினொருவர் பட்டியலில் ரகானே, யுவராஜ் இருவரில் யாரைத் தெரிவுசெய்வது என்ற சிக்கல் டோனிக்கு ஏற்பட்டுள்ளது. ஐ.பி.எல். தொடரில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட ரைசிங் புனே சுப்பர் ஜெயின்ட்ஸ் அணியினது சீருடை அறிமுக விழாவில் அந்த அணியின் தலைவர் என்ற ரீதியில் கலந்துகொண்ட டோனி, இந்திய அணியின் தலைவர் என்ற ரீதியில் சில கருத் துக்களை வெளிப்படுத்தியிருந்தார். அவர் வெளிப்படுத்திய கருத்துக்களின் அடிப்படையில் ரகானே விளையாடும் பதினொருவரில் இடம்பெற வில்லை என்றே எண்ணத்தோன்றுகிறது. டோனி வெளிப்படுத்தியிருப்பதன்படி ரோகித், தவான் இருவரும் ஆரம்ப வீரர்களாகவும் மூன்றாவது வீரராக கோக்லியும் நான்காவது வீரரான ரெய்னாவும் களமிறங்குகின்றனர். இதில் எந்த மாற்றமும் இருக்காது. ஐந்தாவது வீரருக்கு உரிய இடமே கேள்விக்குறியாகவுள்ளது. ஆறாவது இடத்தில் டோனியும், ஏழாவது இடத்தில் பாண்டியாவும், எட்டாவது இடத்தில் ஜடேயாவும், ஒன்பதாவது இடத்தில் அஸ்வினும் விளையாடுவார்கள்.

பத்தாவது இடத்தில் சமி களமிறங்குவார். சமி அணியில் இணைந்தால் நெக்ரா வெளி யேற்றப்படுவார். பதினோராவது இடத்தில் பும்ரா களமிறங்குவார்.

சமி, பும்ராவைத் தவிர ஏனைய ஒன்பது வீரர்களும் துடுப்பெடுத்தாடக் கூடியவர்கள் என்பதால் துடுப்பாட்ட வரிசையில் அந்த அணிக்கு சிக்கல்கள் இருக்காது. பந்துவீச்சில் சமி, பும்ரா, பாண்டியா என மூன்று வேகங்களுடனும், அஸ்வின், ஜடேயா என இரு சுழலையும் இந்தியா வைத்துள்ளது.

# விளையாடும் பதினொருவரில் யுவராஜ் சிங்கா? ரகானேயா?




மேற்குறிப்பிட்ட ஐந்தாவது இடத்தில் ரகானே சேர்க்கப்பட்டால் துடுப்பாட்ட வரிசை பலம்பெறும். ஆனால் பந்துவீச்சில் பகுதி நேர வீரர் ஒருவர் இல்லாமல் போய்விடுவார். ரெய்னா பகுதிநேரப்பந்துவீச்சாளர் என்றாலும் யுவராஜ் அளவுக்கு அவரால் பந்து வீச இயலாது. யுவராஜ் அணியில் இணைத்துக் கொள்ளப் பட்டால் துடுப்பாட்ட வரிசையுடன் இணைந்த முறையில் பந்துவீச்சு வரிசையும் சீராகப் பேணப்படும். எனவே டோனியின் தெரிவாக யுவராஜ் இருப்பார். துடுப்பாட்டத்தில் அவர் தடுமாற்றம் காட்டினாலும் பந்துவீச்சில் ஆதிக்கம் செலுத்த அவர் அணியில் இடம் பிடிப்பார்.

இதன்படி பார்க்கப்போனால் களமிறங்கும் பதினொருவர் கொண்ட இந்திய அணி துடுப்பாட்ட வரிசை ஒழுங்கின்படி ரோகித் சர்மா, தவான், கோக்லி, ரெய்னா, யுவராஜ், டோனி, பாண்டியா, ஜடேயா, அஸ்வின், சமி, பும்ரா என்றவாறாக அமையும்.

# சச்சினின் சுயசரிதையும் சாதனை

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சச்சின், தனது வாழ்க்கையைப்பற்றி எழுதிய சுயசரிதை புத்தகம் இந்தியாவில் அதிகம் விற்பனை செய்து லிம்கா சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. "இந்திய கிரிக்கெட்டின் கடவுள்" என்று ரசிகர்களால் செல்லமாக அழைக்கப்படும் 41 வயதான சச்சின் ரெண்டுல்கர் "பிளேயிங் இட் மை வே" என்ற பெயரில் சுயசரிதை புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார். ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கிய இந்த புத்தகம் கடந்த 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியானது. இந்த புத்தகம் வெளியானது முதல் சிறப்பாக விற்பனையாகி வருகிறது "பிளேயிங் இட் மை வே". புனைவு மற்றும் அபுனைவு ஆகிய இரண்டு பிரிவுகளிலும் அதிகம் விற்பனையான புத்தகம் என்ற சாதனையை படைத்துள்ளது. இதுவரை 1 லட்சத்து 50 ஆயிரத்து 289 புத்தகங்கள் விற்பனையாகியுள்ளன.

இந்த சாதனை மூலம் இந்தியாவில் இருந்து வெளியாகும் "லிம்கா புக் ஆப் ரெக்கார்ட்ஸ்" என்ற சாதனை படைக்கும் புத்தகங்களின் பட்டியலை வெளியிடும் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது. சச்சினின் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட போதிலும் சச்சினின் சாதனைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 40 | 40 | 20 | 40 | 30 | 30 |
| கத்தரி | 70 | 80 | 60 | 100 | 50 | 80 | 60 | 30 |
| கரட் | 200 | 240 | 200 | 180 | 120 | 240 | 130 | 220 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 120 | 100 | 70 | 120 | 80 | 100 | 100 | 80 |
| பாகல் | 80 | 80 | 70 | 100 | 80 | 120 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 50 | 60 | 60 | – | 50 |
| பெ.வெங்காயம் | 60 | 60 | 70 | 60 | 50 | 70 | 50 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 100 | 60 | 80 | 60 | 90 | 70 | 70 |
| பூசணி | 60 | 60 | 60 | 60 | 60 | 120 | 70 | 80 |
| தக்காளி | 60 | 50 | 40 | 60 | 40 | 80 | 50 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 50 | 60 | 40 | 45 | 40 |
| கீரை | 20 | 30 | 30 | 10 | 20 | 30 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20 | 30 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 180 | 120 | 120 | 140 | 200 | 130 | 200 |
| புடோல் | 60 | 80 | 50 | 40 | 60 | 60 | 30 | 60 |
| கோவா | 80 | 80 | 60 | 80 | 60 | 80 | 50 | 60 |
| வெண்டி | 100 | 100 | 60 | 80 | 100 | 80 | 70 | 120 |
| போஞ்சி | 80 | 120 | 60 | 100 | 60 | 90 | 30 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 40–50 | 80 | 120 | 80 | 100 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 60 | 40 | 40 | 30–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 | 50 | 60 | 50 | 100 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 80 | 50 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 08 |
| கறிமிளகாய் | 150 | 200 | 150 | 180 | 120 | 200 | 130 | 200 |
| இராசவள்ளி | 150 | 140 | 160 | 100 | 140 | 150 | 100 | 75 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 350–500 | 300 | 400 | 500 | 450 | 500 |
| பனங்கிழங்கு | 04 | 02.50 | 05 | 02 | 08 | – | 02.50 | 02 |

## இறால் வடை



**தேவையானவை:**

இறால் – 1 கப்
துருவிய தேங்காய் – 1 கப்
இஞ்சி – சிறிய துண்டு
பச்சை மிளகாய் – 4
உப்பு – தேவைகேற்ப
வெங்காயம் – அரைக்கப்
மிளகு தூள் – அரைக்கரண்டி
தேங்காய் எண்ணெய் – தேவைகேற்ப

**செய்முறை:**

- துருவிய தேங்காய், இஞ்சி, பச்சை மிளகாய், வெங்காயம் ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து வழுவழுப்பாக இல்லாமல் அரைத்துக் கொள்ளவும்.
- சுத்தம் செய்த இறால்களை தனியாக அரைத்து, ஏற்கனவே அரைத்துவைத்த மசாலாக் கலவையுடன் கலக்கவும்.
- இந்தக் கலவையில் தேவைகேற்ப உப்பு, மிளகு தூள் சேர்த்து வடைகளாகத் தட்டித் தேங்காய் எண்ணெயில் பொரித்துப் பரிமாறவும்.

**நாளை**
மாசி-10
திங்கட்கிழமை
22.02.2016
திதி: பூரணை பி.இ.12.24 வரை
நட்சத்திரம்: மகம் முழுவதும்
ராகுகாலம்:
08.01-09.31 வரை
சுபநேரம்:
12.31-02.01 வரை



**ஆண்களுக்கான தொப்பிகள்**

ஆண்களுக்கான தொப்பிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலை நாட்டு நாகரிகமான இந்தத் தொப்பிகள், சுகாதாரமானதுடன், விதம்விதமான வடிவங்களிலும், வண்ணங்களிலும் கிடைக்கின்றன. இவை 450 ரூபா முதல் 500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

## வீட்டுக் குறிப்புகள்

- பிரியாணி செய்யும் போது அரிசி உடையாமல் இருக்க வேண்டுமானால், ஒரு சில துளி எலுமிச்சம் சாறை அதில் விட்டால் அரிசி உடைவது குறைந்து விடும்.
- சமையல் அறையில் வைத்திருக்கும் பருப்பு, மசாலாப் பொடிகளில் பூச்சி பிடிப்பதால் பெரும் தொல்லை ஏற்படுவதைத் தவிர்க்க 5, 6 கராம்புகளைப் பூச்சி பிடிக்கும் பொருள்கள் இருக்கும் டப்பாக்களில் போட்டு வைத்தால் பூச்சிகள் அண்டாது.
- முட்டைக் கோஸ் பொரியல் செய்யும்போது, அதில் சிறிது பால் ஊற்றிச் சமைத்துப் பாருங்கள், நிறமும், சுவையும் கூடுதலாக இருக்கும். உடலுக்கும் ஏற்றது.
- பருப்பைப் பாத்திரத்தில் வைத்து வேகவைத்தால், நேரம் அதிகமாவதுடன், பொங்கி வழிவது பெரும் பிரச்சினையாக இருக்கும். இதனைத் தவிர்க்க பருப்பை வேக வைக்கும் முன் அதனுடன் சிறிது எண்ணெயும், மஞ்சள் தூளையும் சேர்க்கவும். இதனால் பருப்பு சீக்கிரமாக வெந்துவிடும். பொங்கியும் வழியாது.
- சாம்பார் போன்ற குழம்பு வகைகளில் உப்பு அல்லது காரம் அதிகமாகிவிட்டால் ஒன்று அல்லது இரண்டு தக்காளிகளைச் சிறு துண்டுகளாக நறுக்கிப் போட்டுக் கொதிக்க வையுங்கள். உப்பு அல்லது காரம் சரியாகிவிடும்.
- தேன் வாங்கும்போது அது அசல்தேன் தேனா என்பதைக் கண்டறிய. ஒரு கப் தண்ணீரில் ஒரு சொட்டுத் தேனை விட்டுப் பாருங்கள். அந்த சொட்டுத் தேன் முத்துப்போல் கப்பின் அடியில் உட்கார்ந்து கொண்டால் நல்ல தேன் தானா கரைந்துவிட்டால் சர்க்கரைப்பாகு.
- சாதம் செய்யும் பாத்திரத்தில் அடிப் பிடிப்பதைத் தவிர்க்க, பாத்திரத்தின் உட்பக்க அடிப் பகுதியில் சிறிது தேங்காய் எண்ணெய் தடவினால் அடிப் பிடிக்காது.
- வீட்டில் நெய்காய்ச்சும் போது சீக்கிரமே அதன் மணத்தை இழந்து விடுகிறது. இதனைத் தவிர்க்க வெண்ணெய் காய்ச்சி இறக்கியதும் அதில் சிறிது வெந்தயத்தைப் போட்டு வைத்தால் நெய் நல்ல மணமாக இருக்கும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 700 | 600 | 650 | 650 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 300 | 200 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 600 | 600 | 450 |
| சுறா | 400 | 600 | 600 | 800 | 700 | 600 | – |
| சீலா | 250 | 400 | 400 | 600 | 450 | 400 | 400 |
| விளை | 500 | 500 | 400 | 600 | 500 | 500 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 450 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 500 | 400 | 600 | 350 |
| கிழாக்கன் | 500 | 800 | – | – | 450 | – | – |
| ஓரா | 300 | 400 | – | – | 300 | – | 350 |
| திரளி | 200 | 300 | 200 | 250 | 300 | – | 350 |
| நகரை | 150 | 300 | – | 300 | 300 | – | 300 |
| சூடை | 100 | 200 | 100 | 250 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 250 | 300 | 150 | 300 | 250 | 200 | 250 |
| திருக்கை | 150 | 400 | 200 | 450 | 300 | 200 | 150 |
| மதனம் | 100 | 300 | 180 | 300 | 250 | – | 300 |
| கொய் | 80 | 200 | 60 | 100 | 120 | 100 | – |
| பாலை | 300 | 250 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 300 | – | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேடம்:** எவரிடமும் அதிகம் பேச வேண்டாம். உழைப்பால் மட்டுமே, தொழிலில் விற்பனை சீராகும். பெண்கள் வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்குவர். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம்.



**இடபம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், இடையூறு விலகி, வளர்ச்சி ஏற்படும். பெண்களின் தேவை அனைத்தும் நிறைவேறும். அரசு தொடர்பான உதவி கிடைக்கும்.



**மிதுனம்:** உறவினர் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரம், மந்தகதியில் இருக்கும். இலாபம் சுமார். பெண்கள் வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்குவர். ஆரோக்கிய விடயத்தில் அக்கறை தேவை.



**கடகம்:** செயலில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர். உறவினர் வருகையால் மகிழ்ச்சி கூடும்.



**சிங்கம்:** குடும்ப உறுப்பினர்களிடம் தேவையற்ற விவாதம் வேண்டாம். தொழிலில், மிதமான இலாபம் கிடைக்கும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். பெண்கள், நகையை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.





**கன்னி:** நண்பரின் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப் பணி இனிதாக நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். கலையம்சம் நிறைந்த பொருளை வாங்குவீர்கள்.



**துலாம்:** செயல்களில் சமயோசிதம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், இலாபம் படிப்படியாகக் கூடும். அரசியல்வாதிகளுக்கு பதவி பெற அனுகூலம் உண்டு. மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.



**விருச்சிகம்:** சுய திறமையில் நம்பிக்கை வைத்துப் பணியாற்றுவீர்கள். தொழிலில், உற்பத்தி, விற்பனை இலக்குப் பூர்த்தியாகும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைப் பிடிப்பர். வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாற்றம் ஏற்படும்.



**தனுசு:** பின் விளைவு உணர்ந்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், பணிச்சுமை அதிகரிக்கும். சுயகௌரவத்துக்காக பணம் செலவழிக்க நேரிடும். உடல்நலனில் அக்கறை காட்டுவீர்கள்.



**மகரம்:** கடந்த கால இனிய நிகழ்வுகளை எண்ணி மகிழ்வீர்கள். தொழிலில், உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். தாராள பணவரவு கிடைக்கும். நண்பரிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடு நீங்கும்.



**கும்பம்:** பணிகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில் வளர்ச்சியால், வாழ்க்கைத் தரம் உயரும். பிள்ளைகள் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.



**மீனம்:** நண்பர்களின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில், இலாபம் அதிகரிக்கும். உணவு விடயத்தில் கவனம் தேவை. மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | 8 | 4 | 5 | |
| | | | | | | | 7 | |
| | | 3 | | | | | 1 | 2 |
| | | | | | | | 6 | 5 |
| | | | 9 | 7 | | | | |
| | | | 6 | | 1 | 2 | | |
| | | | 1 | 5 | | 8 | | |
| 7 | 4 | | 3 | | | | | |
| | 9 | 8 | | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 6 | 5 | 4 | 7 | 3 | 1 | 2 |
| 3 | 5 | 7 | 8 | 2 | 1 | 6 | 4 | 9 |
| 2 | 4 | 1 | 6 | 3 | 9 | 7 | 8 | 5 |
| 7 | 2 | 9 | 4 | 1 | 8 | 5 | 3 | 6 |
| 5 | 1 | 8 | 3 | 9 | 6 | 4 | 2 | 7 |
| 6 | 3 | 4 | 7 | 5 | 2 | 1 | 9 | 8 |
| 9 | 6 | 2 | 1 | 7 | 3 | 8 | 5 | 4 |
| 1 | 7 | 5 | 9 | 8 | 4 | 2 | 6 | 3 |
| 4 | 8 | 3 | 2 | 6 | 5 | 9 | 7 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# அந்நியனாக மாறும் சிவகார்த்திகேயன்



படத்துக்குப் படம் அடுத்தடுத்த உச்சங்களுக்கு நகர்ந்து கொண்டிருக்கும் சிவகார்த்திகேயன், இப்போது நடித்துவரும் படத்தின் தலைப்பை அறிவித்திருக்கிறார். படத்தின் தலைப்பு "ரெமோ". ஷங்கர் இயக்கத்தில் வெளிவந்த சூப்பர்ஹிட் திரைப்படமான "அந்நியனி"ல் விக்ரமின் பாத்திரத்தின் பெயர் "ரெமோ". தற்போது அந்தப் பெயரையே சிவகார்த்திகேயன் படத்துக்குச் சூட்டியிருக்கிறார்கள்.

"24 ஏ.எம் ஸ்டுடியோஸ்" பட நிறுவனம் சார்பில் ஆர்.டி.ராஜா தயாரித்துவரும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடந்து வருகிறது. பாக்யராஜ் கண்ணன் இயக்கும் இந்தப் படத்தில் ஒளிப்பதிவுக்கு பி.சி.ஸ்ரீராம், இசைக்கு அனிருத், கலை இயக்கத்துக்கு முத்துராஜ் என பெரும் கூட்டணி அமைத்துள்ளார்கள்.

"ரஜினி முருகன்" படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடித்த கீர்த்தி சுரேஷ்தான் இந்தப் படத்திலும் அவருக்கு ஜோடி. இந்தப் படத்தில் வித்தியாசமான தோற்றங்களில் சிவகார்த்திகேயன் நடிப்பதாகக் கூறப்படுகிறது.

அதில் ஒரு தோற்றமாக பெண் நர்ஸ் வேடத்தில் நடிப்பதாகவும் கூடுதல் தகவல்கள் கசிந்து கொண்டிருக்கின்றன. படப்பிடிப்பு சம்பந்தப்பட்ட ஒளிப்படங்கள் எதுவும் வெளிவராத நிலையில், இதுபோன்ற தகவல்களே இந்தப் படத்தின் மீதான எதிர்பார்ப்பை பன்மடங்கு அதிகரிக்கச் செய்து கொண்டிருக்கிறது.

சிந்தனைவாதி @PARITHITAMIL 4m



நினைவுகள் படம் பிடிக்கா விட்டாலும் அழியாதவைகள். நிகழ்வுகள் படம் பிடித்தாலும் அழிந்து போகும்.




எல்.கே.ஜி. வகுப்பு மாணவன்
மச்சி திருவள்ளுவர்னா யாருடா?
யூ.கே.ஜி. வகுப்பு மாணவன்
மாமு, அவர் ஒரு மிமிக்கிரி பன்றவர்டா?
எல்.கே.ஜி வகுப்பு மாணவன்
எப்படிடா சொல்ற?
யூ.கே.ஜி. வகுப்பு மாணவன்
அவருக்கு 1330 குரல் தெரியுமாண்டா...



# மாணவனின் குழப்பம்

ஓர் உயர் நிலைப் பாடசாலையில் ஆசிரியர், ஒரு மாணவனைக் கூப்பிட்டு கரும்பலகையில் உனக்கு பிடித்த 30 பேரது உறவு முறைகளை எழுது என்றார்.

மாணவன் அப்பா, அம்மா , தாத்தா, பாட்டி, மனைவி, மகன், மகள், அக்கா, தங்கை, அண்ணன் ,தம்பி, சித்தப்பா, சித்தி, மாமா, அத்தை, காதலி, நண்பன் இப்படியாக 30 உறவு முறைப் பெயர்களை எழுதினான்.

கண்டிப்பாக இதில் மூன்று பெயர்களை அழிக்க வேண்டும். யாரை இழக்க வேண்டும் என்று நினைக் கிறாயோ அந்தப் பெயர்களை அழி என்றார் ஆசிரியர்.

காதலி, நண்பன், பக்கத்து வீட்டுக்காரர் ஆகியோரை அழித்தான்.

ஆசிரியர் மறுபடியும் மூன்று பெயர்களை அழிக்கச் சொன்னார்.

மாணவன் இப்படியாக ஒவ்வொருவராக அழித்தான். கடைசியாக அப்பா, அம்மா, மனைவி, மகன், மகள் என்போரின் உறவு முறைப் பெயர்கள் மட்டும் இருந்தன. இதிலும் இரண்டு பெயர்களை நீக்க வேண்டும். யாரை நீக்குவாய் என்றார் ஆசிரியர். மாணவர்கள் அனைவருக்கும் கோபம்.

மாணவன் வருத்தத்துடன் அப்பா , அம்மா என்ற உறவு முறைப் பெயர்களை அழித்தான்.

ஆசிரியர் மறுபடியும் மேலும் இரண்டு பெயர்களை அழிக்க வேண்டும் என்றார்.

மாணவர்கள் அனைவருக்கும் ஆச்சரியம் யார் பெயரை அழிப்பான் என்று, மாணவன் மிகுந்த சோகத்துடன் மகன், மகள் பெயர்களை அழித்தான். கடைசியாக மனைவி பெயர் மட்டும் இருந்தது. ஆசிரியரும் மாணவர்களும் ஆச்சரியமாகக் கேட்டார்கள். மகன், மகள் பெயரை அழித்து விட்டு, எதற்காக மனைவி பெயரை மட்டும் அழிக்கவில்லை.

அதற்கு மாணவன் , மகள் எப்படி இருந்தாலும், திருமணம் செய்ததும் இன்னொரு வீட்டுக்குப் போய் விடுவாள். மகனோ அவன் மனைவி குழந்தை என வாழ்வான். கடைசிக் காலம்வரை என்னோடு வாழக் கூடியவள் மனைவிதான் என்றான். வாழ்க்கைத் துணை மனைவி மட்டும்தான் நாம் இறக்கும் வரை எம்முடன் வாழக் கூடிய ஒரே உறவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகர ஆசாத்




# வடமாகாண சபை எதிர்கொள்ளும் சவால்கள்

**2014** ஆம் ஆண்டு இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் மிகப்பெரும் ஆதரவுடன் அதிகாரத்தைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் ஒப்படைத்தனர். முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பாக முரண்பட்ட கருத்துக்களும், வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்றபோதும் இறுதியில் முன்னாள் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பதவி வகித்த அவர் ஆட்சியாளர்கள் கொடுக்கும் நெருக்கடிகளைத் தனது சட்டத்துறை அறிவால் வெற்றி கொண்டு முன்செல்வார் என்ற நம்பிக்கையுடன் எவருமே எதிர்பார்க்காத வகையில் மக்கள் அவருக்குப் பெரும் ஆதரவை வழங்கினர். மாகாண சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையேற்று இரண்டு வருடங்கள் நெருங்கும் நிலையில் அது தொடர்பாகப் பல்வேறு தரப்பினரிடமிருந்து பல்வேறு கருத்துக்கள் வெளிவர ஆரம்பித்துள்ளன.

மாகாண சபை ஆக்கபூர்வமாக மக்களுக்குப் பணியாற்றவில்லை எனவும், சில அமைச்சர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. வழமையாக இப்படியான குற்றச்சாட்டுக்கள் எதிர்த் தரப்பினராலேயே முன்வைக்கப்படுவதுண்டு. ஆனால் வட மாகாண சபையில் ஆளும் தரப்பின் ஒரு பகுதியினராலேயே இப்படியான பெருமளவு குற்றச்சாட்டுக்கள் வைக்கப்படுகின்றன. சபை நடவடிக்கைகளின்போதே சபையின் அவைத்தலைவருக்கும், முதலசைச்சர்களுக்குமிடையே முரண்பாடுகளும் மோதல்களும் இடம்பெறுவதும் கண்கூடு.

இப்படியான நிலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பின்போது வெளியிட்ட சில கருத்துக்களை அலட்சியம் செய்துவிட முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகாரங்களைச் சரியாகப் பயன்படுத்தவில்லை எனவும் அந்தத் தகைமை தமிழ் மக்களிடம் இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது எனவும் பல வெளிநாட்டு ராஜதந்திரிகள் குற்றஞ் சுமத்துகின்றனர் என அவர் தெரிவித்திருந்தார்.

மேலும், நீங்கள் ஆட்சியதிகாரங்களைக் கேட்கிறீர்கள், ஆனால் அதைக் கையாளும் தகைமை உங்களிடம் இல்லை என வெளிநாட்டவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் என்றும் கூறியிருந்தார். போர் நெருக்கடிகளுக்கு மத்தியில் கூட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் அதிகாரங்களை எப்படிச் சரியான முறையில் கையாண்டார்கள் என்பதையும் உலகமே வியக்கும் வண்ணம் ஒரு நிர்வாகக் கட்டமைப்பை வழிநடத்தினர் என்பதையும் வெளிநாட்டவர்களுக்கு சுமந்திரன் ஏன் தெளிவுபடுத்தவில்லை என்பதைப் புரிந்து கொள்ளமுடியவில்லை.

எப்படியிருப்பினும் மாகாணசபை, உள்ளூராட்சி மன்றங்கள் என்பனவே அதிகாரங்களைச் சரியாகப் பயன்படுத்தவில்லை என சுமந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சில உள்ளூராட்சி சபைகள் மிகத்திறமையாகச் செயற்பட்டு வருவதை அவர் கவனிக்கத் தவறியது கவலைக்குரியதாகும். அதேவேளையில், சிலவற்றில் குழப்பங்களும் செயலின்மையும் நிலவுவது உண்மை. அதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று - சில திட்டங்களை முன்னெடுப்பதில் உள்ளூராட்சி சபைகளில் அரச அதிகாரிகள் காட்டும் அதிகாரங்களும் போக்குகளும் அதனால் ஏற்படும் முரண்பாடுகளும் மோதல்களுமாகும். அடுத்தது ஆளுந்தரப்பினரிடையே உள்ள உள முரண்பாடுகளுமாகும்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் மக்கள் ஆட்சியதிகாரத்தை வழங்கினரேயன்றி அதில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடமல்ல. ஆனால், கட்சிகளோ ஒன்றுடன் ஒன்று முரண்படுவதிலும் ஒன்றை மற்றையது மேலாதிக்கம் செய்வதிலும் காட்டும் அக்கறையாலும் ஏற்படும் குழப்பங்கள் காரணமாக பல செயற்பாடுகள் முடக்கப்படுகின்றன.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை குறிப்பாக பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியின் மெதுவான போக்கையே காட்டி வருகின்றது. ஒருவரை ஒருவர் கழுத்தறுக்கும் ஒரு தீய போக்கு அதனிடம் பரவிக் கிடப்பதை அவதானிக்க முடியும். களையப்பட வேண்டிய இந்தத் தீயபோக்கு மேலும் மேலும் வலுப்பெற்று புற்றுநோயாகப் பரவி வருவது மிகவும் வேதனைக்குரியதாகும்.

மாகாண சபைக்கும் இதே விதமான சவால்கள் உண்டு. மாகாண சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பொறுப்பேற்ற பின்பு முன்னாள் ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியும், பிரதம செயலாளரும் மகிந்த அரசில் தமக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி மாகாண சபையின் ஒவ்வொரு நகர்வுகளுக்கும் முட்டுக்கட்டை போட்டு வந்தனர்.

முதலமைச்சரின் நிதி நியதிச் சட்டத்தைக் கூட இழுத்துப் பறித்துக் காலம் கடத்தி, மாற்றங்களைச் செய்து கழுத்தறுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மாகாண சபையின் பல தீர்மானங்கள் கடதாசிகளுக்குள் அடங்கிப் போய்விடும் வகையில் அவர்கள் தங்கள் அதிகாரங்களை முறைகேடாகப் பயன்படுத்தினர்.

எதையும் சட்டத்துக்கு அமைவாக மேற்கொள்ளும் முதலமைச்சரின் நேர்மையான போக்கு, ஒரு பலவீனமாகப் பயன்படுத்தப்பட்டு மாகாண சபையின் நடவடிக்கைகளுக்கு நெருக்கடிகள் கொடுக்கப்பட்டன. மேலும், அமைச்சுக்களின் செயலாளர்கள் மாகாண சபையுடன் அர்ப்பணிப்புடன் இணைந்து செயலாற்ற முடியாதவாறு மத்திய அரசின் தலையீடுகள் வெவ்வேறு வடிவங் களில் இடையூறாக அமைந்திருந்தன.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பு ஆளுநரும், பிரதம செயலாளரும் மாற்றப்பட்ட நிலையில் நிலமைகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டன என்பது உண்மைதான். என்றாலும்கூட விவசாய அமைச்சினதும், கல்வி அமைச்சினதும் நியதிச் சட்டங்கள் 2014ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்ட போதிலும், அவை செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களிலேயே அங்கீகரிக்கப்பட்டன. அதன் காரணமாக மாகாண அமைச்சுக்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட நிதியைச் செலவு செய்வதிலும், முழுமையாகப் பயன்படுத்துவதிலும் பல சிக்கல்களை எதிர்நோக்கும் நிலைமையே ஏற்பட்டது.

இவ்வாறு மத்திய அரசால் கொடுக்கப்பட்ட பல இடையூறுகளுக்கு முகம் கொடுத்து மாகாண சபை எதிர்நீச்சல் போட்டுக் கொண்டிருந்த நிலையில் மாகாணத்திலும் மாகாண சபைக்குள்ளும் பல சவால்களைச் சந்திக்க வேண்டிய நிலையும் எழுந்தது.

குறிப்பாக சுன்னாகத்தில் நிலத்தடி நீர் மாசுபடுவது தொடர்பான பிரச்சினை, மாகாண சபையை அபகீர்த்திக்கு உட்படுத்தும் வகையில் கையாளப்பட்டதைக் குறிப்பிடலாம். இந்த நீர் மாசு தொடர்பாக ஆய்வு செய்ய ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டு அது தன் அறிக்கையை வெளியிட்டது. அதே வேளையில் ஒரு தற்காலிக ஏற்பாடாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நீர்த் தாங்கிகள் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டது. அடுத்த நடவடிக்கையாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் மருதங்கேணியிலிருந்து கடல் நீரை நன்னீராக்கி மக்களுக்கு வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

(44 ஆம் பக்கம் பார்க்க)

"மாகாண சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பொறுப்பேற்ற பின்பு முன்னாள் ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியும், பிரதம செயலாளரும் மகிந்த அரசில் தமக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி மாகாண சபையின் ஒவ்வொரு நகர்வுகளுக்கும் முட்டுக்கட்டை போட்டு வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபை எதிர்கொள்ளும் சவால்கள்...

(43 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அந்தப் பகுதி மக்கள் அங்கு அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுமானால் மீன்பிடி வளம் பாதிக்கப்படும் எனக்கூறி போராட்டம் நடத்தினர். நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்கூட அந்தப் பகுதி மக்களின் சம்மதமின்றி அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படக்கூடாது எனத் தெரிவித்துள்ளார். சுன்னாகம் பகுதிகளில் நீர் மாசுபடுவதற்கு எதிராகப் போராட்டம், மருதங்கேணிப் பகுதியில் பாதிக்கப்பட்ட சுன்னாகம் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க மேற்கொள்ளப்படும் திட்டத்துக்கு எதிரான போராட்டம் என்பவற்றின் பின்னால் சில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்கள் நின்றமை தெரிய வந்துள்ளது.

அப்படியானால் இந்தப் போராட்டங்களின் அடிப்படைதான் என்ன எனச் சிந்திக்க வேண்டியுள்ளது. மேலோட்டமாக வடமாகாண சபை முதலமைச்சர், விவசாய அமைச்சர் ஆகியோருக்கு நெருக்கடிகளைக் கொடுக்கும் வகையில் இந்தப் போராட்டங்கள் அமைந்தபோதும், அதன் பின்னால் ஆழமான தீய நோக்கம் ஒன்று உள்ளது என்பதை இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்வோரில் பலர்கூட உணர்ந்து கொள்ளவில்லை.

இரணைமடு நீரை யாழ்ப்பாணத்தின் குடிதண்ணீர்த் தேவைகளுக்குக் கொண்டும்வரும் திட்டம் முன்வைக்கப்பட்டபோது அதைக் கிளிநொச்சி விவசாயிகள் எதிர்த்தனர். அவர்கள் தமது விவசாயத் தேவைக்கே நீர் போதாமல் உள்ள நிலையில் யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர் அங்கிருந்து வழங்கப்படுமானால் கிளிநொச்சியின் விவசாயம் பாதிக்கப்படும் என்றனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக மாகாண சபையால் நிறுவப்பட்ட நிபுணர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் முன்னைய திட்டத்துக்குப் பதிலாக இரணைமடுக் குளத்தின் கொள்ளளவை அதிகரிக்கும் திட்டம், யாழ். நகர கழிவகற்றும் திட்டம், கடல் நீரைக் குடிதண்ணீராக்கி யாழ். மக்களுக்கு வழங்கும் திட்டம் என மூன்று திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. அதற்கு நிதியுதவி வழங்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற அமைப்புகளும் ஏற்றுக்கொண்டன.

முன்னைய திட்டத்தின் மூலம் பெருந்தொகை ஊதியத்தையும், கொடுப்பனவுகளையும் கொள்ளையிடக் காத்திருந்த சில உயர் அதிகாரிகளுக்கும், ஒப்பந்தக்காரர்களுக்கும் இது பெரும் ஏமாற்றமாகப் போய்விட்டது. எனவே, தற்சமயம் உள்ள திட்டத்தைக் குழப்பப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒருபுறம் சுன்னாகம் நீர் மாசுபடலுக்கு எதிரான போராட்டம் நடக்கும் நிலையில் மருதங்கேணியில் கடல் நீரை நன்னீராக்கி வழங்கும் திட்டம் கைவிடப்படுமானால் இரணைமடுவில் இருந்து நீர் கொண்டு வரும் திட்டத்துக்கு மாகாண சபை வேறுவழியின்றி சம்மதித்து விடும் என எதிர்பார்க்கின்றனர். அதை நிறைவேற்ற வேண்டுமென முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒருபுறம் வரிந்து கட்டிக்கொண்டு நிற்க சம்பந்தப்பட்ட சில உயரதிகாரிகள் இது தொடர்பாகப் பிழையான சில தரவுகளைக் கொடுத்து நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இவர்களின் பணப் பேராசைக்கு சில அரசியல்வாதிகளும் துணைபோவது தான் படுமோசமான விடயமாகும். கிளிநொச்சி விவசாயம் பாதிக்கப்பட்டால் கிளிநொச்சிக்கு மட்டுமல்ல யாழ்ப்பாணத்துக்கும் பெரும் ஆபத்தான பின்விளைவுகள் ஏற்படும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.


அதேவேளை, பளையில் தொடங்கப்படும் காற்றாலை மூலம் மின் உற்பத்திக்கு எதிராகவும் மாகாண சபை உறுப்பினர்கள் தலைமையில் எதிர்ப்புக் குரல் எழுப்பப்பட்டது.

மாகாண சபை மந்தகதியில் செயற்படுகிறது என ஒருபுறம் குற்றம் சாட்டப்படும் நிலையில் மாகாண சபை மேற்கொள்ளும் ஆக்கபூர்வமான அபிவிருத்தித் திட்டங்களுக்கும் எதிர்ப்பு வெளியிடப்படுகிறது. இத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளில் மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் தீவிரமாக ஈடுபட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது.

எனவே, வடமாகாண சபை மத்திய அரசினால் போடப்படும் முட்டுக்கட்டைகள், சில சுயநல அரச அதிகாரிகள், அரசியல்வாதிகளுடன் இணைந்து கொடுக்கும் நெருக்கடிகள், மாகாண சபைக்கு உள்ளே அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் சேறு பூசல்கள் என பன்முகப்பட்ட சவால்களுக்கு முகம்கொடுத்தே முன்செல்ல வேண்டியுள்ளது.

அரசியலில் சவால்கள் சாதாரணமானவை. அவற்றை முறியடித்து முன்செல்லும்போது மக்கள் ஆதரவு என்றும் நிலைக்கும்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 408



அனுப்புபவர் பெயர்:..........................................

பூரணமான தபால் விலாசம்: ..................................

..........................................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. கிறிஸ்தவர்களுக்கு பாப்பரசர் இந்த முறையானவர்
6. சோதிடத்துடன் தொடர்புடையது
7. கூற்றுவன்
8. குறைதல்
10. இந்துக்களில் ஒரு பிரிவினர்
12. வாழ்
13. சாமாத்தியசாலி
15. கீதம்
16. வருமதியானது
18. ஒரு அசைச் சொல்
20. பெற்ற அன்னையை பிள்ளைகள் ஆங்கிலத்தில் இப்படிச் சுட்டுவர்
21. அரசன்

### மேலிருந்து கீழ்

1. கொடி முந்திரிகை
2. சுவை உணர்வு
3. புவனம்
4. பெண்
5. ஒரு பழ வகை
8. நீதியின் பாற்பட்ட முறைமை
9. மொத்தமான
11. சொற்களின் இணைப்பால் உருவாவது
12. வெறுப்புடன் கூடிய வைராக்கியம்
14. பஞ்சபாண்டவருள் மூத்தவன்
15. இது இல்லையேல் சாதலா?
17. எருதின் ஏரி
19. நீரில் மட்டுமே இதனால் உயிர் வாழ இயலும்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வது டன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடை களை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்ட சாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 406இற்கான சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1) சபர்மதி (5)துவி (7)கரி (8)கண்காட்சி (10) வாசகன் (12)தடல் (13)சல்லி (14)பாலன் (15)யாசகன் (18)பணயம் (19) மோர் (20)கரம் (21)பிரதமை (23) விண் (24) பரிசில்

### மேலிருந்து கீழ்

(1)சகவாசம் (2)பரிசல் (3)மகன் (4)திண் (5) துட்டன் (6) விசில் (9)காதலன் (11)கலியாணம் (14) பாகம் பிரி (16)சய (17)கூர்மை (18)பரண் (19) மோதல் (20)கவி (22)ரசி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 406 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந் தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
எஸ். கார்த்தியாயினி,
இல. 61, E.V.S.
படித்த மகளிர் குடியேற்றத் திட்டம்,
மிருசுவில்

**2 ஆம் பரிசு**
நவரத்தினம் ஜனோதீபன்,
மட்டக்காய்ச்சி, உடுவில் தெற்கு,
சுன்னாகம்.

**3 ஆம் பரிசு**
யூ.ஹரிஸ்மா பச்சேக்,
வங்காலை -1 ,
மன்னார்

**4 ஆம் பரிசு**
சே.ஜனுசி,
இல.107/3 கடற்கரைவீதி,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
ம.மேசி லெற்றீஷியா,
இல. 1625, இரத்தினபுரம்,
கிளிநொச்சி

### பாராட்டுப் பெறுவோர்

திருமதி கி.யசோதா,
யார்க்கரு, கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

மு.கந்தையா,
தபாலக வீதி, சாவகச்சேரி.

திருமதி சிவதேவி தியாகராசா
இல.19, கே.கே.எஸ் வீதி,
தெல்லிப்பழை.

சொற்சிலம்பம் போட்டி இல.408 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட். இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (02.03.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.408இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 26.03.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 406 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:** எனக்கு 10 வருடங்களாக நீரிழிவு உள்ளது. இப்பொழுது மூன்று மாதகாலமாக எனது இரண்டு பாதங்களும் விறைப்புத் தன்மையாக உள்ளன. ஏன் இப்படி உள்ளது? இதற்கு என்ன செய்யலாம்?

வ.இராமு, உரும்பிராய்



# பாத விறைப்புக்கு என்ன செய்வது?

**பதில்:** இந்த நிலைமை நீரிழிவால் ஏற்படும் நரம்புப் பாதிப்பின் அறிகுறியாகும். குருதியில் குளுக்கோசின் அளவு கட்டுப்பாடற்று அதிகளவில் இருப்பதால் சில வகையான வெல்லங்கள் உருவாக்கப்பட்டு அவை நரம்பு நார்களைச் சுற்றி இருக்கும் கலங்களில் படிகின்றன. இதனால் அந்த நரம்புகளின் கடத்தல் செயற்பாடு பாதிக்கப்படுகின்றது. இதனை Diabetic Neuropathy என்று கூறுவர்.

இது கைகளைவிடக் கால்களையே அதிகம் பாதிக்கின்றது. இதன்போது அதிர்வு, நோ, வெப்ப உணர்ச்சி ஆகியன உணரப்படுவது பாதிக்கப்படுகின்றது. முதலில் இந்தப் பாதிப்பு பாதத்தில் மட்டும் தொடங்கும். உங்கள் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு தொடர்ந்து கட்டுப்பாடில்லாமல் இருக்குமானால், இந்த விறைப்புத் தன்மை மேல்நோக்கி அதிகரித்துச் சென்று உங்கள் கால்கள் இரண்டும் முழுமையாக விறைப்புத் தன்மை அடைந்து உணர்ச்சியற்றுப் போகும். பாதிப்பு அதிகரிக்கும்போது உங்களுக்கு காலின் கீழே ஏதோ ஒட்டிஇருப்பது போன்ற உணர்ச்சி, கண்ணை மூடி அல்லது இருட்டிலே நடக்கும்போது நிதானம் போன்றன ஏற்படலாம்.

இவ்வாறு உங்களுக்கு காலில் உணர்ச்சி குறைவாக இருப்பதால் காயங்கள் மற்றும் தீப்புண்கள் ஏற்படுவதை நீங்கள் அறியாமல் அல்லது கவனிக்காமல் விடவாய்ப்புள்ளது. நீரிழிவு உள்ளவர்களுக்கு காயங்கள் குணமாகும் தன்மையும் குறைவாக இருப்பதனால், உங்களுக்கு ஏற்படும் காயங்கள் மேலும் பெரிதாகி, சத்திரசிகிச்சை செய்து காலை அகற்ற வேண்டிய நிலை ஏற்படலாம்.

இந்த விறைப்புத் தன்மையை முற்றாகக் குணப்படுத்துவது என்பது சிரமமானது. நீங்கள் உங்கள் குருதிக் குளுக்கோசைச் சரியான அளவுக்குள் கட்டுப்பாடாக வைத்திருப்பதன் மூலம் காலில் விறைப்புத் தன்மை ஏற்படுவதைத் தடுக்க முடிவதுடன், இந்தப் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு மேலும் விறைப்புத் தன்மை மோசமடையாமற் தடுக்கலாம்.

உங்களது கால்களை நீங்கள் காயங்கள் ஏற்படாது கவனமாகப் பாதுகாக்க வேண்டும். வீட்டை விட்டு வெளியே செல்லும்போது கட்டாயம் செருப்பு அணிய வேண்டும். பாதணிகள் உங்களது பாதங்களை விடப் பெரியதாகவோ, சிறியதாகவோ அல்லது இறுக்கமாகவோ இல்லாமல் சரியான அளவுடையவையாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் இரவிலே படுக்கைக்குச் செல்லுமுன் உங்கள் பாதங்களை நன்றாகக் கழுவி ஏதாவது காயங்கள் உள்ளதா என்று கவனிக்க வேண்டும். அவ்வாறு காயங்கள் இருந்தால் தாமதம் செய்யாது மருத்துவ உதவியை நாடவேண்டும். நகம் வெட்டும்போது காயம் ஏற்படாதவாறு உங்களது விரல் மட்டத்துடன் வெட்ட வேண்டும். இவ்வாறு உங்கள் கால்களைப் பேணிப் பாதுகாப்பதுடன் நீரிழிவையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் உங்கள் விரல்களையோ அல்லது கால்களையோ இழக்க வேண்டிய ஆபத்திலிருந்து நீங்கள் தப்பிக் கொள்ளமுடியும்.

*டாக்டர் எஸ்.உமைபாலன்*
*நீரிழிவு சிகிச்சை நிலையம்*
*யாழ்.போதனா வைத்தியசாலை.*




## ஒரு கணம் சிந்தித்தால் என்ன?

யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் தற்கொலை பலரது மனதிலும் ஏதோ இனம் தெரியாத பயணத்தையும், இயலாத் தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. பெறுமதிமிக்க உயிரின் தாற்பரியம் பூச்சி கொல்லிகளால் கரைந்து கொண்டும் அலரிக்கொட்டைகளில் அழிந்து கொண்டும் இருக்கிறது. இத்தனை காலமும் தமிழ் மக்களின் உயிரிழப்புகள் பல வரலாறுகளை ஏற்படுத்தியிருக்க இப்படியாக அவலச் சாவுகள் மக்கள் மனதில் வெறுமையை ஏற்படுத்தியுள்ளன.

**ஏன் இத்தனை தற்கொலைகள்?**
**யாரில் என்ன தவறுள்ளது?**

எம்மில் ஒருதடவையேனும் தற்கொலை எண்ணம் தோன்றி மறையாதவர்கள் எத்தனை பேர்? விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் தான். ஏன் அவ்வாறான எண்ணம் தோன்றியவர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடவில்லை? அது ஒரு கண நேர மனநிலைத்தடுமாற்றம். சில சில கேள்விகளுக்கு அவர்கள் விடை தேடிக் கொள்கிறார்கள். மறுகணம் தமது முடிவை மாற்றிக் கொள்கிறார்கள்.

1. நான் இறப்பதால் கிடைக்கும் பயன் என்ன?
2. நான் இறந்துவிடின் துன்பப்படுபவர்கள் எத்தனை பேர்?
3. ஒரு சிறு நன்மையாவது என்னால் இந்த உலகத்துக்கு உள்ளதா?
4. நான் இறப்பின் மனத்தால் சித்திரவதைப்படுபவர்கள் உள்ளார்களா? உதாரணமாக ஒருவர் நான் இதைச் செய்திருந்தால் இவர் இறந்திருக்கமாட்டாரா? என்று எண்ணித்துன்புறப் போவது யார்?
5. எனது இக்கட்டான இந்த நிலைக் குழப்பத்துக்கு வேறு மாற்று வழியுள்ளதா?
6. வாழ்வில் ஒருதடவையேனும் நான் மற்றவர்களால் பாராட்டப்பட்டு உள்ளேனா?
7. என்னை விட மிகச்சிக்கலில் உள்ளவர்கள் இருக்கிறார்களா?
8. ஆன்மிகப்பற்றுள்ளவராயின் இறந்த பின் என் ஆவிக்கு கொடுமை மறுப்புக் கிடைத்துவிடுமோ?
9. தவறுதலாக உயிர்பிழைப்பின் என் கௌரவம் என்ன ஆகிவிடும்? ஏனோ ஒருசிலர் இவ்வாறான கேள்விகளைச் சந்திக்க முதலே முடிவெடுத்து விடுகிறார்கள் அல்லது கேட்டுக் கேட்டு விடை தெரியாமல் வேறு வழியற்று மரணத்தைத் தழுவிக் கொள்கிறார்களா?

இப்படியாக இறப்பவர்களில் பலர் மனதளவில் மிகவும் துன்புற்றவராகவே தனது பிரச்சினைகளைக் கலந்து ஆலோசிக்க தகுந்த நபர் கிடைக்காமலே இறந்திருக்கலாம்.

அடுத்து எமது இளைய தலைமுறையினரின் தற்கொலை முயற்சிக்குப் பொதுவான காரணங்கள் தான் நம்ப முடியாமல் உள்ளன.

1. மோட்டார் சைக்கிள் வாங்குவதற்குப் பெற்றோர் கடன் எடுத்துத்தர முடியாமை.
2. காதலனோ, கணவரோ, மனைவியோ கையடக்கத் தொலைபேசி அழைப்புக்குப் பதிலளிக்காமை.
3. பரீட்சைகளில் தவறுதல்
4. தொலைக்காட்சி பார்ப்பதையோ, வேறு கேளிக்கைகளையோ குறைக்குமாறு கண்டிக்கப்படுகின்றமை.

ஏன் இப்படியான நிலைமை ஏற்படுகின்றது. பெற்றோர், பிள்ளைகளுக்கிடையிலான மனநெருக்கம் குறைவடைந்தமைதான் காரணம், வேறுவேறு காரணிகளால் ஒருவரையொருவர் அறிந்தும் புரிந்தும் கொள்ள நேரப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலை.

எனவே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்களை யாரும் தாழ்வாகவோ, வெறுப்பாகவோ நோக்குகின்ற தன்மை இயலுமானவரை குறைக்கப்பட வேண்டும். உடலில் ஏற்படும் நோய்போல அவருக்கு மனதளவில் தற்காலிகமாக ஏற்படும் ஓர் இயலாத் தன்மைதான் இதற்குக் காரணம்.


தற்கொலை எண்ணம் ஏற்பட்டு வலுப்படுகையில் அந்த நபர் தன்னையே கேள்வி கேட்டு மனநிலையைச் சீராக்கலாம். புரிந்துணர்வு உடைய ஒருவருடன் உரையாடித் தெளிவடைய வேண்டும். வன்னியில் இடம்பெயர்ந்த எம்மக்கள் இத்தனை இழப்பின் பின்பும் தமது நிலையைக் கட்டி எழுப்புகின்ற மனவலிமையுடையவர்களாக இருக்கின்ற போது, அதே தமிழராகிய எம் யாழ். குடாநாட்டு இளம் சமுதாயம் ஏன் இப்படி வழிமாறிக் கொண்டு இருக்கிறது. விடையை அவரவரே தேடிக்கொள்வோம்.

விடையளிக்க வேண்டியவர்களின் பட்டியலில் பெற்றோர், நண்பர்கள் மருந்தக முதலாளிகள்.(எந்த விதமான மருந்துச் சிட்டைகளுமின்றித் தொகையான மாத்திரைகளை வழங்குதல்)

*வைத்தியர்பானு தில்லையம்பலம்,*
*மருத்துவப்பதிவாளர்,*
*யாழ்.போதனா வைத்தியசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்*



# பாலதீவு அந்தோனியார் திருவிழா கத்தோலிக்கர்களை இணைக்கும் பெருவிழா

> தவக்கால மூன்றாம் வாரம் கொண்டாடப்படும் யாத்திரைத்தல பெருவிழாவான பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழா யாழ், மன்னார் மறை மாவட்டங்களின் கரையோரக் கத்தோலிக்க மக்களை இணைக்கும் திருவிழாவாக அமைகிறது.

பாலதீவு புனித அந்தோனியார் தவக்கால யாத்திரைத்தல பெருவிழா 28ஆம் திகதி நடைபெறுவதை யொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

அல்லைப்பிட்டி - குருநகர் - வலைப்பாடு முழங்காவில் - இரணைமாதாநகர் - பள்ளிக்குடா பூநகரி - நாவாந்துறை - ஆனைக்கோட்டை - நவாலி - மண்டைதீவு - யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை - மெலிஞ்சிமுனை - பள்ளிமுனை - பேசாலை - மன்னார் - ஆகிய இடங்களைச் சேர்ந்த ஏறக்குறைய 20 ஆயிரம் யாத்திரிகர்கள் ஆண்டு தோறும் பாலதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தல பெருவிழாவில் பொதுவாகக் கலந்து கொள்கின்றனர். தவக்கால மூன்றாம் வாரத்தில் கொண்டாடப்படும் யாத்திரைத்தல பெருவிழாவான பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழா, யாழ், மன்னார் மறைமாவட்டங்களின் கரையோர கத்தோலிக்க மக் களை இணைக்கும் திருவிழாவாக அமைகிறது. இங்கு சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியது என்னவென்றால், கச்சதீவு புனித அந்தோனியார் பெருவிழாவும், பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழாவும், அரச வர்த்தமானி அறிவிப்புச் செய்யப்பட்ட விழாக்களாகும் என்பதாகும். மேலும் இந்தக் கடல் கடந்த இரண்டு தவக்கால யாத்திரைத் தலங்களும் புனித அந்தோனியாரின் யாத்திரைத் தலங்களாகும் என்பது சிறப்பு முக்கியத்துவம் பெறுவதாகும்.

**பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழா**

பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழாவை ஆரம்பம் முதல் அல்லைப்பிட்டி பங்கு மக்களே முன்னின்று நடத்தி வந்ததாக அறிய வருகிறது. இன்றும் கொடி ஏற்ற நிகழ்வை அல்லைப்பிட்டி பங்கு மக்களே முன்னின்று நடத்துகின்றனர். அல்லைப்பிட்டிப் பங்கு மக்களுக்கும் பாலதீவு புனித அந்தோனியார் தவக்கால யாத்திரைத் தலத்துக்குமான ஆரம்பத் தொடர்பை அலசி ஆராயும் போது, பாலதீவு புனித அந்தோனியார் தவக்கால யாத்திரைத் தலத்தை உருவாக்க மூலகர்த்தாவாக இருந்தவர் அல்லைப்பிட்டி புனித யுவானியார் ஆலய மூப்பர் சுழியான் மோசஸ் என அறியவருகிறது. பாலதீவு புனித அந்தோனியார் தவக்கால யாத்திரைத்தலத்தைப் பரிபாலித்து வந்த அல்லைப்பிட்டி மூப்பர்களின் பெயர்ப் பட்டியல், பாலதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தல பீடத்தின் அருகில் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். சுழியான் மோசஸ் என்பவரே பாலதீவில் கடற்தொழில் செய்து வந்த அல்லைப்பிட்டி - நாவாந்துறை - குருநகர் - நவாலி - மண்டைதீவு மக்களை இணைத்து 1895இல் கொட்டில் கோவில் அமைத்து ஊர்காவற்றுறையில் இருந்து புனித அந்தோனியார் சொரூபத்தைப் பெற்று வந்து அங்கு வைத்துப் பாரமரித்து வந்துள்ளார். பின்னர் சுழியான் மோசஸ் பாலதீவில் கடற்றொழில் புரியும் அனைத்துத் தொழிலாளர்களுடனும் கலந்துபேசி, 1918இல் மேற்படி கோவிலைக் கல்லினால் கட்ட ஆரம்பித்தார். இதன்போது, தற்போது இருக்கும் பீடத்துடன் சேர்த்து புதிய கட்டடம் அமைத்து தற்போது இருக்கும் கோவில்வரை முருகைக் கல்லினால் கட்டி முடிக்கப்பட்டது. பின்னர் 1936இல் அறைவீடு கட்டப்பட்டது. 1947இல் பாலதீவு புனித அந்தோனியார் தவக்கால யாத்திரைத் தலத்தை உருவாக்க மூலகர்த்தாவாக இருந்த அல்லைப்பிட்டி புனித யுவானியார் ஆலய மூப்பர் சுழியான் மோசஸ் அல்லைப்பிட்டியில் காலமானபோது அவரது இறுதி ஆசைப்படி அவரது பூதவுடல் பாலதீவில் அவரது சகோதரர் சுழியான் மார்க்கு என்பவரின் தலைமையில் கொண்டு செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. சுழியான் மோசஸ் என்பவரின் கல்லறை இன்றும் அல்லைப்பிட்டி மக்களால் பாலதீவில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தகவல்களைத் தந்தவர் சுழியான் மார்க்குவின் பேரனான, நாவாந்துறையில் வசித்து கடந்த மாதம் இறந்துபோன அல்லைப்பிட்டிவாசியான சூசைப்பிள்ளை ஆனந்தசெல்வம் என்பவராவார். இன்று பாலதீவில் இரண்டு கல்லறைகள் மட்டும் பாதுகாத்துப் பராமரிக்கப்பட்டுவருகின்றன. ஒன்று பாலதீவு புனித அந்தோனியார் தவக்கால யாத்திரைத் தலத்தை உருவாக்கியவரான சுழியார் மோசஸ் என்பவரின் கல்லறை. மற்றையது அங்கு செல்லும்போது இறந்த இரு சிறுவர்களின் கல்லறையாகும். 1958 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஏழாம் திகதி, பாலதீவு திருநாளுக்குச் சென்று கொண்டிருந்த படகு கவிழ்ந்ததில் குருநகரைச் சேர்ந்த 5 வயதான மத்தியாஸ் ஜெறால்ட் மற்றும் 2 வயதான மத்தியாஸ் இயேசுதாசன் ஆகிய சகோதரர்கள் இறந்து போனார்கள். இவர்கள் இருவரின் உடல்களும் ஒரே கல்லறையில் புதைக்கப்பட்டன. மத்தியாஸ் அன்ரனி (புஸ்பராஜா) என்ற இவர்களின் சகோதரர் இந்தத் தகவலை புந்துணர் (நறவம் - 4) என்ற 2014இல் பூநகரிப் பிரதேச செய லகத்தினால் வெளியிடப்பட்ட மலரில் தெரிவித்துள்ளார்.

சுழியான் மோசஸ் என்பவருக்குப் பின்னர், அவரது சகோதரர் சுழியான் மார்க்கு என்பவர் ஆலயப் பணிகளை மேற்கொண்டு வந்தார். அவரும் 1950இல் இறந்த போது சுழியான் மோசஸ் என்பவரின் நான்கு சகோதரர்களில் ஒருவரான அந்தோனி என்பவரின் மகன் பேதுறுப்பிள்ளை என்பவர் ஆலயப்பணிகளை மேற்கொண்டார். இவர் சுழியான் என்றே அறியப்பட்டார் எனத்தெரியவருகிறது. இவருக்குப்பின் பேதுறுப்பிள்ளையின் சகோதரரான அருளப்புவின் மகன் இயேசுதாசன் 1973 முதல் ஆலயப்பணிகளை மேற்கொண்டு வருகிறார். இவர் தற்போது உடல் நிலை நலிவுற்று இருப்பதால் பாலதீவு புனித அந்தோனியார் தவக்கால யாத்திரைத் தலத்தின் மூப்பர்ப் பணிகளை இவரது மகன் இயேசுதாசன் யூலன் என்பவர் மேற்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. போரின் பின்னர் 2010ஆம் ஆண்டு கடற்படையினரால் இரு தினங்கள் மட்டும் வழங்கப்பட்ட அனுமதியைப் பயன் படுத்தி வேஸ்பரும் திருநாளும் கொண்டாடப்பட்டன. 2011 ஆம் ஆண்டு ஆலயம் முழுவதும் புனரமைப்புச் செய்யப்பட்டது. 2012 ஆம் ஆண்டு அறை வீடு முழுவதும் திருத்தி அமைக்கப்பட்டது. 1972ஆம் ஆண்டு மூப்பர் அந்தோனி பேதுறுப்பிள்ளை (சுழியான்) என்பவரால் கன்னியருக்கெனக் கட்டப்பட்ட மடத்தைக் கடற்படையினர் தமதாக்கிய நிலையில் கன்னியருக்கென ஓர் அறையும் செபமாலைக் கடையும் அமைக்கப்பட்டது, 2013 ஆம் ஆண்டு மெழுகுதிரி கொளுத்துவதற்கான தனி இடம் அமைக்கப்பட்டது. யாத்திரிகர்கள் வழிபாட்டுக்கு வசதியாகத் தங்குவதற்கு தகரப்பந்தல் அமைக்கப்பட்டது. 1965ஆம் ஆண்டு மூப்பர் அந்தோனி பேதுறுப்பிள்ளை (சுழியான்) என்பவரால் கட்டப்பட்ட திருநாளுக்கு முன்னாயத்தப் பணியாளார்கள் தங்கும் கட்டடம் 2014 ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டது. இந்தக்கட்டடம் தற்போது குருக்களுக்கான சமையல் அறையாகவும், சாப்பாட்டு அறையாகவும் பயன்படுத்தப்படுகிறது. 2011 ஆண்டு முதல் மேற்படி பணிகள் அனைத்தையும் இயேசுதாசன் யூலன் என்பவரின் மேற்பார்வையில் அல்லைப்பிட்டிப் பங்கு மக்கள், குறிப்பாக இளைஞர்கள் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**பாற்கடல் என்று அழைக்கப்படும் கடற்கரை**

வலைப்பாட்டுக்கு மேற்கே யாழ் நகருக்கு கிழக்கே அமைந்துள்ள ஒரு கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட ஒரு அழகிய தீவே பாலதீவாகும். பாற்கடல் என்று அழைக்கப்படும் இந்தக்கடற்கரை, அதிக ஆழமற்று பால்போல் பரந்து செல்லும் கடற்பரப்பைக் கொண்டது. குஞ்சு குருமான்கள் எல்லாம் எப்போதும் இக்கடலில் மூழ்கிக் கும்மாளம் அடிப்பதைக் காணலாம். எந்தப் பயமும் இன்றி குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் இளைஞர்கள் ஆண்கள் என எல்லோரும் எப்போதும் குளிக்கக் கூடிய கடல் இதுவாகும். திருப்பலி முடிந்தவுடன் பெருந்திரளான மக்கள்,குருக்கள் உட்பட கடற் குளிப்பில் ஈடுபடுவது இங்கு ஒரு சிறப்பம்சமாகும். மற்றைய கடல்களைப்போல் அதிக உப்பில்லாது, பால்போல் இந்தக்கடல் அமைந்திருப்பதையும், மக்கள் எங்குமில்லாதவாறு சோப்பு போட்டுக் குளிப்பதையும் இங்கு குறிப்பாகக் காணலாம். வள்ளங்களைத் தொழிலாளர்கள், குறிப்பாக இந்தக்கடலில் குப்புறப்போட்டுக் கழுவுவதையும் காணலாம். பாலதீவுக்கு வருகின்ற தொழிலாளர்கள் இதை ஒரு கட்டாய வேலையாகவே செய்கின்றனர்.

**1964ஆம் ஆண்டு புயலில் ஆலயம் சேதம்**

1964ஆம் ஆண்டு புயல் அடித்த போது ஆலயத்துக்கு அருகில் இருந்த புளிய மரம் ஆலயத்தின் மேல் விழுந்து கொட்டில் ஆலயம் முற்றாகச் சேதமடைந்த போதிலும் புனித அந் தோனியார் சொரூபம் புதுமையாக எவ்வித சேதமுமின்றி இருந்துள்ளது. அந்தப் புனித அந்தோனியார் சொரூபமே இன்றும் ஆலயத்தில் வைத்து விழாக் கொண்டாடப்படுகிறது. அங்கே இருக்கின்ற குரிசு மரத்தைக் கட்டி எழுப்ப இராயப்பு, சிங்கராயர் அப்பு ஆகியோர் உதவி செய் தனர். குரிசு மரத்தில் உள்ள ஆண்டவரின் முகத்தைப் பொறிக்க எஸ்.எம். ஜே.பயஸ் என்பவர் துணை புரிந் தார். 20 பெப்ரவரி 1961இல் வரவேற்பு அந்தோனியார் சொரூபத்தை அமைக்க சம்மாட்டி சிமியான் பிலிப் என்பவர் உதவி புரிந்தார். 1982 ஆம் ஆண்டு சிலுவைப்பாதை சொரூபங்களைக் கட்டி எழுப்ப குருநகரைச் சேர்ந்த எமிலியானுஸ் ஜெயராஜசிங்கம் என்பவர் துணை புரிந்தார். பாக்கியமுத்து சவுரியான் என்பவர் குடிதண்ணீர் வழங்கலில் பெருந்துணை புரிந்தார். பெரிய வக்கு ஒன்று அமைக்கப்பட்டு குடி தண்ணீர் வழங்கப்பட்டு வந்தாலும் இப்போது கடற்படையினர் இப்பணியை ஆற்றுகின்றனர். 1979இல் குருநகரைச் சேர்ந்த ஞானேந்திரம் வள்ளத் தொழிலாளர்களால் மணிக்கூட்டுக் கோபுரமும் தேரும் செய்து கொடுக்கப்பட்டது. இந்தத்தேர் போர்க்காலத்தில் பராமரிக்க முடியாமல் பழுதடைந்த நிலையில், 2010 முதல் 2013 வரை அல்லைப்பிட்டி புனித யுவானியார் ஆலயக் கூடு பாவிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. பின்னர் 2014 இல் ஞானேந்திரம் வள்ளத் தொழிலாளர்களினால் கூடு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

**1970ஆம் ஆண்டு நடைபெற்ற சோக நிகழ்வு**

குருநகரைச் சேர்ந்த கி.கிறிஸ்தோப்பர் என்பவரிடம் இச்சம்பவம் பற்றிக் கேட்ட போது, உடனேயே குரல் இறுக ஐயோ, அது பற்றிச் சொல்லவே இன்னும் உடம்பு நடுங் குது. 27ஆம் திகதி பெப்ரவரி மாதம் 1970ஆம் ஆண்டு அன்ரனிப்பிள்ளை கிறகரி வெல்லம் என்பவரது வள்ளம் பிரண்டு அதில் பயணித்த 72 பேரும் இறந்து போன சம்பவம். ஏன் எப்படி அப்போது நடந்தது என்பது இன்னுமே தெரியாது. இதில் வெல்லத்தின் மகனும் இறந்து போனபோது குருநகரே அதிர்ந்து சோகத்தில் ஆழ்ந்து போனது என்றார். வெல்லம் என்பவரது மகன் டியூக் என்பவரும் அந்தச் சம்பவத்தில் உயிரிழந்தார். இந்தப் படகில் படகோட்டியாக காணிக்கை ஜஸ்ரின் என்பவர் பணியாற்றினார். இந்தத்தகவலை பிரான்சில் வசிக்கும் வெல்லத்தின் மகன் தனம் என்பவர் தெரிவித்தார். இந்த இடர் நிகழ்ந்த பல ஆண்டுகளின் பின்னர், வெல்லம் குடும்பத்தினர் புலம் பெயர்ந்தனர். மகன்களில் ஒருவரான கிறகரி என்பவர் பிரான்சில் குருத்துவக் கல்வி பெற்று குருவாகப் பணியாற்றுகிறார். 1970ஆம் ஆண்டு இந்த நிகழ்வு நடைபெற்றபோது சில்லாலைக் கிராமத்தில் 11 வயதுச் சிறுவனாக நான் இருந்தேன். சில்லாலையைச் சேர்ந்த ஆசிரியர்களான அன்னம்மா ரீச்சர் மற்றும் அம்மா ரீச்சர் ஆகியோரது கணவர்மாரும் இந்த நிகழ்வில் இறந்து போனார்கள்.

பாலதீவு புனித அந்தோனியார் திருவிழா யாழ் - மன்னார் மறைமாவட்ட கரையோரக் கத்தோலிக்க மக்களை இணைத்து இறைஅனுபவம் பெறும் ஒரு பெருவிழா ஆகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் 'மாற்றாற்றல் கொண்டோர் புனர்வாழ்வுச் சங்கத்தின்' வளர்ச்சிக்காக வட மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா கடந்த புதன்கிழமை மன்னார் மாற்றாற்றல் கொண்டோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் பணிப்பாளர் அருட் சகோதரி ஜோசப்பின் மேரியிடம் உதவிப் பணத்தை வழங்கி வைத்தார். (ஐ-56)



நயினாதீவு, ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்ற அபிராமிப்பட்டர் தின நிகழ்வுகள். (ஐ)







மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பண்டிவிரிச்சான் பாடசாலைக்கு குடி தண்ணீர்த்தாங்கி அமைப்பதற்கு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தமது பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் நிதி ஒதுக்கீடு செய்து, நீர்த்தாங்கியை அமைத்து மாண வர்களின் பாவனைக்காக திறந்து வைத்தார். நிகழ்வில் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், மடு பிரதேச செயலாளர் எப்.சி.சத்தியசோதி, மடு வலய கல்விப் பணிப்பாளர் ஜோண் குயின்ரஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)



வவுனியா, வைரவபுளியங்குளம் கிராமசேவகர் பிரிவிலுள்ள நகரசபை விடுதியில் வசிக்கும் 79 வயதுடைய மூதாட்டி ஒருவருக்கு அவருடைய செயற்பாடுகளை சிரமமின்றி மேற்கொள்வதற்காக 'தமிழ் விருட்சம்' அமைப்பால் சக்கர நாற்காலி வழங்கி வைக்கப்பட்டது. (ஐ-21)



சர்வதேச யோக பயிற்சிப் பட்டறையின் கீழ் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, ஜேர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 25 யோகா ஆசிரியர்களின் மேற் பயிற்சி நெறி அண்மையில் கீரிமலை சிவபூமி மடத்தில் நடைபெற்றது. இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்கள். (ஐ)



வடமாகாணசபை உறுப்பினர் இ.இந்திரராஜாவினால் வடமாகாணசபை குறித்தொகுக்கப்பட்ட நிதியிலிருந்து பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வு, வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெற்றது. (ஐ)



தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றி ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான ஆவணங்கள் கையளிக்கும் "சேவா மங்கலம்" நிகழ்ச்சித் தொடரின் மற்றொரு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அல்லாரை அ.த.க.பாடசாலையில் இடம்பெற்றது. பாடசாலை ஆசிரியை திருமதி ம.பொன்னம்பலம் ஓய்வு பெற்றுச் செல்வதையடுத்து அவரது ஓய்வூதியம் பெறுவதற்கான ஆவணங்கள் கையளிப்பும் மாணவர்களின் கல்வித் துறையில் அர்ப்பணிப்பான சேவையை வழங்கியமைக்கான விருது வழங்கலும் இடம்பெற்றன. (ஐ-9)



வவுனியா லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகப் பதவியேற்பு அண்மையில் நடை பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட லயன்ஸ் கழகங் களின் பிராந்தியத் தலைவர் லயன் சி.ஹரிகரன், புதிதாகத் தலைமைப் பதவியை ஏற்றுள்ள லயன் த.தமிழழகனுக்கு தலைவருக்கான பட்டியை அணிவித்தார். அத் துடன் கழக உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சற்குணராசா மற்றும் உரும்பிராய் வடக்கு கிராமஅலுவலர்சிஎழிலரசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)






யாழ். மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான வெற்றிக் கேடயங்களை வழங்கி வைத்தார். (ஐ)





வவுனியா சேமமடு சண்முகானந்தா மகா வித்தியாலய வருடாந்த இல்ல திறனாய்வுப் போட்டி பாடசாலையின் அதிபர் செ.சசிக்குமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ஐ)





அருணோதயக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. (ஐ-86)





மட்டுவில் தெற்கு அ.மி.த.க.வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற போட்டிக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) த.கிருபாகரனும், சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கியின் பரந்தன் கிளை முகாமையாளர் க.சிறிதரனும், கௌரவ விருந்தினர்களாக கிராம அலுவலர் பி.பி.அன்ரன் அலோசியஸ் மற்றும் ம.மகேந்திரலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-9)





பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி மேரிலாசர் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினராக மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாலய அதிபர் சி.மணிவண்ணனும் கலந்துகொண்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வவுனியா தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி, அண்மையில் வித்தியாலய மைதானத்தில் அதிபர் திருமதி எம்.எ.மோகன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட வடமாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் (பவன்), சிறப்பு விருந்தினர்களாக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.என். யு.என். சுபசிங்க, மேக்சன் வங்கி முகாமையாளர் ஆர்.சரவணன், கௌரவ விருந்தினர்களாக வவுனியா நகர சபையின் முன்னாள் உப நகர பிதா க.சந்திரகுலசிங்கம்(மோகன்), உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ல.யூட் பரதமாறன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)





கரணவாய். மணியகாரன் தோட்டம் அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. நிகழ்வின் சில காட்சிகள்... (ஐ-108)







சின்னடம்பன், பாரதி வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி வித்தியாலயத்தின் அதிபர் சிவராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஜி.ரி.லிங்கநாதன், தியாகராசா, எம்.பி.நடராஜா, பிரதிக் கல்விப் பணிப் பாளர் வாகீசன், நெடுங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கிருபானந்தன், வடக்கு வலயம் முன்பள்ளி உதவிக்கல்வி பணிப்பாளர் இராஜேஸ்வரன், கனகராயன்குளம் பொலிஸ் அத்தியட்சகர், ஞானம் பவுண்டேசன் வடமாகாண இணைப்பாளர் யோகேஸ், பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர் எனப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (ஐ-402)





வவுனியா, புதுக்குளம் பண்டிதமணி கணபதிப்பிள்ளை வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலையின் அதிபர் மு.சு.கணேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.





பளை இத்தாவில் வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த வாரம் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றன. அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானமும், சிறப்பு விருந்தினராக இத்தாவில் பிரிவு ஓய்வுநிலை கிராம அலுவலர் சி.தில்லையம்பலமும், கௌரவ விருந்தினர்களாக கிராம அலுவலர் சி.வல்லிபுரமும், பாடசாலை பழைய மாணவனும் கலந்து கொண்டனர். (ஐ-9)



இலங்கை நாட்டின் 68 ஆவது சுதந்திர தினத்தன்று கச்சாய் அ.த.க.பாடசாலையில் இடம்பெற்ற மரம் நடுகை நிகழ்வின் காட்சி. (ஐ-9)




பளை மத்திய கல்லூரி விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கலந்து சிறப்பித்ததோடு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

கச்சேரி -நல்லூர் வீதியில் ஒரு அறையுடன் விறாந்தை சமையல் அறை மற்றும் வசதிகளுடன் வீடு உண்டு.

தொடர்பு:- 077 116 6090 (69483) (10.17)

## காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு வன்னியசிங்கம் வீதியில் 02 நிலப்பரப்பு 2.73 குளி காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: வி. துஸ்யந்தன்
077 167 1174, 0777 286 061

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி. பரவிபாஞ்சான் , மருதனாரில் 16 பரப்பு மேட்டுக் காணி விற்பனைக்கு உண்டு.

077 784 9369, 077 998 8450

## தேவை

கச்சான் விஸ்கட், பைட்ஸ் உற்பத்தி செய்யக் கூடியவர்கள் தேவை. திருநெல்வேலியில் இருந்து 10K.M தூரத்துக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: T.P: 0779789223 (69472)(10.17.20)

## காணி விற்பனை

சுன்னாகம் சந்திக்கண்மையில் கே.கே.எஸ் வீதியில் கிழக்குப்பக்கமாக அமைந்திருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு பின்புறமாக, 100m தூரத்தில் 7பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(69352) (14,18,20)

தொடர்பு: 071 480 6309

## ELOCUTION TEACHER தேவை

சனி, ஞாயிறு தினங்களில் கற்பிக்கக்கூடிய ELOCUTION TEACHER (ஆங்கில பேச்சு திறன்) ஆசிரியை தேவை.

உடன் தொடர்பு கொள்ளவும்.

077 362 7055, 077 468 2951

## தவறிவிட்டது

துரைராசா ஜெயக்குமார் ஆகிய எனது 760484741 V இலக்கமுடைய தே.அ. அட்டை சாரதி அனுமதிப்பத்திரம்.ATM காட் அடங்கிய பேர்ஸ் ஆணைப்பந்திக்கும் இலுப்பையடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

077 983 8088, 021 222 7892

## அரிய வாய்ப்பு

**CANADA,USA ITALY,SINGAPORE MALAYSIA - VISIT/ STUDENT**

குறைந்த செலவில் விண்ணப்பிக்கலாம் April,may க்கு விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது
ITALY,FRANCE செல்வதற்கு Shengen Visa Documation Malta,Spain முலம் செய்துதரப்படும்

JULEE - 0766 535225
REKA - 0769 805 311

max adz

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

பண்டம், சில்க்கி, வான்கோழி, கினிக்கோழி, மணித்தாரா, ஊர்க் கோழி, காடைக் கோழி, வெள்ளடியன் போன்ற குஞ்சுகளும் மற்றும் வளர்ப்பினப் புறாக்கள், லவ்பேட்ஸ், பிஞ்சேஸ் மற்றும் பல இனக் குருவிகள், முயல், கினிப்பிக், நாய்க்குட்டி, மீன்தொட்டி, வளர்ப்பின மீன்கள், அவற்றுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

**மல்ரி பாம் பெட் பரடைஸ்**

941, கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு சந்தி அருகில், யாழ்ப்பாணம்.

021 221 7600 / 075 988 0000 (69486)(10.17)

## அக்ஷயா அழகு கலை நிலையம்

*அழகுக்கலைப் பயிற்சி, இந்திய முறையிலான சாறிவுளவுஸ் கட்டிங் (6), பஞ்சாபி(4) அடிப்படையில் இருந்து தையல் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.*கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட பருக்கள், கடும்கறை, மஞ்சள் - வெள்ளை, கறுப்பு புள்ளிகள் அகற்றும் கிறீம்.*கழுத்துக்கு கடும் கறுப்பு, கை, கால் கருமை நீக்கும் கிறீம்.*கண் கருவளையம், உதட்டுக் கருமை நீக்கும் கிறீம். *உடல் எடை கூட்டும் குறைக்கும் குளிசை, பால்மா, கிறீம்.*ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை. *இடுப்பு, கால், தொடை பாகங்கள் எடை குறைக்கும் கிறீம்.*முகத்தில் வளரும் தேவையற்ற முடியகற்றும் கிறீம். மார்பழகு கூட்டும், குறைக்கும் கிறீம், குளிசை, சோப்.*தலைமுடி வளரச்செய்யும் ஆயுள்வேத எண்ணெய், குளிசை. மேற்குறிப்பிட்டவை எம்மிடம் விற்பனைக்குண்டு.*முகத்தில் உள்ள கருமை, கழுத்துக் கறுப்பு ஒரே தடவையில் நீக்கும் பேசியல், முகம் மினுமினுப்பாக்கும் பேசியல், ஐப்றோ சேப், பேஸ் திரெட்டிங் செய்து கொள்ளலாம். *அயனிங் பேர்மிங் செய்து கொள்ளலாம். *றிச்கேக் (ஒன்று 55/-), ஐசிங் ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

T.P: 077 210 6155

அக்ஷயா
221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## கண்டர் வாடகைக்கு

16 அடி நீளமுடைய கண்டர் மாத வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0777 173 411 (69482) (10.17.20)

## Majestic Cineplex Jaffna

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்

CEYLON THEATRES



மிருதன் — மஜெஸ்டிக் பிளாட்டினம் 10.00 / 1.00, 4.00 / 7.00, Fri/Sat/Sun 9.30 p.m

சேதுபதி — சில்வர் 10.15 / 1.15, 4.00 / 7.00, Fri/Sat/Sun 9.30 p.m

பிளாட்டினம் — 10.15 a.m / 4.00 p.m | 1.15 p.m / 7.00 p.m, Fri/Sat/Sun 9.30 p.m

விசாரணை ☎ 021- 2227712

Find us on facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

# அலங்கார உற்சவம்

யாழ். கந்தர்மடம் சிவ உதய நாக பூசணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம். கடந்த 8 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடை பெற்று வருகின்றது. தொடர்ந்து பதினேழு தினங்கள் நடைபெறும் இந்தத் திரு விழாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை மாசி மகத் தன்று தீர்த்தத் திருவிழாவும் மாலை 5 மணிக்கு தீக்குளிப்பும் இடம் பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

(த-ரி)

## வேலையாள் தேவை

யாழ். நகரில் செல்லப் பிராணிகள் விற்பனை செய்யும் நிலையத் துக்கு வேலையாள் தேவை.

T.P: 075 988 0000 (69487)(10.17.20)

## வேலையாள் தேவை

திருநெல்வேலிப் பகுதியில் அமைந்துள்ள மருந்தகத்துக்கு வேலையாள்கள் தேவை. அருகிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது. அனுபவத்துக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு:
075 243 1018 (69481) (10.17.20)

## SONY வேலைவாய்ப்பு

**விற்பனை மேற்பார்வையாளர் SALES SUPERVISOR**

**விற்பனை செயற்பாட்டாளர்கள் – தள விற்பனை SALES EXECUTIVE - FIELD SALES**

எமது நிறுவனத்தின் புதிய சந்தைப்பொருளாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள **SONY BATTERIES** களை சிறந்தமுறையில் சனல் வணிக சந்தையை விரிவுபடுத்தி விற்பனையை அதிகரிக்கக்கூடிய ஆற்றலுள்ள, உற்சாகமும் ஆக்கபூர்வமான சிந்தனை திறனுடைய, குழுவாக செயற்படக்கூடிய விற்பனை செயற்பாட்டாளர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

தகமைகளாவன

- க.பொ.த உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- தள விற்பனை துறையில் குறைந்தது இரண்டு வருடகால அனுபவம்.
- ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் சிறப்பான மொழிப்புலமை சிங்கள மொழிப்புலமை இருந்தால் மேலதிக நன்மை.
- MICROSOFT WORD & EXCEL பற்றிய அறிவு.
- சனல் வணிக துறையில் அனுபவம் வாய்ந்தவராக இருத்தல் மேலதிக நன்மை.

நீங்கள் மேற்கூறிய தகமைகளை உடையவராயின் உங்கள் சுயவிபரக்கோவையை 29/02/2016 ற்கு முன்னராக info@panaudio.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை (தொழிலை) மின்னஞ்சலின் தலைப்பு பந்தியில் குறிப்பிடவும்.
முகவரி - இல3,1/1, ஸ்டேசன் வீதி , கொழும்பு 03.
தொலைபேசி - 011 2574430

www.panaudio.com
PanAudio PRIVATE LTD

## மாசிமக திருவிழா

யாழ் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான மாசி மகத்திருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. காலை 10 மணிக்கு அபிசேகமும் 12 மணிக்கு விசேட பூசையும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும்.

(தி)

## softlogic

BEST IN THE BUSINESS

**புதுக்குடியிருப்பு மண்ணில் புதியதோர் ஆரம்பம்**

softlogic **காட்சியறை திறப்பு விழா**

இலகு சாதனப் பொருள்கள் மற்றும் மின் உபகரணங்களை இலகுதவணை முறையில் பெற்றுக்கொள்ளலாம்.

திகதி : 22.02.2016
இடம் : பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு சந்தி.
நேரம் : பி.ப 12.30 மணி



தொலைபேசி : 077 5057870

CANDY Whirlpool Panasonic SAMSUNG DELL

(69470)(10.17.20)

## இலாபகரமான வியாபாரத்திற்கு..

20% விசேட விலைக்கழிவுடன்

**3D ஹீட் பிறஸ் மெசின்**

மக், பிளேற், ரிங் போத்தல், ஸ்ரோன்ஸ், ரீ சேர்ட், டைல் போன்றவற்றில் பிறின்ற் செய்யக்கூடியது



Studio ,Colour Lab, Book Shop,Gift Centers, Communication.. போன்ற வியாபார ஸ்தலங்களிற்கு உகந்தது




விலை ரூ 125,000 முதல் மேல்

பிரின்ட் செய்யக்கூடிய சகல பொருட்களும் எம்மிடம் உண்டு

077 201 5330
077 385 0089

WINRICH INTERNATIONAL (PVT) LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitya,Colombo - 03

max adz

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாருக்கு எதிராக முகநூலில் அவதூறு பரப்பியவருக்குப் பிணை

கொழும்பு, பெப். 21
பொலிஸாருக்கு எதிராக முகநூல் ஊடாக அவதூறு பரப்பிய ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
பதுளை கந்தக்கெட்டிய பிரதேசத்தில் நபர் ஒருவர் வாகனத்திற்கான காப்புறுதிச் சான்றிதழ் இன்றி வாகனம் செலுத்தியமைக்காக கந்தக்கெட்டிய போக்குவரத்துப் பொலிஸாரினால் தண்டப்பண பற்றுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த நபரின் வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட பொலிஸார் தற்காலிக அனுமதிப்பத்திரம் ஒன்றினையும் வழங் கியுள்ளனர்.
எனினும் தண்டப்பணப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொண்ட குறித்த நபர் அதனைத் தனது முகநூலில் பதிவேற்றியதுடன், 'நண்பர்களே, செய்யாத குற்றத்திற்காக என்னுடைய வாகன அனுமதிப்பத்திரத்தை கந்தக்கெட்டிய பொலிஸார் பறித்து விட்டனர். தற்போது என்னிடம் இருப்பது இதுவே' என்று பதிவேற்றியுள்ளார்.
இதனைத் தொடர்ந்து தமது பொலிஸ் நிலையப் பொலிஸாரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து குறித்த நபரைக் கைது செய்ததுடன் சந்தேக நபருக்கு எதிராகப் பதுளை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.
இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்த பதுளை மாவட்ட நீதிவான் நீதிபதி ஆர்.எம்.ஜீ.சீ. ராஜபக்ஸ குறித்த சந்தேக நபரை 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும், ஒரு லட்ச ரூபாய் சரீரப்பிணையிலும் விடுதலை செய்ததுடன் இந்த வழக்கு மீதான மேலதிக விசாரணையை எதிர்வரும் ஜூன் மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக அறிவித்துள்ளார்.
(த-5)

# காணமற்போனவர்களின் உறவினர்களுக்கு அச்சுறுத்தல்கள் தொடர்வதாக முறைப்பாடு

லண்டன், பெப்.21
இலங்கையில் போர்க்காலத்தில் காணாமற்போனவர்களின் உறவினர்கள் இன்னும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்குவதாக அரசிடமும் மனித உரிமை அமைப்புகளிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது லண்டன் பி.பி.சி. இது தொடர்பில் அதன் செய்தியறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
இராணுவ புலனாய்வாளர்கள் என்று கூறிக்கொள்வோரிடமிருந்தே தொலைபேசி மூலமாகவும் இனந்தெரியாத நபர்களிடமிருந்து நேரடியாகவும் தங்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக காணாமற்போனவர்களின் உறவினர்களில் ஐம்பது பேர் வரையான பெண்கள் நல்லிணக்கம் மற்றும் தேசிய கலந்துரையாடல்களுக்கான அமைச்சர் மனோ கணேசனை சந்தித்து முறையிட்டுள்ளனர்.
கிளிநொச்சி, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பெண்கள் கண்ணீருடன் தங்களின் கதைகளை சொல்லி அழுதார்கள் என்று அமைச்சர் மனோ கணேசன் கூறியுள்ளார்.
காணாமற்போனவர்களின் உறவினர்களை தேடி ஆர்ப்பாட்டம் செய்யாதே, ஊர்வலம் நடத்தாதே என்ற நேரடி அச்சுறுத்தல்கள், அகாலவேளை தொலைபேசி அழைப்புகள், இரவு நேர கதவு தட்டல்கள், தங்கள் வீடுகளில் உள்ள பெண் பிள்ளைகளின் பாதுகாப்பு போன்ற பிரச்சினைகளை இவர்கள் என்னிடம் சொல்லி அழுதார்கள் என்று அமைச்சர் மனோ கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.
கடந்தகால ஒட்டுக்குழு உறுப்பினர்களிடமிருந்தும், இராணுவ புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸார் என தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் தமிழ், சிங்கள மொழிகளை பேசும் நபர்களிடமிருந்து இத்தகைய அச்சுறுத்தல்கள் தொடர்வதாக எனக்கு புகார்கள் கிடைத்துள்ளன அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.
வடக்கு கிழக்கு பிராந்தியங்களுக்கு பொறுப்பான பொலிஸ் உயரதிகாரிகளிடமும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடமும் இதுதொடர்பில் பேச்சு நடத்தியுள்ளதாக கூறியுள்ள அமைச்சர் மனோ கணேசன், இனிமேல் இப்படியான சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.
இதனிடையே, தொலைபேசி மூலமும் வீட்டிற்கு வந்து நேரடியாகவும் மர்ம நபர்கள் தங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து வருவதாக 2009ஆம் ஆண்டில் இராணுவத்திடம் சரணடைந்து பின்னர் காணாமற்போயுள்ள ஒருவரின் குடும்ப உறவினரான பெண் ஒருவர் கூறியமை குறிப்பிடத்தக்கது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(வ)

# சீபா ஒப்பந்தத்தை வேறு பெயரில் கைச்சாத்திடுவதற்கு அரசு முயற்சி

## கெஹலிய ரம்புக்வெல குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.21
சீபா ஒப்பந்தத்திற்கு எதிராக மகிந்த ராஜபக்சவின் அரசு செயற்பட்டமையினால் இந்திய றோ அமைப்பு, உள்ளூர்ச் சக்திகளின் துணைகொண்டு இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது. மறுபடியும் சீபா ஒப்பந்தத்தை வேறு பெயரில் கைச்சாத்திட நல்லாட்சி அரசு செயற்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.
ராஜகிரியவில் அமைந்துள்ள என்.எம்.பெரேரா நிலையத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கெஹலிய ரம்புக்வெல இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,
நாட்டைப் பாதுகாக்கும் நோக்கில் 2009 ஆம் ஆண்டு இறுதிக் காலப் பகுதியில் இந்தியா வலியுறுத்திய சீபா ஒப்பந்தத்தை நாங்கள் நிராகரித்தோம். அப்போதைய இந்திய எதிர்க்கட்சித் தலைவரான சுஸ்மா சுவராஜும் அந்த ஒப்பந்தத்தையே வலியுறுத்தினார். ஆனால் நாங்கள் நிராகரித்தோம்.
எமது நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கான சந்தர்ப்பம் இந்தியர்கள் வசம் போய் விடக்கூடாது என்பதற்காக இதைச் செய்தோம். ஆனால், இன்று சீபா ஒப்பந்தத்தை வேறு ஒரு பெயரில் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நாம் இதனை எதிர்த்தமையினால் அன்று இந்தியா முழுமையானபலத்தைப் பயன்படுத்தி இலங்கையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தியது. மகிந்த ராஜபக்சவுக்கும் இந்தியாவுக்கும் தனிப்பட்ட கோபம் எதுவும் இல்லை. நாட்டின் நலன் கருதி சில விடயங்களை நாங்கள் செய்யவில்லை. ஆனால் அவை தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.- என்றார்.
(த)

# யானை தாக்கியதில் முதியவர் படுகாயம்

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள தட்டயமலை பிரதேசத்தில் நேற்று அதிகாலை யானையின் தாக்குதலில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.
குறித்த சம்பவத்தில் தட்டயமலைப் பகுதியைச் சேர்ந்த ஆரோக்கியசாமி வீரவாகு (வயது-56) என்பவரே இவ்வாறு யானையின் தாக்குதலுக்கு இலக்கானவராவார்.
இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
ஒட்டுசுட்டான் பகுதியில் இருந்து நேற்று அதிகாலை புறப்பட்டுச் சென்ற முதியவரை சாலை ஓரம் நின்ற காட்டு யானை தாக்கியதில் அவர் படுகாயமடைந்து வீதியில் கிடந்த வேளை வீதியால் பயணித்தவர்களால் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் இடம்பெற்ற தட்டய மலை பகுதி மற்றும் ஒதியமலை, பனிக்கன்குளம், முத்தையன் கட்டு போன்ற பிரதேசங்கள் அடிக்கடி காட்டு யானைகளின் தாக்குதலுக்கு உள்ளாகும் பிரதேசம் என்பதோடு குறித்த பகுதிகளில் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்காக மின்சார வேலி அமைத் துத் தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் முறையிட்டும் இதுவரை எந்தப் பலனும் இல்லை எனவும் கவலை தெரிவிக்கப்பட்டது.
(த-101)

# தேர்த்திருவிழா

வண்ணை வேம்படி சித்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது.
வசந்தமண்டபப்பூசையைத் தொடர்ந்து பெருமான் காலை 9 மணிக்கு தேரில் ஆரோகணித்து வீதி வலம் வரவுள்ளார்.
ஆலயத்திலிருந்து புறப்படும் தேர் காங்கேசன்துறைவீதி,ஆஸ்பத்திரி வீதி, சிவன் பண்ணைவீதி,மானிப்பாய் வீதி, சிவன் வடக்கு வீதி வழியாக மீண்டும் காங்கேசன் துறை வீதியை அடைந்து ஆலயத்தை அடையும்.
கடந்த 8 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்த ஆலயத்தின் மகோற்சவத்தில் மாசிமக தினமான நாளை திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு தீர்த்தமும் நடைபெறவுள்ளது.
(த)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 20 . 04 . 1940



விண்ணில் 22 . 01 . 2016

**அமரர் தம்பிராசா இராசமணி**

எமது குடும்பத்தலைவி 22.01.2016 அன்று சிவபதம் அடைந்த செய்தி கேட்டு எமக்கு பக்கபலமாய் இருந்து உதவி செய்து ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு,
இன்று (21.02.2016) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதோடு நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

449/3, இராமலிங்கம் றோட்,
முடமாவடி, நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
(69475)(15,17,20)



## கண்ணீர் அஞ்சலி



கலாபூஷணம் கலைஞான சுடர் மாமனிதர்
வண்ணை கலைவாணர் நாடக மன்ற
இயக்குநர் சிவக்கொழுந்து திருநாவுக்கரசு
மூத்த புகைப்பட கலைஞர் அரசையா
என்று அழைக்கப்படும்

அரசர்
**சிவக்கொழுந்து திருநாவுக்கரசு**
அவர்கள்
17.02.2016 அன்று காலமாகிவிட்டார்
என்ற செய்தி கேட்டு மிகுந்த
துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

கருணாநிதி குடும்பம்
சிவஅன்பு குடும்பம்
லோகநாதன் குடும்பம்

வண்ணை கலைவாணர் நாடக மன்றம்
(69474) (10.20)



## 21 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 04 . 1942



மறைவு 14 . 02 . 1995

அமரர் **தியாகராசா அரசரத்தினம்**
(இளைப்பாறிய இ.போ.ச சாரதி - காரைநகர்)
*திதி: 21.02.2016*

நற்குணமும் நற்பண்பும்
நிறைந்ததொரு மானிடராய்
வாழ்ந்து மறைந்த அப்பாவே !
உங்களை எந்நாளும் மறவோம்

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.
(69429)
(14,18,20)

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருளின் விலை குறைவடைய வாய்ப்பு

கொழும்பு, பெப். 21
உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்தமையை அடுத்து இலங்கை மக்களுக்கும் குறித்த நிவாரணத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.
அரச தகவல்கள் திணைக்களத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அங்கு அமைச்சர் சந்திம வீரக்கொடி மேலும் குறிப்பிடுகையில்,
உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்தமைக்காக இலங்கையில் பெற்றோலின் விலையைக் குறைப்பதற்கு இயலாது. ஏற்கனவே, எரிபொருளின் விலையைப் பெருமளவில் குறைத்தமையினால் நாட்டில் டொலர் பெறுமதி குறைவடைந்தது. மேலும் மக்கள் பெரும் கடன் சுமையைச் சுமக்க வேண்டியேற்பட்டது.
தற்போதைக்கு 30 டொலரில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் இலங்கைக்கு இறக்குமதிசெய்யப்படுகின்ற போதிலும் குறித்த நிவாரணங்களை மக்களுக்கு வழங்குவதில் பல சிக்கல் நிலைகள் காணப்படுகின்றன. எனவே, விலைக்குறைப்புத் தொடர்பில் நிதி அமைச்சுடன் பேச்சு நடத்தியதன் பின்னர் நிரந்தர தீர்வு வழங்கப்படும். என்றார்.

(த)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புஸ்பராணி (செல்லமணி) தில்லையம்பலம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி (செல்லமணி) தில்லையம்பலம் கடந்த 18.02.2016 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் தில்லையம்பலம் (ஓய்வு நிலை கிராம அலுவலர், முன்னாள் யாழ் மாநகர சபை கௌரவ உறுப்பினர்) அவர்களின் அன்பு மனைவியும் இராசம்மா, சிவபூபதி, தர்மகுலசிங்கம், சுலோசனா தேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் , வசந்தன் (லண்டன்), வதனா (லண்டன்), நிஷாந்தன் (ஹீரோ அபான்ஸ் கம்பனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பரிமளாதேவி (லண்டன்), பவானந்தன் (லண்டன்), சுனீத்ரா ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோஷன், ஜெருசன், மதுஷன், லிதியா, எஸ்ரோன், அர்விந் நிஷாரா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான மதியாபரணம், தங்கவேலு, சீனியர் மற்றும் பீதாம்பரம், புஸ்பமலர், எலிசபெத், தியாகராசா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2016) ஞாயிற்றுக் கிழமை பி.ப 3.00 மணிக்கு இல. 33, கலைமகள் வீதி அரியாலையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.33, கலைமகள் வீதி,
அரியாலை. T.P: 077 6408 622
தகவல்: குடும்பத்தினர்.
(69473) (15,17,20)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஸ்ரீதேவி அரியரத்தினம் (சிறி)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மின்சார நிலைய வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீதேவி அரியரத்தினம் நேற்று (20.02.2016) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும் அரியரத் தினத்தின் (ஆட்டோ - அரியம்) பாசமிகு மனைவியும் மனோகரதேவி, கருணாதேவி ஆகியோரின் சகோதரியும் சுப்பிரமணியம், காலஞ்சென்ற நடராஜா மற்றும் இராஜேந்திரன், இலங்கை நாதன், பஞ்சலிங்கம், யோகராணி, இராஜேஸ்வரி, சரோஜா, இரத்தினம், இந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2016) ஞாயிற்றுக் கிழமை பி.ப ஒரு மணியவில் மயிலணி, சுன்னாகத்தில் அமைந்துள்ள அன்னாரது சகோதரியின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 077 6133 432
(c/29196) (15,17,20)
தகவல்: கணவர் சி.அரியரத்தினம்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நாகலிங்கம்



முதலாம் வட்டாரம், சந்தையடி, புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், இல.02, பிறவுண் றோட், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகலிங்கம் நேற்று (20.02.2016) சனிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பி ராசா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கநேசத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், செல்லம்மா, இராசம்மா, பார்வதி, சின்னம்மா, கதிர்காமம் வேலாயுதபிள்ளை (பழனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினகுமார் சியாமளா தேவி இரத்தினவேல் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற தயானந்தன் (கனடா) மற்றும் கனகேஸ்வரி (ஜேர்மன்) சிவபாலன் (லண்டன்) திலகேஸ்வரி (ஜேர்மன்) நகுலேஸ்வரி (பிரான்ஸ்) காலஞ்சென்ற சுதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மங்கையர்க்கரசி (கனடா) மகேஸ்வரன் (ஜேர்மன்) இராஇராஜேஸ்வரி (லண்டன்) தர்மராசா (ஜேர்மன்) ஸ்ரீகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் அருண், அருணா (கனடா) வசிகரன், லவனியா, லக்சிகா, லக்வின் (ஜேர்மன்) சிந்துஜன், தர்ஷன், கௌசிகன் (லண்டன்), தர்சினி, தவினா, தினுசன் தர்சிகா (ஜேர்மன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

02, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
077 312 7095 (69484) (10.17.20)
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி மரியநாயகம் மேரி றோஸ் (பூமணி)



மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், 25/1, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியநாயகம் மேரி றோஸ் (பூமணி) 18.02.2016 வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பிலிப்பையா- இன்னேசியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஜோசேப்-மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மரியநாயகத்தின் (பொலிஸ்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற மரியதாஸின் (JP) அன்புச் சகோதரியும், மேரி இமல்டா (புனிதம்), யோசப் ஸ்ரான்லி (சோதி - இளைப்பாறிய பல நோக்கு கூட்டுறவு சங்க கிளை முகாமையாளர்-பளை), லூட்ஸ் (ராஜினி), லோறன்ஸ் (ஜெந்திரா- ஜெயப்பிரதாப் நகைமாடம், யாழ்ப்பாணம்) அலோசியஸ் (பவா Rtd.Unicef), அருள்நேசன் (ராஜன்-கனடா), ஸ்ரெலா கிறேஸ் (ஐடா) ஆகியோரின் அன்புத் தாயும், ராஜசிங்கம், ஜெயவதி, காலஞ்சென்ற யோசவ் (நாதன்), தனேஸ்வரி (பிரதி அதிபர், சென் ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்), இமல்டா, மாலா (கனடா), விஜயகுமார் (விவசாய போதனாசிரியர் கிளிநொச்சி) ஆகியோரின் மாமியும், புஸ்பகுமார், ஜெயகுமார், ராஜ்குமார், விஜயகுமார், ரவிந்திரகுமார் (லண்டன்), அருட்சகோதரி ஜொயிலின் ராஜி (HF) அருட்சகோதரி மரியவிஜிதா (AC), யூயின் சுகி (கனடா) அனட்றிறா (ஆசிரியர் றோயல் கல்லூரி-கொழும்பு) பஸ்ரி றஜித் (கரித்தாஸ் கியூடெக்), டொரின் டல்சி (காகில்ஸ் வங்கி - யாழ்ப்பாணம்)சுபாஜினி, பேபி (கனடா), காலஞ்சென்ற டயாலினி, தனுஷா, றுக்ஷி, பிரதாப் (கனடா) கிருஷாந் (NDB வங்கி-சுன்னாகம்), சஜித், சியாந்தி (லண்டன்), டினோத் (யாழ் பல்கலைக்கழகம்-யாழ்ப்பாணம்), லக்ஷியா, டிசான் (கனடா) டிஸ்னா (கனடா), தெவோன் (கனடா), சர்மியா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனைகள் 25/1, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் நாளை (22.02. 2016) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்று, மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ம. லோறன்ஸ்
25/1, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(69471) (10.17.20)

### திருமதி சின்னத்தங்கம் சிங்கராசா



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கம் சிங்கராசா நேற்று (20.02.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கோவிந்தர் - தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் சிங்கராசாவின் அன்பு மனைவியும் மேரிராசமலர் (ஜேர்மனி), மேரிதேவமலர், கெனடி திருச்செல்வம் (பிரான்ஸ்), பெனடிற் அருட்செல்வம், மேரி ஜெயமலர் (முன்பள்ளி ஆசிரியை) காலஞ்சென்ற டேவிட் ஞானச்செல்வம், றொபேட் தவச்செல்வம் (சுகாதார திணைக்களம் விலங்கு விசர் நோய் தடைப்பிரிவு) ஆகியோரின் அன்புத்தாயாரும் சிறிவரதராஜன் (ஜேர்மனி), மதுரநாயகம், சுரேந்தினி (பிரான்ஸ்), ஜெயவதனி, மேரி பிறீமினி (பிறின்ஸ் - இன்டஸ்றீஸ் உடுவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிளவ்டியா, ஸ்ரெபான், ஞானப்பிரகாஸ், ஜெயப்பிரசாந், பிரதீபா, அபினேஸ், அபிலா, ஆன்பிரியானா, ஆன்றூஸ், ஆன்மேரா, ஆன்றியா, பிறின்ஸ் றொனால்டோ ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (22.02.2016) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மூளாய் செபமாலை மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக மூளாய் இரங்கல் செபமாலை மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

R.C சேச், மூளாய், சுழிபுரம்.
T.P: 021 790 3638
(c/29197) (15,17)
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி குணமணி தர்மலிங்கம்



கோப்பாய் மத்தி காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணமணி தர்மலிங்கம் கடந்த (19.02.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் (ஓட்டுப்பலகை கூட்டுத்தாபனம் - மேற்பார்வையாளர் - சுன்னாகம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புச் சகோதரியும் தியாகலிங்கம் (லண்டன்), லீலாவதி ஆகியோரின் அன்புத்தாயாரும் இராசநாயகம் (ஓய்வுபெற்ற புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்), யோகேஸ்வரி (றீற்றா) ஆகியோரின் மாமியாரும் தர்மதா (லண்டன்), துசாந் (லண்டன்), தனஞ்சன் (லண்டன்), Dr.ஜனா (யாழ் போதனா வைத்தியசாலை), சயந்தன் (லண்டன்), பாலதர்மேந்திரன் (செலான் வங்கி - கிளிநொச்சி) ஆகியோரின் பேர்த்தியும் பிரவீன், அஸ்விகா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2016) ஞாயிற்றுக் கிழமை மு.ப 11.00 மணியவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
T.P: 021 223 0151
(69476) (15,17)
தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாயில்

வது:-
மதகுருவின் வீட்டுக் கதவை உடைத்து உட்புகுந்த 4 கொள்ளையர்கள் மதகுருவினைத் தாக்கியுள்ளனர். பின்னர் கத்தி மற்றும் வாள் என்பவற்றைக் காட்டி அச்சுறுத்தியவாறு சத்தம் போடக்கூடாது என்று கூறிக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது அதிக பெறுமதியான நகை மற்றும் ஆலயத் திருப்பணிக்காக வைத்திருந்த பணம் என்பனவற்றைக் கொள்ளையிட்டுள்ளனர். அத்துடன் வீட்டில் இருந்த பெண்ணின் தாலியையும் அபகரிக்க முற்பட்டவேளை மதகுருவின் மன்றாட்டத்தின் பின்னர் அதனை விட்டுச் சென்றுள்ளனர்.

கொள்ளையர்கள் அதனுடன் நிற்கவில்லை. தொடர்ந்து கோப்பாய் கரந்தாய்ப் பகுதியில் தனிமையில் வாழ்ந்த பெண்ணின் வீட்டுக் கதவை உடைத்து உட்புகுந்த கொள்ளையர்கள் பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தி அவர் அணிந்திருந்த 4 பவுண் தங்கச் சங்கிலியையும் 2 பவுண் நிறையுடைய ஒரு சோடி காப்பையும் ஒரு தொகைப் பணத்தையும் கொள்ளையிட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, மற்றொரு வீட்டுக்குச் சென்றுள்ளனர் கொள்ளையர். அந்த வீட்டுக்காரர், அண்மையில்தான் சுவிஸ் நாட்டிலிருந்து வந்திருந்தார் என்று கூறப்பட்டுள்ளது.

குறித்த வீட்டிலிருந்த 3 வளர்ப்பு நாய்களுக்கும் கொள்ளையர்கள் மயக்க மருந்து கலந்த உணவுப் பொருளை வீசியுள்ளனர். அதனைச் சாப்பிட்டுவிட்டு அந்த நாய்கள் மயங்கிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் கொள்ளையர் வீட்டின் கதவை உடைக்க முயன்ற வேளையில், வீட்டார் விழிப்படைந்து மாடியில் இருந்து கொள்ளையர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தியதோடு சத்தமிட்டுள்ளனர். அதனால் கொள்ளையர் வேறுவழியின்றி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது கொள்ளையர் கத்தி ஒன்றையும் முகத்தை மறைக்கப் பயன்படுத்திய துணி ஒன்றையும் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்பின்னர், பிறிதொரு வீட்டுக்குச் சென்ற திருடர்கள் அங்கிருந்த மூன்று இளைஞர்களையும் கத்திமுனையில் ஓரிடத்தில் இருத்தியுள்ளனர். அங்கு அந்த வீடு முழுவதும் தேடுதல் நடத்தியுள்ளனர். எனினும் குறித்த வீட்டில் எதுவும் அகப்படாததால் அந்த இளைஞர்களில் ஒருவர் அணிந்திருந்த மோதிரத்தையும் அங்கிருந்த புதிய மோட்டார் சைக்கிளையும் பறித்துச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் அயலிலுள்ள இரண்டு முதியவர்கள் வாழும் வீட்டின் கதவையும் உடைத்து உட்புகுந்துள்ளனர். அங்கு ஓர் முதியவர் அண்மையில் பெற்றுவந்த ஓய்வூதியப் பணத்தில் 25 ஆயிரம் ரூபாவை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தத் துணிகரக் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் 25 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் அவர்கள் ஹயஸ் வாகனம், மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் என்பனவற்றில் வந்திருந்ததாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் ஒவ்வொரு வீட்டாரும் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியும் அதிகாலை 3 மணிக்கே சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வந்திருந்ததாகப் பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

சம்பவம் தொடர்பாக மோப்பநாய் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் மஞ்சுள ஹகந்தவல தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் தெரிவிக்கையில்,

குறித்த கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் ஆரம்ப விசாரணைகள் இடம்பெறுகின்றன. முதலில் வீட்டு உரிமையாளர்களால் வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் பிரகாரம் இடம்பெற்ற விசாரணைகளில், கொள்ளையர்களால் எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் சில பொருள்கள் ஆங்காங்கே மீட்கப்பட்டன.

**எனினும் விசாரணைகள் முழுமையாக முடிவடையும் வரை குறித்த சம்பங்களில் கொள்ளையிடப்பட்டவை தொடர்பில் முழுமையான விவரங்களையோ அல்லது பெறுமதியையோ தெரிவிக்க முடியாது என பொலிஸார் குறிப்பிட்டனர்.**

இதேவேளை, யாழ். குடாநாட்டில் குற்றச் செயல்கள் மீண்டும் அதிகரித்துள்ளதாகக் கேள்வியெழுப்பியுள்ள பொதுமக்கள், சட்டத்தைக் காக்கவேண்டியவர்கள் விழித்துக் கொள்ளவேண்டும் என்று கூறுகின்றனர்.

யாழ். குடாநாட்டில் தலைதூக்க முயலும் ரவுடிகள் மற்றும் கொள்ளையர் ஆட்சியைக் காவல்துறையினரும் நீதித்துறையினரும் இணைந்து உடன் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறித்த கொள்ளைகளினால் பாதிக்கப்பட்ட மக்கள் அவசர கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சுமார் ஒரு மணி இருக்கும். நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. படுக்கையில் இருந்தவாறே கண் விழித்துப் பார்த்தேன். வீட்டின் வெளியே யன்னலோரம் ஒருவர் நிற்றதை அவதானித்தேன். திருடன் என உரத்துக் கத்தினேன். அவ்வாறு கத்தும்போது எனது சத்தத்தை விஞ்சிக்கொண்டு எனது வீட்டின், கதவு உடைக்கப்படும் சத்தம் கேட்டது. அப்போதும் சத்தமிட்டபோதும் உதவிக்கு எவரும் வரவில்லை.

முகத்தைத் துணியால் கட்டி மறைத்தவாறு 4 பேர் வீட்டுக்குள் நுழைந்தனர். நான் ஓட முயன்றபோது, ஒருவன் என்னைப்பிடித்து சத்தமிட்டால் கழுத்தை அறுப்பதாகக்கூறி எனது கழுத்தில் கத்தியை வைத்தான். ஏனைய மூவரும் வீட்டை சல்லடை போட்டுத்தேடுதல் நடத்தி 5 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்துச் சென்றனர். இறுதியில் நான் அணிந்திருந்த சங்கிலியையும். காப்பையும் பறித்துச் சென்றனர் என்று குறிப்பிட்டார்.

முன்னர் வீதிகளில் பறித்துக் கொண்டு ஓடியவர்கள் தற்போது பகிரங்கமாக வீடுகளை உடைத்துப் புகுந்து கொள்ளையடிக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்து விட்டது என்கிறார் மற்றொருவர்.

இந்தக் கொள்ளையால் பாதிக்கப்பட்ட மற்றொருவர் கூறுகையில்,

நடந்தது என்ன என்பதைத் தெரிவிப்பதற்கே அச்சமாகவுள்ளது. இந்தச் செய்தி ஊடகங்களில் வெளிவரும்போது கொள்ளையர்கள் அவதானித்துவிட்டு மீண்டும் வந்து உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தினால்கூட இன்று கேட்பதற்கு எவருமில்லை -என்றார். பொலிஸார் இவற்றுக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எப்போது எடுக்கப் போகிறார்கள் என்பது அவர்களின் கேள்வியாகவுள்ளது. (த-வ-4-101-17)

## மகிந்தவின்

அவரது மனைவி புஷ்பா ராஜபக்ச, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் பீ.பீ. ஜயசுந்தர, முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ, அவரது மனைவி சஷி வீரவன்ஸ, பீபிள்ஸ் லீசிங்' நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியின் பிரதம அதிகாரியுமான காமினி செனரத், திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஆர்.ஏ.ஏ.ரணவக்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், அமைச்சர் அநுர பிரியதர்ன யாப்பா, ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சர் சசீந்திர ராஜபக்ச, முன்னாள் அமைச்சர் சஜின் வாஸ் குணவர்த்தன, மேல் மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மேலதிக நடவடிக்கைகள் இன்றி பல மாதங்களாகக் கிடப்பில் போடப்பட்டிருப்பதாக ஏற்கனவே கடும் விமர்சனங்கள் எழுந்திருந்தன. சட்டமா அதிபரின் காரியாலயத்தில் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையின் காரணமாகவே இந்தத் தாமதம் ஏற்பட்டதாகக் காரணம் காட்டப்பட்டது.

மோசடியொன்றின் தொடர்பில் பொலிஸார் மேற்கொள்ளும் விசாரணைகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்குச் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் அவசியமாகும். எனினும், சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளதாக மேற்கூறியவர்களுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அவர்களுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், இத்தகைய பாரதூர மோசடிகள் தொடர்பில் தற்சமயம் விசாரணை செய்யப்பட்டுவரும் 2 ஆயிரம் முறைப்பாடுகளில் 725 முறைப்பாடுகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உறவினர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் தொடர்பானவையே என அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார். (த-சி)

## வவுனியாச்

சபையின் வவுனியா மாவட்ட உறுப்பினர் எம்.பீ.நடராஜ், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் பிரத்தியேக செயலாளர், வவுனியா வரியிறுப்பாளர் சங்கம், மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழ் விருட்சம் அமைப்பினர், வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு, புளொட் அமைப்பின் வவுனியா மாவட்டப் பிரதிநிதி, காணாமற்போனோர் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட 30 பேர் இணைந்து மேற்படி முடிவை எடுத்துள்ளனர்.

உக்கிளாங்குளம் பகுதியில் கடந்த 16 ஆம் திகதி பாடசாலை மாணவி வீட்டில் தனியே இருந்த சமயம் இனந்தெரியாதோரால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். கொலை செய்தவர்களைப் பொலிஸார் இன்னமும் கைது செய்யவில்லை.

குறித்த சிறுமிக்கு நடந்த அநீதிக்கு நீதி கோரியும், குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சட்ரீதியான நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இனிவரும் காலங்களில் இவ்வாறு தவறுகள் சமூகத்தில் இடம் பெறாதிருக்கவேண்டும். பாலியல் வன்புணர்வைத் தூண்டாத வகையில் ஊடகங்கள் செயற்படவேண்டும்.

மேற்படி விடயங்களை வலியுறுத்தி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாபெரும் கவனவீர்ப்புப் பேரணியும் ஆர்ப்பாட்டமும் வவுனியா மாவட்ட அரச அதிபருக்கான மனுக் கையளிப்பும் நடவடிக்கையை மேற்கொள்ளவும் மறுநாள் புதன்கிழமை வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பூரண கடையடைப்பும் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-5-402)

## அல் ஹுசேனுக்கு

களுக்கான அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு பிரதம நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார். இதன்படி குறித்த அனைவரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நான்கு நாள் உத்தியோகபூர்வப் பயணமாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் கடந்த 6 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அவரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து விமல் வீரவன்ச தலைமையிலான குழுவினர் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது அனுமதியின்றி ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தியதாகவும் அதன் ஊடாகப் பொதுமக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கியதாகவும் குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வீதிச் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கக்கூடிய குற்றமிழைக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு அமைய கறுவாத்தோட்டம் பொலிஸார் பதிவு செய்துள்ள முறைப்பாட்டிற்கு அமைய நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (த-5)

## பாணின் விலை

உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் கா.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் வாரம் எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரையிலான ஒரு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்த ஒரு வார காலத்துக்கும், பாணின் விலையை 4 ரூபாவால் குறைக்குமாறு அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் என்.கே. ஜயவர்த்தனவால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், யாழ்.மாவட்ட உரிமையாளர் சங்கம், நுகர்வோர் வாரத்துக்கு மதிப்பளிக்கும் வகையில், யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பேக்கரிகளிலும் ஒரு இறாத்தல் பாணை 4 ரூபா குறைப்புச் செய்து 50 ரூபாவுக்கு விற்பனை செய்யுமாறு சகல பேக்கரி உரிமையாளர்களையும் கேட்டுக் கொண்டுள்ளது. இந்த விலைக் குறைப்பு யாழ்.மாவட்டத்திலுள்ள பேக்கரிகளில் விற்பனை செய்யப்படும் பாணுக்கே பொருந்தும் எனவும், ஒரு வார காலத்துக்கு மாத்திரமே இது நடைமுறையில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## ராஜபக்சாக்களால்

செயலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரக் கட்சியை விட்டு மகிந்த ராஜபக்ச பல தடவை வெளியேறியிருந்தார். ஆனால் அவற்றை அவர் இன்று மறைக்கின்றார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சீர்குலைப்பதற்குச் சிலர் முயற்சி செய்து வருகின்றனர். இவ்வாறு நடப்பது, எமது கட்சிக்கு இது முதலாவது சந்தர்ப்பம் அல்ல. இவ்வாறு பல சந்தர்ப்பங்கள் கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டது.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் காலத்திலிருந்தே மகிந்த ராஜபக்ச குழுவினர் சுதந்திரக் கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி வந்துள்ளனர். எனினும் கட்சியை நாங்கள் பலப்படுத்தினோம். அதன் பின்னர் 17 வருடங்கள் இன்னல்களை அனுபவித்து பின்னர் ஆட்சியைக் கைப்பற்றினோம்.

ராஜபக்சாக்களிடம் உள்ள அனைவரும் கொலைகாரர்களே. ஆகவே எங்களுக்கு உயிராபத்து இருக்கின்றது-என்றார்.

சந்திரிகாவின் கணவரின் நினைவு நாள் அண்மையில் இடம்பெற்ற போது, மகிந்தவுக்கு மனிதநேயம்என்றாலேஎன்னவென்று தெரியாது என்று, சந்திரிகா சாடியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-5)

## அரசியல்

உடன் விடுதலை செய்யுமாறு கோரி யாழ்ப்பாணம், கரவெட்டி பிரதேசத்தைச் சேர்ந்த தாயார் சட்டமா அதிபர் திணைக்களத்திற்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாதப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்ட மதியரசன் சுலக்சன் என்பவரது தாயாரான புஸ்பமாலா இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

தனது மகனுக்கு எதிராக 2013ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதி வவுனியா உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் குற்றப்பத்திரம் மீளப் பெறப்பட்டபோதிலும் அவர் இன்று வரை சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்று புஸ்பமலர் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

எனவே, தனது மகனை விடுதலை செய்ய வேண்டும் அல்லது குறைந்த கால புனர்வாழ்வுக்குட்படுத்தி விடுதலை செய்ய வேண்டும்என்ற கோரிக்கையை அவர் தனது கடிதத்தில் முன்வைத்துள்ளார். (த-சி)

## கச்சதீவுத்

பக்தர்கள் திரண்டுள்ளனர்.

வருடாந்த உற்சவம் நேற்று மாலை கொடியேற்றத்து டன் ஆரம்பமாகியது. 300 க்கும் மேற்பட்ட கத்தோலிக்க குருமார்கள் இதில் கலந்து கொண்டதுடன் இந்தியாவிலிருந்து 92 படகுகளில் 3ஆயிரத்து 200க்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் வந்துள்ளனர்.

யாழ்ப்பாணம்,தீவகம், மன்னார் உள்ளடங்கலாக இலங்கையில் இருந்தும் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் பங்கேற்றுள்ளனர். திருவிழாத் திருப்பலி இன்று காலை யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறும்.

கடற்படை மற்றும் பிரதேசசபை என்பன இணைந்து மக்களுக்கான சுகாதாரவசதி உட்பட அனைத்து வசதிகளையும் சிறப்பாக மேற்கொண்டுள்ளன.

**இதேவேளை வரலாற்றில் முதன்முறையாக நேற்று அந்தோனியார் கடற்பவனி வலம் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-2)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்த அரசு எம்மை ஊக்குவிக்கவில்லை

## கரப்பந்தாட்டத் தலைவர் ஜனித தெரிவிப்பு



பத்து வருடங்களுக்குப் பின்னர் தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் ஆண்கள் கரப்பந்து அணியினருக்கு தங்கப்பதக்கம் கிடைத்தமை மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்த இலங்கை தேசிய கரப்பந்தாட்ட அணியின் தலைவர் ஜனித சுரத், கடந்த கால மகிந்த அரசு தம்மை ஊக்குவிக்கவில்லை என்றும் குற்றஞ் சுமத்தியுள்ளார்.
இந்தியாவின் குவாத்தி, சில்லாங் நகர்களில் அண்மையில் நடந்து முடிந்த 12ஆவது தெற்காசியப் போட்டியில் கரப்பந்தாட்டத்தில் இலங்கை அணியினருக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே- ஜனித இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார். அவர்மேலும் தெரிவிக்கையில்; நான் 2008ஆம் ஆண்டு முதல் இலங்கை துறைமுக அதிகார சபை யின் கரப்பந்தாட்டக் குழுவில் அங்கம் வகித்து விளையாடி வருகிறேன். எங்கள் துறைமுக விளையாட்டுக் குழு இதுவரை 3 தேசிய போட்டிகளில் அடுத்தடுத்து வெற்றிகளைப் பெற்றுள்ளது. இந்த வெற்றியே நாம் தெற்காசிய போட்டிகளில் வெற்றி பெறுவதற்கு ஊன்று கோலாக அமைந்தது. ஆனால், தற்போதைய அரசின் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரண துங்க மற்றும் துறைமுக அதிகார சபைத் தலைவர் தம்மிக ரணதுங்க ஆகியோர் எங்கள் விளையாட்டுதிறமைகளை ஊக்குவிப்பதில் மிகுந்த அக்கறை காட்டுகிறார்கள்- என்றார். (ம)

# இங்கிலாந்தை வீழ்த்தியது தெ.ஆபிரிக்கா இறுதிப் பந்துவரை கடினமாகப் போராடி



இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா அணி போராடி வெற்றிபெற்று தொடரில் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஆரம்பத்திலேயே அதிரடி காட்டினர் இங்கிலாந்தின் ஆரம்ப வீரர்களான றோய் மற்றும் கேல்ஸ். மூன்றாவது பந்து பரிமாற்றத்தில் 30 ஓட்டங்களை எட்டியது அந்த அணி. 15 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் றோய். ரூட்டின் ஆட்டமும் எடுபடவில்லை. கேல்ஸ் சிறிது மிரட்டினாலும் மோர்கன், ஸ்ரோக்ஸ் இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க அந்த அணி திடீர் தடுமாற்றம் கண்டது. 27 ஓட்டங்களுடன் கேல்ஸ் ஆட்டமிழக்க இங்கிலாந்தின் சராசரி சடுதியான வீழ்ச்சி கண்டது. பட்லர் நிலைத்து நின்றாலும், ஏனைய வீரர்கள் பதின்மத்தைத் தாண்டவில்லை. முடிவில் இங்கிலாந்து 134-8. பந்து வீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக இம்ரான் தாகிர் 4 இலக்குகளையும், அப்பொட் 2 இலக்குகளையும், ரபடா. வீஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்காவின் ஆரம்பம் வழக்கம்போல் சிறப்பாக அமையவில்லை. ஏழு ஓட்டங்களுடன் வீழ்ந்தார் வில்லியர்ஸ். அம்லா, பிளாசிஸ் இருவரும் அதிக பந்துகளை வீணடிக்க அந்த அணி இலக்குச் சரிவு, சராசரி என இரு பக்கங்களாலும் நெருக்கடி அதிகரித்தது.
அம்லா 22 ஓட்டங்களுடனும் பிளாசிஸ் 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.
டுமினி, றொஸ்சொவ் இருவரும் இலக்கை நோக்கி அணியை வழிநடத்திச் சென்றனர். மிதமிருந்த குறைவான பந்துகளின் அடிப்படையில் தென்னாபிரிக்காவுக்கு நெருக்கடி அதிகரித்தாலும் ஏழு பந்துகளில் 17 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் மொறிஸ்.
பந்துவீச் சில் இங்கிலாந்து சார்பாக ஜோர்தான் 3 இலக்குகளையும், மொயின் அலி 2 இலக்குகளை யும், ஸ்ரோக்ஸ், ரசிட் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

# விடைபெறும் தருணத்திலும் விளாசல் மக்கலம் மற்றுமொரு புதிய சாதனை

ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து சகல இலக்குகளையும் இழந்து 370 ஓட்டங்களைப் பெற்றதுடன் பதிலுக்கு களமிறங்கிய ஆஸ்திரேலியா வோர்ணரை இழந்து 57 ஓட்டங்களைப்பெற்றுள்ளது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. ஆஸியின் வேகத்தில் ஆட்டம் கண்டது நியூசிலாந்தின் முன்வரிசை. குப்தில் 18 ஓட்டங்களுடனும், லாதம் 4 ஓட்டங்களுடனும், வில்லியம்சன் 7 ஓட்டங்களுடனும், நிக்கொல்ஸ் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க நூறு ஓட்டங்களை எட்டுவதற்கு முன்னர் நான்கு இலக்குகளை இழந்தது நியூசிலாந்து.
ஆட்டத்தின் போக்கை அப்படியே மாற்றினார் மக்கலம். பவுண்டரிகள், சிக்சர்கள் என ஆட்டத்தை கட்டமைத்தார். 34 பந்துகளில் அரைச்சதம்கடந்து 54 பந்துகளில் சதத்தைநிறைவுசெய்தார். டெஸ்ட் வரலாற்றில் குறைந்த பந்துகளில் பெறப்பட்ட சதமாக இது பதிவானது. இதற்கு முன்னர் மிஸ்பா 56 பந்துகளில் எட்டியதே சாதனையாக இருந்தது. அண்டர்சன், வற்லிங் அடுத்தடுத்து அரைச்சதம் கடந்து மக்கலத்துக்கு பக்கபலமாக அமைய ஆஸ்திரேலியாவின் பிடியில் இருந்து நியூசிலாந்து விடுபட்டது. 145 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மக்கலம்.



370 ஓட்டங்களுடன் நியூசிலாந்தின் இன்னிங்ஸ் நிறைவு கண்டது. பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக லையன் 3 இலக்குகளையும், கசில்வூட், பற்றின்சன், பேட் மூவரும் தலா இரு இலக்குகளையும், மிச்செல் மார்ஷ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்கு களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கு ஆரம்பம் கடந்த ஆட்டத்தைப்போல் சிறப்பாக அமையவில்லை. 12 ஓட்டங்களுடன் வோர்ணர் ஆட்டமிழக்க நாள் முடிவில் ஆஸ்திரேலியா 57-1. வோர்ணரை போல்ட் வெளியேற்றியிருந்தார். பேர்ண்ஸ் 27 ஓட்டங்களுடனும், கவாயா18 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

# சமி விலகல்

ஆசியக்கிண்ணத்தொடரில் இருந்து இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான முகமது சமி காயம் காரணமாக விலகியுள்ளார்.
இடது காலில் ஏற்பட்டுள்ள தசைப்பிடிப்பு காயத்தால் நீண்ட நாள்களாக சமி அவதிப்பட்டு வருகிறார். இதிலிருந்து இன்னும் மீளாத நிலையில் அவருக்கு ஆசியக்கிண்ணத் தொடரில் ஓய்வு கொடுகப்பட்டுள்ளது.
இந்த நிலையில் இந்தியாவில்நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ணத்தொடரிலும் அவர் பங்கேற்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது - என்றார். (ம)

# ஐக்கிய அரபு இராச்சியம், ஓமன் அணிகளுக்கு ஆசியக் கிண்ண தகுதி ஆட்டங்களில் வெற்றி

ஆசியாக் கிண்ணத் தொடருக்கான தகுதி காண் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஐக்கிய அரபு இராச்சியமும், ஓமன் அணியும் வெற்றிபெற்றுள்ளன. ஐக்கிய அரபு இராச்சியம் - ஆப்கானிஸ்தான் தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது தகுதிகாண் ஆட்டத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தை எதிர்த்து ஆப்கானிஸ்தான் மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு இராச்சியம் 4 இலக்குகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக முஸ்தபா 77 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் ஆப்கானிஸ்தான் சார்பாக ரசிட் கான் 3 இலக்குகளை வீழ்த்தினார். பதிலுக்கு களமிறங்கிய ஆப்கானிஸ்தான் சகல இலக்குகளையும் இழந்து 160 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக கரீம் 72 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் சார்பாக றொகான் முஸ்தபா 3 இலக்குகளை வீழ்த்தினார்.

**ஓமன் - ஹொங்கொங்**

இரண்டாவது ஆட்டத்தில் ஓமனை எதிர்த்து ஹொங்கொங் அணி மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஓமன் அணி 5 இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக யரிண்டர் சிங் 42 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஹொங்கொங் அணியின் சார்பாக நடீம் அகமட் 3 இலக்குளைக் கைப்பற்றினார். பதிலுக்கு களமிறங்கிய ஹொங்கொங் அணிக்கு பாபர் ஹைஹட் சதம் கடந்த போதிலும், அந்த அணியால் 175 ஓட்டங்களை மட்டுமே பெற்று 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் இன்னிங்ஸில் யாழ். இந்து முன்னிலை இருப்பினும் இந்துக்களின் போர் சமநிலையில்



யாழ்ப்பாணம், பெப். 21
இந்துக்களின் சமர் என்று அழைக்கப்படும் யாழ்.இந்துக் கல்லூரி அணிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான துடுப்பாட்டத் தொடர் சமநிலையில் முடிவடைந்துள்ளது.
யாழ். இந்துக்கல்லூரியின் மைதானத்தில் நடைபெறும் இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொழும்பு இந்துக்கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.
இதன்படி தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ். இந்துக்கல்லூரி அணி 9 இலக்குகளை இழந்து 296 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. அதிகபட்சமாக துவாரகன் 57 ஓட்டங்களையும், கணேஸ்வரன் 47 ஓட்டங்களையும், நிகோஸ் 43 ஓட்டங்களையும், சிவலக்சன் 39 ஓட்டங்களையும், கிருதகணேஸ் 35 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கொழும்பு இந்துக்கல்லூரி அணியின் சார்பில் அசான், டினேஸ் இருவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.
பதிலுக்குத் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த கொழும்பு இந்துக்கல்லூரி சகல இலக்குகளையும் இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அசான் 48 ஓட்டங்களையும், யுதிஸ்கான் 24 ஓட்டங்களையும், சேரன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ். இந்துக் கல்லூரி அணியின் சார்பில் சிவலக்சன் 5 இலக்குகளையும் பிரகலாதன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.
22 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக்கல்லூரி அணி 6 இலக்குகள் இழப்புக்கு 213 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக துவாரகன் 69 ஓட்டங்களையும், தினேஸ் 57 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கொழும்பு இந்துக்கல்லூரி அணியின் சார்பில் அசான், கஜேந்திரன் இருவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.
236 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி நாள் முடிவில் இரண்டு இலக்குகளை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டம் சமநிலையானது. அதிகபட்சமாக டினேஸ் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களைப் பெற்றார்.
சகலதுறை வீரராகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் கொழும்பு இந்துக்கல்லூரி அணியின் டினேஸ் தெரிவானார். சிறந்த பந்துவீச்சாளராக யாழ். இந்துக் கல்லூரி அணியின் சிவலக்சன் தெரிவானார். சிறந்த களத்தடுப்பாளராக கொழும்பு இந்துக்கல்லூரி அணியின் விஸ்வா தெரிவானர். (ம-23)

## விக்ரம், கங்கு, ராஜன் தொடரின் இறுதி நாளை நடைபெறவுள்ளது

யாழ்ப்பாணம், பெப். 21
விக்ரம், கங்கு, ராஜன் கிண்ணத்துக்காக நடத்திய துடுப்பாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி நாளை மோதவுள்ளது.
கொக்குவில் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆட்டம் நடைபெறும். நிகழ்வுக்கு விருந்தினராக யாழ். மாவட்ட கிரிக்கெட் நடுவர் சங்கத்தின் உபதலைவர் பி.முருகவேள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-23)

## வைகறை காளியம்பாள் இறுதியில் இன்று மோதல்

யாழ்ப்பாணம், பெப். 21
யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இரவு 7மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் புதுமடம் வைகறை அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் அணி மோதவுள்ளது. நிகழ்வுக்கு விருந்தினராக யாழ்., கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-23)



இலங்கை தேசிய அணிக்கு வேகப்பந்து வீச்சாளர்களைத் தெரிவு செய்வதுக்காக யாழ். வந்துள்ள இலங்கை கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபையின் தெரிவாளர்கள் சிலர் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று குறித்த முகாமை முன்னெடுத்தனர். இதில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்கள் பங்குபற்றினர். (ம-23)

# மகாஜனக் கல்லூரி மகத்தான வெற்றி; வீரர்களின் போரில் வீழ்ந்தது ஸ்கந்தா




யாழ்ப்பாணம், பெப். 21
வீரர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டத் தொடரில் மகாஜனக் கல்லூரி அணி 5 இலக்குகளால் வெற்றிபெற்றுள்ளது.
தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் இந்த ஆட்டத்தில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. சீரான இடைவெளியில் இலக்குகள் சரிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சயந்தன் 68 ஓட்டங்களையும், சாருசன் 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி அணியின் சார்பில் டினேஸ் 3 இலக்குகளையும், சுஜீவன், லக்ஸ்மன் இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.
தனது முதலாவது இன்னிங்சிற்காக பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக்கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரணவன் 61 ஓட்டங்களையும், சுஜீவன் 46 ஓட்டங்களையும், புருசோத்தமன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் சார்பில் கதியோண் 6 இலக்குகளையும், சஞ்சேயன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.
இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 95 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி அணி 172 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக பிரசாந் 53 ஓட்டங்களையும், சஞ்சேயன் 41 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மகாஜனக்கல்லூரி அணியின் சார்பில் தஜிஸ்ரன் 5 இலக்குகளை வீழ்த்தினார்.
முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது கைகொடுக்க 78 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குக் களமிறங்கிய மகாஜனக்கல்லூரி 5 இலக்குகள் இழப்புக்கு இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக புருசோத்தமன் 29 ஓட்டங்களையும், தஜிஸ்ரன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியின் சார்பில் கதியோண், பிரசாந் இருவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.
ஆட்டநாயகனாக மகாஜனக்கல்லூரி அணியின் தஜிஸ்ரன் தெரிவானார். சிறந்த துடுப்பாட்ட வீரராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியின் சயந்தனும், சிறந்த பந்துவீச்சாளராக அதே அணியின் கதியோனும் தெரிவானார்கள். சிறந்த களத்தடுப்பாளராக மகாஜனக்கல்லூரி அணியின் பிரணவன் தெரிவானார். சகலதுறை வீரனாக மகாஜனக் கல்லூரி அணியின் சுஜீவன் தெரிவானார். (ம-23-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுசரணையாளர்களை இழக்கும் குத்துச்சண்டை வீரரான பக்கியோ

பிரபல குத்துச்சண்டை வீரரான மன்னி பக்கியோவின் அனுசரணை ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதாக, உலகின் பிரபலமான விளையாட்டு அணிபொருட்களின் நிறுவனங்களில் ஒன்றான நைக் அறிவித்துள்ளது.
சமபாலுறவாளர்கள் தொடர்பாக அவர் தெரிவித்த கருத்தைத் தொடர்ந்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. சில நாட்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த மன்னி பக்கியோ, சமபாலுறவாளர்கள், மிருகங்



களை விடக் கீழ்த்தரமானவர்கள் எனத் தெரிவித்திருந்தார். இதற்கு முன்னரும் கூட, சமபாலுறவாளர்கள் கொல்லப்பட வேண்டும் என்றவாறான கருத்துகளை அவர் வெளியிட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து, பக்கியோவுக்கான அனுசரணையை நைக் நிறுவனம் நீக்கிக் கொள்ள வேண்டுமென அழுத்தங்கள் எழுந்தன. அதனைத் தொடர்ந்து, பக்கியோவின் அனுசரணையை நீக்குவதாக அறிவித்த குறித்த நிறுவனம் அவரது கருத்துகள், தவறானவையெனக் கருதுவதாகத் தெரிவித்துள்ளது. (ம)



ஐ.பி.எல். தொடரில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட அணிகளில் ஒன்றான குஜராத் லயன்ஸ் தனது அணியின் சீருடையை அறிமுகம் செய்துள்ளது. (ம)

# அதிக மக்களால் பார்க்கப்பட்ட இந்தியா - இலங்கை ஆட்டம்

இந்தியா- இலங்கை அணிகள் மோதிய ரி-20 தொடரின் 2ஆவது ஆட்டம் அதிக மக்களால் பார்க்கப்பட்ட சாதனையை படைத்துள்ளது.
இலங்கை அணி இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ரி-20 ஆட்டங்களில் பங்கேற்றது. தொடரை இந்தியா தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இந்தத் தொடரில் ராஞ்சியில் நடந்த 2வது ஆட்டம் அதிக ரசிகர்கள் தொலைக்காட்சியின் மூலம் பார்த்து ரசித்த ஆட்டமாக சாதனை படைத்துள்ளது. குறித்த ஆட்டத்தை 256 மில்லியன் மக்கள் பார்வையிட்டுள்ளனர். இதற்கு முன்னர் கடந்த 2012 ஆம் ஆண்டு பெங்களூரில் நடந்த இந்தியா - பாகிஸ்தான்



அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தை 112 மில்லியன் மக்கள் பார்வையிட்டதே சாதனையாக இருந்தது. இந்த ஆட்டத்தில் இந்திய அணி 69 ஓட்டங்களால் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பிரிட்டன் நாட்டுக்கான தூதுவர் பதவியை ஏற்க மறுத்த சங்கா!

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார, பிரிட்டன் நாட்டுக்கான இலங்கையின் தூதுவர் பதவியை ஏற்க மறுத்துள்ளார்.
குமார் சங்கக்கார சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெற்ற ஆட்டம் இந்தியாவுக்கு எதிராக நடைபெற்றது. இந்த ஆட்டத்தின் பரிசளிப்பு நிகழ்வில் பேசிய இலங்கை ஜனாதிபதி, சங்கக்காரவை பிரிட்டனுக்கான இலங்கை தூதராக நியமிக்கவுள்ளதாக மைதானத்திலே அறிவித்திருந்தார். இந்த நிலையில் சில தினங்களுக்கு முன் இலங்கை ஜனாதிபதி சிறிசேனாவின் பிரத்தியேக செயலாளர் பாலித பெல்போல, சங்கக்காரவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு இது தொடர்பாக கேட்டுள்ளார். ஆனால் வேலைப்பளுவினாலும் சில தனிப்பட்ட காரணங்களாலும் தன்னால் அந்த பதவியை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சங்கக்கார தெரிவித்துவிட்டாராம். (ம)



## ரிச்சட்ஸை ஆலோசகராக நியமிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் முனைப்பு

ஆசியக்கிண்ணத் தொடர் மற்றும் உலகக் கிண்ண ரி-20 தொடர் இரண்டுக்கும் பாகிஸ்தான் அணியின் அறிவுரையாளராக விவ் ரிச்சட்ஸை நியமிக்க அந்த நாட்டின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தீவிரமாக முயற்சி செய்து வருகிறது.
பாகிஸ்தான் சூப்பர் லீக் ரி-20 தொடரில் குவெட்டா கிளாடியேட்டர்ஸ் அணியின் அறிவுரையாளராக விவ் ரிச்சட்ஸ் சிறப்பாக பணியாற்றுவதையடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அவரை பாகிஸ்தான் அணிக்கே அறிவுரையாளராக்க விரும்புகிறது. ரிச்சர்ட்ஸும் இதற்கு ஆர்வம் காட்டியிருப்பதாகத் தெரிகிறது. (ம)

# உடுவில் மகளிர் அணிக்கு வெற்றி


யாழ்ப்பாணம், பெப்.21
இலங்கை பாடசாலைகளின் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தி வரும் 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் உடுவில் மகளிர் கல்லூரி அணி வெற்றிபெற்றுள்ளது.
ராஜகிரிய கேட்வே கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து ராஜகிரிய கேட்வே கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 45:38 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# வடதாரகைக்கு வெற்றி

யாழ்ப்பாணம், பெப்.21
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் வடதாரகை அணி வெற்றிபெற்றுள்ளது. சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான இந்தத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கோல்டன் பிறதர்ஸ் அணியை எதிர்த்து வடதாரகை அணி மோதிக் கொண்டது. இதில் வடதாரகை அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.
af
பிரெஞ்சு மொழி
* பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
* எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA (DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவை யில்லை.
பிரெஞ்சு மொழி பெயர்ப்புக்கள்.
* இலவசம்: படிக்கும் பாடங்களின் , PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல்,
யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.
(69410)
(10.17)
புதிய வகுப்புகளுக்கு உடன் அழைத்து பதிவு செய்யவும்.
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

Certificate in IT Courses
Free English Course
* Web Designing
* Computer Science
* Network Administration
* Graphic Designing
* PC Hardware Engineering



Get Dual Certificates
Westminister College London
&
ExamPoint
ICT . Education . Training & Development Centre
0776 28 48 45
EXAMPOINT
24 HOUR HOTLINE
120/6, Palaly Rd, Kantharmadam, Jaffna
www.exampoint.lk info@exampoint.lk Tel: 021 221 6400

Personal Class-கணினி
உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
Ms office 2013, Internet & E-mail,
Web Design, Graphic Design,
DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker
TP:0779672038 ஆசிரியர்:KRC

மொழி வகுப்புகள்
திருமண பந்தத்தின் மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கு இலகுவாக சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் ஜேர்மன் -Deutsch, நெதெர்லாந்து - Dutch, French, Italian English வகுப்புகள் நடைபெறுகின்றன.
விவேகானந்தா அக்கடமி
221/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 321 6928, 077 484 2464

EXAMPOINT
ICT . Education . Training & Development Centre
பெருமையுடன் நடாத்தும் மாபெரும்
ICT மற்றும் SPOKEN ENGLISH கருத்தரங்கு
- ஆண்டு 6 தொடக்கம் A/L வரையான மாணவர்களுக்கான....
Free Seminar Book Now
0776 28 48 45
FREE
HOTLINE
மேலதிக விபரங்கள் தங்களின் பதிவுகளின்போது வழங்கப்படும்.
ExamPoint(Pvt)Ltd.
120/6, Palaly Rd, Kantharmadam, Jaffna
Tel: 021 221 6400
www.exampoint.lk
info@exampoint.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.